# பழங்கால இந்தியாவில் அரசியல் சிந்தனையும் ஆட்சிமுறையும்

ம. பரதன்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த.பா.நி. (க.வெ.) வரிசை எண் : 774

# பழங்கால இந்தியாவில் அரசியல் சிந்தனையும் ஆட்சிமுறையும்

(மேற் பட்டப் படிப்பிற்குரியது)

ஆசிரியர்
ம. பரதன்,
விரிவுரையாளர், அரசியல் துறை,
அஞ்சல்வழிக் கல்வித் துறை,
மதுரைப் பல்கலைக்கழகம்,
மதுரை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—November, 1977

Number of copies—1000

T.N.T.B.S. (C.P.) No. 774

© Government of Tamilnadu

**POLITICAL IDEAS AND INSTITUTION IN ANCIENT INDIA**

M. BHARATHAN

**Price Rs. 5-90**

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

This book has been printed on concessional paper made available by the Government of India.

*Printed at*
Giri Art Printers,
Madras-600 094.

# அணிந்துரை

(திரு. செ. அரங்கநாயகம், தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினேழாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் இளங்கலை வகுப்புவரை மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வந்தனர். 1969ஆம் ஆண்டிலிருந்து அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன் வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளில் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்துள்ள நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும், மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ் வகையில் கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்களுக்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகமும், சென்னைப் பல்கலைக்கழகமும் ஆண்டு தோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

வரலாற்றில், அரசியல், உளவியல், பொருளியல், மெய்ப் பொருளியல், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதவியல், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், சட்டவியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் மூல நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்று இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான பழங்கால இந்தியாவில் அரசியல் சிந்தனையும் ஆட்சிமுறையும் என்னும் இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 774 ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 809 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு, கல்வி, சமூக நல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்ட'த்தின்கீழ் வெளியிடப் படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கலையியற் பாடங்களையும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள், அவற்றைத் தமிழில் பயில வேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளர வேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளர வேண்டும் என்பதுதான். 'எதிலும் தமிழ்; எங்கும் தமிழ்' என்னும் குறிக்கோளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு தமிழக ஆசிரியப் பெருமக்களையும், மாணவர்களையும் சார்ந்ததாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும், ஒத்துழைப்புக்கும் நம் மனம்கலந்த நன்றி உரியதாகுக!

செ. அரங்கநாயகம்

# பொருளடக்கம்


பக்கம்

## பகுதி I

1. வேதகால அரசியலும் நாகரிகமும் ... 1
2. வேத நூல்களில் அரசியல் சிந்தனை ... 14
3. வருணாசிரம தருமம் ... 24
4. சாந்தி பர்வம் ... 32
5. கௌடில்யரின் அர்த்தசாத்திரம் ... 37
6. அர்த்தசாத்திரத்தில் ஆட்சியும், சமூக, நீதி நிருவாகமும் ... 52
7. மண்டலக் கொள்கை ... 60
8. மௌரியர் ஆட்சி முறை ... 75
9. குப்தர்கள் ஆட்சி முறை ... 82
10. குடியரசுகள் ... 86
11. வேறு சில அரசியல் நூல்கள் ... 93
12. தரும சாத்திரங்கள் ... 100

## பகுதி II

13. தமிழர் ஆட்சி முறையும் அரசியலும் ... 106
14. அரசன் ... 110
15. திருக்குறளில் அரசியல் ... 116
16. சோழர் ஆட்சி முறை – சில குறிப்புகள் ... 127

இணைப்பு—மனு தரும சாத்திரம் ... 133

மேற்கோள் நூற்பட்டியல் ... 142

கலைச்சொற்கள் ... 143

பகுதி I

# 1. வேதகால அரசியலும் நாகரிகமும்

இந்திய அரசியல் வரலாறு ஏறத்தாழக் கி.மு. 2000 ஆண்டு அளவில் தொடங்குகிறது எனலாம். தொடர்ச்சியாக வரலாற்றுச் சான்றுகள் நமக்குக் கிடைக்காவிடினும் தொன்மையான வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள், உபநிடதங்கள், அர்த்த சாத்திரம், நீதி நூல்கள் முதலியவற்றைக் கொண்டு வட இந்தியாவில் தொடக்க நிலையில் நிலவிவந்த அரசியல் அமைப்பைப் பற்றி நாம் ஓரளவு ஊகித்து அறியலாம். இவ் வமைப்பின் வளர்ச்சியில் பல கட்டங்களை நாம் உணர முடிந்தாலும், இக் கட்டங்கள் குறுகிய கால எல்லையைக் கொண்டிருப்பதாலும், மேலும், ஒன்றுக்கும் மற்றொன்றிற்குமுள்ள தொடர்பின் தன்மையை அறுதியிட்டுக் கூறமுடியாமையினாலும் நமது ஆராய்ச்சி வரலாற்று ஆராய்ச்சி முறையைப் பின்பற்றி அமையாமல் தொல்குடி ஆராய்ச்சி முறையைப் பின்பற்றியே அமையவேண்டியுள்ளது. அதிலும் ஆரியர்கள் சிந்துச் சமவெளியில் குடியேறியதிலிருந்து (தோரா. கி.மு. 2000) புத்தர் காலம்வரை (கி.மு. 500) மேற்சொன்ன முறை தவிர்க்க முடியாதது. கி.மு. 5ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு ஆங்காங்கு ஓரளவு நமக்கு வரலாற்றுச் சான்றுகள் கிடைத்துள்ளன.

சிந்துச் சமவெளியில் மொகஞ்சதாரோ, ஹாரப்பா என்னும் இடங்களில் தற்காலத்தில் புதைபொருள் ஆராய்ச்சியாளர்களின் கண்டுபிடிப்புகளிலிருந்து ஆரியர்களின் வருகைக்கு முன்பே அவ்விடங்களில் ஒரு நாகரிகம் நிலவியது என்பது புலனாகிறது. அந்நாகரிகம் திராவிட நாகரிகம் என்று பெரும்பான்மையோர் கூறுவர். அது எவ்வாறாயினும், ஆரியர்கள் சிந்துச் சமவெளியில் நுழையும்போது அங்கிருந்த பூர்வீகக் குடியினரை எதிர்க்க வேண்டியிருந்தது. இந்தப் பின்னணியிலிருந்து எழுந்ததுதான் வேதகாலச் சமூகமும் அரசியலும் ஆகும்.

இவ்வாறு குடியேறிய ஆரியர்கள் ஒரே பண்பாட்டு இனமாகக் (Cultural group) காணப்பட்டனர். இவர்கள் கால்நடைகளை ஓட்டிக்கொண்டு இடம்விட்டு இடம் பெயர்ந்து செல்பவர்

ளாகவும் (Pastoral), கால்நடைகளிலிருந்து கிடைக்கும் உணவையும், தானியவகைகளையும் உண்பவர்களாகவும் இருந்தார்கள். பல கூட்டங்களாக அடுக்கடுக்காக நுழைந்த இவர்கள் சிறுசிறு இனங்களாகவும், குடிகளாகவும் பிரிந்து வாழ்ந்தார்கள். பண்டமாற்றத்தில் பொருள்களுக்குப் பசு மாட்டு விலையினை அலகாக மதித்தனர். மாட்டு இறைச்சியையும், ஒருவகை மதுவையும் உட்கொண்ட இவர்கள் தோலைப் பதப்படுத்துதல், பார்லி பயிரிடுதல், நெசவு செய்தல், உலோகத்தாலான ஆயுதங்களையும் கருவிகளையும் செய்தல் ஆகியவற்றை அறிந்திருந்தனர். சிந்துச் சமவெளியில் மேலும் பரவிக் கிழக்கே செல்லச் செல்ல இவர்கள் மேலும் மேலும் விவசாயத்தில் ஈடுபட்டனர். இதனால், கி.மு. ஆறும் நூற்றாண்டுக் காலத்தில் இவர்கள் இடம் பெயர்ந்து செல்வதை விட்டு ஓரிடத்தில் நிலையான வாழ்க்கையை அமைத்துக்கொண்டனர் எனலாம்.

ஆரியர்கள் இந்தியாவினுள்ளே நுழைந்து மேலும் பரவும் நிலையில் அங்கிருந்த பூர்வ குடியினரோடு சண்டை ஏற்பட்டது. அப் பூர்வ குடியினர் ஆரியரைப்போல் நிறம் வெண்மையாக இல்லாமல் கறுப்பாக இருந்தனர். அவர்களது நாகரிகமும் வேறுபட்டிருந்தது. இக் குடியினரை ஆரியர் வெற்றி கண்டனர். இதனால் இக் குடியினரின் நாகரிகம் சிதைந்து அழிந்தது. தோற்கடிக்கப்பட்ட இவர்களைத் தாசா (Dasa) என்று அழைத்தனர்.

நெடுங்காலப் போக்கில் நிகழ்ந்த இந் நிகழ்ச்சியினால் ஆரிய நாகரிகமும் தொல்குடியினரின் நாகரிகமும் கலந்து அன்றைய சமூக அரசியலமைப்பின் பின்னணியாக அமைந்தது.

**வேதங்களும் வேள்விகளும்**

குடியேறிய ஆரிய இனங்கள் மேய்ச்சலுக்காகவும், பயிர் நிலங்களை முன்னிட்டும் மற்றும் பல காரணங்களுக்காகவும் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டனர். இது தவிரப் பூர்வீகக் குடிகளுடனும் சண்டைகள் ஏற்பட்டன. ஏறக்குறைய இக் காலத்தில்தான் தற்போது வேதங்கள் என வழங்கும் இலக்கியங்கள் ஏற்பட்டன. இவற்றுள் முதன்மையாகக் கருதப்படும் ரிக் வேதம் 1017 துதிக் கோவைகளைக் கொண்டதாக நமக்குக் கிடைத்திருக்கிறது. இவ் வேதத் துதிக் கோவைகளுக்குச் சம்ஹிதைகள் என்று பெயர். எளிதில் உணர்ந்து, மனப்பாடம் செய்துகொள்ளும் முறையில் அமைந்துள்ள இவை நீண்டகாலம் வாய்வழியாகவே வழங்கப்

பட்டுவந்தன. இவைகளைத் தலைவனின் அவையில் புலவர்கள் இயற்றிப் பாடியிருக்கலாம். புராணங்களையும், சடங்குகளையும் விவரிக்கும் இப் பாடல்களினால் கடவுள்களின் ஆதரவைப் பெற முடியுமென்று நம்பினர். தாங்கள் ஈடுபடும் போர்களில் இத் தகைய ஆதரவு இன்றியமையாததாயிருந்ததால் வெற்றிக்காக வும், நிலையான வாழ்க்கைக்காகவும் குடித் தலைவர்களும், புலவர் களும் ஒருவரையொருவர் அண்டியிருக்க வேண்டியிருந்தது. இச் சம்ஹிதைகள் ஒருவராலோ அல்லது ஒரே காலத்திலோ இயற்றப் பட்டவை யல்ல. மேலும் சொன்னால் ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்கள் ஒரு குறிப்பிட்ட கால வரிசையில் ஒன்றுக்குப் பின் ஒன்று என்ற முறையில் இயற்றப்பட்டன என்று நம்புவதற்கு எந்த ஆதாரமும் இல்லை. காலப்போக்கில் இயற்றப் பட்ட இத்தகைய சம்ஹிதைகளைப் பின்னர் வந்தவர்களே முறைப் படுத்தி நான்கு வேதங்களாகத் தொகுத்திருக்க வேண்டும். இயற்கையின்மீதுள்ள ஈடுபாடு, மந்திர தந்திரங்களின்மீதுள்ள நம்பிக்கை, எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையான நோக்கு, மனிதனின் சிறப்பு இவைகளை உணர்த்துபவைகளாக ரிக் வேதச் சம்ஹிதைகள் அமைந்துள்ளன. பிற்கால இந்து மதத்தில் கூறப் பட்ட துறவற வழிக்கும், இச் சம்ஹிதைகளுக்கும் வெகுதூரம். ரிக் வேதத்தை அடுத்துப் பழங்கால இந்திய வரலாற்றினைத் தெரிந்துகொள்ள அதர்வ வேதம் உதவுகிறது. அக் காலத்தில் நிலவிய முக்கியமான நம்பிக்கைகளையும், ஏவல் சூன்யம் போன்ற மந்திர வாதங்களையும் உள்ளடக்கியுள்ள இவ் வேதம் ஆரிய நாகரிகம் எவ்வாறு பூர்வ குடியினரின் நாகரிகத்தோடு கலந்தது என்பதையும் நமக்கு ஓரளவு தெரிவிக்கிறது.

வேதியம் (Vedism) பிற்காலத்தில் எழுந்த இந்து மதத்தைப் போல் பரவலான மக்களின் மதமாக விளங்கவில்லை. தொடக்கக் கட்டத்தில் தீ வேள்வியை நடத்திய புரோகிதர் பிராமணரும் அல்லர். வருணாசிரம தர்மங்கள் பிற்காலத்தில் எழுந்தவையே.

அடிக்கடி நிகழ்ந்த பூசல்களும், போர்களும் இவ் வேள்விகளின் முக்கியத்துவத்தை அதிகப்படுத்தின. கடவுள்களின் ஆதரவு இவ் வேள்விகளின் சிறப்பைப்பொறுத்திருந்ததாகக் கருதப்பட்டதால் போர்களில் ஈடுபட்ட இனங்களும், குடிகளும் இவ் வேள்விகளைச் சிறப்பாகச் செய்வதில் போட்டியுடன் முனைந்தனர். இதனால் சடங்குகளும் விரிவடைந்தன. இன அல்லது குடித் தலைவனே வேள்வியைச் செய்தாலும் சடங்குகளை நிர்ணயிப்பதற்கும், மந்திரங்களைச் சொல்வதற்கும் தேர்ச்சி பெற்ற குழு ஒன்று வேண்டியிருந்தது. ஆரம்பத்தில் ஐந்தாறு பேர்களே தேவைப்

பட்ட வேள்வி சில நூற்றுண்டுகளில் பல விரிவான சடங்குகளைக் கொண்டதாக அமைந்து பல புரோகிதர்களின் உதவியுடன் பல மாதங்கள் நடைபெற வேண்டியதாக வளர்ந்தது. வழிமுறை நுட்பங்கள் இன்றியமையாதவை ஆயின. காலப்போக்கில் தேவதைகளுக்கு எழுச்சியூட்டும் பணியினை மேற்கொண்ட புரோகிதர்கள் அத் தேவதைகளுக்கும் மேம்பட்ட திறம் வாய்ந்தவர்களாகக்கருதி நடத்தப்பட்டார்கள். இவ்வேள்விகளிலெல்லாம் பிரபஞ்சத்தின் ஒழுங்கை (Cosmic order) பிரதிபலிக்குமாறு சடங்குகளும், செய்முறைகளும் அமைந்தன. ரிக் வேதத்திலும் இதனை நாம் காணலாம். அதில் முக்கியமாகச் சொல்லப்பட்டிருப்பது, எவ்வாறு வருணன் உலகின் தோற்றத்திலும், வளர்ச்சியிலும் பங்கு கொண்டு மக்களைக் கலகப் பூசல்கள் நிறைந்த காலத்திலிருந்து மீட்டுச் செல்கிறுன் என்பதாகும். இந்திரன் என்னும் தேவதை போர்த்தொழிலைப் பூண்டொழுகும் மேற்குடியினரின் வீரத்தினைப் பிரதிபலிப்பவராக விளங்கினுர். காலப்போக்கில் இந்திரன் முக்கியத்துவத்தில் வருணனையும் மிஞ்சும் நிலை ஏற்பட்டது. இம் முறையில் விரிவாக்கப்பட்ட பிரபஞ்சத்துவத்தை ஒட்டியே அரசியல் முறையும் நெறிப்படுத்தப்பட்டது. சொல்லப்போனுல் பிரபஞ்ச அமைப்பே ஓர் அரசியல் எனலாம். தேவதைகளின் ஆட்சியும், அதிகாரமும் தெய்விகக் குழப்பத்தின் நேர் விளைவுகளாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. மனிதனும் குழப்பத்திலிருந்து விடுபட்டு ஓர் ஒழுங்கினை நிலைநாட்ட அரசியலை மேற்கொள்கிறுன். ஆக, மனிதனும் சரி, தேவதைகளும் சரி ஓர் ஒழுங்கு முறைக்குக் கட்டுபட்டவர்களாகவும், குழப்பத்திலிருந்து மீளத் துடிப்பவர்களாகவும் காணப்படுகிறுர்கள்.

**சமூக அரசியல் அமைப்பு**

குடிகள் (Tribes) பல விசாக்களாகப் (Visas) பிரிக்கப்பட்டிருந்தன. இவ் விசாக்கள் போர்வீரர்களின் தொகுதிகளாக இருந்திருக்கலாம். இப் பிரிவுகளின் அடிப்படை தெளிவாக இல்லை. வேதங்கள் சில இடங்களில் மக்கள் அனைவரையும் குறிப்பிடும் ஒரு சொல்லாகவும் இதைப் பயன்படுத்துகிறது. இது எவ்வாறுயினும் அரசியலுக்கு அடிப்படை அமைப்பாகக் கிராமம் விளங்கியது. ஒன்றுக்கொன்று சொந்தமான குடும்பங்களைக் கொண்டதாக அது இருந்தது. கிராமங்களுக்குக் கிராமணி என்ற தலைவன் இருந்தான்.

சில குடிகள் ஒருங்கிணைந்து தனிப்பெரும் வகுப்புகளாக வளர்ந்தன என்பதையும் வேதங்களிலிருந்து நாம் அறிந்து கொள்ள முடிகிறது. புரு, பரத குடியினர் இணைந்து

அமைந்த குரு வகுப்பும், துர்வாச, கிருவி குடியினர் இணைந்து அமைந்த பாஞ்சால வகுப்பும் எடுத்துக்காட்டாக விளங்கு கின்றன. தச்சர்கள், நெசவாளிகள், ஆயுதம் செய்வோர், வேட்டைக்காரர்கள், மற்றும் பல தொழிலை மேற்கொண்டொழு கும் மக்கள் தனித்தனியே ஓர் இயக்கமாக (Guild) செயல் பட்டனரென்று வேதங்களினின்று புலனாகிறது. வாழ்வின் பல துறைகளையும் இயக்கும் பல்வேறு குழுக்கள் கொண்ட இந்த அமைப்பு இறைமை (Sovereignty) ஓரிடத்தில் தங்கி நில்லாமல் பல்லிறைமையாக (Pluralism) விளங்கும் அமைப்பினை ஒத்திருக் கிறது. ஆரியருக்கும், பூர்வ குடியினருக்குமிடையே பெருங் கலாசார வேறுபாடும் நிலவியது. ரிக் வேதத்தில் ஆரியருக்கு முரணாகத் தாசர்கள் சொல்லப்பட்டிருக்கிறார்கள். அதர்வ வேத காலத்தில் ஆரியர்களுக்கும், சூத்திரர்களுக்கும் வேறுபாடு கற்பிக்கப்பட்டுள்ளது. சூத்திரர்கள் பூர்வ குடியினரா? அவ் வாறெனில் அவர்களும் ஏன் தாசர்களைப்போல் அடிமைகளாக நடத்தப்படவில்லை? தவிர, சில வேள்விகளில் சூத்திரர் களுக்கும் சில பங்குகள் ஒதுக்கப்பட்டமை எங்ஙனம்? என்பன வற்றைச் சிந்திக்குங்கால் அவர்கள் ஆரியக் குடிக்கு அப்பாற் பட்டவர்களல்லர் என்பது தெரியவருகிறது.

ரிக்வேத சம்ஹிதைகள் சமூகத்தின் மூன்று பிரிவினரான பிராம, க்ஷத்ர, விசாக்களைக் குறிப்பிடுகின்றன. இவற்றுள் விசா மக்களைப் பொதுவாகக் குறிக்கும் சொல்லாக இருந்தது எனக் கொள்ளலாம். சாதி அமைப்பு (Caste formation) ஆரம்பக் கட்டத்திலேயே இருந்தது. ரிக் வேதத்தின் கடைசி அத்தியாயங் களில்தாம் நால்வகைச் சாதி கொண்ட சமுதாயம் சொல்லப் படுகிறது. படைப்பவனின் வாய், தோள், தொடை, பாதம் இவற்றிலிருந்து முறையே பிராம்மண, ராஜன்ய, வைசிய, சூத்திர சாதிகள் ஏற்பட்டதாகப் புருஷஸூக்தம் எனும் பகுதி கூறுகிறது. இவற்றில் பிராம்மணர் உயர்ந்தவரென்றோ, சூத்திரர் தாழ்ந்தவ ரென்றோ வெளிப்படையாகக் கூறப்படாவிடினும், மேலிருந்து கீழாக உள்ள உறுப்புகளிலிருந்து இவர்கள் முறையே தோன்றி யிருப்பதாகச் சொல்லப்படுவது மேற்கண்ட முடிவையே மறை முகமாகக் கூறுகிறது எனக் கொள்வாருமுளர். ஆனால், செய்யும் தொழிலின் அடிப்படையில் இவர்கள் பிரிக்கப்பட்டார்கள் என்பது உறுதி. வேள்விகளில் முக்கிய அங்கம் வகித்து ஓதுவதால் பிராம்மணர் படைப்பவனின் வாயிலிருந்தும், தோள் வலிமையால் போரிடும் வகுப்பான க்ஷத்திரியர் தோளி லிருந்தும், இவ்வாறே அலைந்து திரிந்து தொழில்களும், பணிகளும் புரியும் வைசிய சூத்திரர்கள் படைப்பவனின் தொடை

பாதங்களிலிருந்தும் உண்டாயினர் என்று கொள்வது வேத இலக்கியத்தின் மரபுக்கு முரணானதன்று. இப் பாகுபாடு ஆதி பெர்சியர்களின் வழக்கத்தை யொட்டி அமைந்துள்ளதாக ட்ரெக்மெய்ர்[1] குறிப்பிடுகிறார். புதிய இடத்தில் குடியேறிப் பரவும் காலத்தில் தங்கள் மரபையும், கட்டுக்கோப்பையும் காப்பாற்றிக்கொள்வதற்காகவும், தம்மை எதிர் நோக்கிய பற்பல பணிகளைத் திறம்பட நடத்துவதற்காகவும் இவ் வேற்பாட்டை அவர்கள் செய்துகொண்டிருக்கலாம் என்றும் அவர் கூறுகிறார்.

கூட்டுக் குடும்பத்தின் மிக்க பலமும், திறமையும் வாய்ந்த தலைவனே பிற்காலத்தில் தோன்றிய ராஜன் அல்லது அரசனுக்கு முன்னோடியாக விளங்கியிருத்தல் வேண்டும். குடும்பங்களில் ஏற்படும் பொதுப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் தமக்குள் முதலாக விளங்கிய கூட்டுக் குடும்பத் தலைவனையே நாடினர். போரென்று வரும்போது ஒரு குடியினர் இத்தகைய ஒரு குடும்பத் தலைவனையே போர்த் தலைவனாகவும் கொண்டிருக்கலாம். போர் முடிந்த பின்னும் இவனே தலைவனாக நீடித்தான். (ரிக் வேதத்தில் தேவதைகள் தங்களுக்கு ஒரு தலைவனை ஏற்படுத்திக் கொள்வதெல்லாம் போரில் தமக்கு வெற்றியுண்டாக வேண்டுமென்பதற்காகவே என்று சொல்லப்படுவது இங்குக் கவனிக்கத் தக்கது.)

இத்தகைய ஆரம்பக் கட்டத்தில் அரசனின் தோற்றுவாய் பற்றி அதர்வ வேதமும் கூறுகிறது. தலைவனாக வருவதற்கு முன் பல போட்டிகளைச் சமாளிப்பதற்கு மக்களின் ஆதரவு வேண்டியிருந்தது என்று இதனின்று நாம் அறிகிறோம்.[2] இராஜசூய யாகத்திலிருந்து ஒருவன் அரசனாக வரவேண்டுமானால் தேர் ஓட்டும் போட்டியிலோ, பகடையாட்டத்திலோ மற்றவர்களைத் தோற்கடித்து வரவேண்டியதாயிருந்தது என அறிகிறோம்.[3] இத்தகைய குறிப்புகளிலிருந்து ராஜன் எனப்படும் இத் தலைவர்கள் (அல்லது அரசர்கள்) பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்ற முடிவிற்கு வரத் தூண்டுகிறது. வேதகால ஆரம்பத்தில் விசாவின் தலைவனை மக்கள் தேர்ந்தெடுத்திருக்கக் கூடும். நாளாவட்டத்தில் குடியின் செல்வாக்குப் பெற்ற சிலர் இன்னான்தான் அரசனாக வரவேண்டுமென்று தீர்மானித்து மக்களின் ஆதரவைப் பெற்றிருக்கக் கூடும்.

[1] சார்லஸ் டிரெக்மெய்ர் (Charless Drekmeir), பண்டைய இந்தியாவில் அரச பீடமும் சமூகமும் (Kingship and Community in Early India), பக்கம் 19.
[2] அதர்வ வேதம் III, 4. [3] ஆயித்ரேய பிராமணம் VII, 19

வேதத்தில் காணப்படும் 'மக்கள்', 'தேர்ந்தெடுத்தல்' போன்ற சொற்களின் பொருள் தெளிவில்லாமல் இருப்பதால் அறிஞர்கள் இதைப்பற்றி அறுதியிட்டுக் கூற இயலாமலிருக்கிறார்கள். ஆனால், தற்காலத்திய தேர்தல் முறை வேத காலத்தில் இல்லை என்பது தெளிவு. வேதத்தில் எங்கும் அரசன் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டான் என்று தெளிவாகச் சொல்லப்படவில்லை என்பது ஒருபுறமிருக்க அரச பதவிக்கு மேற்குடியினரின் (Aristocracy) செல்வாக்கை நம்பியிருந்தான் என்று சொல்லப்படுவது கவனிக்கத் தக்கது. அரச பதவியில் ஒருவனை அமர்த்துங்கால் பொதுமக்களும் அதில் ஒரு பங்கு வகித்தனர் என்று கூறலாம்.[4]

வேத காலத்தில் அடிக்கடி ஏற்பட்ட போர்கள் அரச பீடத்தை (Kingship) மேலும் மேலும் வலுப்படுத்தின. அரசாங்கத்தின் (Government) அடிக் கருவாய் விளங்கிய இராணுவம் செல்வாக்குப் பெற்று அதிகமாகவும், பரந்த அளவிலும் செயல்படச் செயல்படத் தொழிற்குழு இயக்கங்கள் தத்தம் சுய அதிகாரத்தை இழந்து 'நாடு' எனும் அமைப்பு ஏற்படத் தோதாக இணைந்தன.

இத்தகைய நாட்டின் அரசன் போர் ஓய்வுக் காலங்களில் எச் செயல்களில் ஈடுபட்டிருந்தான் என்பதை வேதங்களிலிருந்து நாம் தெளிவாக உணர முடியவில்லை, தேவர்களின் தலைவனும் வெற்றிக்கு இருப்பிடமானவனுமான இந்திரனை ஒத்தவனாகவும், வருணனின் பிரதிநிதியாகவும்[5] அரசன் விளங்கினான் என்பது தெளிவாக்கப்படுகிறது. இவ்விரு தேவதைகளின் சக்தியும் ஒருங்கிணைந்தவனாகக் காட்டப்படும் இவன் நீதிபதியாகவும்,[6] ஒழுங்கமைப்பின் (Established order) காவலனாகவும் விளங்கினான். அரசனின் தர்மம் (ராஜ தர்மம்) தன்னுடைய இப் பொறுப்புகளைச் சரியாக நிர்வகிப்பதே ஆகும். பொது மனிதர்களின் தர்மம் இராஜ தர்மத்தையே சார்ந்திருந்தது. தர்மக் கோட்பாடுகள் அரசனுக்கும், குடிமக்களுக்கும் இடையே உள்ள தன்மையையும், மேற்குடி க்ஷத்திரியரின் மேலாதிக்கத்தையும் உறுதிப்படுத்தின.

அரசனின் கடமை குடிகளைக் காப்பது மட்டுமன்று; அவர்கள் வாழ்க்கையை வளங் கொண்டதாக அமைப்பதுமாகும் என்று

[4] K. P. Jayaswal, Hindu Polity, 2nd Edn. p. 15

[5] வருணன் பிரபஞ்சத்தை ஒழுங்குபடுத்துபவன். மனித குலத்தின் சமூக ஒழுங்கமைப்பு இப் பிரபஞ்ச ஒழுங்கையே சார்ந்தது. சடங்குகளின் மூலம் இவ்வொழுங்கினைப் பெறலாம் என்பது ஆரியர்களின் நம்பிக்கை. ஆகவே, மரபினை மீறுபவன் வருணனின் கோபத்துக்கு ஆளானான்.

[6] சிறிது காலத்தில் வருணன் சட்டங்களின் அதிதேவதையுமானான்.

முதற் சம்ஹிதைகள் கூறுகின்றன. சாலச்சிறந்த (Ideal) அரசியல் அமைப்பானது மக்களைப் பாவங்களினின்றும் தடுத்து நன்னெறிப் படுத்துவதிலேயே அடங்கியிருந்தது என்பதாக வேதங்களி லிருந்து நாம் ஊகிக்கக் கூடும். புரோகிதர்கள் தங்களைத் தாமே உயர்த்திக்கொண்டு சமூகத்தின் மேல்மட்டத்தில் தங்கள் இடத்தை நிலைநாட்டுவதற்காகப் பொருளாதார மேம் பாட்டோடு ஆன்மீக மேம்பாட்டையும் நாட்டின் குறிக்கோளாக அமைத்து இவ் வேதப் பகுதிகளை ஒருவேளை ஆக்கியிருக்கலாம்.[7] ரிக் வேதத்தின்படி ராஜன்யரைக் (க்ஷத்திரியர்) காட்டிலும் குறைந்த முக்கியத்துவம் வாய்ந்தவராகவே பிராமணர்கள் காணப்படுகிறார்கள். அப்போது வேள்விகள் பிராமணர்களுக்கு மட்டுமே உரியதொன்றாக விளங்கவில்லை. ஆனால், பிற்கால வேத இலக்கியங்களில் அவர்கள் தலையாய அங்கமாகக் காட்டப் படுகிறார்கள். ஆரிய ஒழுங்குத் திட்டத்தில் மதம், வழிபாடு இவைகள் மேன்மேலும் வலியுறுத்தப்பட்டமை பிராமணர்களின் உயர்வுக்குச் சாதனமாக அமைந்தது.

வேதகால அரசன் தெய்விகமானவன் அல்லன். மற்றப் பழமையான அரசர்கள் ஈடுபட்டதுபோல் அவன் புரோகிதக் காரியங்களில் ஈடுபடவில்லை. மேலும், தர்மமென்பது எந்த மனிதனையும் உட்படுத்தும் கோட்பாடாக அமைந்திருந்தது.

ஆகவே, சமூக, மதச் சட்டதிட்டங்களுக்கு முரணான செயல்களில் ஈடுபடாமல் அவன் அதிகாரம் வரம்பிற்குட்பட் டிருந்தது. இதை மீறினால் வருணனின் கோபத்திற்குப் பாத்திர மாவான் என்ற பயம் தவிர, மக்கள் தன்னை விட்டகன்று தன் போட்டியாளர்களுடன் அல்லது எதிரிகளுடன் சேர்ந்துகொள் வார்கள் என்ற பயமும் அவன் அதிகாரத்திற்கு வரம்பிட்டது. அரசனுக்கும், அவையினருக்கும்[8] கருத்தொற்றுமையில்லாத போது அவையினரின் எண்ணமே முடிவானதாய் இருந்திருக்க வேண்டும். இந்த அவையின் அதிகாரம், முடிசூட்டு விழாவில் மக்கள் ஏற்ற பங்கு, அரசனை வெளியேற்ற அவர்களிடமிருந்த சக்தி இவைகளையெல்லாம் எண்ணிப்பார்க்கும்போது பின் வேறெந்தக் காலத்திலுமல்லாது வேத காலத்தில் மக்களுக்கு அரசனைக் கட்டுப்படுத்தும் சக்தி ஓரளவுக்கு இருந்ததெனக் கூறலாம்.

மேலே சொன்னவற்றையெல்லாம் காட்டிலும் மேற்குடியின ரிடமிருந்து அரச பீடத்திற்கு எழக்கூடிய போட்டியே அரசனது

[7] டிரெக்மெய்ர், பக்கம் 21

[8] மேற்குடியினரைக் கொண்டதாக அமைந்திருக்கலாம்.

ஏதேச்சாதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதாக அமைந்தது. தொடர்ந்து போர் நடக்கும் அக் காலங்களில் போரிடும் இம் மேற்குடியினரையே அவன் சார்ந்திருக்க வேண்டியிருந்ததால் இவர்களின் அதிருப்திக்கும் பாத்திரமாக முடியாது. சில சமயங்களில் இப் போட்டியாளர்களின் பணிவினை அதிகாரத்தினலோ, சண்டையிட்டோ அவர்களிடமிருந்து திறை (Tribute) வசூலித்துப் பெற்றுவந்தான். மொத்தத்தில் அரசனென்பவன் அவைப் பிரபுக்களின் தலைவனாகவே திகழ்ந்தான். சில நாடுகளில் இவ்வாறான இரண்டரசர்களும் இருந்தார்கள். அவர்கள் ஒருங்கிணைந்தோ அல்லது நாட்டின் இரு பகுதிகளுக்குத் தனித்தனித் தலைவர்களாகவோ விளங்கினார்கள். பிற்சொன்ன வகையில் முக்கியமான பிரச்சினைகளில் மட்டுமே இருவரும் கலந்தாலோசித்துச் செயல்பட்டனர்.

வேத காலத்திலேயே சிவில், கிரிமினல் என்ற குற்றப் பாகுபாடு இருந்ததாகத் தெரிகிறது. ஆனால், ரிக் வேதத்தில் இக் குற்றங்களை விசாரித்து நீதி அளிக்கப்படும் முறை சொல்லப்படவில்லை. ஒரு வேளை நீதியென்பது மனிதனின் கட்டுப்பாட்டில் வராமல் தெய்வத் தன்மை பொருந்தியுள்ளதாகக் கருதியிருக்கக் கூடும்; அல்லது சொந்தப் பகையைத் தீர்த்துக்கொள்வதன்றி மற்றவற்றில் ஈடுபடுமளவுக்கு அரசனின் அதிகாரம் வலுப்பெறுமலிருந்திருக்க வேண்டும். நீதித் தலங்களைப் பற்றிக் குறிப்பேதுமில்லை. கிராம மன்றங்கள் விசாரித்துத் தீர்க்கும் அதிகாரம் வாய்ந்தனவாய் இருந்திருக்க வேண்டும்.[9]

வேதகால அரசுகள் சிறியவையாகவே இருந்தன. அரசர்கள் 'சாம்ராட்' என்றோ 'மகாராஜா' என்றோ அழைக்கப்பட்டார்கள் என்றாலும், இப் பட்டங்கள் அவர்கள் அடைந்த வெற்றிகளைப் பொறுத்து அமைந்தனவே தவிர, பரந்த எல்லையினையுடைய அரசைக் குறிப்பன அல்ல. வேத காலத்தின் பிற்பகுதியில் நிலையான இடம் கொண்ட அரசுகள் (Territorial States) ஏற்பட்டன. வேத இலக்கியங்கள் பரந்த எல்லையைக் கொண்ட பேரரசுகளைப்பற்றிக் குறிப்பிடுகின்றன என்றாலும், உண்மையில் அத்தகைய அரசுகள் இருந்திருக்க முடியாது. இராஜசூய யாகம் அத்தகைய பேரரசினை அமைக்க வேண்டும் என்ற ஆசையினை உணர்த்துவதாக அமைகிறதே தவிர வேறில்லை.[10] தொன்மையான அசுவமேத யாகத்தையும் ஒரு பேரரசின் தலைவன் செய்ததாக நாம் கொள்ள வேண்டியதில்லை.

[9] டிரெக்மெய்ர், பக்கம் 22, [10] மேற்படி, பக்கம் 28

தன்னுடைய குதிரைகளை, விரும்பும் இடங்களில் மேயவிடும் உரிமை தனக்கு உண்டு என்பதை இந்த யாகத்தின் மூலம் ஓர் அரசன் நிலைநாட்டிக்கொண்டான் என்பது பொருத்தம்.

ஆரம்பக் கட்டத்தில் இருந்ததைவிடப் பின்னல் பெருத்த அளவில் போர் ஏற்படத் தொடங்கியது. ஆனல், தர்மக் கொள்கை வளர வளர—அதிலும் ஆரியர்கள் தங்களுக்குள்ளேயே சண்டையிடும்போது — மனிதாபிமானத்தை ஒட்டிப் போர்ச் சட்டதிட்டங்கள் ஏற்பட்டன. ஒருவேளை இதன் காரணமாகவே இராஜ தந்திரம் (Diplomacy) வளர்ந்திருக்கக் கூடும். தூதரும் இக் காலத்தில்தான் தோன்றியிருக்க வேண்டும்.

வேதகால அரசவையும் அலுவலரும்

'இரத்தினச் சடங்கு' (Jewel ceremony) என்று ஒன்று உண்டு. வேதகாலத்தில் இருந்த இச் சடங்கில் பங்கேற்கும் சில அதிகாரிகளைப் பற்றிய குறிப்புகள் நமக்குக் கிடைக்கின்றன. புரோகிதர், அரசி, படைத்தலைவன், கருவூலர், வரி வசூலிப்பவர், இராஜ குரு ஆகியோரை அது குறிப்பிடுகிறது. பிற்காலத்தில் யார் யார் இச் சடங்கில் பங்கேற்கலாம் என்பது அவரவர் சாதியைப் பொறுத்து அமைந்தது. வேதகால ஆட்சியில் படைத்தலைவன், கருவூலர், வரி வசூலிப்பவர், கிராமணி என்ற கிராமத் தலைவன் ஆகியோரே முக்கியமான அதிகாரிகள். கிராமணிக்குப் போர்க் காலத்தில் படைதிரட்டித் தரும் கடமையும் இருந்திருக்க வேண்டும்.

பல அரசர்களுக்கு ஒரே புரோகிதர் இருந்திருக்கலாம். இவ் வரசப் புரோகிதப் பதவி வம்ச வழியானதாய் இருந்தது என்பதற்கு உறுதியான ஆதாரங்கள் இல்லை. இவர் புரோகிதராய் மட்டுமன்றி அரச குமாரனின் ஆசிரியராயும், அரசனின் தோழராயும் விளங்கினர். இதனல் மத சம்பந்தமற்ற விஷயங்களிலுங்கூட இவர் கூறும் முடிவுகளை அரசன் கவனிக்க வேண்டிய நிலையிலிருந்தான். வேதப் பிற்காலத்தில் பத்துப் பிராமணர்களைக் கொண்ட குழு ஒன்று அரசனுக்குச் சிக்கல் வாய்ந்த திட்ட ஆட்சித் துறைகளில் ஆலோசனை வழங்கியது. தவிர, அரசன் வேள்விகள் செய்வதும் வளர்ந்தது. தந்திர மந்திரங்களிலும், வேள்விகளிலும் அரசன் அதிக நம்பிக்கை வைக்க வைக்கப் புரோகிதர்களின் செல்வாக்கு ஓங்கியது; மற்றவர்களின் செல்வாக்குக் குறைந்தது. வேதகால அவை இப் புரோகிதர்களின் மேலோங்கிய செல்வாக்கினல் வீழ்ச்சியுடைந்து மறைந்திருக்கலாம் என்பது சாத்தியமே.

ஒரு காலத்தில் இந்த அவை மிக்க அதிகாரம் பெற்றிருந்தது. அரசனை ஏற்படுத்தவோ, நீக்கவோ, அரசன் இல்லாதவிடத்து அரசு பொறுப்பேற்க வழி செய்யவோ (Interregnum) இதற்கு அதிகாரமிருந்தது. அரசன் தன்னை மக்கள்[11] (அல்லது அவர்களின் பிரதிநிதிகள்) ஒத்துக்கொண்டபின் இந்த அவையினரைக் கலந்து ஆலோசித்தான். இந்த அவை எவ்வாறு அமைக்கப்பட்டது என்பது சரிவர விளங்கவில்லை. முக்கியமான சமயங்களில் இவ் வகையில் மக்கள் கூடினரா அல்லது செல்வாக்கு மிக்கவர்களையும் பெரியோர்களையும் கொண்டு இது விளங்கியதா என்பது தெரியவில்லை.

சமிதி

வேதகால அவை சபா அல்லது சமிதி என்று அழைக்கப்பட்டது. சபா என்பது கிராமத்தின் அவையாக விளங்கியது என்பது சிம்மர் (Zimmer) என்பவரின் கூற்றாகும். இது சமூக, அரசியல் பணிகளில் ஈடுபட்டிருந்தது என்கிறார். அவரே சமிதி என்பது தலைநகரில் கூடி நாட்டின் பொது விஷயங்களை ஆலோசிக்கும் அவையாக இருந்தது என்றும் கூறுகிறார். மற்றும் பல அறிஞர்கள் இவ் விரண்டு அவையும் ஒரே மாதிரியான செயல்களையே கொண்டிருந்தன என்று கூறுகிறார்கள். சமிதி என்பது மேற்குடியினரைக் கொண்ட அவை என்றும், அரசன் சீரான அதிகாரம் செலுத்துவது இவ் வவையின் சம்மதத்தைப்பொறுத்தே அமைந்திருந்ததென்றும் ட்ரெக்மெய்ர் கூறுகிறார்.[12]

அரசனும் சமிதியில் இருந்தான் என்று கூறியபோதிலும் அவன் அதில் அங்கம் வகித்தானா என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. எப்படியிருந்தபோதிலும் அந்த அவையினர் ஒரு பொருளை விவாதித்து ஒரு முடிவுக்கு வர அரசன் துணை செய்திருக்க வேண்டும். 'அரசனுக்கும், அவைக்குமிடையே ஒற்றுமை நிலவுவதாக' என்பது வேதப் பிரார்த்தனை. ஆட்சிப் பணியினை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் பெற்றிருந்த இந்த அவை தன்முன் வைக்கப்படும் தீர்மானங்களைச் சீர்தூக்கி ஆராயும் அதிகாரம் படைத்திருந்ததேயன்றித் தானாகத் திட்டமியற்றும் அவையாக விளங்கியிருக்க முடியாது. வேதப் பிற்காலத்தில் எழுந்த இச் சமிதி உபநிடத காலத்தில்தான் மீண்டும் தோன்றுகிறது.

[11] ஜன, ஜனபதா, பௌர - ஜனபதா எனும் சொற்கள்மக்களையும் நாட்டினையும், பிரதேசங்களையும் குறிப்பிடுகின்றன,

[12] டிரெக்மெய்ர், பக்கம் 24.

### சபா

'பலர் கூடிப் பிரகாசிக்கும் கூட்டம்' சபா எனப்படும் என்று பொருள் கொள்ளலாம். இது சமிதிக்கோ, அரசனுக்கோ ஆலோசனை வழங்கும் மேற்குடியினரைக் கொண்டமைந்திருக்கலாம். சமிதியைப் போலன்றிச் சிறப்புத் தகுதிகள் வாய்ந்தோர் மட்டுமே இடம் பெறும்படியான இச் சபா அரசனுக்கு ஆலோசனை சொல்லும் குழுவாகக் காலப்போக்கில் சமிதியினின்றும் எழுந்ததாக இருந்திருக்கக்கூடும். பெரும்பாலும் புரோகிதரின்கீழ்ச் சபா செயல்பட்டுவந்தது. இதற்கு நீதி அதிகாரங்கள் இருந்தனவா என்பது தெரியவில்லை.[13]

சபா, சமிதி இவைகளைத் தவிர விததா, பரீக்ஷத் என்ற அமைப்புகளைப் பற்றியும் குறிப்புகள் கிடைக்கின்றன. விததா என்பது வேள்விகளுடன் தொடர்பு கொண்ட அமைப்பாகவும் விளங்கியது. இதில் பெண்களும் பங்கெடுத்துக்கொண்டனர் என்று ஊகிக்கலாம்[14]. இதில் அங்கம் வகிப்பது ஒருவரின் வகுப்பை அடிப்படையாகக் கொண்டிருந்தது என்று எண்ண இடமில்லை. விளைச்சலைப் பகிர்ந்து கொடுக்கும் அமைப்பாக இது விளங்கியிருக்கலாமென்று சிலர் கூறுவர். போர்க்காலத்தில் ஆலோசனை வழங்கும் குழுவாகவும், ஒரு மதச் சபையாகவும் இது விளங்கியது என்பதில் அதிக ஐயமில்லை.[15]

### பொருளாதாரம்

வேத காலத்தில் நிலம் சமூகத்தின் சொத்தாகக் கருதப்பட்டது. தனி மனிதனுக்கு நிலச்சொத்து அதிகாரம் இல்லை என்பது இதன் பொருளன்று. தான் விரும்பியவண்ணம் நிலத்தை விற்கவோ, உபயோகப்படுத்தவோ சமூகம் அதிகாரம் பெற்றிருந்தது. வேதகால முடிவின்போது அரச உடைமைக்கும், தனி மனிதன் உடைமைக்கும் இடையேயுள்ள வேறுபாடு தெளிவாகிவிட்டது. வேத உரைகளும் (Commentaries) அரசன் மக்களின் சொத்தில் கை வைப்பதைக் குற்றமாகக் கருதுகின்றன.[16] ஆனால், ஒருவன் வரி கொடுக்காமலிருக்கும்போது அவன் சொத்தில் தலையிட அரசனுக்கு உரிமையுண்டு என்று கூறுகின்றன. நிலம் கூட்டுக் குடும்பங்களின் வசம் இருந்தது. பிரித்துக்கொள்ளப்படும் போது மூத்த மகனுக்கு முதலிடம் அளிக்கப்பட்டது. பெண்

[13] ரிக்வேதம் X, 71 ; VII, 1-4

[14] மேற்படி, I, 167 - 3 ; X, 85 - 26; அதர்வ வேதம் XIV, 1-21; XIII, 3-24

[15] ரிக்வேதம I, 56-2-159 ; அதர்வ வேதம் XVII, 1-15

[16] ஆனால், மனு இவ்வாறு கூறவில்லை.

களுக்குத் தகப்பன் சொத்தில் பங்கில்லை. அரசன் நிலங்களை வழங்கினுலும் அது பட்டாவாக அமையாமல் அந் நிலத்திலிருந்து வரும் வருவாயை அடையும் உரிமையையே குறிக்கின்றது.

ஆதி காலத்தில் அரசன் தன் சொத்துகளிலிருந்தும், போரில் கைப்பற்றும் சொத்துகளிலிருந்தும் மத சம்பந்தமாக அளிக்கப்படும் நன்கொடையிலிருந்தும் வரும் வருவாயையே நம்பியிருந்தான். ஆனுல், வேதப் பிற்காலத்தில் அதிகச் செலவை ஏற்படுத்தும் போர்கள் அடிக்கடி ஏற்படவே இவ் வினங்களி லிருந்து வரும் வருமானம் போதுமானதாக இல்லை. தவிர, நாடும் ஒரு குறிப்பிட்ட எல்லையை உடையதாக இக் காலத்தில் விளங்கியது. ஆகவே, அரசன் வரிவசூல் செய்தே செலவுகளுக்கு ஏற்ப வருவாய் தேடினுன்.

ஆக, வேத காலத்தில் அரசு என்பது அரசனுக்கும், குடி களுக்குமிடையே நிலவிய ஒருவித ஒப்பந்தம் போன்றதாய் விளங்கியது. மக்களின் சம்மதம் பெற்ற ஒரு காப்பாளனுய் அரசன் இருந்தான். இவன் தனி எதேச்சாதிகாரம் கொண்ட வனுய் இல்லாமல் கொள்கையளவிலும், நடைமுறையிலும் சில வரம்புகளுக்குட்பட்டு நடக்க வேண்டியவனுயிருந்தான் என்று சொல்லலாம்.

# 2. வேத நூல்களில் அரசியல் சிந்தனை

முன்னுரை

மனிதன் தனக்கும் பரத்திற்கும் (Supernatural) இடையே உள்ள உறவை வெளிப்படுத்தும் வழிகள் மதங்களில் காணப்படு கின்றன. பல செய்கைகளினால் இவை வெளிப்படுத்தப்படும்போது இச் செய்கைகள் சடங்குகளாக அமைகின்றன. சடங்குகளைத் தவிர வழிபாடும், தியானமும், வேள்வியும் வேத மதத்தில் சொல்லப்படுகின்றன. பிற்காலத்தில் எழுந்த புத்த, சமண மதங்களுக்குப் பதிலளிக்கும் வகையில் இச் சடங்குகள் திருத்தியும், மாற்றியும், விரித்தும் அமைக்கப்பட்டன. இத் திருத்தியமைக்கப் பட்ட நெறியைத்தான் இந்து மதம் என்று நாம் கூறுகிறோம். அதற்கு முன்னால் நிலவிவந்த வேதமதம் பிராமணீயம் (Brahmanism) என்று வழங்கப்படுகிறது.

பிராமணீயம் வெறும் சடங்குகளை மட்டும் கொண்டதன்று. சமூகக் கூட்டமைப்பு வழியும் அதில் அடங்கியுள்ளது. மதத் துறையிலே சிறுபான்மையினரான பிராமணர்களே ஈடுபட்டனர். அதை அவர்களுக்கே உரிய துறையாக ஆக்கிக்கொண்டனர். பிராமணப் புரோகிதர்கள் மனிதனின் முக்தி அல்லது வீடு பேற்றினை நிர்ணயிக்க வல்லவராகத் தங்களைக் காட்டிக் கொண்டனர்.

வேதச் சடங்குகளையும், வேள்வி நெறிகளையும் ஒருமுகப் படுத்தி, ஒரு கட்டுக்கோப்புடன் அமைக்க வேண்டிய தேவையை உணர்ந்த அவர்கள் இயற்றிய சடங்குத் தொகுதியே பிராமணங் கள் எனப்படும்[1]. இத் தொகுதிகள் கூறும் வேள்விச் சடங்குகளின் பின்னே சமூகக் கட்டுப்பாடும், அதனோடு இணைந்த ஒரு சாராரின் நலம் விழையும் ஆவலும் பொதிந்து கிடக்கக் காணலாம்.[2]

கருமம், மறுபிறப்பு எனும் ஒன்றோடொன்று இணைந்த இரு கொள்கைகள் இப் பிராமணங்கள் ஏற்பட்ட காலத்தில்

[1] ஆயித்ரேய பிராமணம், சதபாத பிராமணம் போன்றவை.
[2] டிரெக்மெய்ர், பக்கம் 28

எழுந்தவையே. ஆத்துமம் என்பது அழிவற்றது. முதற் பொருளிலிருந்து பிரிந்து மீண்டும் அதை அடையும்வரை இந்த ஆத்துமம் பல பிறப்புகளுக்கு உள்ளாகிறது. ஒவ்வொரு பிறப்பிலும் செய்யும் நன்மை தீமை, பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப அதன் அடுத்த பிறவி நேரிடுகிறது. நற்பிறவி ஏற்பட வேண்டுமானால் பாவங்களைக் குறைத்துப் புண்ணியங்களை அதிகம் செய்ய வேண்டும் ; பிறவியிலிருந்து தப்பிப் பரமானந்த நிலையை அடையப் பாவ புண்ணியங்களிலிருந்து அகன்றுவிட வேண்டும் என்பதே இக் கொள்கைகளின் சுருக்கம்.

மனிதன் பிறப்பு கேவலம் ஒரு திடீர் விபத்தன்று. சமூகத்தில் ஒரு மனிதனின் அந்தஸ்தும், நிலைமையும் அவன் முற்பிறவியில் செய்த பாவ புண்ணியங்களின் பலனே. அவற்றை முற்றிலும் அனுபவிப்பதற்காகவும், ஆத்துமம் அவற்றிலிருந்து விடுபட ஏது வாயுமே இப் பிறப்பு அமைகிறதென்றும் கூறலாம்.

ஆகவே, மனிதன் பிறக்கும் சாதி அவனுடைய கர்மத்தினாலே என்று ஆகிறது. இதை ஒத்துக்கொண்டால் கீழ்ச் சாதிகளில் பிறப்பவன் தன் நிலையிலேயே இருந்தாக வேண்டும். எதிர்த்துப் போரிடுவது என்பது மேலும் மேலும் அவனது கர்மத்தை அதிக மாக்கிக் கீழே கீழே தள்ளுமே தவிர, மேல்நிலையை அடையவோ, பிறவித் துன்பத்திலிருந்து விடுபடவோ உதவி புரியாது என்று ஆகிறது. ஆகவே, ஒரே மனிதன் மதத்திற்கு அடங்கியவனாகவும், சமூகச் சீர்திருத்தவாதியாகவும் இருக்க இடமில்லை.

கி.மு. 7, 6ஆம் நூற்றாண்டுகளில் கங்கைச் சமவெளியில் ஆரியர்களும், பிரம்ம சடங்குகள் இதுவரையில் தெரியாத ஆரிய ரல்லாதாரும் வசித்தனர். சூத்திரரைக் கீழான சாதியினராக மதிக்கும்போக்கு இக் காலத்தில் எழுந்தது. வெல்லப்பட்ட தாசர் களும் ஆரியர் கூட்டத்துடன் கலந்தனர். பெரும்பாலும் இவர்கள் சூத்திரர்களாக மதிக்கப்பட்டனர். இவ்வாறு கலக்காத இனங் களைப் புக்காசர்கள், சண்டாளர்கள் என்று அழைத்தனர்.

சாதி அடிப்படையில் சமூக, பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் எழலாயின. மூன்று உயர் சாதியினர் ஆரியர் எனப்பட்டனர். இவர்கள் சடங்குகளின் மூலம் 'மறு பிறப்பை' அடைய முடியும் என்னும் கொள்கையினராதலால் 'இருபிறப் பாளர் (Twice-born) என்று அழைக்கப்படுகின்றனர். இத்தகைய உரிமையினின்றும் சூத்திரரும், மற்றவரும் விலக்கப்பட்டனர்.

மந்திரங்களைச் சொல்லும் முறையிலும், காரியங்களைச் செய்யும் முறையிலும் (தந்திரம்) பிழைகள் இருக்கக் கூடாது

என்று காலப்போக்கில் வலுவான எண்ணம் ஏற்பட்டது. மதச் சடங்குகள் விரிவாகவும், கடினமாகவும் ஆக ஆக இது மேம் பட்டது. இதையொட்டி இலக்கணமும் இன்னோரன்ன பிற மொழியியல் பிரிவுகளும் தலைதூக்கின. மதத் தொடர்புடைய யாவும் தமக்கே உரித்தாகக் கொண்ட பிராமணர்கள் கல்வியை யும் தாமே செலுத்தத் தலைப்பட்டனர். அரசன் பிராமணன் அல்லாதிருந்தும், சமூக, அரசியல் துறைகளில் பிராமணர் செல்வாக்குப் பெற இது உதவியாயிருந்தது. இதன் விளைவாகப் பண்பாட்டு ஒருமைப்பாடும் (Cultural integration), அரசியல் ஒருங்கிணைப்பும் (Political co-ordination) இந்தியாவில் தனித் தனியே வளர முடிந்தது என்று டிரெக்மெய்ர் கூறுவார்.[3] இதனாலெல்லாம் பிராமணர்கள் செல்வர்களாக விளங்கினார் கள் என்று கருதிவிடமுடியாது. பல ஆண்டுக்காலம் வேதநூல் களையும், சடங்கு நெறிகளையும் கற்பதால் அவர்கள் பிற தொழில் செய்யத் தங்களை அருகதையற்றவர்களாக ஆக்கிக்கொண்டனர். மேலும், கிழக்குச் சமவெளிப் பிரதேசங்களில் தேவைக்குமேல் அதிகமாக அவர்கள் இருந்ததால் பெரும்பாலோர் ஏழையாகவே இருந்தனர். ஆகவே, ஏழைகளுக்கு இரங்கும் சிந்தனையும் காணப்படுகிறது.[4]

எவ்வாறாயினும் பழங்குடி முறையினை ஒரு பெரும் நாகரிக மாக அல்லது பண்பாட்டு ஒழுக்கமாக மாற்றியமைப்பதில் பிராமணர் வகித்த பங்கு முக்கியமானது. இரத்த பாசத்தினை மட்டும் அடிப்படையாகக் கொண்ட சிறுகுடி பெரும் சமூகமாகச் செயல்படுவதற்குத் தேவையான அடிப்படைகளை ஏற்படுத்தித் தந்தனர்.

**பிராமணங்களில் அரசியல் சிந்தனை**

வேதப் பிற்காலத்திற்கும், புத்த மதத்திற்கும் முன்பாக உள்ள செய்திகளை அறியப் பிராமணங்கள் துணைபுரிகின்றன. சாதிகள் முற்றிலும் வளர்ந்து நிலைநிறுத்தப்படாமலிருந்த போதிலும் பிராமணங்கள் எழுந்த காலத்தில் சாதித் தொடர்பு கள் அறுதியிடப்பட்டன. மனிதனுக்கும் கடவுளுக்குமிடையே உள்ளவனாகப் புரோகிதன் ஒப்புக்கொள்ளப்பட்டான்.

வேள்விகள் முக்கியமாகக் கருதப்பட்டன. பிரஜாபதி, படைப்புக் கடவுள், மற்ற வேதகாலக் கடவுளரையெல்லாம் கடந்த பெருநிலையிலுள்ள கடவுளாக ஏற்பட்டான். சகல

[3] மேற்படி பக். 29

[4] Kosambi, D.D., Introduction to the Study of Indian History, பக். 126.

வல்லமையும், தன்மையும் பொருந்தியவனாகவும், வேள்வி களினால் பலம் பெறுபவனாகவும் விளங்கிய பிரஜாபதி பிற்கால இந்து மதத்திற்கும், வேதகாலப் பிராமண மதத்திற்கும் இடையே விளங்கும் இணைப்பாக விளங்கினான். உபநிடதங்கள் ஆராயும் எல்லையில்லாப் பரம்பொருள், அதனை அடையும் முறை ஆகிய வற்றிற்கு இப் பிரஜாபதி கருத்துவம் அடிகோலியது என்றால் மிகையாகாது.

ஆதிக்கம் பெற்ற இரு வகுப்பினரில் சத்திரியரைவிடப் பிரா மணர்கள் மேம்பட்டிருந்ததோடு. அரசனைச் சார்ந்து, கீழ்ப்பட்டு விளங்க வேண்டுமென்பது இல்லாமல் சுதந்திரமாயும் இருந்தனர். ஒரு காலத்தில் மித்ரன் (பிராமணர்களைக் குறிக்கும் கடவுள்) வருணனைச் (சத்திரியர்களைக் குறிக்கும் கடவுள்) சாராதிருந்தான் என்று கூறப்படுகிறது. வருணன் அழைத்த காலத்தில் மித்ரன் அவனோடு சேர்ந்துகொண்டான். அதன்பின் முன்பு வெற்றி கிட்டாத இடங்களிலெல்லாம் வருணனுக்கு வெற்றியுண்டா யிற்று. வலுமட்டுமிருந்தால் போதாது. வலிமையினைச் செலுத்தும் புத்தியே வெற்றிக்கு அடிப்படை என்பது இதன் பொருள். இதிலிருந்து சத்திரியர் வெற்றிக்குக் காரணம் பிராமணர் எனத் தெரியவருகிறது. ஆகவே, பிராமணனே முக்கியம் வாய்ந்தவனென்று ஏற்படுகிறது. சதபாத பிராமணத்தின் கடைப்பகுதியான பிருகதாரண்ய உபநிடதத்தில் கீழ்வருமாறு கூறப்படுகிறது.

ஆதியில் பிரம்மா மட்டுமே இருந்தான். அவன் அதிக பல முள்ள சத்ராவை உண்டாக்கினான். ஆனால், பிராமணத்துவமே சத்திரியத்தின் மூலம். அரசன் மிக்க அதிகாரம் வாய்ந்தவனாயினும் அதற்கு அடிப்படை பிராமணனே. ஆகவே, பிராமணனை எதிர்க்கும், ஒடுக்கும் எவனும் தன்னுடைய மூலத்தையே எதிர்த்து ஒடுக்குகிறான்.

ஆகவே, அரசாங்கம் என்பது பிராமணன் துணைகொண்ட சத்திரிய அரசாங்கம் என்பது பண்டைய இந்திய அரசியல் கருத்து களில் ஒன்றாகும். சிற்சில இடங்களில் சத்திரியன் அதிக மதிப்பு உடையவனாகச் சொல்லப்பட்டபோதிலும், அல்லது சம அந் தஸ்துடையவனாகச் சொல்லப்பட்டிருந்த போதிலும்[5] இவர்கள் இருவருக்குமிடையே உள்ள உறவு அந்தந்தக் காலக்கட்டங்களை

[5] ஆயித்ரேய பிராமணம் VIII, I-4, 9-6 ; சதபாத பிராணம் V, 4-4-15. XII, 7-3-1 ; (பிராமணர் மேம்பட்டவர் எனக்கூறும்) சதபாத பிரமாணம் I, 3-2; V, 4-2-7. (சத்திரியர் மேம்பட்டவர் எனக் கூறும்)

ஒட்டி அமைந்தது. அரசியலும், மதமும் பின்னிப் பிணைந்து செல்வதற்கு இதுவே காரணமாக அமைந்தது.

புரோகிதர் அரசனுடன் சேர்ந்து அரசாங்கம் நடத்துவதில் பங்கு பெற்ருர். அரசனில் பாதி புரோகிதரென ஆயித்ரேய பிராமணம் கூறும். புரோகிதர் இல்லாமல் நடத்தப்படும் வேள்வியினைக் கடவுளர்கள் ஏற்க மாட்டார்கள்.[6] இதனுல் தன் போக்கு ஆட்சியிலோ, மத ஆட்சியிலோ ஏற்படும் ஆபத்து தவிர்க்கப் பட்டது.

தருமம் என்பது மாற்ற முடியாத அடிப்படை விதிகளை உடையதாகக் கருதப்பட்டுவந்தது. அரசனும் தர்மத்திற்கு அடி பணிந்தவனே என்பது முடிசூட்டும் விழாவில் ஒரு சடங்கின்மூலம் அறிவுறுத்தப்பட்டது. ஆரியர்களின் முதல் அரசன் படைத் தலைமையை ஏற்றுக் கொள்பவனுக மட்டும் விளங்கினுன். நியாய அநியாயங்களைக் கவனித்துத் தண்டிக்கும் அதிகாரம் இல்லை. ஆனுல், அவனுக்குக் காலப்போக்கில் தண்டம் செலுத்தும் அதிகாரத்தையும் அவன் ஏற்கவேண்டியிருந்தது. சதபாத பிராமணம் அரசன் தண்டம் செலுத்தும் நீதி அதிகாரத்தை எவ்வாறு வருணனிடமிருந்து பெற்ருன் எனக் கூறுகிறது.[7] தண்டம் செலுத்துபவன் தண்டபதி எனவும் வழங்கப்பட்டான். இருந்தபோதிலும் பிரஜாபதியின் விதி இது எனத் தர்மத்தைக் கூறும் அதிகாரம் பிராமணரிடமே இருந்தது. இத் தர்மத்திற்கு உட்பட்டே அரசன் தண்டநீதி செலுத்த வேண்டியிருந்தது.

அரசாங்கத்தின் தோற்றுவாய் ஆயித்ரேய பிராமணத்தில் முதன்முதலாகக் கூறப்படுகிறது. தேவர்கள், அசுரர்களால் தோற்கடிக்கப்படும்போது தங்களுக்கு அரசன் இல்லாமையினுல் தான் தோல்வி ஏற்படுகிறது என்பதை உணர்ந்த தேவர்கள் சோமனைத் தங்கள் அரசனுகக் கொள்ள ஒப்புக்கொள்கிருர்கள்.[8] அரசபீடம் போர்த்தேவையை மனத்தில் கொண்டு ஏற்படுத்தப் பட்டது என்பது இதன் விளக்கம்.

தெய்விகத் தோற்றுவாய் (devine origin) கொள்கையும் இதே சமயத்தில் சொல்லப்படுகிறது. சதபாத பிராமணம் அரசன் எப்போதும் சரியானதையே செய்யக்கூடியவன் என்று கூறுகிறது. என்ருலும், அரசனைவிட அரசபீடமே (kingsh'p) ஏற்றம் பெறு

[6] ஆயித்ரேய பிராமணம் VIII, 24 [7] சதமாத பிராமணம் V, 3-3-9
[8] ஆயித்ரேய பிராமணம் I, 14. (இது சதபரத பிராமணத்திலும் சொல்லப் படுகிறது.)

கிறது. அரசன் கடவுளாகச் சொல்லப்படவில்லை; தேவர்கள் 'போன்ற'வனாகவே சொல்லப்படுகிறான். சத்திரியக் கடமைகளுக்கு உட்பட்டே அவன் விளங்கினான்.

அரசன் நிலை மேம்பாடு அடைய, மக்களைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை குறைந்தது. மேலும், இத்தகைய தெய்விகமான பதவி சந்ததியாக அடைந்து வருவதும் விரும்பப்பட்டது.

பட்டத்து இளவரசனும் நியமிக்கப்படலானான். என்றாலும், பிராமணனே முக்கியமானவனாகக் கருதப்பட்டான். முடிசூட்டு விழாவில்கூடப் பட்டத்து இளவரசன் பிராமணனுடைய அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்ட பிறகே முடிசூட்டப்பட்டான். இவன் அரசன் என்று புரோகிதர்கள் பறைகூவுதல் அரசனின் அதிகாரத்தை அதிகார பூர்வமாக்கியது.

அரசனின் ஆலோசனைக்குழு நண்பர்கள், அரசிகள், இளவரசர்கள், மற்றும் பல அலுவலாளர்கள் ஆகியோரைக் கொண்டு அமைந்தது. இவர்கள் இரத்தினங்கள் என அழைக்கப்பட்டனர்,

அரசனின் ஆதிக்கத்திற்குட்பட்ட நிலவரம்பு அதிகமாகவே பிராமணங்கள் எழுந்த காலத்தில் மக்கள் அவைகள் மறையத் தொடங்கின. சபா என்பது அரசனின் அந்தரங்கத்திற்கு உட்பட்டு விளங்கியது. கிராமத் தலைவன் ஓர் அரசாங்க அலுவலனாக ஆக்கப்பட்டான்.

குறிப்பிடத்தக்க பகுதி குடியரசுகளாக விளங்கின என ஆயித்ரேய பிராமணத்திலிருந்து நாம் அறிகிறோம். என்றாலும், அரசனின் ஆட்சியே பெரும்பாலும் அரசாங்கத்தைச் செலுத்தியது.

மதத் துறையின்கொள்கைகள் செய்த உதவியினால் அரசனின் செல்வாக்கும், பதவியும் ஏற்றம் பெற்றன. அதே சமயம் அரசன் மதத்திற்கு உட்பட்டும், ஆட்சித் தர்மத்திற்கு உடன்பட்டும் நடக்க வேண்டியதாயிற்று.

**சூத்திரங்கள்**

ஏறத்தாழக் கி.மு. 7ஆம் நூற்றாண்டு முதல் கி.மு. 4ஆம் நூற்றாண்டுவரை இந்தியாவில் பலவகையான மதக் கோட்பாடுகள் தோன்றி வளரலாயின. பொருள் வாதம், கடவுள் இன்மை வாதம், புத்தி ஏற்பு வாதம் போன்ற இவை பல

பிராமண சமுதாய முறையையும், வேதத்தையும் கண்டிக்கத் தலைப்படலாயின. வேத ஆசிரியர்களைப் போலிகள் என்றும் சில கூறின.

இதே சமயம் பண்டமாற்று முறைக்குப் பதிலாக நாணயச் செலாவணியும் வழக்கிற்கு வந்தது. பெர்சியா தேசம் எழுந்ததும் வாணிகமும் பெருகலாயிற்று. இதனுல் செல்வமானது பல வகைகளிலும் சேர ஆரம்பித்தது. இதன் விளைவு ஆரிய சமுதாயத் தளைகளைப் பாதிப்பதாயிருந்தது. பிராமணர்களின் வாதத்திற்கே சவாலாயும் அது அமைந்தது.

சமூகத்தில் நடப்பாடு (mobility) அதிகம் ஏற்பட்ட காரணத் தினுல் வருணுசிரம ஒழுங்குக்கே கேடு நேரிடும்போல் இருந்தது. இத்தகைய சூழ்நிலையிலிருந்து காப்பாற்றிக்கொள்வதற்காக எழுந்தவைதாம் சூத்திரங்கள் எனப்படும் நூல்களாகும்.

சிரௌத சூத்திரம் என்பது சூத்திரங்களுக்குள் முதலாவது. பிராமணங்கள் எளிய மக்களுக்குப் புரியாத வகையில் இருந்தமை யால் அவற்றைத் தெளிவுபடுத்தும் பொருட்டே சிரௌத சூத்திரங்கள் அமைக்கப்பட்டன.

பிறகு, கிருஹிய சூத்திரங்கள் வந்தன. ஒவ்வொருவரும் வீட்டில் செய்யும் சடங்குகளைப் பற்றியவை இவை.

தர்ம சூத்திரங்கள், தர்ம அதர்மங்களைப் பற்றிக் கூறுபவை. இவற்றைத் தர்ம சாத்திரங்கள் என்றும் சிலர் குறிப்பிடுவர். என்றுலும் சூத்திரங்கள் விரிவுபடுத்தி அமைக்கப்பட்ட நூல் களையே தர்ம சாத்திரங்கள் என அழைப்பது மரபு.

சிறு சிறு விதிகளை மனப்பாடம் செய்துகொள்ளும் வகையில் அமைக்கப்பெற்றுச் சூத்திரங்கள் விளங்கும். ஒவ்வொருவரும் எந்தெந்தச் சூழ்நிலையில் யார் யார் எந்தெந்தச் சடங்குகளை எப்படிச் செய்ய வேண்டும், எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதைச் சூத்திரங்கள் தெளிவுபடுத்துகின்றன. சடங்குகள் மட்டுமன்றி, உறவுகளும், தொடர்புகளும், பிராமணர்களின் உரிமைகளும், சாதியினரின் கடமைகளும், சட்ட திட்டங்களும் இவற்றில் கூறப்படுகின்றன. இவைகள் ஒருபோதும் சட்ட இயல் (Jurisprudence) ஆகமாட்டா. உடலின் ஒப்பனைக் கூறுக ஓரங்கத் தின்மேல் மற்றது சார்ந்திருப்பது போன்ற சமுதாயநிலை இதில் வெளிப்படுகிறது.

தனி மனிதன் என்ற நிலை கிடையாது. எவனும் ஒரு குழு அல்லது பகுதி அல்லது பிரிவுக்கு (group) உட்பட்டே விளங்குகிறன். தவிர ஒவ்வொருவனும் தான் இருக்கும் பிரிவின் வேலையைச் செய்பவனுக இருக்கிறன். தத்தம் பிரிவின் நலனைத் தீர்மானித்துக்கொள்ளும் அதிகாரமும் அப் பிரிவினருக்கு உண்டு என்பது கௌதம தர்ம சூத்திரத்தால் அங்கீகரிக்கப்படுகிறது. பிற சாதியினர் சம்பந்தப்படாதவைகளைத் தாமே தீர்மானித்துக் கொள்ளலாமென்றும், இரு சாதிகளுக்கிடையேயுள்ள பிரச்சனைகளில் மட்டும் அரசன் அதிகாரம் செல்லுபடியாகு மென்றும் அது கூறுகிறது. எல்லை விரிவடைந்து பல பிரிவினரும் ஓரரசன் கீழ் வரும்போது, பகுதி அல்லது வட்டார வழக்கங்களையும், சட்டங்களையும் அங்கீகரிக்கத் தலைப்பட்டனர்.

பிராமணங்களில் உள்ளதைப் போன்றே சூத்திரங்களிலும் பிராமணரின் தனித்தன்மையும், மேம்பாடும் வலியுறுத்தப் படுகின்றன. மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கே அரசாங்கம். அரசன் பாதுகாப்பையும், ஆலோசனை, மற்றும் தரும வழியையும் தருபவர்களாகப் பிராமணர்கள் காட்டப்படுகிறர்கள். அநியாய அதிகாரம் செலுத்தினுலும், இராச தர்மத்தைப் புறக்கணித்தாலும் அரசன் பாவம் செய்தவன் ஆகிறன். தகுந்த தவத்தினுலும், பரிகாரத்தினுலுமே இதிலிருந்து அவன் மீள முடியும். மக்களின் நன்னடத்தைக்கு அரசனே பொறுப்புள்ளவனுகக் கூறப்படுகிறன்.

அரசனின் புரோகிதன் மற்ற அமைச்சர்களைக் காட்டிலும் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தான். தர்ம சூத்திர காலத்தில் இப் புரோகிதரது பணியினைச் சார்ந்தே மக்களின் வளமும், நீதியும் அமைந்தன. புரோகிதர்கள், அமைச்சர்கள் இவர்களைத் தவிர வரி வசூல் செய்பவர், படைத் தலைவர், கருவூலர், நீதித்துறை சார்ந்த அலுவலர்கள் முதலியோரும் இருந்தனர். கிராமங்கள் முதல் அரசனை மேல்மட்டமாகக் கொண்ட நீதி நிர்வாகம் இருந்தது. முதிர்ந்தோர், அல்லது பிராமணர்களைக் கொண்ட குழு புரோகிதரின் அறிவுரைப்படி நீதி வழங்கியது.

சிரியல் மற்றும் குற்றவியல் சட்டங்கள் (civil and criminal law) இக் காலத்தில் எழுந்தன என்று கூறலாம். போதாயனத்தில் கூறப்பட்டபடி வேதங்களும், வேதாங்கங்களும், வழக்குகளும், ரிஷிகளின் உதாரணமும் சட்டத்திற்கு மூலமாக இருந்தன. போதாயன சூத்திரத்தில் சூத்திரனைக் கொல்பவருக்கு மிகக் குறைந்த தண்டனையே அளிக்கப்படுகிறது. ஆனல், ஆபத்ஸ்தம்ப

சூத்திரம், சூத்திரர்கள்பால் கருணையுடன் நடந்துகொள்ள வேண்டுமெனக் கூறுகிறது. பிராமணர்கள் வரி கொடுக்கும்படி செய்யக் கூடாது; அவர்களின் சொத்துகளை அரசு ஒருபோதும் எடுத்துக்கொள்ளலாகாது என்றும் கூறப்படுகிறது. சட்டத்தை மீறுபவன் தகுந்த பரிகாரத்தினால் பாவத்தைப் போக்கிக் கொள்வதுடன், தண்டனைக்கு உட்படுவதனால் செய்த தவற்றையும் திருத்திக்கொள்கிறான். தத்தம் நெறியிலிருந்து பிறழும் மக்களைத் தண்டிக்க அரசன் ஒருபோதும் தவறக் கூடாது.

நேரம், காலம் இவற்றினைக் கருத்தில் கொண்டே ஒரு நடவடிக்கையினை எடைபோட வேண்டும் என்கிறது ஆபத் ஸ்தம்பம். இதனால், இன்றியமையாதபோது தற்காப்பினை முன்னிட்டு நெறி விலகி நடக்கலாம் என்னும் இசைவு பெறப் படுகிறது. பிற்காலத்தில் இக் கருத்து அரசியலில் வலுப் பெறுவதை நாம் காணலாம்.

மக்கள் சில கடமைகளை ஆற்றி, அரசனிடமிருந்து தமக்குப் பாதுகாப்புத் தேடிக்கொள்கிறார்கள் என்கிறது போதாயன சூத்திரம். இத்தகைய பாதுகாப்பு அளிப்பதனால் அரசன் வரிவசூல் செய்யும் உரிமை பெறுகிறான். கால்நடைகளில் ஐந்தில் ஒரு பங்கும், வணிகப் பொருள்களில் இருபதில் ஒரு பங்கும், தேனில் பதினாறில் ஒரு பங்கும் அவனுக்கு வரியாக அளிக்கப்பட வேண்டும் என்று இச் சூத்திரம் கூறுகிறது. இது வைசியர்களுக்குப் பொருந்தும். ஆனால், பொருளற்ற, வணிகம் செய்யக் கூடாத, சூத்திரர்கள் எவ்வாறு வரியளிப்பது? அவர்கள் மாதத்தில் ஒரு நாள் தம் உழைப்பை அரசனுக்கு அளிக்க வேண்டும். மாணவர்கள், புரோகிதர்கள், ஊனமுடையவர்கள் முதலானோர் வரிவிலக்கு அளிக்கப்பட்டனர். சமூகத்திற்கு மிகத் தேவையான பொருளாதார, உற்பத்திப் பணிகளில் மக்கள் ஈடுபட்ட இல்லறத் துறைக்கே (கிரஹஸ்தம்) அதிக கவனம் செலுத்தப் பட்டது.

அதிக மக்கள், போலிகளாகவும், சன்னியாசிகளாகவும் ஆகி விடாமலிருப்பதற்காக ஆசிரம தர்மங்களைப் புறக்கணிப் போருக்குப் பெருத்த தண்டனைகள் சொல்லப்பட்டுள்ளன. தகுந்த படிப்பும், செயலும் இல்லாதவர்கள் இல்வாழ்வைத் துறக்க முடியாதவாறு சட்டங்கள் வகுக்கப்படலாயின.

இவ்வாறு சூத்திரங்களால் ஒருங்கிணைக்கப்பட்டு விளங்கிய பழக்க வழக்கங்களும், பாரம்பரியமும் அரசாங்கத்தின் சட்ட

பூர்வ அமைப்புக்கு அடிகோலின. இதுவரைப் புரோகிதரையும், பிராமணரையுமே முழுதும் சார்ந்திருந்த அரசன், இப்போது தரும சட்ட திட்டங்களை ஒட்டி ஒழுகலானான். ஒருவேளை பல மாற்று மத நெறிகளின் சவாலுக்கு எதிராக அரசனின் ஆதரவு தேடி தம் நிலையை வலுவாக்கிக் கொள்வதற்காகப் பிராமணர்கள் இருந்திருக்கக் கூடும். எவ்வாறாயினும், அரசன் ஒருபோதும் யதேச்சாதிகாரம் பெற்று விளங்கவில்லை. தருமத்துக்கு உட்பட்டே நடக்க வேண்டியிருந்தது.

# 3. வருணசிரம தருமம்

## தருமம்

இந்தியச் சிந்தனையில் தருமக் கொள்கை மிக முக்கியமான பங்கு வகிக்கிறது. இந்திய அரசியற் சிந்தனையிலும் தருமக் கொள்கையே மையமாக விளங்குகிறது. உலகின் பல நாகரிகங்களிலும் மதமும் அரசியலும் பிறந்து வளர்ந்த வரலாற்றினை நாம் காண்கிறோம். ஒரு குறிப்பிட்ட வளர்ச்சியடைந்தபோது மதமானது அரசியலுடன் இணைந்து மத அரசாகப் போய் விடுவதையோ அல்லது அரசியலினின்று பிரிந்து தனி நிறுவனமாகத் தாபனப்படுத்தப் படுவதையோ நாம் அறிந்திருக்கிறோம். இந்து மதம் அன்றிலிருந்து இன்றுவரை தாபனப்படுத்தப்படாமல் பரந்து, விரிந்து, நெகிழ்ந்து விளங்கிக்கொண்டிருக்கிறது. பல்வகை வாதங்களையும், வழிபாட்டு முறைகளையும், தத்துவங்களையும், வாழ்க்கை முறைகளையும் உள்ளடக்கிக்கொண்டு, பிற பல மதங்கள், மக்கள் ஆகியவற்றின் கொள்கைகளுக்கும் இடம் அளித்துக்கொண்டு வளர்ந்திருப்பதால் இதுதான் இந்துமதம் என்று சுருங்க அறுதியிட்டுக் கூற முடியாதபடி அமைந்திருக்கிறது.

தாபனமாக்கப்படாமையினாலும், மத அதிகார அடுக்குகளுக்கு அப்பாற்பட்டுச் சில விரிந்த கொள்கைகளுக்கு உட்பட்டே வளர்ந்தமையினாலும் புத்த, சைன மதங்களின் எழுச்சியால் அதிகம் பாதிக்கப்படாமல் இந்து மதம் இருந்தது. ஒரு சமூகத்தின் நடவடிக்கை, செயல்திறன், வாழ்க்கை நோக்கு, போக்கு இவற்றை அரசியலும், மதமும் நிர்ணயிக்கின்றன. இந்தியாவில் மதமும், அரசும் தருமம் எனும் மையத்தைச் சுற்றித் தனித்தனியே வளரலாயின. சில சமயங்களில் அவை இணைந்தும், சில சமயங்களில் பிரிந்தும் இருந்தபோதிலும் இத் தருமக் கொள்கை இரண்டுக்குமே பொதுவாக விளங்கியது.

தருமம் என்றால் என்ன? ரிதா அல்லது ஒழுங்கு என்னும் சொல்லிற்குப் பின் தருமம் என்னும் சொல் பிறந்ததாகக் கூறுவர். சமய சந்தர்ப்பத்தை ஒட்டித் தருமம் என்பது பல பொருள்களில் ஆளப்படுகிறது. சீர்மை, நன்மை, நன்னடத்தை, சரியான செயல், இயற்கை விதி, நேர்மை, என்றும் உள்ள பொருள்,

நிலைபெற்ற சட்டம் அல்லது விதி எனப் பலவாருக இதற்குப் பொருள் கொள்ளலாம். எந்தச் செயலுக்கும், சொல்லுக்கும், நினைவுக்கும் இதுவே உரைகல். இதனோடு ஒப்பு நோக்கியே ஒன்று தருமமா, அதருமமா என்று சொல்ல வேண்டும்.

''சத்திரியத்தின் சத்திரியம் தருமம், ஆகவே, தருமத்தை விட உயர்ந்தது எதுவும் இல்லை. வலிமை குன்றிய ஒருவனும் தருமத்தினைத் துணை கொண்டு அரசனைப்போல் ஆளலாம். தருமமே உண்மை. உண்மை இது என்று விண்டுரைப்பவன் தருமத்தினைக் கூறுகிறான். இதுதான் தருமம் என்று கூறுபவன் உண்மையைக் கூறுகிறான்''.[1] இக் கோட்பாடே சமூகத்தின் அமைப்பை நிர்ணயிப்பதாக இருந்தது. அரசனுக்கும் மத குருமாருக்கும் மட்டுமன்றி யாவருக்கும் பொருந்தும் வகையில் இத் தருமக் கொள்கையின் பல படிமங்கள் வெளிப்பட்டன. வர்ண தர்மம், ஆசிரம தர்மம், ஸ்வ தர்மம் (தன் தருமம்) இராஜ தருமம் முதலியன ஒவ்வொருவரும் ஒழுக வேண்டிய நெறி முறைகளைக் கூறின. இந் நெறி முறைகளினின்றும் பிறழ்தல் அதருமம் ஆகும். அதருமத்தைச் செய்பவன் ஒழுங்கினைக் குலைப்பவனாகிறான். இது பாவம். ஆகவே, அவன் கருமம் ஆத்துமத்தின் சக்தியினைப் பாதித்துக் கீழே தள்ளும் என்று புலனாகிறது. இவ்வாறு தருமமும், கருமமும் கலந்து பண்டைய இந்திய சமூகத்தின் போக்கினையும், வளர்ச்சியையும் நிர்ணயித்தன. தருமம் என்பது 'த்ரு' எனும் பதத்திலிருந்து உண்டான சொல். 'த்ரு' என்றால் நிலைநிறுத்து எனப் பொருளாகும். தருமம் எவ்வாறு உலகை நிலைநிறுத்துகிறதோ அவ்வாறே அரசனும் தருமத்தை நிலைநாட்டி அரசாளுகிறான். இதனால்தான் அவன் தருமத்தை நிலைநாட்டுபவன் என்றும் அழைக்கப் பட்டான்.[2]

## ராஜ தர்மம் (அரச தர்மம்)

### மத்ஸ்ய நியாயமும் தண்டக் கொள்கையும்

அரசனில்லாவிடத்துப் பெரிய மீன் சிறிய மீன்களைத் தின்பது போல வலியார் எளியாரைத் துன்புறுத்துவர்; அமைதியும், ஒழுங்கும், சுருங்கச் சொன்னால், தருமம் இல்லாமல் யாவரும் துன்பப்படும் நிலை மத்ஸ்ய நியாயநிலை என்பதாகப் பலவிடங்களிலும் கூறப்படுகிறது.[3] அரசன் தோன்றித் தண்டம் எனப்படும்

[1] பிரகதாரண்ய உபநிடதம் I, 4-14.
[2] சதபாத பிராமணம், V, 4-4-5 [3] சாந்தி பர்வம் 15, 4-9.

நீதி முறையினால் கெட்டவர்களைத் தண்டித்து, நல்வர்களைக் காத்து ஒழுங்கினை நிலைநாட்டுபவனாகச் சொல்லப்படுகிறான். இப் பணியே அரசனின் தலையாய தருமம். ஆகவே இது அரச தருமம் அல்லது இராஜ தருமம் என்று கூறப்படும்.

தண்டம் செலுத்துவதில் அரசன் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். நல்லவர்களைத் தண்டித்துவிட்டாலோ, தீயோரைத் தண்டிக்காமல் விட்டுவிட்டாலோ தன் கடமையிலிருந்து அரசன் விலகுகிறான். அதனால், பாவம் சம்பாதித்துக் கொள்கிறான். ஆகவே, தருமத்துக்கு இசைவாகத் தண்டம் செலுத்த வேண்டியது ஒவ்வொரு அரசனின் கடமையாகும் எனச் சாந்திபர்வம் வலியுறுத்துகிறது.

ஆபத்துத் தருமம்

ஒருவன் தனக்கு ஆபத்து வரும்போது, தன்னை அதிலிருந்து காப்பாற்றிக்கொண்டு மீண்டும் தன் சொந்த தருமத்தைக் கடைப்பிடிக்க ஏதுவாக நடந்துகொள்வது ஆபத்துத் தருமம். சுய தருமத்தினின்றும் சற்றே விலகுவது இங்கு அனுமதிக்கப் பட்டாலும், சுய தருமத்தை ஒரேயடியாகப் புறக்கணித்து விடவோ, மறந்துவிடவோ இது இடம் தராது. குறிப்பிட்ட சூழ்நிலைகளில் சுய தருமத்தைக் கடைப்பிடிப்பதனால் ஆபத்து நேரிடும் என்றால் அதனின்றும் தப்பித்துக்கொள்வதற்காக ஏற்பட்டது இது. தருமத்தின் ஒரு பகுதியாக இது விளங்குகிறதே தவிரத், தருமத்திற்குப் புறம்பானது ஆகாது. விசுவாமித்திரர் என்னும் முனி பஞ்ச காலத்தில் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப் புலையன் வைத்திருந்த நாய் மாமிசத்தைத் திருடி உண்டு பிறகு தவமியற்றித் தம் பாவத்தினைப் போக்கிக் கொண்டார் என்னும் கதையில் சுய தருமம், ஆபத்துத் தருமம் என்பவற்றின் தன்மைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.[4]

ஸ்வ தருமம் (சுய தருமம்)

ஒவ்வொருவனும் தான் மேற்கொண்டொழுகும் ஜாதி, ஆசிரமம் இவற்றுக்கு விதித்தபடி முறையாக நடந்துகொள்வது தான் ஸ்வ தருமம். வருணாசிரம தருமத்தினை யொட்டியே ஒவ்வொருவனின் சுய தருமமும் அமைகிறது. சுயதருமத்தைப் புறக்கணிப்பவன் தருமத்தினைப் புறக்கணிப்பவனாகிறான். சமூகத்தின் அமைப்புக்குப் பங்கம் விளைவிப்பவனாகிறான். ஆகவே, அவனால் சமூகத்துக்கும், தருமத்துக்கும் கேடு உண்டாகிறது.

[4] மேற்படி VIII, 138.

ஆகவே, அவன் அரசனுல் தண்டிக்கப்படத் தக்கவன். சொல்லப் போனுல் அரசனின் தலையாய கடன் குடிகள் தத்தம் சுய தருமத்தைக் கடைப்பிடித்து ஒழுகுமாறு செய்வதே.

## புருஷார்த்தங்கள்

அறம், பொருள், இன்பம், வீடு எனும் வாழ்வின் நான்கு பிரிவுகள் தமிழ் இலக்கியங்களில் பயின்றுவருவது நாம் அறிந்ததே. ஆரிய இந்தியாவில் ஒருவன் வாழ்வில் நான்கு நிலைகள் ஏறத்தாழ இதனையொட்டியே அமைந்திருப்பதை நாம் காணலாம். அவற்றுக்கு அடிப்படையாகத் தருமம், அர்த்தம் (பொருள்) காமம், மோட்சம் (வீடுபேறு) என்பவை கூறப் படுகின்றன. இவற்றிற்குப் புருஷார்த்தங்கள் என்று பெயர். கிரேதா யுகத்தில் மக்களின் பொன்னுன வாழ்க்கை பேராசை யினுலும், அறியாமையினுலும், காமத்தினுலும் அழிந்துபோகும் தருவாயில், தருமத்தினை மீண்டும் நிலைநாட்டும் பொருட்டு இப் புருஷார்த்தங்களை விளக்கிப் பிரம்மா 1,00,000 அத்தியாயங்களில் ஒரு நூலினைச் செய்தாரென்பதும், இது பலரால் படிப்படியாகச் சுருக்கி அமைக்கப்பட்டதென்பதும் மரபு.[5] உலக நியதி மாருமல் ஒழுங்கு காக்கப்பட வேண்டும்; உலகம் அழியாமல் இருக்க வேண்டும் என்பது மனிதனின் ஒழுங்கமைப்பையும், தருமத்தையும் பொறுத்திருக்கிறது என்னும் நம்பிக்கை இதிலிருந்து விளங்குகிறது.

மேலும், நடத்தையானது சிந்தனை, செயல், விருப்பம் ஆகிய மூன்றையும் பொறுத்து அமைகிறது. திரிவாக்கம் என இது வழங்கப்படும். வருணுசிரம தருமத்திற்கு உட்பட்டு, இப் புருஷார்த்தங்களும், திரிவர்ககங்களும் ஒவ்வொரு சாதியினருக்கும் அவரவர்க்குத் தகுந்த நாட்டங்களை ஏற்படுத்தி, அவரின் சுய தருமத்தின் தன்மையை நிச்சயித்தன.

## வருண தருமம்

நான்கு ஜாதியினரும் எவ்வாறு உண்டாயினர் என்று சொல்லப்பட்டதை நாம் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேம். ஒவ்வொரு வருணத்தாரின் கடமைகள் அல்லது தருமத்தினை இங்கே நாம் காண்போம்.

[5] மேற்படி 59-30,

**பிராம்மணர்கள்**

பிரமன் எனும் சொல்லுக்குப் பிரார்த்தனை, வழிபாடு என்பன முதற் பொருள். பிரஹ் எனும் சொல்லினின்று:இது எழுந்திருக்கக் கூடும். இச் சொல்லுக்கு வளர் என்பது பொருளாகும். ஆத்துமம், படைப்போன் ஆகிய பொருள்களிலும் பிரமன் என்பது வழங்கப் பட்டது. ஆகவே, ஆத்துமம் படைப்போன் இவைகளைப் பற்றிக் கூறுபவன் பிராமணன் என வழங்கப்படலானான். இதனாலேயே மனித வடிவில் உள்ள தேவர்கள் எனவும் பிராமணர்கள் அழைக்கப்பட்டனர். இவர்கள் வேதங்களைக் கற்கவும், எடுத்துச் சொல்லவும், வேள்விகளைச் செய்யவும், துறவறம் பூண்டொழுக வும், தானங்கள் பெறவும் உரிமை பெற்றிருந்தார்கள்.

ஆரம்பத்தில் பிராமணரின் வகுப்பு தலைமுறைத் தத்துவமாக மட்டுமே விளங்கிவந்தது என்று கூறுவதற்கில்லை. வேத அறிவும். நன்னடத்தையும் உடையவர் பிராமணராகத் தகுதியுடைய வராகக் கருதப்பட்டனர். சத்திரியர்களும், வைசியர்களும் கூடப் பிராமணராக உயர்த்தப்பட்டுள்ளமைக்கு நூல்கள் சான்று பகர்கின்றன. புரோகிதர்கள் முதலில் வேறு சாதிப் பெண்களைத் திருமணம் புரிந்தனர் என்றாலும் ஆரியரல்லாத பெண்களை மணப்பது இயலாததாயிருந்தது. பிற்கால வேதகாலத்தில் பிராமணர் தங்கள் வகுப்பிற்குள்ளேயே மணம் முடித்துக் கொள்ளத் தலைப்பட்டனர். சில சமயங்களில் சத்திரியப் பெண் களையும் மணந்தனர்.

சுயநலமின்றி நான்கு வருணத்தாரின் நலனையும் மனத்தில் கொண்டு ஆசிரியராகவும், வழிகாட்டியாகவும் விளங்கும் கடமையைக் கொண்டதால் இவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் சமூகத்தில் ஏற்பட்டன. காலம் செல்லச் செல்லப் பிராமணன் வேதம் அறிந்தால் மட்டும் போதும் என்று ஏற்பட்டது.

கௌதம சூத்திரத்தில் தனக்கு மேலுள்ள வகுப்பினருக்கு ஒவ்வொரு வகுப்பினரும் தொண்டு செய்வது கடமை எனக் கூறப்பட்டுள்ளது. ஆகவே, தனக்குக் கீழேயுள்ளவர் தனக்குப் பணிபுரிவதைப் பிராமணர் எதிர்பார்த்தனர். தம் கல்வியினாலும், வேள்விகள் செய்யும் வாய்ப்பினாலும், திறமையினாலும் இவர்கள் அரசாங்கத்தில் முக்கிய அங்கம் வகித்தனர். இவர்கள் நிலங்கள் வரியிலிருந்து தப்பின. தவிர இவர்கள் உடைமைகளை அரசன் எடுத்துக்கொள்வதென்பது பெரும்பாலும் இல்லை. இவர் களுக்குக் கொடுக்கும் கடனுக்கு மிகக் குறைந்த வட்டியே பெறப்பட்டது. இவர்கள் செய்யும் குற்றங்களுக்கும் மிகக்

குறைந்த தண்டனையே அளிக்கப்பட்டது. ஆனால், இவர்களுக்கோ அல்லது இவர்கள் உடமைகளுக்கோ தீங்கு இழைக்கப்பட்டால், தீங்கிழைத்தவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கப் பட்டது. பிற்காலத்தில் (கி.பி. 7ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு) தங்களுக்கு அளிக்கப்பட்ட கிராமங்களில் இவர்கள் வரி வசூலித்துக் கொண்டும் கட்டாய வேலை வாங்கிக்கொண்டும் இருந்ததாகத் தெரிகிறது.

தருமத்தைச் சொல்பவர்களாகவும், சட்டம் நீதியினைப் பிராமணங்கள், சூத்திரங்கள் இவற்றின் மூலம் கூறுபவர் களாகவும் இருந்த பிராமணர்கள் தமக்குச் சாதகமாகச் சட்ட திட்டங்களை உருவாக்கிக்கொண்டனர் என்பது ஒருபுறமிருக்க, மேற் சொன்னவைகளிலிருந்து அக் காலத்தில் சமூகம் இவர் களுக்கு எவ்வளவு அந்தஸ்து அளித்திருந்தது என்பதும் புலனாகும்.

சத்திரியர்கள்

சத்ரா எனும் வேதச் சொல்லுக்கு ஆட்சி அல்லது ஆளுபவர் என்பது பொருள். ஆரிய சமுதாயத்தில் ஆட்சியிலும், போரிலும் பங்கு வகித்தவர் சத்திரியர் எனப்பட்டனர். சத்திரியல்லாதவர் பதவிக்கு வந்தபோது தாம் சத்திரியப் பரம்பரையில் வந்தவர் என்றோ, தெய்வாம்சம் பொருந்தியவர் என்றோ கூறிக்கொண்ட தாகத் தெரிகிறது. பிராமணர் அரசராக வந்தபோது அவர் களுக்கு பிரமசத்திரியர் என்று பெயர் உண்டாயிற்று என்றாலும் சத்திரியர் அந்தஸ்து கோரப்படவில்லை. வைசிய, சூத்திரர்கள் அரச பதவிக்கு வந்தபோதும் சில சடங்குகளைச் செய்துவிட்டுப் பின் சத்திரியர்கள் என்று விளங்கினார்கள். சுருங்கச் சொல்லின் ஆட்சி புரிவது சத்திரிய தருமமாகச் சொல்லப்பட்டது. ஆபத்துக் காலத்தில் யாராயிருந்தாலும் அவனது நலைமை ஏற்கப்பட வேண்டியதே என்று மகாபாரதம் கூறுகிறது.[6]

நிர்வாக அதிகாரமும், மக்களைக் காப்பதும், தண்டத்தின் மூலம் தருமத்தை நிலைநிறுத்துவதும் இவர்கள் கையிலிருந்தன. மக்களிடமிருந்து வரி வசூல் செய்வதும் இவர்கள் உரிமையாக இருந்தது.

வைசியர், சூத்திரர்

ஆரம்பத்தில் நான்கு வருணத்தாரும் சமமாக இருந்து, தமக்கெனத் தனிதனிப் பணியைக் கொண்டிருந்தனர். பிறகு அந்தஸ்து ஏற்பட்டுச், சூத்திரர்கள் மற்ற மூன்று வருணத்தாரை

[6] மேற்படி 78-35

விடக் கீழாக மதிக்கப்பட்டனர். சட்ட நூல் தொகுதிகள் ஏற்பட்ட காலத்தில் ஆட்சியில் முக்கியப் பங்கு பெற்ற பிராமணரும் சத்திரியரும் மேல் சாதியினராகவும், வைசியரும் சூத்திரரும் கீழாகவும் மதிக்கப்படலாயினர்.

வைசிய வகுப்பில் நிலத்தில் பயிரிடும் குடியானவரும், கால் நடை வளர்ப்போரும், வணிகமும் தொழிலும் செய்வோரும் அடங்கியிருந்தனர். இவர்கள் காலப்போக்கில் தத்தம் தொழிலை ஒட்டிக் கிளை ஜாதிகளாகப் பிரிந்தனர். வைசியரும், சூத்திரரும் அநேகமாக ஒன்ருகவே சொல்லப்பட்டனர். பல சட்டதிட்டங்கள் இருவருக்கும் பொதுவாகவே விளங்கின. வைசியர்கள் பாலி எனும் வரியும் செலுத்த வேண்டியிருந்தது.[7] பிற்காலத்தில் துறவறம் பலரை ஈர்க்கும்போது நாட்டின் வளமையை எண்ணி வைசியரின் தொழிலுக்கும், இல்லறத்திற்கும் மேன்மை அளிக்கப் பட்டது.

நிச்சயமற்ற வேலையும் ஊதியமும் உடையவராகச் சூத்திரர் விளங்கினர். இவர்கள் மற்ற மூன்று வருணத்தாருக்குத் தொண்டு ஊழியம் செய்ய வேண்டியிருந்தது, வேள்வி செய்யவோ, வேதங் கற்கவோ, சொல்லவோ இவர்களுக்கு உரிமையில்லை. வேள்விச் சாலையில்கூட இவர்கள் வர இயலாது. தீ வேள்வியின்றி நடக்கும் இவர்கள் திருமணம்கூட இதனுல் புனிதமாக்கப்பட முடியாம லிருந்தது. உரிமைகளும், தொழிலும், உடமைகளும் இல்லாது மேல்வருணத்தாரையே இவர்கள் நம்பியிருக்க நேர்ந்தது. இதிலிருந்து இவர்கள் மீளமுடியாது. ஏனெனில், இதுதான் இவர்கள் இயற்கைநிலை என ஸ்மிருதிகள் கூறுகின்றன.[8]

என்ருலும், கிரேக்க தேசத்திலிருந்ததைப் போல் அடிமை முறை வழக்கில் இல்லை. கடன் பட்டோர் அதைத் திருப்பியளிக்க முடியாத நிலையில் ஊழியம் செய்து அக் கடனை அடைக்க வழிகள் இருந்தமையால் அடிமைநிலை ஏற்பட ஏதுவாயிற்று. யக்ஞுவால்க் ஸ்மிருதி ஒருவனை அவன் சம்மதம் பெற்றே அடிமையாகக் கொள்ளவெண்டும் என்று கூறுகிறது.[9] குப்தர்கள் காலத்தில் இது அநேகமாக வழக்கில் இல்லாது ஒழிந்தது. சூத்திரர்களுக்கு அதிக உரிமைகள் அளிக்கப்பட்டன.

சூத்திரர்கள் பல சிறு சிறு கிளை ஜாதியினராகப் பிரிந்தும், பல விதமான பணிகளைப் புரிந்தும் வாழ்ந்தமையால் வலிவு குன்றியிருந்தனர். இதனுல் எழுச்சி பெற்று எதிர்ப்புத் தெரி விப்பது அவர்களால் இயலாமலிருந்தது.

[7] அதர்வவேதம், III, 4-3 [8] மனு VII, 414.
[9] யக்ஞுவால்க்யர் II. 182.

ஸ்மிருதிகளில் சிலவிடங்களில் சூத்திரரும் உயர்ந்த வாழ்வடைய தகுந்தவர் என்பது மறைமுகமாக ஒப்புக்கொள்ளப் படுவதை நாம் காணலாம். சில சூத்திரர்கள் உயர்த பதவியும் வகித்து வந்தனர். உயர் ஜாதியைச் சேர்ந்த ஆண்கள் தமக்கும் கீழான ஜாதியைச் சேர்ந்த பெண்களை மணம் செய்துகொள்வது ஓரளவு ஒப்புக் கொள்ளப்பட்டபோதிலும், கீழ் ஜாதி ஆண்கள் தமக்கு மேல் ஜாதியினைச் சேர்ந்த பெண்களை மணம் செய்து கொள்வது விலக்கப்பட்டது. இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளைச் சண்டாளர்களாக மதித்தனர்.

வருண தருமத்தின்படி தனி மனிதன் சமூகத்தில் தன் நிலைமையை கேள்வியின்றி ஒத்துக்கொள்ள வேண்டியிருந்தது. இந்தக் குறுகிய வட்டத்துக்குள் தத்தம் பணியினில் மேன்மை அடைய அவரவர்களுக்குச் சுதந்திரம் இருந்தது. தத்தமக்குச் சம்பந்தமான செய்திகளில் ஒவ்வொரு வகுப்பினருக்கும் முடிவு எடுக்கப் பூரண உரிமை இருந்தது. ஜாதி உட்பூசல்களை அவ்வச் சாதியினரே தீர்த்துக்கொண்டு தத்தம் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்க வழி இருந்தது. தமக்குள் முடிவுக்கு வர முடியாதவிடத்து அரசனின் முடிவுக்கு உட்பட்டனர்.

## ஆசிரம தருமம்

வாழ்வின் நான்கு நிலைகளாக நான்கு ஆசிரமங்கள் சொல்லப் படுகின்றன. பிரமச்சரியம் என்பது மாணவ நிலை. கல்வி கற்றுக் கொண்டு, புலனை அடக்கி, ஒருமித்த மனத்துடன் குருவுக்குத் தொண்டு செய்யும் நிலை இது.

கிரஹஸ்தம் அல்லது இல்லற நிலை என்பது மனிதன் இல்லற வாழ்வில் அமர்ந்து, பொருள் ஈட்டி, தருமங்கள் செய்து சுகங்களை அனுபவிக்கும் நிலை.

வானப்பிரஸ்தம் சந்நியாசம் என்னும் கடை இரண்டு நிலைகளும் சம்சார பந்தங்களிலிருந்து மெள்ள மெள்ள விடுபட்டு மெய்ப்பொருளை நாடிச் செல்லும் நிலை. இந் நிலைகள் ஒவ்வொன்றிலும் தவறாமல் தத்தம் கடமையை ஆற்றுபவர் தரும அர்த்த காமமோட்சம் என்னும் நான்கையும் அனுபவித்துப் பூரணமான வாழ்வு வாழ்பவராகிறார் என்பது மரபு. ஆசிரம விதிகளைப் புறக்கணிப்பது தருமத்திற்கு விரோதமெனக் கருதப்பட்டது. பிராமணன் நான்கு நிலைகளையும், சத்திரியர் முதல் மூன்றினையும், வைசியர் முதலிரண்டையும் அனுசரிக்கக் கடமைப்பட்டவர்கள். சூத்திரர்களுக்கு ஆசிரம நிலைகள் இல்லை என்பது அவர்களுக்குச் சொல்லப்பட்ட வருண விதிகளின் மூலமே புலனாகிறது.

# 4. சாந்தி பர்வம்

கி மு. கடைசி நூற்றுண்டுகளிலும், கி.பி. முதல் நூற்றுண்டுகளிலும் புத்த சமண மதக் கோட்பாடுகளுக்கு எதிராகப் பிராமண மத ஆன்மீகக் கொள்கைகளில் பல புதுமைகளும் திருப்பங்களும் ஏற்பட்டன. உபநிடதங்கள், கடவுளின் ஒருமைத்துவம் (Monison). ஆன்மீக சிந்தனை, துறவறம் முதலியவற்றைப் புகுத்தி இந்துமதம் உருப்பெற முக்கியப் பங்கேற்றன. இக்காலத்தில் தோன்றிய பல தத்துவ நெறிகளைத் தவிர இராமாயணம், மகாபாரதம், என்னும் இரு பெருங்காப்பியங்களும் அர்த்த சாத்திரங்களும், தரும சாத்திரங்களும் தோன்றின. இவற்றில் மகாபாரதமானது பாண்டவ கௌரவ குலங்களுக்கு இடையில் ஏற்பட்ட போரினை மையமாகக் கொண்டு வரையப்பட்டது. இப் போர் கி.மு. பத்து அல்லது ஒன்பதாம் நூற்றுண்டில் நிகழ்ந்திருக்கக் கூடுமென்று டிரெக்மெர் கூறுகிறுர்.[1]

மகாபாரதம் உட்பட பண்டைய இந்திய இலக்கியங்கள் அனைத்துமே குப்தர்கள் காலத்தில் திருத்தி அமைக்கப்பட்டன. மகாபாரதத்தின் ஒரு பகுதியாக விளங்கும் சாந்தி பருவத்தில் அரசியலைப் பற்றிய செய்திகள் சொல்லப்படுகின்றன. பாண்டவ கௌரவர்களுக்கிடையில் குருக்ஷேத்திரத்தில் நடந்த பதினெட்டு நாள் போரில் கௌரவர் பக்கம் சேர்ந்து போரிட்ட மூதறிஞரும் வீரருமான பீஷ்மர் வீழ்த்தப்பட்டுப் பன்னுள் உயிருடன் கிடக்கும்போது தருமபுத்திரர் அவரை அணுகி அரசியலில் தனக்கு ஏற்படும் ஐயப்பாடுகளைக் கேட்பது போலவும், பீஷ்மர் அவற்றைத் தீர்த்துவைப்பது போலவும் அமைந்த இப் பகுதி குப்தர்கள் காலப் பிற்சேர்க்கை என்றும் கருத இடமுண்டு. இதில் இடம் பெறும் பல செய்திகள் தரும சாத்திரங்களை யொட்டி அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கது. அரச தருமம், சாதிக் கடமைகள். நன்னடத்தை, அரசு செலுத்த வேண்டிய முறை முதலியவை சாந்தி பர்வதத்தில் விவரமாகக் கூறப்படுகின்றன.

தோற்றத்தில் மனிதர்கள் மிக நல்லவர்களாகவும், நேர்மையானவர்களாகவும், தருமத்தை யொட்டி ஒழுகுபவர்களாகவும்

[1] டிரெக்மெய்ர், பக்கம், 132

இருந்தன ரென்றும், தண்டத்தின் அவசியம் தேவைப்படவில்லை என்றும், காலப்போக்கில் மனிதனின் கீழான குணங்கள் தலை தூக்கிச், சமூகச் சீர்குலைவு ஏற்பட்டு அரசனின் அதிகாரம் இன்றியமையாததாக ஆனது என்றும் பீஷ்மர் தருமபுத்திரரிடம் கூறுகிறார். அரசனில்லாக் காலத்தில் மச்ச நீதியின் ஆதிக்கம் ஏற்பட்டு மக்கள் துன்புறும்போது அவர்களைத் துன்பத்தினின்றும் மீட்க அரசன் தோன்றினான் என்னும் இவ்வாதத்தில் செனகாவின் (Seneca) கொள்கையும் (Fall grow the Golden Age) ஹாப்ஸின் (Hobbes) கொள்கையும் (Resulted State of Nature) இணைந்து விளங்கக் காணலாம். மக்களின் அரசனற்ற அவல நிலையைக் கண்டு தேவர்கள் விஷ்ணுவிடம் சென்று முறையிட, அவர் பிருதுவின் உடலில் புகுந்து அவனை மக்களைக் காக்கும் பிராமணரைப் போற்றும் அரசனாக விளங்கச் செய்தார் என்பதாகக் கூறப் பட்டுள்ளது. இவ்வாறு அரசன் தெய்விகச் சக்திகள் பெற்ற வனும், தெய்விக அங்கீகாரம் பெற்றவனும் காட்டப் படுகிறான்.

வேதகாலத்தில் முதன்மை பெற்று விளங்கிய இந்திரன், வருணன், மித்திரன் போன்ற தேவதைகள் பின்னுக்குத் தள்ளப் பட்டு, பிரம்மா, சிவன், விஷ்ணு எனப்படும் பிரஜாபதியின் மூன்று வடிவங்கள் உருப்பெற்ற இக் காலத்தில் அவதார தத்துவமும் அரசியல் சிந்தனையோடு சேர்ந்து வளர்ந்தது குறிப்பிடத் தக்கது. மனித சமுதாயத்தில் அரசனில்லாததால் ஏற்படும் சீர்குலைவை அரசனைத் தோற்றுவிப்பதன் மூலம் தவிர்க்கலாம் என்பதை விளக்க மச்சநீதிக் கொள்கையும், அரசன் இருந்தும் கெட்டவர்களின் மேலாதிக்கத்தினால் ஏற்படும் தீமை களைத் தவிர்த்து நல்லோரைக் காப்பது தெய்வத்தினால்தான் முடியும் என்பதை விளக்க அவதாரக் கொள்கையும் (துஷ்ட நிக்ரஹம், சிஷ்ட பரிபாலனம்) தோன்றின என்று கருதலாம். இவ் விரண்டு கொள்கைகளுமே வலியுறுத்தப்படும் மகாபாரதத் தில் சில இடங்களில் அரசனின் தண்ட அதிகாரத்தின் மேன்மை யும் (உதாரணம்: சாந்திபர்வம்), சிலவிடங்களில் பிராமணர்களின் மேன்மையும் (உதாரணம்: அனுசாசன பர்வம்) கூறப்படுவதை நாம் காணலாம். இறைமையானது மக்களுக்கும், அரசனுக்கும் இடையேயுள்ள ஒப்பந்தத்தினால் மட்டுமோ, சத்திரியருக்கும் பிராமணருக்குமிடையேயுள்ள உறவின் தன்மையினால் மட்டுமோ முடிவு செய்யபபட முடியாமல் இம் மூன்று தரப்பினரையும் ஒன்றுசேர்க்கவல்ல தெய்விகத் தொடர்பு ஒன்றினைப் புகுத்து தலால் மட்டுமே முடிவுசெய்யப்படக் கூடியதாயிருந்தது என்பதை ஊகிக்கலாம். மச்ச நீதியிலிருந்து மக்களைக் காக்கும்பொருட்டுச்

சத்திரிய அரசனை உருவாக்கிப் பிராமணர்களின் நலத்தைப் பேணும்படி விஷ்ணு கூறினார் என்பதிலிருந்து இக் கருத்துப் பலம் பெறுகிறது.

சாந்தி பர்வம் என்பதற்கு அமைதியினைப்பற்றிக் கூறும் நூல் என்று பொருள். மக்களுக்கு மிகவும் தேவையானது அனைத்தை யும்விட மக்கள் அதிகம் வேண்டுவது அமைதியும் ஒழுங்குமே. அரசியல் சாத்திரம் (தண்டநீதி) புறக்கணிக்கப்படும்போது வேதங்களும், நற்குணங்களும் மறைந்துவிடுகின்றன.[2] தண்டத்தின் இன்றியமையாமை பற்றி அருச்சுனன் கூறுவதாக அமைக்கப் பட்டுள்ள இடங்களிலிருந்து உலகின் நன்மைகள், உயிர்கள் ஆகியவற்றுக்கெல்லாம் அரசனின் தண்ட அதிகாரமே ஆதாரமாக விளங்குகிறது என்பது புலப்படுகிறது.[3]

தன் தண்டிக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தத் தவறும் அரசனை மலடான மனைவிக்கும், பால் சுரக்காத பசுவிற்கும், சுமை தூக்காத எருதுக்கும் சாந்தி பர்வம் ஒப்பிட்டுக் கூறுகிறது.[4] மக்கள் தத்தம் கடமையைச் செவ்வனே ஆற்றுவது அரசன் தன் கடமையை ஆற்றுவதைப் பொறுத்தே அமைகிறது என்பதே சாந்தி பர்வம் கூறும் முக்கிய விதியாகும்.[5] தண்டநீதி செலுத்துவதே அரச தருமம். உண்மையை ஒட்டியும், காரண காரியங்களைச் சீர்தூக்கிப் பார்த்தும், நல்ல வழக்கங்களை ஒட்டியும், இயலாவிடத்துப் பயன் தரும் வகையில் ஓர் உபாயத்தினை ஒட்டியும் கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டும். தருமத்தைக் காப்பாற்ற வேறு வழியில்லாதபோதே உபாயங்களைக் கையாளலாம்.[6] இது ஆபத்துத்தருமம் எனப்படும். அருச்சுனன் போருக்குமுன் தயங்கும்போதும், தருமபுத்திரர் போரினை விரும்பாதபோதும் சத்திரியர்களின் கடமை இன்னது தென விளக்கும் பகுதிகள் கீதையிலும், சாந்தி பர்வதத்திலும் பல இடங்களில் காணப்படுகின்றன. போரென்பது கொலைத் தொழிலாக விளங்கினாலும் தருமத்தைக் காக்கும்பொருட்டு அத் தொழிலைச் சத்திரியர் தம் கடமையாக நினைக்க வேண்டும். கொல்லுவதனால் ஏற்படும் பாவம் அவன் போரில் வீரமரணம் அடையும்போது அவனது குருதியினாலேயே துடைக்கப்படுகிறது என்று சாந்தி பர்வம் கூறுகிறது.[7]

[2] சாந்தி பர்வம் 63-28
[3] மேற்படி 15-2; 15-30
[4] மேற்படி 121-14
[5] மேற்படி 69-79
[6] மேற்படி 140-70
[7] மேற்படி 10-37; 31-55

போர் என்பது சத்திரியர்களின் கடமையே தவிர, எப்போதும் போர் செய்துகொண்டிருப்பது அவர்கள் தொழில் அன்று. ''உண்மை என்பது வலிமையினுல் நிலை நிறுத்தப்படும் ஒன்ருகும்; வலிமையானவன் எது உண்மை என்று கொள்கிருனே அதுவே உண்மை.''[8] ஆகவே, வெற்றிக்கு வேறு முறைகள் பயன்படாதபோது, போர் செய்வதினின்றும் பின் வாங்குதல் தவருகும்.[9] எதிரியைப் பலவீனப்படுத்தும் பல வழிகளையும் கையாண்டு கூடுமானவரையில் போரின்றியே வெற்றிக்கு வழி தேட வேண்டும். எதிரியின் பலவீனங்களை அறிந்துகொள்ள ஒற்றர்களைப் பயன்படுத்த வேண்டும். அஞ்சுவது அஞ்சாமை பேதமை. ஆகவே எதிரியுடன் போர் ஓய்வு ஒப்பந்தம் செய்துகொண்டு கவலையின்றி இருக்கும் அரசன் நிச்சயம் வீழ்வான் என்று சாந்தி பர்வம் கூறுகிறது.

அரசன் செருக்கு, காமம், பலவீனம் ஆகியவற்றைக் களைந்து தன்னைத்தானே வெல்வானுகில் அதுவே அவன் வெற்றிக்கு வழி வகுக்கும். எளியவனுகவும், அதே சமயம் கண்டிப்பானவனுகவும் அரசன் விளங்க வேண்டும். மக்களைக் காக்கும் கடமையைச் செலுத்தும் அரசன் மக்களிடமிருந்து வரிப்பணம் பெறும் உரிமை பெறுகிருன். ஆனுல், அளவுக்கு மீறி வரி சுமத்தும் அரசன் பாலிற்கு ஆசைப்பட்டு பசுவின் பால்மடியினையே வெட்டுபவன் போன்றவனுகிருன்.[10] நாட்டின் தற்காப்பு மற்றும் வளம் இவற்றின் தேவையைச் சுட்டிக்காட்டி மக்கள் சுமையை அறியாவண்ணம் வரி வாங்க வேண்டும். அதிலும் வைசியருக்கு வரி விதிக்க வேண்டும்.[11]

ஆறில் ஒரு பங்கு வரியாக விதிக்கப்பட்டது.[12] 'ஆறில் ஒரு பங்குக்கு உரியவன்' என்று அரசன் குறிப்பிடப்படுகிருன். கருவூலத்தை எப்போதும் நிறைவாக வைத்திருக்க வேண்டும். ஏனெனில் பொருள் இன்றியமையாதது.[13] நல்வாழ்வு அரசனைச் சார்ந்ததாகையால் தீயோரின் பொருளை எடுத்துக்கொள்ளும் உரிமையும், தீயோரால் பொருள் இழந்தவருக்கு அவர் இழந்த வற்றைத் தான் தரவேண்டிய கடமையும் அரசனுக்கு உண்டு. இதிலிருந்து மக்களுக்குச் சொத்துரிமை இருந்ததாகக் கருத இடமுண்டு.

பாதுகாப்புத் தர இயலாத அரசனுக்கும், தம் சொத்து களைக் கவர்ந்துகொள்ளும் அரசனுக்கும், சமூகத்தில் பல வகுப்பினரையும் ஒன்ருக்க முயலும் அரசனுக்கும் எதிராக

[8] மகாபாரதம் II, 69-25
[9] சாந்தி பர்வம் 94-1
[10] மேற்படி 71-15; 87-21; 88-4
[11] மேற்படி 87-35
[12] மகாபாரதம் XIII 112-19.
[13] சாந்தி பர்வம் 8-16

மக்கள் திரண்டு புரட்சி செய்யலாம் என்று கூறப்படுகிறது.[14] பிராமணர்களின் நலத்தை அரசன் நாட வேண்டும் என்று கூறுவதாக இது அமைந்திருக்கிறது.

மேலும் குடும்பப் பழக்க வழக்கங்கள், குழுக்களின் (guilds) நடப்பு, தோற்கடிக்கப்பட்ட மக்களின் பண்பாட்டொழுங்கு ஆகியவற்றை நாட்டு நலன் முக்கியமாகக் கோரினாலன்றி அரசன் அழிக்கக் கூடாது என்றும் மகாபாரதம் கூறுவதாக நாம் கொள்ளலாம்.[15]

அரசனின் அவையில் எல்லாப் பிரிவினரும் அங்கம் வகித்ததாகத் தெரிகிறது. என்றாலும் மூன்று அல்லது நான்கு பேரே அவனுக்கு ஆலோசனை சொல்லத்தக்கவர்களாகத் தெரிந்தெடுக்கப்பட வேண்டும். எளிமையும், புலனடக்கமும், உண்மையும், தைரியமும் கொண்டு ஒழுகுபவர்களே சட்டம் செய்பவர்களாகவும், நற்குடியில் பிறந்த, நல்லொழுக்கம் பூண்ட, கொடுமையற்ற, இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்ப நடக்கும் திறம் பெற்ற, தன் அரசனின் நலத்தையே எப்போதும் நாடும் குணம் கொண்ட நல்லோர்களே அமைச்சர்களாக, அரசனுக்கு ஆலோசனை சொல்பவர்களாக, நியமிக்கப்பட வேண்டும்[16] என்பது பீஷ்மர் தரும புத்திரனுக்குக் கூறும் அறிவுரை.

மந்திரி சபை மந்திரி பரீஷத் என வழங்கப்பட்டது. அமைச்சர்களுடன் செய்யப்படும் ஆலோசனைகள் மிக இரகசியமாக வைத்துக்கொள்ளப்பட்டன. சபா, பௌரா, ஜனபதா என்னும் மக்கள் அவைகள் இருந்தன எனத் தெரிகிறது. இவைகள் ஆரம்பத்தில் அதிக செல்வாக்கோடும், பிறகு கால ஓட்டத்தில் போர்க் குழுக்களாகவும் விளங்கியிருக்கக்கூடும்.

கிராமங்களே நிர்வாக அடிக்கூறுகளாக அமைந்தன. ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒரு தலைவன் இருந்தான்.

சான்றோர்கள் வழக்குகளை விசாரித்து நீதி செலுத்தினர். கண்ணியமும், பொறுப்பும் உள்ளவர்களே முக்கிய நிர்வாகத் துறைகளுக்குப் பொறுப்பு வகித்தனர் என்று கருத இடமுண்டு.[17]

மொத்தத்தில் சாந்தி பர்வம் வலிமைமிக்க அரசனது ஆட்சியினை ஆதரிப்பது போலிருந்தாலும், அவனும் தருமத்துக்கு உட்பட்டவனே என்றும், அவனது அதிகாரத்திற்கும் வரம்பு உண்டு என்றும் கூறுகிறது.

[14] மகாபாரதம் XIII, 61-32 ; காந்திபர்வம் 10-29; 90-39 ; 93-3.
[15] மேற்படி III, 249-16. [16] சாந்திபர்வம் 83-2; 8-37.
[17] சாந்திபர்வம் 8-7.

# 5. கௌடில்யரின் அர்த்த சாத்திரம்

அர்த்த சாத்திரம்

'அர்த்தம்' என்பது 'பொருள்' என்று பொருள்படும். மனிதன் தன் வாழ்வில் தேவையான பொருள்களைப் பெறுவதும், செலவு செய்வதும், இன்பங்களைத் துய்ப்பதும், மற்றும் பொருளை இழப்பதும், அதனால் துன்பம் எய்வதும், இன்னோரன்ன பலவும் மனித வாழ்விற்குப் பொருள் இன்றிமையாதது என்பதையும், பொருளைப் பற்றிய சிந்தனையும் செயலும் வாழ்வில் ஒரு முக்கிய அங்கம் வகிப்பதையும் உணர்த்துகின்றன. வீட்டினைச் செவ்வனே நடத்தவும், நாட்டினை வளமுடன் ஆளவும் பொருள் மிக அவசியம். மத, தரும காரியங்களுக்கும் பொருளே அடித்தளமாக விளங்குகிறது. ஆகவே, பொருள் நோக்கு கொண்டு எழுந்த நூல்கள் அர்த்த சாஸ்திரம் என்று பெயர் பெற்றன. முக்கியமான துறைகளில் அர்த்த சாத்திரம் ஒன்றாகக் கருதப்பட்டுவந்தது. உசாணர்கள் அர்த்த சாத்திரம்தான் தலைசிறந்தது என்றும் வேதத்தினும் முக்கியம் வாய்ந்தது என்றும் கூறுவர்.

அர்த்த சாத்திரங்களை நாம் தற்போதைய பொருளியல் (Economics) போன்றது என்று எண்ணிவிடக் கூடாது. அரசன் நாட்டினை ஆளுவதற்கு உதவியாக வழிமுறைகளைக் கூறும் வகையில் அமைந்த இந் நூல்கள் அரசனின் கடமை, தன் அமைச்சர் ஏனையோரைத் தேர்ந்தெடுத்து ஆட்சி செய்ய வேண்டிய முறை, நாட்டிற்குப் பாதுகாப்பு செய்யும் விதம், வருமானத்தைப் பெருக்கும் வழி முதலிய பலவற்றையும் இவை கூறும். ஆகவே, தரும சாத்திரத்தினைவிட அர்த்தசாத்திரம் விரிந்து காணப்படும். அரசியலும், பொருளாதாரமும், சட்டமும், நீதியும், சமூகக் கட்டுப்பாடும், நிருவாகமும், போர் முறையும், வெளிநாட்டுக் கொள்கையும் இவ் வர்த்த சாத்திரங்களில் இடம் பெற்றுள்ளன. நாட்டில் அராசகம் நிலவுவதைத் தடுத்து மக்கள் அரசனின் கீழ் நிம்மதியாக வாழ வேண்டுமே என்கிற கவலையுடன் எழுதப்பட்டதுபோல் அர்த்த சாந்திரங்கள் தோன்றுகின்றன.

தரும சாத்திரங்கள் வேதத்தை ஒப்பு நோக்கியே அரசியல் தருமத்தை நிர்ணயித்தன. ஆனால், அர்த்த சாத்திரங்கள்

பெரும்பாலும் குறுகிய வட்டத்தினின்று ஓரளவு விடுபட்டு அரசியல், சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளைச் சுதந்திர மாகவே அணுகின. மேலும், தர்ம சாத்திரத்தில் அரசனுக்காகவே மக்கள் என்பதுபோல் சொல்லப்படுவது போய், அர்த்த சாத்திரத்தில் மக்களுக்காக அரசன் என்ன செய்யலாம், எவ்வாறு நடக்க வேண்டும் என்பன சொல்லப்படுகின்றன என்று நாம் கூறலாம்.

தரும சாத்திரங்களில் சொல்லப்படுபவைகளுக்கு வேத நூல்கள் ஆதாரமாக உள்ளன. ஆனல், அர்த்த சாத்திரம் வேத நூல்களையே சார்ந்திராது. கண்கூடாகவும், அனுபவ பூர்வ மாகவும், செயல் வழக்கிலும் உள்ளவற்றிலிருந்து சாரமான சில விதிமுறைகளை வகுத்துக் கூறுகிறது என்றும் சொல்லலாம்.[1]

இதனுல் அர்த்த சாத்திரங்கள் அரசியலை மதத்தினின்று பிரித்துத் தனித் துறையாக்கி உதவின என்று முழுவதும் எண்ணி விடலாகாது. தருமம், கருமம் போன்ற கொள்கைகளும், சாதிப் பிரிவினையும் சமூகத்தில் வேரூடிப் போயிருந்தன. (இன்றுகூட நம்மைவிட்டு அவை முழுவதும் அகலவில்லை) என்றாலும், மதக் கொள்கையினின்றும் ஓரளவு விடுபட்டு அரசியல் வளர இவை உதவின என்பதில் ஐயமில்லை. செயலின் வகைமுறையைக் காட்டிலும் அதன் முடிவே முக்கியமாகக் கருதப்படுவது அதர்வ வேத முறையைப் பின்பற்றியுள்ளது எனக் கூறுபவரும் உளர்.[2] கௌடியல்யர் தர்ம சாத்திர சட்ட முறையிலிருந்து விடுபட்டு இயற்றுச் சட்ட முறையினை (positive law) ஆதரிப்பது இங்குக் கவனிக்கத் தக்கது.

## கௌடில்யரின் அர்த்த சாத்திரம்

### காலமும் ஆசிரியரும்

இந்த அர்த்த சாத்திர நூலை இயற்றியவர் கௌடில்யரா? அல்லது அவர் பெயர் கவுடிலீயரா? அல்லது சாணக்கியரா? அல்லது விஷ்ணுகுப்தரா? இவர் சந்திரகுப்த மௌரியருக்கு உதவி செய்து நந்த அரச வமிசத்தைத் தோற்கடிக்கச் செய்தவரா? அந்தணரா? தென்னுட்டினரா, வட நாட்டினரா? அல்லது வேறு 'யார்? என்னும் பல கேள்விகள் எழுப்பப்பட்டுப் பல சரித்திர ஆசிரியர்களால் பல பதில்களும், பலவகை ஆதாரங்களைச் சுட்டி அளிக்கப்படுகின்றன. இங்கு இக் கேள்வி

[1] டிரெக்மெய்ர் பக்கம் 190

[2] De Bary, W.T., et al., edn. Sources of Indian Tradition, பக்கம், 237

பதில்களில் நாம் நுழையத் தேவையில்லை. கௌடில்ய அர்த்த சாத்திரம் என்னும் நூல் வெகு காலமாக இருந்துவருகிறது; பல பழைய நூலாசிரியர்களும் இந் நூலிலிருந்து மேற்கோள்கள் காட்டியிருக்கின்றனர்; பெரும்பாலும் மௌரியரின் காலத்தில் இயற்றப்பட்டுப் பிறகு மாற்றம் அடைந்திருக்க வேண்டும் என்பது திண்ணம். இதுவே நமக்குப் போதுமானதுமாகும்.

மேலும் கௌடில்யரின் அர்த்த சாத்திரம் முதலாவது அர்த்த சாத்திரமுமன்று. அதற்கு முன் நிலவிய அர்த்த சாத்திரக் கொள்கைகளைப் பின்னணியாகக் கொண்டே அவற்றைத் தொகுத்தும், மறுத்தும், விரித்தும் ஆக்கிச் செய்த நூல் என்பது இதைப் படிக்கும்போது விளங்குகிறது. அரசியலைத் தத்துவ ரீதியாகவோ, அரசியலின் மெய்க் கருத்துவங்களைச் சொல்வதாகவோ இது அமையவில்லை. அரசியலின் பொதுவிதிகள், அமைப்பு முறைகள், நடைமுறை நிகழ்வுகள் இவையும் கூறப்படவில்லை. அதே சமயத்தில் மிகப் பின்னடைந்த அல்லது வளர்ச்சியுறுத (primitive) அரசியல் முறையாகவும் இல்லை. இரண்டிற்கும் நடுவிலே உள்ள அரசியல் கருத்தே இதில் விளங்குகிறது.

அர்த்த சாத்திரம் பதினைந்து பாகங்களாகப் (books) பிரிக்கப் பட்டுள்ளது. முதலாவதில் அரசனாக வேண்டியவனின் ஒழுக்க, பயிற்சிக் கட்டுப்பாடுகளும், அமைச்சர்களுக்கு இருக்க வேண்டிய தகுதிகளும், அரசனின் கடமைகளும் கூறப்படுகின்றன.

இரண்டாவதில் அரசாங்கத் துறைகளும், பொது நிர்வாகமும் கூறப்படுகின்றன.

மூன்றாவதில் சீரியல் சட்டமும், நான்காவதில் குற்றவியல் சட்டமும் கூறப்பட்டுள்ளன.

ஐந்தாவதில் அரசாங்கக் கருவூலம் பற்றியும், நாட்டின் இடர்பாடுகளை நீக்குவது பற்றியும் கூறப்படுகின்றன.

ஆறு ஏழில் அரசபீடம், கொள்கைகள் ஆகியவை இடம் பெறுகின்றன.

எட்டாவதில் நாட்டு நலனுக்குக் குந்தகம் விளைவிப்பன பற்றிச் சொல்லப்படுகிறது.

ஒன்பது பத்தில் போரும், படையும், வெளிநாட்டுக் கொள்கையும் இடம் பெறுகின்றன,

பதினொன்றில் சுதந்திரக் குழுக்கள், குடியரசுகள் பற்றிய செய்தியும், பன்னிரண்டு பதிமூன்றில் வெற்றியின் விதி முறைகளும், பதினான்கில் மருந்து, மாயம் இவற்றின் உபயோகமும், பதினைந்தில் இந் நூலின் பகுப்பு முறையும் கூறப்பட்டுள்ளன.

**பொருள் அடிப்படை**

அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றில் பொருள் மிக அவசியம் என்று கௌடில்யர் கூறுகிறார். பொருளிலார்க்கு இவ் வுலகமில்லை என்பதற்கொப்ப, அறத்திற்கும், இன்பத்திற்கும் அடிப்படையாக விளங்குவதே பொருள் என்றும், நேர்மையான, சீரான வாழ்வுக்குப் பொருளே அடிப்படை என்றும், அரசியல் இப் பொருள் அடிப்படையில்தான் உள்ளது என்றும், பொது மக்களின் தேவைகள், இன்பம் இவைகளை மனதிற் கொண்டு நாட்டின் வளனைப் பெருக்கும் கலையாக விளங்குவதே அரசியல் என்றும் அர்த்த சாத்திரத்தைப் படிக்கும்போது விளங்கும்.

கௌடில்யருக்கு முன் நிலவிவந்த சில அர்த்த சாத்திரங்கள் பொருள் ஒன்றையே ஆதாரமாகக் கொண்ட அரசியல் சமூக வாழ்வை வலியுறுத்தின. ஆனால், கௌடில்யர் பொருளுக்கு முதன்மையும், முக்கியத்துவமும் அளித்தபோதிலும் வேத சாத்திரங்களையும், மனக் கட்டுப்பாட்டினையும், சமூகப் பிரிவுகளின் முக்கியத்துவத்தையும் மறந்து புறக்கணித்திலர். மதச் சடங்குகளும், சதாசாரக் கோட்பாடுகளுங்கூட அவரால் வலியுறுத்தப்படுகின்றன. அர்த்த சாத்திரங்கள்கூட வேதப்பகுதிகளே என்றும் அவர் கொண்டார் எனக் கூறலாம். ஆகவே, வேதங்கள் மட்டுமன்றி, பழக்க வழக்கங்கள், மரபு வழக்கங்கள் இவையுங்கூடச் சட்டத்திற்கு ஆதாரமானவை எனக் கூறுகிறார். என்றாலும் மரபு, வழக்கம் ஆகியவைகூட அரசனால் அங்கீகரிக்கப் பட்டாலொழிய இத்தகைய சட்ட ஆதார நிலையை அடைய முடியாதென்றும் அவர் நம்பினார். ஆகவே, கௌடில்யர் தருமம், தருமச் சட்டம் என்பதை விரிவுபடுத்திப் புதுமையைப் புகுத்தி, இதுதான் தர்மத்திற்கு உகந்தது; இதுதான் சட்டபூர்வமானது என்று நிர்ணயிக்கும் அதிகாரத்தை அரசனுக்கு அளித்தார். இது கௌடில்யர் பண்டைய இந்திய அரசியல் வளர்ச்சிக்குச் செய்திருக்கும் தொண்டுகளில் ஒன்றாகும்.

அதே சமயத்தில் கௌடில்யரின் அரசன் வரம்பிலா அதிகாரம் கொண்ட எதேச்சதிகாரியாக இல்லை. தரும நியாயங்களைக் கூடுமானவரை வேதங்களை ஒட்டியே அரசன் நிர்ணயிக்க வேண்டுமென்றும், மரபு வழக்கங்களினின்றும் முற்றிலும் மாறுபட்ட

சட்டங்களை இயற்றுவதோ, ஆதரிப்பதோ ஆபத்தானதென்றும் கௌடில்யர் எச்சரிக்கை விடுக்கிறார். இடத்திற்கும், காலத்திற்கும் ஏற்ப இதுதான் சட்டம், தருமம் என்று சொல்லும் அதிகாரத்தை அரசனுக்கு அளிக்கும் மிகச் சில பழநூல்களில் கௌடில்யரின் அர்த்த சாத்திரம் ஒன்றாகும். இதிலுங்கூட ஆங்காங்கு அரச கட்டளைக்கும் மிஞ்சிய தருமமும், பிராண நோக்கும் காணப்படுகின்றன. இதிலிருந்து கௌடில்யர் தான் வசித்த கால கட்டத்து மரபினின்றும் எவ்வளவு விலகமுடியுமோ அதை மட்டும் செய்தரேயன்றி, அக் காலச் சிந்தனையை முழுதும் புறக்கணித்துவிட அவரால் முடியவில்லை என்று கூறினால் மிகை யாகாது.

அரசனின் முக்கிய அலுவலரில் புரோகிதரை அவர் சேர்க்கவில்லை. என்றாலும், பிராமணருக்கு சலுகைகள் நிறைய அளிக்கப்படுகின்றன. பிராமணருக்கு முதலிடம் அளிக்கப்படும் ஜாதிமுறையினை அவர் ஆதரிக்கிறார்.[3] வருணாசிரம முறை நாட்டு நலனுக்குக் குந்தகம் விளைவிக்காமல் இருக்கும்வரை அதில் தவறேதும் சொல்லவில்லை. மேலும், தத்தம் தொழிலையும், தத்தம் சமூக அந்தஸ்தையும் உணர்ந்து ஒவ்வொருவரும் அதனை மீறாமல் நடக்கும்போது சமூகச் சிக்கல்கள் குறைந்து சமுதாயம் ஒழுங்காகச் செயல்பட இந்த வருணாசிரம தருமம் உதவுகிறது என்றும் அவர் நினைத்திருக்கலாம்.[4] இந்த முறையில் வாழ்வின் தர்ம அடிப்படையும், பொருள் அடிப்படையும் சேர்ந்து இணைந்து விளங்குவதை அவர் அரசியல் நோக்குடன் பயன்படுத்திக் கொண்டார்.

ஏழு உறுப்புக் கொள்கை (அர்த்த சாத்திரம் VIII, 1)

நாடானது ஏழு உறுப்புகளைக் கொண்டது எனப்படும் சப்தாங்கக் கொள்கை[5] அர்த்த சாத்திரத்தில் இடம் பெறுகிறது. முழுவதும் உடலொப்பனைக் கூறாக (organic) விளங்குவதாக இதை நாம் எண்ணிவிடலாகாது. இவ் வங்கங்கள் முக்கியத்துவத்தில் ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபடுவதோடு மட்டுமன்றி, ஓரங்கத்திற்குப் பெருங்கெடுதல் நேர்ந்தால் மற்றவற்றையும் பாதிக்கக்கூடும் என்ற அளவில் மட்டுமே நாம் இதை உடலொப்பனைக் கூறாக புரிந்துகொள்ளலாம். உடற்கூறுகளுக்கு இணையாக வைத்து நாட்டின் உறுப்புகள் சொல்லப்படவில்லை.

[3] அர்த்த சாத்திரம் II, 24; III, 14-ம் 16-ம். IV. 8; XIV, 8.
[4] மேற்படி I-3,
[5] சப்தம்—ஏழு; அங்கம்—உறுப்பு.

சுவாமின் — தலைவன்

அமாத்தியா — அமைச்சர்கள்

ஜனபதா — மக்கள்

துர்கா — அரண்

தண்டா - படை

கோஸா — கருவூலம்

மித்ரா — நட்பு நாடு

ஆகிய இவ்வேழு உறுப்புகளும் சேர்ந்தது நாடு எனப்படும். இக் கொள்கையே சப்தாங்கக் கொள்கையாகும். நாட்டின் இறைமை அதிகாரம் இவ் வேழு உறுப்புகளையும் சார்ந்து விளங்குகிறது.

### சுவாமின்

அரசன் என்பதற்கு ராஜா என்னும் சொல்லே பெரும்பாலும் உபயோகப்படுத்தப்பட்டபோதிலும் சுவாமின் (தலைவன்)என்னும் சொல்லும் பயன்படுத்தப்பட்டிருப்பதால் குடியரசு நாடுகளுக்கும் பொருந்துமாறு கௌடில்யர் இக் கொள்கையினை அமைத்துள்ளார் என டிரக்மெய்ர் நினைக்கிறார்.[6] ஏழு உறுப்புகளில் முதலாவதாகிய இதுவே தலையாயதாகும் என்பது கௌடில்யர் துணிபு. கௌடில்யருக்கு முன்பு இக் கொள்கையினைக் கூறிய பலரும் தத்தம்போக்கில் எதனை முக்கியமாகக் கொண்டார்களோ அதற்குத் தலைமையிடம் அளித்துவந்தனர். உதாரணம் வருமாறு: பாரத்வாசர் அமைச்சருக்கும், பராசரர் அரசனுக்கும், வாதவ்யாதி நட்பு நாட்டுக்கும் முக்கியத்துவம் அளித்தனர்.[7] அரசன் விதியின் கைப்பொம்மையோ, நல்லகாலம் வரும் என்று நம்பியிருப்பவனோ தேவர்களின் மனப்பாங்கினைப்பொறுத்தவனோ அல்லன்; நல்லதும், கெட்டதும் தன்வலிமையினாலும், துணிவினாலும் கால நேரம் கருதி முடிக்கும் வல்லமை பொருந்தியவன். நாட்டு நலன் அவன் கையிலேதான் உள்ளதென்பது கௌடில்யரின் நம்பிக்கை.

### அமைச்சர்

கௌடில்யர் சிறிய அமைச்சரவையையே விரும்புகிறார். மூன்று அல்லது நான்குபேர் கொண்ட அமைச்சரவையை அவர் சொன்னாலும், இன்றியமையாதபோது அதிகம்பேர் இருப்பதையும் தவறாகக் கூறவில்லை. நற்குடும்பத்தில் பிறந்தவராயும், அரசன் நாடு இவற்றில் பற்றுக்கொண்டு உண்மையாகச் செயல்

[6] பக்கம் 199

[7] K. V. ரங்கசாமி அய்யங்கார்—Some aspects of Indian Polity.' பக்கம் 24

படக் கூடியவராயும், நன்கு கற்றவராயும், நாணயமுள்ளவராயும் அமைச்சர்கள் இருக்க வேண்டும் என்பன அவர் கூறுபவை.

அமைச்சர்கள் தவிர வேறு பல நிர்வாகத் துறை அலுவலர் களும் எவ்வகையில் சோதித்துத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும், அவர்களது அலுவல்கள் யாவை, அவர்களை எப்படிக் கண் காணிப்பது ஆகியவற்றையும் கௌடில்யர் விரிவாக விளக்குகிறார்.

இதே முறையில் ஒவ்வொரு அங்கத்தினையும் அவர் விளக்கு கிறார். தருமத்தை ஓர் அங்கமாக அவர் குறிப்பிடவில்லை என்பது இங்குக் கவனிக்கத் தக்கது. நாடு வேறு, அரசன் வேறு என அறுதியிட்டுக் கூறப்படவில்லையாதலாலும், இவ் விரண்டும் ஒன்றையொன்று குறிக்குமாறு உபயோகப்படுத்தப்பட்டிருப் பதாலும், இறைமைக் கொள்கை தெளிவற்று விளங்குவதையும் நாம் காணலாம்.

### அரசனின் ஏற்றம்

மக்களின் நல்வாழ்வைப் பொறுத்தே அரசனின் நல்வாழ்வும் அமையும். ஆகையினால் அரசனின் முதற்கடமை மக்கள் வாழ்வைச் செம்மைப்படுத்துவதே எனக் கௌடில்யர் கூறுகிறார்.[8] அரசன் மக்களுக்குத் தொண்டனாக விளங்க வேண்டுமென இவர் கூறி னாலும், அது அரசன் நடந்துகொள்ள வேண்டிய விதத்தையும், கடமையாற்ற வேண்டிய பாங்கினையும் குறிப்பதேயல்லாமல், அரசனுக்கெதிராகச் செயல்படக் குடிகளுக்கு உரிமையுண்டு என்று பொருள்படாது. அரசனுக்கு வரம்பிலா அதிகாரமோ, குடிகளுக்குப் புரட்சி செய்யும் உரிமையோ யாண்டும் இல்லை. தகப்பன் - சேய் இவர்களுக்கிடையே நிலவும் உறவு போலவே அரசனுக்கும் மக்களுக்கும் இடையேயுள்ள உறவு சித்திரிக்கப் பட்டிருக்கிறது.

அரசியலும், நல்லொழுக்க வாழ்வும் ஆகிய இரண்டும் வெவ்வேறாய், ஒருங்கிணையாதன என்று கௌடில்யர் கூறவில்லை. நாட்டின் முடிவான குறிக்கோள் தருமமே. நாடும், அரசும் நல்லபடியாக இருந்தால்தான் தருமம் நிலைக்கும்; ஆகவே, தருமத்தைவிட அரசியலுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப் படுகிறது. தருமத்தையும் புறக்கணிக்காமல், அதே நேரத்தில் நாட்டு நலனுக்காகத் தருமமற்ற செயல்களையும் செய்யலாம் என்னும் கௌடில்யரின் வாதம் இந்திய அரசியல் சிந்தனை வளர்ச்சியில் ஒரு திருப்பத்தைக் காட்டுகிறது. போர் செய்வதிலுங்

[8] அர்த்த சாத்திரம், I-19.

கூட அறப்போர் அதாவது போர்த்தருமம் புறக்கணிக்கப் படலாம்; மாற்றுனை வீழ்த்த எவ் வகையிலும் போரிடலாம் என்று கூறுவதிலிருந்து நாம் இதனை அறிந்து கொள்ளலாம்.

வெறும் உடல், படை வலிமை ஆகியவை மட்டும் நாடாளப் போதுமானவை அல்ல. அரசன் தன் (தண்ட) அதிகாரத்தை மித மிஞ்சியோ, மிகக் குறைவாகவோ பயன்படுத்திஞல் மக்கள் அரசன் ஆகிய இருவருக்குமே கேடாகும். ஆகவே, எதிலும் கட்டுப்பாடு அவசியம். மனக் கட்டுப்பாடே வலிமையை அதிகரிக்கச் செய்வ தாகும் என்றும் கௌடில்யர் கூறுகிருர். கட்டுப்பாடென்ருல் போரினின்று விலகிக் கொல்லாமை விரதம் பூண்டு விளங்க வேண்டும், புலன்களை ஒருமித்து ஞானம் தேட வேண்டும் என்பன அவர் கூறும் பொருளன்று. தன்னைத்தானே வெற்றி கொள்ளா தவன் உலகை எவ்வாறு வெல்லமுடியும் என்பதே அவர் கேள்வி. மன அடக்கத்திஞல் வரும் அற ஒழுங்கை, அரசியலுக் காகப் பயன்படுத்தும் உத்தியை மீண்டும் இங்கே காண்கிருேம்.

அரசனுக்கு மக்களைக் காக்கும் பொறுப்பே இதுவரை சொல்லப்பட்டிருந்ததுபோக, அர்த்த சாத்திரத்தில் மக்கள், அரசன் இவர்களுக்கிடையே நிலவும் தொடர்பிஞல் இவர்களது பல நலன்களையும் பேணிப் பாதுகாப்பதும், தேவையாஞல் நாட்டின் நலம், மக்களின் நலம், பாதுகாப்பு இவற்றிற்காக மத நெறியினின்றுங்கூட விலகி ஒழுங்கையும், அமைதியையும் நிலை நாட்டி மீண்டும் தருமம் நிலவும்படி செய்யும் பணியும் அதி காரமும் அரசனுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

அர்த்த சாத்திரம் அரசனை மையமாக வைத்தே புனையப் பெற்றிருக்கிறது. அரச குடும்பத்தினர், அமைச்சர், அலுவலர் இவர்களிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள அரசன் என் னென்ன செய்ய வேண்டுமென்பது நான்கு அத்தியாயங்களில் விவரித்துக் கூறப்பட்டுள்ளது. இளவரசர்கள்மீதுகூட முழு நம்பிக்கை வைக்கலாகாது; அவர்கள் தாய் நண்டையே தின்னும் நண்டுக் குஞ்சுகள் போன்றவர்கள்[9] என்று கூறப்படுவதிலிருந்து அக் காலத்தில் மகத தேசத்தில் தந்தையைக் கொன்று அரியணை ஏறும் பழக்கம் இருந்திருக்கக் கூடுமென ஊகிக்கலாம்.

அரசனுக்கு ஓய்வும் அதிகம் அளிக்கப்படவில்லை. பகல் எட்டு பாகமாக்கப்பட்டு ஒவ்வொன்றிலும் அரசன் செய்ய வேண்டிய கடமைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.[10] இதேபோல் இரவும் பாகுபடுத்தப்பட்டுள்ளது.

[9] மேற்படி. II-7. [10] மேற்படி. I-19

பகல்

முதல் பாகம் : தற்காப்பு முறைகளையும், வரவு செலவுக் கணக்கினையும் ஆராய்வது.

இரண்டாம் பாகம் : மக்கள் தொடர்பான அலுவல்களைக் கவனிப்பது.

மூன்றும் பாகம் : குளித்து, உண்டு கற்பது.

நான்காம் பாகம் : தங்க வருமானங்களைப் பெறுவது, அலுவலர்களை நியமிப்பது.

ஐந்தாம் பாகம் : அமைச்சர்களுடன் ஆலோசித்துக் கட்டளைகள் பிறப்பித்தல். ஒற்றர்களிடமிருந்து செய்திகளை அறிதல்.

ஆறும் பாகம் : பொழுதுபோக்கு விளையாட்டுகளிலோ, சுய சிந்தனையிலோ இருத்தல்.

ஏழாம் பாகம் : காலாள், குதிரை, தேர், யானைப்படைகளைப் பார்வையிடுதல்.

எட்டாம் பாகம் : படைத்தலைவருடன் போர்த் தொடர்பான திட்டங்களை ஆராய்தல்.

இரவு

முதல் பாகம் : ஒற்றர்களைச் சந்தித்து விசாரிப்பது.

இரண்டாம் பாகம் : குளித்து, உண்டு, படிப்பது.

மூன்றும், நான்காம், ஐந்தாம் பாகம் : உறங்குதல்.

ஆறும் பாகம் : விழித்தெழுந்து அரசியல் கொள்கைகளையும், செய்யவேண்டிய செயல்களையும் பற்றிச் சிந்தித்தல்.

ஏழாம் பாகம் : அமைச்சர்களோடு கலந்து ஆலோசித்தல், ஒற்றர்களை நியமித்து ஏவுதல்.

எட்டாம் பாகம் : பெரியோர்களிடம் ஆசிபெற்று, தன் மருத்துவர், தலைமைச் சமையல்காரர், சோதிடர் இவர்களைக் கண்டபின் அவைக்குச் செல்லுதல்.

ஒற்றர்களின் மூலம் மக்களின், முக்கியமாகக் குடித் தலைவர்களின் எண்ணம், செயல் ஆகியவற்றை அறிந்து அவற்றிற்கேற்ப உள்நாட்டுக் கொள்கைகளை வகுத்துக்கொள்வதிலிருந்து பொது

மக்கள் எண்ணத்தை ஒட்டி அரசாள வேண்டிய நிலையை அரசன் உணர்ந்திருப்பதாக நாம் கருதலாம். மக்கள் கொடுமையினுலும், ஏழ்மையினுலும் அரசனுக்கெதிராகப் புரட்சி செய்யக்கூடும். இவற்றை ஒழித்துவிட்டால், அரசன், மக்கள் இருபாலருமே நன்கு வாழமுடியும் என்பதோடு இருவருமே தத்தமக்கு விதிக்கப் பட்ட தருமத்தைச் செய்யவும் ஏதுவாகிறது.[11]

நிருவாகம்

அரசன் எத்தனை திறம்பெற்றவனுக இருந்தபோதிலும் தான் ஒருவனுகவே அனைத்தையும் செய்ய முடியாதாகையினுல் மந்திரி களின் துணை தேவை எனக் கௌடில்யர் கூறுகிறுர். ஆட்சியில் அதிகாரத்தினை அமைச்சர்களுக்கு வழங்குவதாக இது பொருள் படாது. தன் வேலைப் பளுவைக் குறைத்துக்கொள்வதற்காக அவர்களைத் தன் காது, கண்களாகப் பயன்படுத்திக்கொண்டு, அவர்களின் ஆலோசனையைக் கேட்டறிந்துகொண்டு செயல்பட அமைச்சரவை உதவுகிறது. அரசன் அமைச்சர்களின் ஆலோ சனைக்குட்பட்டே நடந்து தீர வேண்டுமென்கிற அவசியமில்லை. என்றுலும், அவையினரில் பெரும்பான்மையினர் சொல்லுக்குக் மதிப்புக் கொடுக்காமல் புறக்கணித்து விடுவதும் எளிதன்று.

அமைச்சரவை ஆலோசனை வழங்குவோரைக் கொண்ட உட் பிரிவையும், அவ் வாலோசனைகளின் அடிப்படையில் உருவான கொள்கைகளைச் செயலாக்கும் அலுவலரையும் கொண்டு விளங்கியது. அமைச்சரவையில் புரோகிதரும் இடம் பெற்றுர். தரும சூத்திரங்களில் புரோகிதருக்கு அரசியலில் அளிக்கப்பட்ட அதிகாரம் அர்த்த சாத்திரத்தில் இல்லை என்பது கவனிக்கத் தக்கது.

அமைச்சர்களுக்கும், நிருவாகத்துறைத் தலைவர்களுக்கும் உள்ள வேறுபாடு தெளிவாக இல்லை என்றுலும், முக்கியமான நிருவாகத் துறைகளின் தலைவர்கள் அமைச்சரவையில் இடம் பெற்றிருந்தனர் என்பதை ஊகிக்கலாம். சந்நிதாதா என்னும் நிர்வாகத் தலைவர் கருவூலம், வர்த்தக இல்லம், தானியக் கிடங்கு காட்டுப் பொருள் கிடங்கு, பண்டகசாலை. ஆயுதக் கிடங்கு, சிறைச்சாலை ஆகியவற்றைக் கட்டும் பொறுப்பேற்றிருந்தார்.

அரண், சுரங்கம், கட்டடங்கள், பூங்காக்கள், காடுகள், கால்நடைகள், சாலைகள் இவற்றின் பொறுப்பு வேறெருவரிடம் இருந்தது.

[11] டிரக்மெய்ர் பக்கம் 211.

படைத் தலைவர் எந்த நேரத்தில் போர் செய்வது எப்போது பின்வாங்குவது என்பது பற்றித் தீர்மானிக்கும் வல்லமையுள்ள பொறுப்பேற்றிருந்தார்.

இம் மூன்று துறைகளும் மிக முக்கியமானவையாகக் கருதப் பட்டன. இவர்களுக்குச் சாதாரண அலுவலர் வாங்கும் ஊதியம் போல இரண்டிலிருந்து பன்னிரண்டு மடங்குவரை அளிக்கப் பட்டது. மற்ற இலக்காத் தலைவர்கள் பொதுவாக 'அத்தியக்சர்' என அழைக்கப்பட்டனர். பொதுவாக அரசாங்க அலுவலர்க்கு நல்ல ஊதியமளிப்பதைக் கௌடில்யர் ஆதரித்தார் என்றே கூற வேண்டும்.[12] ஏனெனில், அது அவர்களுக்கு உற்சாகத்தையும், ஊக்கத்தையும் தருவதோடல்லாமல், பேராசையினுல் சுரண் டலில் ஈடுபடுவதையும் தவிர்க்கிறது.

மேற்சொன்னவர்களைத் தவிர சுரங்க வேலைகள் சம்மந்தமான அலுவலரும், நாணயச்சாலையினர், பொற்கொல்லர் ஆகியோரை மேற்பார்வையிடும் அலுவலரும், பண்டகசாலை, காடுகளி லிருந்து கிடைக்கும் பொருள்கள் ஆகியவற்றை மேற்பார்வை யிடும் அலுவலரும், வர்த்தகம், அளவுகள், சுங்கம், அனுமதிச் சீட்டுகள் முதலானவற்றைக் கவனிக்கும் அலுவலரும், விவசாயம், நெசவு, கடல்துறைப் போக்குவரத்து முதலியவற்றைக் கவனிக்கும் அலுவலரும், மது, விலை மாதர்—இவை சம்பந்தமான வற்றைக் கவனிக்கும் அலுவலரும், படைக்கலன்கள், மிருகங்கள் இவற்றிற்குப் பொறுப்பான அலுவலரும், கோட்டை, தலைநகர் இவற்றைக் கவனிக்கும் ஓர் அலுவலரும் ஆகப் பல அலுவலர் களும், அவரவர் வேலைகளும் பல அத்தியாயங்களில் விரிவாகக் கூறப்படுகின்றன.

## நீதியும், தண்டனையும்

குற்றத்தின் தன்மைக்கேற்ப நீதியை ஒட்டித் தண்டனை அளிக்கப்படவேண்டும் என்று கௌடியல்யர் கூறுகிறுர்.[13] நீதி வழங்கப்படுவதில் சாதிப் பிரிவினையை ஒட்டி உயர்சாதி யினருக்குச் சில சலுகைகள் காட்டப்பட்டபோதிலும், அரசாங் கத்துக்கு எதிராகச் செய்யப்படும் குற்றங்களில் இச் சலுகைகள் காட்டப்படவில்லை. இத்தகைய குற்றம் புரிந்த பிராமணரும் நாடுகடத்தப்பட வேண்டும் என்று அர்த்த சாத்திரம் கூறுகிறது. அரசாங்க அலுவலர் முறை தவறியும், சதி வேலையில் ஈடுபட்டும் நடக்கும்போது குற்றத்தின் தன்மைக்கேற்ப மிக அதிகக்

[12] அர்த்த சாத்திரம், V, 3. [13] மேற்படி, I-4

கொடுமையான தண்டனைகள் வரையப்பெற்றுள்ளன. இவற்றை நோக்கும்போது கௌடியல்யர் அரசனின் கையை நிருவாக யந்திரத்துக்கு எதிரே பலப்படுத்த விழைந்தார் என்பது விளங்கும்.

தொழில் மற்றும் வணிகக் குழுக்கள் (guilds) தமக்குள் ஏற்படும் பிரச்சினைகளைத் தாமே தீர்த்துக்கொள்ள வேண்டும்; எனினும், பொருளாதாரம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் இவை ஆதலால் நாட்டின் சட்டதிட்டங்களுக்கு அனுசரணையாகவே தீர்த்துக்கொள்ளப்பட வேண்டியிருந்தன. குற்ற நடவடிக்கைகள் வணிகக் குழுக்களுக்குள் ஏற்படும் பிரச்சனைகள், நிர்வாக அலுவலர்கள் சம்பந்தமான பிரச்சனைகள் ஆகிய யாவுமே தண்டனைச் சட்டத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டன. இதோடன்றி, வெளிநாட்டார் விஷயங்களும், அளவைகளும், லாபம் மற்றும் விலை நிர்ணயம் ஆகியவைகூட இச் சட்டங்களுக்கு உட்பட்டவையே.

சட்டபூர்வ நீதி, தரும நியாயம் (equity) ஆகிய இரண்டுமே கௌடில்யரால் சொல்லப்படுகின்றன. நீதிநிர்வாகம் மையநீக்கம் (de-centralisation) பெற்று விளங்கியது. இதனால் குறுகிய காலத்தில் நீதி செய்யப்பட ஏதுவாயிற்று. சாதாரண பிரச்சினைகளை விசாரிக்கும் கிராம நீதித் தலங்களைத் தவிர இரு வகையான நீதித் தலங்கள் விவரிக்கப்படுகின்றன.

'தர்மஸ்தியா' என்னும் சீரியல் நீதித்தலமும் (civil courts) கண்டக சோதன என்னும் குற்றவியல் நீதித்தலமும் இவையாகும்.

இவற்றில் தர்மஸ்தியா சொத்தின் வாரிசு, கடன் ஒப்பந்தம், எல்லைத் தகராறு, விற்பனை போன்றவற்றால் ஏற்படும் பிரச்சனைகளையும், கண்டக சோதன அரசியல் குற்றம், அரசாங்க அதிகாரிகள் முறை தவறிச் செய்யும் குற்றம், மற்றும் கொலை கொள்ளை போன்ற பயங்கரக் குற்றம் இவைகளையும் விசாரித்தன.

அரசாங்க அதிகாரிகள் பொதுப் பணத்திலேயே புழங்குவதால் பலவழிகளிலும் பணத்தை அபகரித்துக்கொள்ள முடியும். இதை நாற்பது வழிகளில் செய்யக் கூடும். எப்படி மீனானது நீரினுள்ளேயே இருக்கும்போது நீரைக் குடிக்கிறதா, இல்லையா என்று அறிவது கடினமோ, அதுபோல் பணம் சுரண்டும் அதிகாரிகளைக் கண்டுபிடிப்பதும் கடினமே. ஆகவே, ஒவ்வொரு நிர்வாகத் துறையிலும் ஒருவருக்கு மேற்பட்ட தலைவர்கள் இருப்பது நல்லது என்றும் கௌடில்யர் கூறுகிறார்.[14]

[14] மேற்படி. II-9

**வரியும் வருமானமும்**

அரசன் போருக்கு ஆயத்தமாக எப்போதும் பெரும்படை ஒன்று வைத்திருக்க வேண்டியதால் வருமானத்தில் சரிபாதி அளவு படைவீரர்களுக்காகச் செலவிடப்பட்டது. என்றாலும், அரசைச் சேர்ந்த வியாபாரிகள் மலிவான விலையுள்ள பொருளை வீரர்களுக்கு அதிக விலைக்குக் கொடுத்துக் கருவூலத்திற்கு அதிக வருமானம் வரும்படி செய்யலாம் என்பது கௌடில்யரின் திட்டம்.

அரசுக்குச் சொந்தமான சுரங்கங்களிலிருந்தும், மற்ற நிலங்களிலிருந்தும் பெரும் வருவாய் கிடைத்தது. இறக்குமதி வரிகள், விற்பனை வரிகள், அதிகச் சொத்தின்மீது வரிகள், சுங்க வரிகள், மக்கள் கட்டாயமாகக் கொடுக்க வேண்டிய கொடைகள், விலை மாதர், கலைவாணர் ஆகியோர் அளிக்க வேண்டிய வரிகள் போன்றவைமூலம் வருமானம் வந்தது.

அத்தியாவசியமான காலத்தில் வருமானத்தை அதிகரிக்க மக்களை ஏமாற்றியும் பணம் பறிக்கும் வழிகளைக் கௌடில்யர் கூறுகிறார்.[15] அரசாங்க அதிகாரிகளே கோவிலிலுள்ள விலை மதிப்புள்ள பொருள்களையும் தேவையானால் கருவூலத்திற்குக் கடத்திச் செல்லலாம் என்று அவர் சொல்வதிலிருந்து மக்கள் மனம் நோகாமல், அரசன் மதிப்பு இழக்காமல், எந்த முறையாலும் தேவைக்கேற்றபடி வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளலாம் என்பது அவர் நோக்கமாகும்.

'அரசனுக்குப் பொன்முட்டை தேவைப்பட்டாலும் அதனை இடும் வாத்தைக் கொல்ல உரிமையில்லை' என்பது இவரது வரிக் கொள்கையின் வாதம். தேவையின்றி அதிக வரி வசூலிப்பதைக் கௌடில்யர் வெறுக்கிறார். ஒரு பொருளுக்கு ஒரே வரிதான் விதிக்கப்படலாமென்றும், நிகர வருமானம் மட்டுமே வரிக்குட் படுத்தப்படவேண்டுமென்றும் இவர் கூறுகிறார். அதிக உற்பத்தியை நோக்கத்தில் வைத்து வரிவிதிப்புக் கொள்கை அமைய வேண்டும் என்று கூறும் இவர், விதித்த வரிக்கு அதிகமாக வரி கேட்டும் அலுவலர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்று சொல்லுகிறார். பொதுநலம் விளைவிக்கும் சில பணிகளில் வரி இணக்கம் காட்டப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் உணர்ந்திருக்கிறார்.[16]

[15] மேற்படி. V-2. [16] மேற்படி. III-9.

4

வழக்கம்போல் நிலவருவாயில் ஆறில் ஒரு பங்கு வரியாக விதிக்கப்பட்டது. தேவையானால் மூன்றில் ஒரு பங்காகவும் உயர்த்தப்படலாம். அத்தியாவசியப் பண்டங்களுக்கு அவற்றின் மதிப்பில் இருபதில் ஒரு பங்கு வரியாக விதிக்கப்பட்டது. மற்றவற்றிற்கு உயர்ந்தமட்டில் நூற்றுக்கு இருபது பங்கு வரியாக வசூலிக்கப்பட்டது. பொருள்களை அவை உற்பத்தி செய்யப்படுமிடத்திலேயே விற்பது தண்டனைக்கு உரியது. அவைகள் அரசாங்க இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, முத்திரை இடப்பெற்று, வரி விகிதங்கள் முடிவாக்கபட்ட பின்பு தான் விற்பனை செய்யப்படலாம். இறக்குமதிப் பொருள்களுக்கு ஐந்தில் ஒன்று வரியாக விதிக்கப்பட்டது. மொத்தத்தில் அரசுக்கு அதிக வருமானம் வரக்கூடியதாகவும், தனியார் இலாபம் கட்டுப்படுத்தப்படக்கூடியதாகவும், மக்கள் மனம் நோகாமல் நேர்முக, மறைமுக வரிகள் அமைவதாகவும் இருக்க வேண்டுமென்பது கௌடில்யரின் நோக்கமாகும்.

தாதுச் சுரங்கங்கள், உப்புச் சுரங்கங்கள், காடுகள், வேட்டை மிருகங்கள், புறம்போக்கு நிலங்கள், மது உற்பத்தி ஆகிய இவைகள் அரசனின் கட்டுப்பாட்டிற்குள் உள்ளவை. மொத்தத்தில் வணிகமும், பயிர்த் தொழிலும் பெருகும்வண்ணம் கௌடில்யரின் அர்த்த சாத்திரத்தில் வரிக்கொள்கை அமைந்திருக்கிறது.

கௌடில்யரின் நாடு ஒரு பொதுநலம் சார்ந்த நாடுபோல் விளங்குகிறது. பொருளாதார நலம், பொதுநலம், அரசனின் நலம் ஆகிய மூன்றும் ஒன்றையொன்று சார்ந்திருப்பது போல விவரிக்கப்படுவதை நாம் காண்கிறோம். இக்கட்டான காலங்களில் உதவுவதற்கென்றே அத்தியாவசியப் பண்டங்கள் சேமிப்பில் இருக்க வேண்டும். தேவையானால், தனி மனிதரின் உணவுப் பொருள் கையிருப்பையும் அரசாங்கம் எடுத்துக் கொள்ளலாம் என்பது அவர் வாதம்.

பஞ்ச நிவாரணத்திற்காகப் பொது நிர்மாண வேலைகளை அரசு ஏற்கலாம் என்றும் அவர் கூறுகிறார். தீ, வெள்ளம், வியாதிகள், பஞ்சம், விலங்குகள், பேய்ப் பிசாசுகள் ஆகியவற்றிலிருந்து மக்களைக் காக்கும் பொறுப்பு அரசனுடையது என்பது அவர் கூற்று.

### நாட்டு நிர்வாகப் பிரிவு

மையமாக்கப்பட்ட நாட்டு நிர்வாகம் அர்த்த சாத்திரத்தில் சொல்லப்படுகிறது. ஜனபதா எனப்படும் எண்ணூறு கிராமங்கள்

கொண்ட பகுதி நிர்வாகத்தின் அடிப்படைக் கூறுக அமைந்தது. பிரதேச நிர்வாகத் தலைவர் தன் கீழ் உள்ள இடத்தின் வரி வசூல், கட்டுப்பாடு, அமைதி இவற்றிற்குப் பொறுப்பானவராவார். அவருக்குக் கீழே பல பிரிவுகளில் துணை நிர்வாகிகளும், அவர் களுக்கு உதவியாக கிராம அலுவலரும் இருந்தனர்.

ஒற்றர் படை

நாட்டின் நிர்வாகத் திறன் பற்றியே நாட்டு நலனும் விளைகிற தென்பதில் கௌடில்யர் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளார். அரசிளங்குமரர் முதல் (பட்டத்து ராணி உட்பட) கிராம அலுவர்வரை ஒவ்வொருவரின் நடவடிக்கைகளையும் கவனித்துக் குற்றம் களையும் நோக்குடன் ஒற்றர் படை ஒன்று மிக விரிவாகச் செயல்பட்டதாகச் சொல்லப்படுகிறது. சந்நியாசி போலவோ, வியாபாரிகள் போலவோ, மற்றும் வேறு வகையிலோ வேட மிட்டுக் கொண்டும், ஒற்றர்கள் உள்நாட்டு விவகாரங்களைச் சமாளிப்பதில் அரசனுக்கு உதவி புரிந்தனர். விலைமாதரும் ஒற்றறிவதில் உபயோகப்படுத்தப்பட்டனர். சில இடங்களில் ஒற்றனுக்கு ஒற்றனும் உண்டு.

அயலரசனின் வேலையாள்போல் இரு ஊதியம் வாங்கும் ஒற்றர்களும் கூறப்படுகிறுர்கள். அலுவலர்களையும், அமைச்சர் களையும், மக்களையும், அரச குடும்பத்தோரையும், பிற அரசர் களையும் சோதித்தறியவும், அரசனை எவ்வித ஆபத்திலிருந்தும் காக்கவும் இவ் வொற்றர்கள் மிகத் திறமையாக வேலைகள் செய்து வந்தனர். இப் பெரும் ஒற்றர் முறை கௌடில்யரின் அர்த்த சாத்திரத்தில்தான் விரிவாக இடம் பெற்றுள்ளது.

ஒற்றர் கூற்றினை அரசன் அப்படியே நம்பிவிடலாகாது. ஒருவரை ஒருவர் அறியாத மூன்று ஒற்றர்கள் கூறுவதில் ஒற்றுமை இருப்பின் அதில் உண்மை யிருப்பதாகக் கருத இடம் உண்டு. தவருன தகவல் தரும் ஒற்றர் தண்டனைக்கு உள்ளாக நேரிடும்.[17]

இவர் கூறும் அயல்நாட்டுக் கொள்கையையும், மண்டலக் கொள்கையையும் அடுத்த அத்தியாயத்தில் காணலாம்.

[17] மேற்படி I-12

# 6. அர்த்த சாத்திரத்தில் ஆட்சியும் சமூக நீதி நிருவாகமும்

மக்களின் நல்வாழ்வை முன்னிட்டு அரசாட்சியும், அரசனிட மிருந்து பாதுகாப்பும் தேவைப்படுகிறது. 'யோகக்ஷேம' மானது அரசனைப் பொறுத்தே அமைகிறது என்று அர்த்த சாத்திரம் கூறும்.[1] யோகம் என்பது எடுத்த ஒரு காரியத்தினைச் செம்மையாகச் செய்து முடிப்பதைக் குறிக்கும். க்ஷேமம் என்பது அச் செயலின் நன்மைகளை அமைதியாக இன்பத்துடன் அனுபவிப் பதாகும். ஆக அரசனின் கடமை வெறும் பாதுகாப்பு அளிப்பது மட்டுமன்று; பாதுகாப்பு அளித்து மக்கள் நலம் (welfare) நாடும் வகையில் ஆட்சி புரிவதேயாகும். 'மக்களின் இன்பத்திலேதான் அரசனின் இன்பமும் அடங்கியுள்ளது. மக்களுக்கு எது நன்மை பயக்குமோ அதில்தான் அரசனின் நன்மையும் உள்ளது.'[2]

அரிஸ்டாட்டில், பிளாட்டோ போன்று அரசியல் தத்துவங் கள், குறிக்கோள் முதலியவற்றை விவாதித்து, அவற்றின் தன்மைகளைச் சீர்தூக்கி, நாடு எனப்படுவது யாதென்பது போன்ற செய்திகளையும், அது ஏன், எப்படி உண்டாகி, எதற்காகச் செயல் படுகிறது, அதன் அடித்தளங்கள் யாவை என்பன போன்றவை களையும் அலசி ஆராயும் அரசியல் நூலன்று அர்த்த சாத்திரம். ஆங்காங்கே ஒரு சில விஷயங்களில் இத்தகைய செய்திகள் சொல்லப்பட்டிருந்தாலும், அரசியல் நிருவாகத்தை அரசன் எவ்வாறு நடத்த வேண்டும் என்று சொல்லுவதே இதன் முக்கிய நோக்கமாகும். முடியாட்சியே நாட்டின் தன்மை என்று கூறும் விதத்தில் இந் நூல் முழுவதும் அரசனுக்கு அறிவுரை கூறுவது போல் அமைந்துள்ளது. முடியாட்சிக்கு ஆதாரம் தேடும் வகை யில் இதிலும் மச்ச நீதிக் கொள்கை சொல்லப்படுகிறது. 'தண்டம் மறைந்த காலத்தில், மக்கள் ஒழுங்கையும், அமைதியை யும் இழந்து பாதுகாப்பின்றி இருக்கும் நேரத்தில் வசுவஸ்வத் என்பவரின் மகன் மனுவை அரசனாக்கினர். அவனுக்கு ஆறில் ஒரு பங்கு விளைபொருள்களையும், பத்திலொரு பங்கு மற்றப் பொருள்

[1] அர்த்த சாத்திரம் I, 13-7, மற்றும் பிறவிடங்களில்

[2] மேற்படி I, 19-34

களையும் அளித்து அவற்றிற்கு ஈடாகப் பாதுகாப்பையும் நல் வாழ்வையும் பெற்றார்கள்' என்று கூறப்படுகிறது.[3] என்றாலும் ரூசோ, ஹாப்ஸ் போன்ற மேலைநாட்டறிஞர்கள் சொல்லும் சமுதாய ஒப்பந்தத்திற்கும், இதற்கும் வேறுபாடு உள்ளது என்பது வெளிப்படை.

முதல் அரசன் சூரியதேவனின் மகனான மனு எனக் கருதப் படுவதால், அரசர்களுக்கு தேவத் தொடர்பு இருப்பதுபோல் காட்டப்படுகிறது. வேறோர் இடத்தில் 'அரசன் இந்திரன், யமன் போன்று நிலத்தில் விளங்குபவன் என்றும், அவனை அவமதிப்பவர் களுக்குத் தெய்வச் சாபம் கிட்டும்' என்றும் கூறப்படுகிறது. இதனால், ஆங்கில நாட்டு ஸ்டூவர்ட், மரபு அரசர்கள் பற்றிய தெய்விக உரிமை (Divine right) போன்று ஈண்டு சொல்லப் படுகிறது என்று நினைக்க இடமில்லை. மேலும், கௌடில்யரின் 'அரசன்' இத்தகைய உரிமையை நம்பியோ, அல்லது நிலை நாட்டியே ஆட்சி புரிந்தான் என்று கூறுவதும் பொருளற்றது. தன்னம்பிக்கையும், செயல் விவேகமும் மட்டுமே அவனுக்குத் துணை என்பது அர்த்த சாத்திரத்தின் முடிந்த துணிவு என்று நாம் கூறமுடியும். அரசியல் கட்டுப்பாட்டின் இரண்டாம் தர ஆதாரமாகவே (Secondery Sources of Political control) இவை களை நாம் குறிப்பிடலாம்.[4]

மொத்தத்தில் அரசாட்சியானது மக்கள் அதற்கு அளிக்கும் நன் மதிப்பையும், ஆதரவையுமே பொறுத்து விளங்குவதாகும் என்பதே அர்த்த சாத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.[5] நூலின் பல இடங்களிலும் மக்களின் நலம் பேணுவதன் அவசியமும், மக்களின் கருத்தை அறிந்து நடக்க வேண்டுவதன் அவசியமும், மக்கள் தன்னை விட்டு அகன்று, அல்லது தனக்கெதிராக நடந்து செயல்படுவதனால் ஏற்படும் ஆபத்தும் விரிவாகச் சொல்லப் பட்டிருப்பதால் இக் கருத்து உறுதிப்படுகிறது. இதனால் தான் இந் நூல் நிருவாக நூலாக விளங்குகிறது.

அர்த்த சாத்திரம் காவலரசு நாட்டையோ (Police state) வெறும் வரிப்பணம் பெறும் நாட்டையோ விவரிக்கவில்லை. மக்களைப் பாதுகாப்பது என்பது மக்களைத் துன்பங்களிலிருந்தும் தீயவர்களிடமிருந்தும், தீய சக்திகளிடமிருந்தும் பாதுகாத்து, நன்மை செய்து, அவர்கள் நலமாக வாழ்வதென்பதிலேயே அடங்கியிருக்கிறது.

[3] மேற்படி I, 13-5-7
[4] மேற்படி 1- 13-10-11
[5] R. P. காங்ளே, கௌடில்ய அர்த்த சாத்திரம், III பக்கம் 135

சமூக ஒழுங்கு சீர்குலைந்தால் அமைதிகெட்டுத் துன்பம் உண்டாகும். ஆதலால், அரசன் வேத நூல்களை ஒட்டி வருணாசிரம தருமங்களை யாரும் மீறி நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டிய கடமை ஏற்படுகிறது.

இதை அரசன் தன் அதிகாரத்தைத் (தண்டம்) பயன்படுத்துவதன் மூலம் நிறைவேற்ற வேண்டும். தண்டத்தை வரம்பு மீறியும், நீதியற்றும் செலுத்தலாகாது என்பது முன்னொரு அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, மக்கள் புரட்சி செய்தோ, பகை அரசனுடன் சேர்ந்தோ தன்னைக் கவிழ்த்து விடக் கூடும் என்ற பயம் அரசனுக்கு வேண்டும். இதுவே அவனைச் சரியானபடி அதிகாரத்தைப் பயன்படுத்தச் செய்யும் என்பதும் கூறப்பட்டுள்ளது.

கௌடில்யர் கூறும் நாடு சிறியதா, பெரியதா என்பது தெளிவாக விளங்கவில்லை. எல்வாறுயினும் அவர் கூறும் நிருவாக முறை பெரிய நாடுகளுக்கும் பெரும்பாலும் ஒக்கும் வகையில் உள்ளது. மண்டலக் கொள்கையை வைத்துப் பார்க்குமிடத்து விஜிகிஷு ஒரு சிறிய நாட்டினைப் பெருக்கும் முறை சொல்லப் படுகிறது, ஆகவே, சிறு நாட்டினை ஆளவும், அம் முறைகளைப் பரந்த நாட்டு நிருவாக முறைக்காக விரிவுபடுத்தவும் அர்த்த சாத்திரம் வழிகளைச் சொல்லுகிறது என்று நாம் சொல்லலாம்.

துவைராஜ்யா, வைராஜ்யா, குலசங்கா போன்ற அரசு முறைகளும் அக் காலத்தில் இருந்தனவெனத் தெரிகிறது. இவைகளைப் பற்றிக் 'குடியரசுகள்' என்னும் வேறோர் அத்தியாயத்தில் விரிவாகச் சொல்லப்படும்.

பௌரா, ஜனபதா என்னும் சொற்கள் அர்த்த சாத்திரத்தில் பயின்று வந்தாலும், அவை ஜெயஸ்வால் கூறுவதுபோல மக்கள் அவைகளைக் குறிப்பதல்ல என்று காங்ளே கூறுகிறார். பொதுவாக மக்களையும், மக்கள் தொகுதிகளையும் இச் சொற்கள் குறிப்பனவே தவிர, அரசனின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் அவைகளைக் குறிப்பன ஆகா. ஏனெனில், இவை கட்டுப்படுத்தும் முறையோ, செயல்படும் விதமோ அர்த்த சாத்திரத்தில் கூறப்படவில்லை. அமைச்சரவை பற்றியும் அமைச்சரவைக்கும் அரசனுக்குமிடையே உள்ள தொடர்பு பற்றியும் விரிவாகக் கூறும் கௌடில்யர், இம் மக்களவை பற்றி அவ்விதம் கூறாததாலும், அரச முறை பரம்பரையாக வருவதை அவர் விரும்புவதாகத் தெரிவு

தாலும், இன்னோரன்ன பிறவற்றாலும் மக்களாட்சிக் கூறுகள் கௌடில்யரின் அர்த்த சாத்திரத்தில் இடம் பெற்று விளங்குகின்றன என்று கூறுவது தவறாகும். மக்களுக்கு ஆட்சியிலும் நிருவாகத்திலும் பங்கில்லை என்றபோதிலும், அவர்களுக்கு நேரடியாக அரசனோ அல்லது அரசாங்க அலுவலரோ பொறுப்பு இல்லை என்றபோதிலும், மக்களின் நலமும், அரசனின் நலமும் ஒன்றையொன்று சார்ந்திருப்பதாக சொல்லப்படுவது மக்கள் புறக்கணிக்கப்படவில்லை யென்பதை நமக்கு உணர்த்துகின்றது.

ஆகையினால்தான் அமைச்சர்கள் முதல், கிராம அலுவலர் வரை யாவருமே இவ் விரு நலங்களுக்கும் தீங்கு செய்யாதவராக இருக்குமாறு பார்த்துக் கொள்வது அரசனின் கடமையாகக் கூறப் பட்டுள்ளது.

தற்காலத்தில் அரசாங்க அதிகாரிகளுக்கு எதிராக மக்கள் தம் ஆதார உரிமைகளை நிலைநிறுத்திக் கொள்ளச் சில வழிமுறைகள் (writs) இருப்பதுபோல் அக் காலத்தில் இல்லை எனினும், குற்றம் புரிந்தவர்களைக் கடுமையாகத் தண்டிக்கவும், குற்றங்களைக் காணப் பலம் பொருந்திய ஒற்றர் படையினை ஏவவும் அர்த்த சாத்திரம் இடம் அளிக்கிறது. மக்களாட்சி முறைபோல் அன்றி அரசாட்சியில் அரசாங்கத்துக்கு எதிராகத் தம் உரிமைகளை நிலைநாட்டிக்கொள்ள வழிகள் இருக்க முடியாதென்றாலும் இத்தகைய ஒரு பாதுகாப்பினைத் தருமக் கொள்கை தந்ததாகக் கூற முடியும். ஆட்சி என்னும் விளையாட்டில் அரசாங்கமும் மக்களும் இரு தரப்பினர். இருவரும் தருமக் கொள்கை என்னும் விளையாட்டை விதியாகக்கொண்டு அதனை மீறாது ஆடுவார்களேயாகில் சண்டை உட்பூசல்களுக்கு இடமில்லை. விதி மீறப்படும்போது அரசன் தண்டத்தினால் விதியை மீண்டும் அனைவரும் அனுசரிக்கும்படி செய்ய நடுவர்போல் நடக்க வேண்டும். அரசனே விதியை மீறும்போது பயிரை அழித்த வேலி தானும் அழிந்துபோவதுபோல் அதிகாரமிழந்து துன்புற நேரிடும் என்பது அர்த்த சாத்திரக் கூற்று.

எடுத்துக்காட்டாகப் பொதுப் பணத்தைக் கையாடியோ, முறை தவறி மக்களுக்கும், அரசனுக்கும் தீங்கு விளைவிக்குமாறு நடந்துகொண்டோ விளங்கும் அரசு ஊழியரைச் சாணி, சாம்பல் ஆகியவற்றைப் பூசி, அல்லது தலையை மழுங்கச் சிரைத்து, அடித்து விரட்டி நாடெல்லாம் அவன் குற்றத்தைக் கண்டு சிரிக்குமாறு தண்டிக்கப்பட அர்த்த சாத்திரம் வழிவகுத்துள்ளது.* சில சமயங்களில் மரண தண்டனையும், துன்புறுத்திச்

* அர்த்த சாத்திரம் IV, 9-2-27

சாகவைப்பதுங்கூடச் சொல்லப்பட்டுள்ளது. அரசாங்க அதிகாரிகள் முறை தவறி நடந்து, மக்களுக்குத் துன்பம் தரக்கூடிய செயல்களைச் செய்வதினின்றும் தடுக்கவே இம் முறைகள் சொல்லப்பட்டிருக்க வேண்டும்.

நாட்டினைப் பகைவனுக்குக் காட்டிக் கொடுக்கும் வழிகளில் ஈடுபட்டவர் 'கிருத்தியா' எனக் கூறப்படுவர். குரோதம் (கோபம்), பயம் (அச்சம்), லோபம் (பேராசை), மானம் (பெருங்கவுரவம்) ஆகியவற்ருல் இத் தீச்செயலில் ஒருவர் ஈடுபடக்கூடும். இவைகள் யாரிடம் விளங்குகின்றன என்பதை அறிந்து சொல்ல ஒற்றர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

இதனுல், அரசாங்க அதிகாரிகளுக்குப் போதிய பாதுகாப்பு தரப்படவில்லை என்று எண்ணிவிடக் கூடாது. அவர்களுக்கு அந்தஸ்தும், பணம், பொருள்கள் ஆகியவை ஊதியமாக அதிக அளவிலும் தரப்பட்டன. இது தவிர இவர்கள்மேல் உள்ள குற்றச்சாட்டுக்களைத் தீர விசாரித்தே தண்டனை வழங்கப்பட்டது. சில சமயங்களில் இவர்களுக்கு ஊதியத்திற்குப் பதிலாக நிலங்களும் அளிக்கப்பட்டன. ஊழியத்திலுள்ள அலுவலர் இறந்துபோனுல் அவரது ஊதியமும், உணவுப் பங்குகளும் அவர் தம் குடும்பத்திற்கு அளிக்கப்பட வேண்டும். அவர் குடும்பத்தில் உள்ளோரைக் கவனமாகப் பார்த்துக்கொள்ளவும், பிறப்பு, இறப்பு நேரிடும்போதெல்லாம் தகுந்த உதவி செய்யவும் அரசு கடமைப்பட்டது.

மக்களுக்கு எளிதில் அருகில் நீதி கிட்டுமாறு நீதித்தலங்கள் விரிவாக அமைந்திருந்தன. பத்துக் கிராமங்கள் கொண்ட சங்கிர கணத்தில்கூட ஒரு நீதிபதி இருந்தார் என்பதிலிருந்து இது விளங்குகிறது.[7] நீதித் தலங்கள் வரிசைப்படுத்தப்பட்டிருந்தனவா என்று தெளிவாகத் தெரியாவிட்டாலும், கடைசியில் அரசனிடம் சென்று நீதி கேட்க வழிவகுக்கப்பட்டிருந்தது என்பது தெளிவு. அரசன் தன்னிடம் வரும் வழக்குகளில் முதலில் கோயில், துறவிகள், மதத்துரோகிகள், நன்கு வேதம் பயின்ற பிராமணர்கள் ஆகியோர் தொடர்பு கொண்ட வழக்குகளையும், பிறகு சிறுவயதினர், முதிர்ந்தவர்கள், நோயுற்றவர் ஆகியவர்கள் தொடர்பு கொண்ட வழக்குகளையும், இவ்வாறே பிறவற்றையும் வரிசைப்படுத்தி அவரவர் சிறப்புக்கும், வலிமைக்கும் தக்கவாறு முறையாக அவர்களை விசாரிக்க வேண்டும்.

[7] மேற்படி III, 1

பொதுவாகப் பாதிக்கப்பட்டவரின் குற்றச்சாட்டு இன்றி நீதிபதிகள் (தர்மஸ்தா) வழக்குகளை எடுத்துக்கொள்ள முடியாது. என்றாலும், கோயில், பிராமணர், துறவிகள், பெண்கள், சிறுவர், வயது சென்றோர், அநாதைகள் ஆகியோர் மட்டில் இத்தகைய குற்றச்சாட்டுகள் (complaints) இன்றியே அவர்கள் குற்றவாளிகள் மீது வழக்குத் தொடரலாம். வழக்குகளை நடத்தும் முறைகளும், சாட்சிகளைப் பற்றிய சட்டங்களும் விவரித்துக் கூறப்படுகின்றன. இவை அனைத்தையும் நோக்கும் போது குற்றவாளிகள் தப்பிவிடக்கூடாது; குற்றமற்றவர்கள் தண்டிக்கப்பட்டுவிடக் கூடாது என்னும் சிந்தனையே புலப் படுகிறது.

தவறான தீர்ப்பு வழங்கும் நீதிபதிகளும் தண்டனைக்குள்ளா வார்கள். தற்காலத்தில் ஜனநாயக முறைகளில் காணப்படும் நீதிச் சுதந்திரம் (Independance of the judiciary) அர்த்த சாத்திரத்தில் காணப்படவில்லை. நீதிபதிகளும் நிருவாகத்துக்கு (executive) உட்பட்டவர்களே. நீதியானது நான்கு கால்களில் நிற்பதுபோல் சொல்லப்படுகிறது.[8] இவை தருமம் (உண்மை), விவகாரம் (சாட்சி), சரித்திரம் (மக்களின் பொது ஏற்பு), ராஜ சாசனம் (அரச கட்டளை) ஆகியவையாம். தற்காலத்தில் உள்ளதுபோல் ஒரே ஒரு சட்டத் தொகுதி மட்டும் இருக்க வில்லை. தேசதருமம், குல தருமம், சாதித் தருமம் என்று ஒவ்வொரு வகை மக்களுக்கும் கட்டுப்பாடுகள் இருந்தமையினால் இவற்றை அனுசரித்தும் தீர்ப்புச் சொல்ல வேண்டியிருந்தது. இவற்றில் ஒன்றுக்கொன்று முரணாகச் சிக்கல் ஏற்படும்போது தான் தருமத்தையொட்டி அரசன் தீர்ப்புச் சொல்ல வேண்டி வந்திருக்கலாம். ஆகவே, இத் தீர்ப்பு அல்லது ராஜசாசனம் அரசன் சட்டமியற்றும் அதிகாரம் படைத்தவன் என்றோ, அவன் சொல்வதே சட்டம் என்றோ பொருள்படாது.

அர்த்த சாத்திரத்தில் பதினேழு தலைப்புகளின்கீழ்ச் சட்டம் மானது பிரிக்கப்பட்டு விளங்குகிறது.

| | | |
|---|---|---|
| (1) விவாக சம்யுக்தம் | : | திருமணம் முதலியவை. |
| (2) தாய விபாகம் | : | சொத்துகளைப் பிரித்துக் கொள்வது முதலியன. |
| (3) வாஸ்துகம் | : | சொத்துத் தகராறுகள் |

[8] மேற்படி III, 1-39-40

(4) சமஸ்ய அனபாகர்மம் : சமூகச் செயல்களில் பங்கெடுக்காதிருத்தல் பற்றியவை.

(5) ரிணு தானம் : கடனைத் திருப்பிக் கொடுக்காதிருத்தல்.

(6) அவுபநிதிகம் : சொத்தினை ஓரிடத்தில் நம்பிக்கையாக வைத்திருத்தல் பற்றியவை

(7) தாச கர்ம கரகல்பகம் : தொழிலாளிகள், வேலைக்காரர்கள் பற்றியவை

(8) சம்பூய சமுத்தானம் : கூட்டு வியாபாரம்

(9) விக்ரீதகிரீதானுசயம் : வாங்குதல் விற்பனை இவற்றைப் பற்றியவை

(10) தட்டஸ்யஅனபாகர்மா: கொடைகள் அளிக்காதிருத்தல்

(11) அஸ்வாமி விக்கிரயஹம்: சொந்த மற்றவைகளை விற்பது பற்றியவை

(12) ஸ்வஸ்வாமிசம்பந்தகம்: உடைமை உரிமை பற்றியவை

(13) சாகசம் : ஒரு பொருளை அடித்துப் பிடுங்கிக் கொள்ளுதல் பற்றியவை

(14) வாக் பாருஸ்யம் : சொல்லினால் செய்யப்படும் தீங்குகள்

(15) தண்டபாருஸ்யம் : உடலுக்குச் செய்யப்படும் தீங்குகள்

(19) த்யூட சமாவயம் : சூதாடுதல், சவால் விடுதல்

(17) பிரகீர்ணகம் : மற்றும் பிற.

கௌடில்யருக்கு முன் உள்ள ஆபத்ஸ்தம்ப தரும சூத்திரம் போன்றவற்றைக் காட்டிலும், அர்த்த சாத்திரத்தில் மிக விரிவாகவும், விளக்கமாகவும், கூடுமானவரை அனைத்தையும் உள்ளடக்குவதாகச் சட்டமுறை பிரிக்கப்பட்டு விளங்குவதை நாம் காணலாம். ஆகையினால், முதன்முதலில் சட்டத் தொகுதியைத் தரும் நூலாகவும், சட்டங்கள், நீதி இவற்றின் வாயிலாக மக்களுக்கு நன்மையும், பாதுகாப்பும் தேடும் நூலாகவும் அர்த்த சாத்திரம் விளங்குகிறதென்று சொன்னால் மிகையாகாது.

அர்த்த சாத்திரம் கூறும் நிருவாகத் துறைகளில் கல்வித் துறை காணப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. கொள்கையளவில் வேதம் முதலியவைகளை மேல் மூன்று வருணத்தாரும் கற்கலாம் என்றிருந்தபோதிலும், பெரும்பாலும் பிராமணரே இதைச் செய்தமையினாலும், தொழில்கள் வருணாசிரம தருமத்தையொட்டி குடும்பக் குலத்தொழிலாக விளங்கிவந்தமையினாலும் இதை மாற்ற வேண்டிய அவசியம் இருந்ததாகக் கௌடில்யர் கருதவில்லை. ஆகவே, இதனைச் சொல்லாமல் விட்டு விட்டார் என்று நாம் கூறலாம்.

கௌடில்யர் கூறும் இந் நிருவாக முறை எவ்வளவு தூரம் உண்மையில் பின்பற்றப்பட்டது, எவ்வளவு தூரம் அப்போதிருந்த நிருவாக முறையினைப் பிரதிபலிக்கிறது என்பதைப் பார்க்கும் போது, கௌடில்யரின் அர்த்த சாத்திரம் உண்மையில் அக் காலத்தில் விளங்கிய நிருவாகத்தினை முழுவதும் பிரதிபலிப்பதாக அமையவில்லை யென்பது புலப்படும். மௌரிய அரசினைப் பற்றிக் கிடைக்கும் சில தடயங்களைக் கொண்டும், முக்கியமாக அசோகரது கல்வெட்டுக்களைக் கொண்டும் பார்க்கும்போது அலுவலரின் பெயர்கள், அலுவல்கள் ஆகியவற்றில் சில ஒற்றுமைகள் காணப்படுகின்றன என்பதைத் தவிர வேறெதுவும் நாம் சொல்ல முடியாது. மேலும், கௌடில்யர் வளரக்கூடிய நாட்டின் நிருவாகம் எப்படி அமையவேண்டும் என்பது பற்றியும் மரபினையொட்டியும், ஏற்கெனவே சொல்லப்பட்டவைகளை விவரித்தும் இந் நூலை மாற்றி ஆக்கியுள்ளார் என்றே கருத வேண்டும். 'இந் நூலில் 'இது மௌரிய அரசாங்க முறையாகும்' என்று எவ் விடத்திலும் சொல்லப்படவில்லை என்பதும் கருத்தில் கொள்ளத்தக்கதே.

# 7. மண்டலக் கொள்கை

## தற்காப்புத் திட்டங்கள்

நாட்டின் தற்காப்பானது அரண், படை இவற்றின் வலிமையைச் சார்ந்தது. நாட்டின் ஏழு உறுப்புகளில் இரண்டான இவற்றுள் அரண் முதலில் குறிப்பிடப்படுகின்றது.[1] படைவலிமையைக் காட்டிலும் அரணுக்கு அதிக முக்கியத்துவம் கௌடில்யரால் அளிக்கப்பட்டதெனச் சொல்லலாம். தலைநகரைச் சுற்றியுள்ள கோட்டையைத் தவிர நாட்டின் நான்கு திசைகளிலும், எதிரிகளைச் சமாளித்துப் போர் புரியத்தக்க விதத்தில் காடு, மலை, நீர்நிலை, பாலைவனம் ஆகிய பல இயற்கை நிலைகளைப் பயன்படுத்தித் தகுந்த அரண் உண்டாக்கிக்கொள்வதை கௌடில்யர் மிகத் தேவையென்று கருதுகிருர்.[2]

அரண் அமைக்கும் விதமும் விரிவாகக் கூறப்படுகிறது. அகழிகள், பாலங்கள், பொறிகள், இவற்ருல் காக்கப்பட்டு, நால்வகைப் படைகளும் நல்ல முறையில் போரிடும்வண்ணம் அரணமைப்பு இருத்தல் வேண்டும்.

மேலும், முற்றுகைக் காலத்தில் பல நாள் அரணுக்குள்ளேயே இருப்பது அவசியமாதலின், எவ் வகைச் சூழ்நிலையையும் சமாளிக்கும்பொருட்டு ஏராளமான உணவுப் பொருள்களும், ஆயுதங்களும், அத்தியாவசியப் பண்டங்களும் பிறபண்டங்களும் கோட்டைக்குள் சேமித்து வைக்கத் தகுந்த ஏற்பாடுகள் இருத்தல் இன்றியமையாதது. இதைத் தவிர ஆபத்துக் காலங்களில் தப்பியோடிட இரகசிய வழிகளும் அமைக்கப்பட்டு விளங்க வேண்டும்.

கௌடில்யரின் கருத்துப்படி படைவீரர்கள் நான்கு வருணங்களிலிருந்தும் சேர்க்கப்படலாம். கௌடில்யருக்கு முன் நிலவி வந்த கருத்தின்படி உயர்ந்த சாதியினர் மட்டுமே போர் புரியத் தக்கவர்களாகக் கருதப்பட்டனர். பிராமணர்களாலான படையானது பகைவன் சரணடைவதன் மூலம் எளிதில் வெற்றிக்

[1] அர்த்தசாத்திரம் VII, 1-1  [2] மேற்படி II, 2-3

கொள்ளப்படும் என்பதாலும், பெரும் போருக்குத் தேவையான போர்ப் பயிற்சி பெற்ற சத்திரியப் பேரணியினைத் திரட்டுவது முடியாதென்பதாலும், வைசிய சூத்திரர்களும்கூடப் படையில் பெரும்பகுதியாக விளங்கினுர்கள் என்பது ஒப்புக்கொள்ளக் கூடியது. என்ருலும், மிகுதியான பதவிகள் சத்திரியர்கள் வசமே இருந்திருக்கக்கூடும். படை நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு விளங்கியது. கலாட்படை, குதிரைப்படை, தேர்ப்படை, யானைப்படை என்பன இவையாகும். இவை ஒவ்வொன்றும் அத்யக்ஷர் என்னும் அலுவலரின் பொறுப்பில் இருந்தது.

வேருர் இடத்தில் படை பலமானது ஆறு வகையாகச் சொல்லப்படுகிறது. மௌல பலம், கிருத பலம், ச்ரேணிபலம், மித்ர பலம், அமித்ர பலம், அதவீ பலம் என்பன இவையாகும்.* இவற்றைப் பற்றி அதிக விளக்கம் அர்த்த சாத்திரத்தில் இடம் பெறவில்லை. எப்பொழுதும் ஆயத்த நிலையில் வைக்கப்பட்டிருக்கும் படையும், போர்க்காலங்களில் கூலிக்காகத் திரட்டப்படும் படையும், தொழில் வாணிபக் குழுக்கள் தம் வசமுள்ள படைகளை உரிய காலங்களில் அரசனுக்காகப் பயன்படுத்தும் போது சேரும் படைகளும், நட்பு நாடுகளிலிருந்து பெறப்படும் படைகளும், பகையரசனிடமிருந்து பலவகையிலும் பெறப்படும் படைகளும், எல்லைப்புறக் காட்டுவாசிகளின் தலைவர்கள் கொண்ட படைகளும் இவையாகும். கடற்படையோ, பெருங்கப்பல்களோ கௌடில்யர் காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை.

பத்துப் படைக்கூட்டுகளுக்குப் (unit) பொறுப்பாக ஒரு 'பதிகா' என்பவரும், பத்துப் 'பதிகர்'களுக்கு மேல் 'சேனுபதி' என்பவரும், பத்துச் சேனுதிபதிகளுக்குமேல் 'நாயகர்' என்பவரும் இருந்தனர். போரில்லாத காலத்திலும் ஆயுதப் பயிற்சிகள் தொடர்ந்து நடைபெற வேண்டிய அவசியத்தைக் கௌடில்யர் வற்புறுத்திக் கூறுகிருர். ஆயுதங்களைத் தவிர மந்திர தந்திரங்களும் போரில் பயன்படுத்தப்பட்டன.

நாட்டின் தற்காப்பு வெளிநாட்டுக் கொள்கையுடன் பிணைக்கப்பட்டுள்ளது. அன்னியரின் ஆதிக்கத்தை எவ்விதம் தகர்ப்பது, எவ்வெப்பொழுது சமாதான உடன்படிக்கை செய்துகொள்வது, எப்போது போர் செய்வது, எவ்விதக் கொள்கைகளைக் கையாள்வதன் மூலம் நாட்டினைப் பெருக்கமுடியும் முதலானவை

* மேற்படி IX, 2-1.

சொல்லப்படுகின்றன. ஒரு வெற்றிபெறக்கூடிய அரசன் (விஜிகிஷீ) வெளிநாட்டுக் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டிய முறைகள் ஆறு வகைகளாகப் (சத்குண்யம்) பிரித்துச் சொல்லப்படுகிறது. அரச மண்டலக் கொள்கையிலிருந்தும் தனித்து இது பொருள் தருமென்றாலும், அரச மண்டலக் கொள்கையோடு இது பிணைக்கப்பட்டுள்ளது.

மண்டலம் என்பது ஒரு வட்டமாகும். அரச மண்டலம் என்பது பன்னிரண்டு அரசர்களைக்கொண்ட ஓர் அரசியல் வட்டமாகும். ஒரு வட்டமான சதுரங்கப் பலகையில் அரசர்களும், அவர்களது பலவகைப் பலங்களும் முன்னும் பின்னும் நகர்ந்து, ஒருவரையொருவர் வெட்டிக், கூட்டுச் சேர்ந்து, பிரிந்து இறுதி வெற்றிக்காகப் போரின் மூலமாகவோ, சமாதானத்தின் மூலமாகவோ வேறெந்த ஒரு வழியின் மூலமாகவோ செயல்படுவதை நாம் ஊகிக்கக் கூடுமானால் மண்டலக் கொள்கையை எளிதில் புரிந்துகொள்ள முடியும்.

நாம் முன்பு ஓர் இடத்தில் கூறியதுபோல ஒரு வெற்றி பெறும் அரசனை மையமாக வைத்தே இம் மண்டலக் கொள்கை கூறப்படுகிறது. கௌடில்யரின் கூற்றுப்படி வெற்றிக்காகப் போராடக்கூடிய ஓர் அரசனைச் சுற்றி அவனது பலவகை நண்பர்களும், எதிரிகளும், நடுநிலை அரசுகளும் இருப்பதாக இது அமைந்து மொத்தத்தில் பன்னிரண்டு அரசர்கள் கொண்ட மண்டலமாக இது விளங்குகிறது. அவர்களாவன :[4]

(1) விஜிகிஷீ — வெற்றிக்காக முனையும் அரசன்.

(2) அரி — இவ் வரசனின் எதிரி.

(3) மித்ரா — விஜிகிஷீயின் நண்பன்.

(4) அரிமித்ரா — எதிரியின் நண்பன்

(5) மித்ர மித்ரா — நண்பனின் நண்பன்

(6) அரி மித்ர மித்ரா — பகைவனின் நண்பனுக்கு நண்பன்

(7) பார்சினிகிரகா — விஜிகிஷீவின் பின்புறத்திலிருந்து தாக்கும் எதிரி.

(8) அக்ரண்டா — இவ்வாறான நண்பன்.

(9) பார்சினிகிரக சாரா — பின்புறத்தில் எதிரியின் நண்பன்.

(10) அக்ரண்ட சாரா — பின்புறத்தில் நண்பனின் நண்பன்.


[4]மேற்படி VI, 2

*(11)* மத்திமா — விஜிகிஷீ, அரி ஆகிய இருவரின் எல்லையை ஒட்டி விளங்கும் பலமிக்க அரசன்.

*(12)* உதாசீனு — மண்டலத்தில் அதிக பலங்கொண்ட நடு நிலை வகிக்கும் அரசன்.

சத்திரிய தருமத்தை ஒட்டியும், பொருளாதார மேம்பாட்டிற்காகவும் விஜிகிஷீ என்னும் வெற்றி நோக்குடன் செயல்படும் அரசனுனவன் மெல்ல மெல்ல மண்டலம் முழுவதும் தன் குடையின்கீழ்க் கொண்டுவர முயலுபவனுகச் சித்திரிக்கப்பட்டுள்ளான்.


ஆகவே, அவனுக்கு அடுத்து விளங்கும் அரசன் (அரி) பகைவனுகக் காட்டப்பட்டிருப்பது பொருத்தமே. இதே முறையில் பகைவனுக்கடுத்து விளங்கும் அரசன் பகைவனுக்குக் பகைவன் என்ற முறையில் விஜிகிஷீக்கு நண்பனுகிருன், அவனுக்குப் பின்னுல் இருப்பவன் பகைவனுக்கு நண்பனுகவும், அடுத்தவன் நண்பனுக்கு நண்பனுகவும், இவ்வாறே, பின்புறத்திலிருந்து செயல்படும் அரசர்களும் பிரிக்கப்பட்டிருக்கிருர்கள்.




அதாவது, மண்டலத்தில் பல அரசர்களுக்கிடையில் நிலவும் உறவை ஓர் அரசனுனவன் தன் வெற்றிக்காக எவ்வாறு பயன்

படுத்திக்கொள்ள முடியும் என்று காட்டுவதே இம் மண்டல அமைப்பின் கருத்தாகும்.

மண்டலம் என்னும் பெயரையும், விஜிகிஷீயை மையமாக வைத்துச் சொல்லப்படுவதையும் கவனிக்கும்போது ஒரு வட்டத்திற்குள் ஒருவருக்குப்பின் ஒருவராக நட்பு நாடுகளும், எதிரி நாடுகளும் இருப்பதாகத் தோன்றும். *(படம், பக்கம் 63)*




கொள்கையளவில் மேற்கண்டதோர் ஏற்பாடு விளங்கினாலும் பகை, நட்பு நாடுகள் பலவாக விஜிகிஷீயைச் சுற்றிச் சூழ்ந்து விளங்குகிறார்கள் என்பதைவிட, ஒரு குறிப்பிட்ட நேர்க்கோட்டில், விஜிகிஷீ போர்செய்யும் திசையைப் பொறுத்து ஒன்றன்பின் ஒன்றாகப் பகை நாடுகளின் வரிசையையும், நட்பு நாடுகளின் வரிசையையும் அமைந்திருந்தது என்று கொள்வதே பொருத்தமாகும். *(படம். மேலே)*

மேலே விளக்கப்பட்டுள்ள எந்த முறையேனும் உண்மையில் அமையப்பெற்று போர் விளங்குமா என்பது ஐயமே. மேலும் மத்திமா, உதாசீனு உள்பட ஏழு நாடுகள் விஜிகிஷீயின் முன்னு லும், நான்கு நாடுகள் பின்னுலும் உள்ளதுபோல் தோன்றும். இக் கொள்கையில் விஜீகிஷீ போரின் திசையை நேர் எதிராக மாற்றினுல் என்னவாகும் என்பதை நாம் பார்க்கும்போது, அரி பார்சினீ கிரகனுகவும், பார்சினீகிரகன் அரியாகவும் இவ்வாறே மற்றவர்கள் உறவும் விஜிகிஷியைப் பொறுத்த அளவில் மாறும் என்பது புலப்படும். இதையெல்லாம் நாம் பார்க்கும்போது நிலையும்தன்மையும் மாருத கடினமான (rigid) அமைப்புகள்அல்ல வெளிநாட்டு உறவுகள்; எந்த அடிப்படையில் புரிந்துகொள்ளப் வேண்டும் என்பதை விளக்கும் ஒரு கொள்கைப் பூர்வமான (hypothetical) அமைப்பே என்பன விளங்கும்.

இவ் வரச மண்டலத்தையே விரித்துப் பிரகிருதி மண்டலம் என்று கூறப்படும் ஓர் அமைப்பும் சொல்லப்பட்டிருக்கிறது. நாட்டின் ஏழு அங்கக் கொள்கையினை நாம் முன்பே விவரித்திருக் கிறோம். சுவாமின் என்னும் முதல் அங்கம் அரச மண்டலத்தில் அரசர்களாக இடம் பெற்றுள்ளதை 'அரச மண்டலத்தில்' பார்த்துள்ளோம். (மித்ரா என்னும் கடைசி அங்கமும் பன்னி ரண்டு அரசர்கள் கொண்டு விளங்கும் அரச மண்டலத்தில் இடம் பெற்றுள்ளமை நாம் அறிந்ததே.) இனி ஒரு நாட்டிற்கு ஐந்து அங்கங்கள், அதாவது அமைச்சர், மக்கள், அரண், படை, கரு வூலம் ஆகியவை எஞ்சியுள்ளன. பன்னிரண்டு நாடுகள் உள்ள மண்டலத்தில் ஒவ்வொன்றிற்கும் ஐந்தாக மொத்தம் அறுபது ஆகின்றன. இவற்றுடன் பன்னிரு அரசர்களையும் சேர்த்தால் மொத்தம் எழுபத்திரண்டு கூறுகள் கொண்ட மண்டலம் கிடைக்கப்பெறும்.

ஓர் அரசனின் வெற்றி தோல்விகள் அவனது சொந்த பலத் தையும், திறமையையும் மட்டும் பொறுத்தவையல்ல; அவனது அமைச்சர், மக்கள், அரண், படை, கருவூலம் ஆகியவற்றையும் நண்பரின் இத்தகைய பலங்களையும், எதிரிகளின் இத்தகைய பலங்களையும், பொறுத்து விளங்குபவை. இக் கூறுகளில் ஏதாவது ஒன்றோ, அதற்கு மேலோ எந்த வகையிலும் தளர்ச்சியுற்றுக் குறைபெற்று விளங்குமாயின் அதற்குத் தக்கவாறு வெற்றியும், தோல்வியும் பாதிக்கப்படுகின்றன என்பதை உணர்த்தும் முறையில் இப் பிரகிருதி மண்டலம் கூறப்படுகிறது.

மேற்கூறிய மண்டலத்தைத் தவிர, வேறுவிதமாக ஒரு மண்டலமும் கூறப்படுகிறது. இதன்படி விஜிகிஷ், எதிரி, மத்திமா

உதாசீனு ஆகிய நால்வரையும் அடித்தளமாகக் கொண்டு ஒவ்வொருவருக்கும் மித்ராவும், அரிமித்ராவும் சொல்லப்படுகின்றனர்.[5] ஆனால், இம் முறை விவரிக்கப்படாததிலிருந்து இது பழக்கத்தில் இல்லை என்பதை உணரலாம்.

மண்டலக் கொள்கை வேதத்திலும், பிராமணங்களிலும் இடம் பெற்றுள்ளது. ஆனால், பிராமணங்களில் இடம் பெறவில்லை. முதன்முதலாகக் கௌடில்யரின் அர்த்த சாத்திரத்தில் தான் இது மிக விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. பல சின்னஞ் சிறு நாடுகளுக்கிடையே போர் நிகழ்ந்து எவ்வாறு பெரிய மௌரியப் பேரரசாக வளர்ந்தது என்பதை மனத்தில் கொண்டு இக் கொள்கை உருவாக்கப்பட்டிருக்கலாமென ஸ்பெல்மன் கருதுகிறார்.[6]

மண்டலத்தில் பன்னிரண்டு அரசுகளே இருக்க வேண்டும் என்பதோ, இருக்க முடியும் என்பதோ கருத்தன்று. வெளியுறவு பன்னிரண்டு வகையில் அமைய முடியும் என்பதையே இது சுட்டிக் காட்டுகிறதென நாம் கொள்ள வேண்டும்.[7] தவிர, சிறு நாடுகளுக்கு மட்டுமின்றிப், பெரு நாடுகளுக்கும் பொருந்தும் வகையில் மண்டலக் கொள்கையும், சத்குண்யமும் கூறப் பட்டுள்ளன.

**சத்குண்யம்**

வெளியுறவுக் கொள்கைகள் ஆறாகும், அவையாவன :

(1) சாந்தி — சமாதானம் அல்லது அமைதி.

(2) விக்ரகா — போர் அல்லது எதிர்ப்பு.

(3) ஆசனு — போர்த்திட்டங்கள் ஏதும் செய்யாமல் சும்மா இருத்தல்.

(4) யானு — படை நடத்திச் செல்லுதல்.

(5) சம்ஸ்ரயா — கோட்டையினுள்ளோ, வேறோர் அரசன் கீழோ பாதுகாப்புத் தேடுதல்.

(6) துவைதி பாவா — ஒரு முனையில் போரும், மற்றொரு முனையில் சமாதானமும் செய்யப்படும் இரு கொள்கைநிலை.

கௌடில்யருக்கு முன் இருந்த வாதவ்யாதி என்பவருடைய கருத்தில் போரும், சமாதானமும் மட்டுமே வெளிநாட்டுக்

[5] மேற்படி VI. 2.24-27

[6] J. W. Spellman, Political theory of Ancient India, பக்கம் 158.

[7] R. P Kangle, The Kautiliya Arthasastra, part III, பக்கம். 249

கொள்கைகளாகும். மற்றவை இவ் விரண்டின் பல்வேறு இணைப்பு நிலைகளே என்பது அவர்தம் கருத்து. ஆனால். கௌடில்யர் மேற் கூறிய ஆறும் சூழ்நிலைக்குத் தகுந்தபடி கையாளப்பட வேண்டிய தனித் தனிக் கொள்கைகளாகும் என்று கூறினார்.[6]

இக் கொள்கைகளில் எது எது எவ்வெப்போது பின்பற்றப்பட வேண்டும் என்பதும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

பொதுவாகப் பகை அரசைவிடத் தான் பலத்தில் குறைவு பெற்றிருந்தால் சமாதானம் செய்துகொள்வதும், பகை அரசை விட அதிக வலிமை பெற்று விளங்கும்போது போர் செய்வதும், மிகவும் பலம் குன்றிக் கிடக்கும்போது பாதுகாப்பு அல்லது ஆதரவு தேடிக்கொள்வதும், இருவரும் சம பலம் பெற்று விளங்கும்போது சும்மாயிருத்தலும், தகுந்த பலமும் வாய்ப்பும் கிட்டும்போது படை நடத்திச் செல்வதும், வேறோர் அரசனின் துணை கிட்டும்போது அவனுடன் சமாதானம் செய்துகொண்டு, அதே சமயத்தில் மாற்றானோடு போர் புரிவதும் தகுந்தவை களாகக் கருதப்பட்டன. தவிர, தேவைக்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப இவற்றுள் மாறுதல்களையும் செய்துகொள்ளலாம். முடிவில் விஜிகிஷூயின் நோக்கம் முழுவதும் எப்படியும் பலரையும் வெற்றி கொண்டு சக்கரவர்த்தியாக விளங்கவேண்டும் என்பதிலேயே இருத்தல் வேண்டும்.

### சமாதானம்

சமாதான உடன்படிக்கைகள் பல வகைப்படும். தன்னைவிடப் பலம் மிகுந்த அரசனோடு மட்டும் சமாதானம் செய்துகொள்ள வேண்டிய அவசியம் நேருவதால், அவனுக்குத் தன் படையினையோ, பொருள்களையோ அல்லது நாட்டின் ஒரு பகுதியினையோ அளித்துச் சமாதானம் செய்துகொள்ளலாம். இவை முறையே தண்டோபதை, சாந்தி என்று வழங்கப்பட்டன,

இவ் வொப்பந்தங்களைச் செய்துகொள்ளும்போது எவ் வகையிலாவது பகையரசனை ஏமாற்றி (அதாவது பயனில்லாத படை பொருள், பகுதி இவைகளை அளித்து, அல்லது ஏதாவது தீங்கு அவனுக்கு உண்டாகும் விதத்தில் இவைகளை அளித்து) தகுந்த நேரம் காலம் இவைகள் வரும்போது இவ் வொப்பந்தங்களை மீறி அவனை வெல்லுதல் வேண்டும் என விஜிகிஷூக்குக் கௌடில்யர் அறிவுரை கூறுகிறார்.

[6] அர்த்த சாத்திரம் VII, 1. 3-5

அல்லது, பகையரசனுக்குச் சரணக (hostage) யாரையாவது தரவேண்டி வருங்காலத்தில் அதிக உபயோகமற்றவர்களையே அளிக்க வேண்டுமெனவும், ஒரே ஒரு மகன் இருக்கும்போது, வம்ச விருத்தியை முன்னிட்டு அவனை அனுப்பாமல் தானே சரண் அடைவது நல்லதென்றும் கூறப்படுகிறது. இவ்வாறு சரணகச் சேர்ந்தபின், பகைவனை ஏமாற்றி அவனிடமிருந்து தப்பிச் செல்லும் முறைகளும் சொல்லப்பட்டுள்ளன.[9]

இவ் வகை ஒப்பந்தங்களைத் தவிர, மித்ர சாந்தி, பூமி சாந்தி, கர்ம சாந்தி, ஹிரண்ய சாந்தி முதலிய வகைகளும் கூறப் படுகின்றன.[10]

**போர்**

விரோதம் இருக்கும்போது ஏற்படுவது போராகும். இது இருவகையில் ஏற்படக்கூடும். எதிரி தாக்கும்போது தற்காப்பை முன்னிட்டு அவனை எதிர்த்து முறியடிப்பதற்காகச் செய்யப் படுவது ஒருவகை. ஆயத்தமான வெற்றி உண்டாகக்கூடிய நிலையிலிருந்து எதிரிகளின் திட்டங்களை முறியடிப்பதற்காகப் போரிடுவது மற்றொரு வகையாகும்.

**சும்மா இருத்தல் அல்லது ஆசனு**

எதிரி ஏதாவது இக்கட்டுகளிலோ, போரிலோ, வேறு வலிமை குன்றக்கூடிய நிலைகளிலோ அகப்பட்டுக்கொள்ள மாட்டாஞு என்று காலம் கருதி அவனது பலவீனத்தைப் பயன்படுத்திக்கொள் வதற்காகக் காத்துக்கொண்டிருக்கும் கொள்கை ஆசனு என்பதாகும். இதனுல் கிட்டும் அவகாசத்தில் தன்னைத் தானே வலிமைப்படுத்திக்கொள்வதில் அரசன் முனைய வேண்டும்.

**படையெடுத்துச் செல்லல் அல்லது யாஞு**

மிகுந்த வலிமை பெற்று விளங்கும் நிலையில் ஓர் அரசன் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கை படையெடுத்துச் செல்லல் என்பதாகும். சாதாரணமாகப் போர்க் கொள்கையும் படை யெடுத்துச் செல்லும் இக் கொள்கையும் இணைந்து விளங்கு மென்றுலும், சமாதான உடன்படிக்கையினை மீறித் தந்திரமாகப் படையெடுத்தல் என்பதும் கூடுமானதே. இவை முறையே விக்கிரக யாஞு, சாந்தி யாஞு எனப்படும்.

வேறு அரசர்கள் கூட்டுடன் படையெடுத்துச் செல்லுதல் சம்பூய யாஞு எனப்படும். விஜிகிஷீயின் எதிரிக்கு எதிராகச்

[9] மேற்படி VII, 17.32-60.
[10] மேற்படி VII, 7.9-12.

செயல்படும் இக் கூட்டணியில் தனக்குத் துணை செய்யும் அரசர்களுக்குப் போரின் வெற்றியினால் கிட்டும் இலாபத்தில் அவரவர்கள் செய்யும் உதவிக்கேற்பப் பங்குகளை அளிக்க விஜிகிஷு உறுதி கூறலாம். அல்லது இத்தகைய உடன்பாடுகள் பற்றி உதவிக்கு முன்பேயும் ஒப்பந்தம் செய்துகொள்ளப்படலாம். வெற்றி அடைந்தபின் இவ் வொப்பந்தங்கள் எவ்வெவ் வகைகளில் மீறப்படலாம் என்பதும், விஜிகிஷு இத் துணையாளர்களில் ஒருவனாக விளங்குங்கால் எவ்வாறு இத்தகைய சூழ்நிலையைச் சமாளிக்க வேண்டும் என்பதும் கூறப்படுகின்றன.[11]

### சரண் புகல் அல்லது சம்ஸ் ரயா

மிக்க வலிமை பெற்று விளங்கக்கூடிய எதிரியின் அச்சுறுத்தலுக்கோ, தாக்குதலுக்கோ ஈடுகொடுக்க முடியாத எளிய அரசன் கைக்கொள்ள வேண்டிய கொள்கை இது. தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டுப் பலம் மிகுந்த கோட்டையினுள் சென்று எதிரியிடமிருந்து தப்பிப்பது ஒருவகை. தன்னைவிட அதிகபலம் பெற்ற வேறோர் அரசனிடம் தன்னைக் காப்பாற்றும்படி சரண்புகுவது வேறொரு முறை. இவ் விரண்டுமே பயனளிக்காது என்னும்போது எதிரியினிடமே சரணடைவது மற்றொரு முறை. வேறு வழியில்லாதபோதே இதைச் செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதால் ஒருவன் சிற்றரசனாக்கப்படுகிறான் (vassal). ஓரிடத்தில் கௌடில்யர் இத்தகைய சிற்றரசன் தன் தலைவனுக்கெதிராகக் கிளம்ப வேண்டுமென்றும்,[12] வேறோரிடத்தில் சிற்றரசனானவன் பேரரசனுக்கு அடங்கி உண்மையாக விளங்க வேண்டும் என்றும்[13] குறிப்பிடுகிறார். இதில் கௌடில்யர் எதனை விரும்புகிறார் என்று தெளிவாகச் சொல்லப்படாவிட்டாலும் விளக்கில் பட்ட விட்டில் பூச்சியைப்போல் இறப்பதைக் காட்டிலும் அடங்கிச் சிற்றரசனாக இருப்பதையே ஆதரிக்கிறார் என்பது தெளிவு.

### இருகொள்கை நிலை அல்லது துவைதி பாவா

ஓர் அரசனை எதிர்ப்பதற்காக மற்றோர் அரசனுடன் சமாதான ஒப்பந்தம் செய்துகொண்டு அவன் துணையுடன் போர் செய்வது இக் கொள்கையாகும். சரண் புகலைவிட இக் கொள்கையே நன்மை பயப்பதும் சிறந்ததும் ஆகும் என்பது கௌடில்யரின் கருத்து.

[11] மேற்படி VII, 5. 38-44,49.
[12] மேற்படி VII, 2. 10-12, [13] மேற்படி VII,15.21-30,

எக் கொள்கையாயினும் சரி அதன் முடிவில் எதிரியின் பலம் குன்ற வேண்டும்; தன் வலிமை ஓங்க வேண்டும் என்பனவே எண்ணங்களாயிருத்தல் வேண்டும்.

## நான்கு வழிகள் (சதுர் உபாயம்)

மேற் கூறிய ஆறு கொள்கைகளைத் தவிர எதிரிகளை வெல்லு வதற்கு மரபினை ஒட்டி நான்கு வழிகளையும் கௌடில்யர் கூறுகிறார். அவையாவன :

1. சாம - சமாதானம்
2. தான - அளித்தல்
3. பேத - பிரித்தல்
4. தண்டம் - போர் செய்தல்

இவற்றில் வலிமை குன்றிய அரசர்களை வெல்ல முதலிரண்டு உபாயங்களையும், தன்னைவிடப் பலம் பெற்ற அரசர்களை வெல்ல கடைசி இரு உபாயங்களையும் கையாள வேண்டும் என்று கௌடில்யர் கூறுகிறார்.[14] இவற்றுள் முதல் உபாயமே தலை சிறந்தது எனக் கருதப்படுகிறது. இன்றியமையாதபோது நான்காவது உபாயம் கையாளப்படலாம். சில சந்தர்ப்பங்களில் ஓர் உபாயம் மட்டும் பயனளிக்க வல்லதாய் இராது. ஒன்றுக்கு மேற்பட்ட உபாயங்களைக் கலந்து கையாள வேண்டும்.

இவ் வுபாயங்களில் சிலவும் சத்குண்யங்களில் சிலவும் ஒரே தன்மையுடையனவாகக் (எடுத்துக்காட்டு : சாம-சாந்தி, தண்ட-விக்ரக)காணப்பட்டபோதிலும், சதுர் உபாயங்களுக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. சத்குண்யம் வெளிநாட்டு உறவுகளில் மட்டும் பயன்படக்கூடிய கொள்கைகளைச் சொல்லுகிறது. ஆனல், உபாயங்களை உள் நாட்டிலும் அரசன் தனக்கு எதிரான சக்தி களுக்கு எதிராகவும் பயன்படுத்த முடியும். வெளிநாட்டுக் கொள்கைகளில் இவ் வுபாயங்களின் பலன் கௌடில்யரால் விளக்கப்பட்டுள்ளது.[15]

விஜிகிஷீயின் நோக்கம் நாட்டை மேலும் மேலும் விரிவு படுத்துவதாயிருக்க வேண்டும் என்பதை ஏற்கனவே கண்டிருக் கிறோம். 'விஜிகிஷீ' என்னும் சொல்லுக்கு வெற்றி பெற விரும்பும் அரசன் என்று பொருள். வெற்றி கொள்பவர்களிலும் மூன்று வகையுண்டு. இவர்கள்

[14] மேற்படி VII. 16. 3. [15] மேற்படி IX. 7, 72. VII 14 1-11

1. தர்ம விசயன்
2. லோப விசயன்
3. அசுர விசயன்

எனப்படுவர். இவர்களில் பெயருக்கும் புகழுக்கும் ஆசைப்பட்டு மற்ற அரசர்கள் தனக்கு அடிபணிந்து நடப்பதனாலேயே திருப்தி அடைபவன் தர்ம விசயன்.

பேராசையினால் அதிக நிலமும் பொருளும் அடைய விரும்புபவன் லோப விசயன்.

வெற்றி கொண்டவர்களைக் கொன்றும் அந் நாட்டைக் கொள்ளையடித்தும் வருபவன் அசுரவிசயன். இவர்களுள் தர்ம விசயனாக விளங்குவதையே கௌடில்யர் விரும்புகிறார்.

போருக்கு ஆயத்தமாகுமுன் தன்னுடைய நாட்டின் ஏழு உறுப்புகளும் பாதிக்கப்படாமல் இருக்கிறதா என்பதை அரசன் பார்த்துக்கொள்ளவேண்டும். இவற்றின் வலிமை அல்லது வலிமையின்மையைப் பொறுத்தே போரின் முடிவு விளங்கும். இதைத் தவிர, போரில் தொடர்புடைய மற்ற நாடுகளின் அங்கங்கள் எவ்வாறாகிலும் குறையுடன் விளங்குகின்றனவா, அல்லது தன்னால் குறை ஏற்படுத்த முடியுமா, அக் குறைகளைத் தன் வெற்றிக்காக எவ்வாறு பயன்படுத்திக்கொள்வது என்பனவற்றையும் அரசன் நோக்கத்தில் கொண்டு செயல்பட வேண்டும். 'வ்யசனங்கள்' எனப்படும் இக் குறைபாடுகளைப் பற்றிக் கௌடில்யர் விவரமாகக் கூறுகிறார்.[16]

மேலும் அரசனுக்கும் சில வலிமைகள் அவசியம். இவ் வலிமைகள் (சக்தி) மூன்று வகைப்படும்.

1. உற்சாக சக்தி : இதில் வலிமை, வீரம், செயல் திறன் ஆகியவை அடங்கும்.
2. பிரபாவ சக்தி : படை வலிமையும், பொருள், வலிமையும் இதில் அடங்கும்.
3. மந்திர சக்தி : இதனைக் கௌடில்யர் மிக முக்கியமானதாகக் கருதுவார். ஆலோசனை, இராச தந்திரம் ஆகியவை இதில் அடங்கும்,

மேற்கூறியவற்றைத் தவிரப் போர் முறையானது இடம், காலம் இவற்றைப்பொறுத்து அமையவேண்டும். இவை அனைத்தும்

[16] மேற்படி VIII

சரிவர அமையப்பெற்ற அரசனைப் பிறரால் வெற்றி கொள்ள முடியாது.

அரசன் படை நடத்திச் செல்லுங்கால் தனக்கு ஒரு பிரதிநிதியை (சூன்ய பாலா) நியமித்துச் செல்ல வேண்டும். படையும் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றிற்கும் தலைவர்கள் நியமிக்கப்படவேண்டும். ஒரு தனித் தலைவன் கையில் முழுப் படையும் இருப்பதானது அரசனுக்கு ஆபத்து. போரும் மூன்று வகையாகக் கூறப்படுகிறது. அவையாவன:

1. பிரகாச யுத்தம்: வெளிப்படையாகச் சொல்லப்பட்ட இடத்திலும், காலத்திலும் நடப்பது.
2. கூ(ட்)ட யுத்தம்: தந்திர யுக்திகளுடன் போர் செய்தல்
3. தூஸ்னீம யுத்தம்: இரகசிய ஒற்றர்களைக் கொண்டு பகைப் படைத் தலைவர்களைக் கொன்று மௌனமாகச் செய்யும் முறை.

அதிக வலிமையும், தகுந்த இடமும், காலமும் வாய்க்கப் பெற்றால் பிரகாச யுத்த முறையையும், இவை பாதகமாக இருக்கும்போது கூ(ட்)ட யுத்த முறையையும், விஜிகிஷ் பின் பற்ற வேண்டுமென்று கௌடில்யர் கூறுகிறார்.

விஜிகிஷீயானவன் வெற்றிகள் பெற்று இமயம் முதல் தெற்கே கடல்வரையில் தன் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்து சக்கரவர்த்தியாக விளங்குவதைத் தன் நோக்கமாகக் கொள்ள வேண்டும் என்று கௌடில்யர் கூறியபோதிலும், பகைவர்களையும் மக்களையும் அழித்துக் கொடுங்கோன்மையினால் அவ்வாறு விளங்குவதை வரவேற்கவில்லை, சின்னஞ்சிறு நாடுகளாக இப் பரந்த பூமி சிதறுண்டு அரசர்கள் சண்டைகளில் காலங் கழித்துப் பொருளாதார வளர்ச்சிக்கும், ஆன்மீக வளர்ச்சிக்கும் குறைபாடு உண்டாவதை அவர் வெறுத்தபடியினாலேதான் அச் சக்கர வர்த்திக் கோட்பாட்டினை அவர் கூறுகிறார் என்பது, தர்ம விசயமே சிறந்தது எனக் கூறுவதால் புலனாகிறது. போரையும் போர் முறைகளையும் அதிகம் அவர் விரித்துக் கூறியபோதிலும் வெற்றிக் காகவே போர் என்றும், வெற்றியை எவ் வழியிலும் அடையலாம் என்றும் எண்ணுவதற்கு இடமில்லை. பகையரசனின் வலிமையைக் குன்றச் செய்தும் எளிய அரசனைத் தட்டிக் கொடுத்தும், அனைத்தும் எல்லா மக்களும் தன்னை விரும்பும்படி செய்வதுதான் விஜிகிஷீயின் நோக்கமாயிருக்க வேண்டும் என்று கூறுகிறார் மேலும், இவ்வாறு வெற்றி கொள்ளப்பட்ட நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களிலும் சட்டங்களிலும் மாறுதல்கள் செய்யாமல்

அவரவர்கள் தத்தம் பண்பாட்டொழுக்கத்தில் நின்று அமைதியாக வாழ வழி ஏற்படுத்த வேண்டும் என்றும் கூறுகிறார். இதனால், நாளடைவில் பகைமை உணர்ச்சி மறைந்து ஒருங்கிணைப்பு ஏற்பட வழி உண்டாகும்.

மொத்தத்தில் கௌடில்யர் தீய வழிகளை ஆதரிப்பவரோ ஆன்மீக நெறிகளைப் புறக்கணிப்பவரோ அல்லர். சச்சரவுகள் பிரச்சனைகள், ஒழுக்கச் சீர்குலைவு, சமூக நிலையின்மை, பொருளாதாரச் சீர்குலைவு ஆகியவைகளிலிருந்தால் ஆன்மீக வளர்ச்சி ஏற்படாது. அப்படி ஏற்பட்டாலும் இவ் வான்மீக வளர்ச்சி முழுமையானதாயும் அனைவருக்கும் பயன் தருவதாயும் இருக்க முடியாது என்று அவர் கருதியதாகக் கூறலாம். இந்த வகையில் அவருக்கும் மேற்கத்திய அரசியல் சிந்தனையாளர் மக்கியவல்லிக்கும் ஒற்றுமை இருப்பதாகக் கூறலாம். இருவருமே நாட்டை செப்பனிடுவதை மற்ற எல்லாக் குறிக்கோளுக்கும் அடிப்படையாகக் கருதினர். இதற்காக நன்நெறிகளினின்றுங்கூட விலக வேண்டியிருந்தால் அதற்காகத் தயங்கத் தேவையில்லை என்பது இவர்களுடைய கருத்து.

### தூதர்கள்

பன்னாட்டரசியலில் தூதுவர்கள் முக்கிய பங்கு வகிக்கிறார்கள் என்பது நாம் அறிந்ததே. தற்காலத்தில் பல நாடுகளும் தொலை பேசி, கம்பியில்லாத் தந்தி, விமானங்கள் மற்றும் இத்தகைய பல முன்னேற்றங்களினால் தூதுவரின் சமயோசித அதிகாரமும், செயலும் குறைந்து காணப்பட்டு, ஒவ்வொன்றிற்கும் தன் மேலிடத்து உத்தரவை எதிர்நோக்கியிருப்பது என்பது இயற்கையாகப் போய்விட்டது. கௌடில்யரின் காலத்தில் நாடுகளுக்கிடையே உள்ள தூரம் குறுகலாயிருந்தாலும், பல இயற்கை இடர்ப்பாடுகளைத் தாண்டிக் கால் நடையாகவும், சுமக்கும் மிருகங்களை நம்பியும் கடந்து சென்று வேற்றரசர் நாட்டிலிருந்து கொண்டு தன் நாட்டின் நலனை முன்னேற்றச் செயல்படுவதென்பது அவ்வளவு எளிதான காரியமன்று என்பதுபுலப்படும். மண்டலக் கொள்கையிலிருந்து, பன்னாட்டரசு உறவுமுறைவரை தொடர்ந்து நிகழும் போர்களால் அடிக்கடி மாறித் தூதருக்கு மிகுந்த ஆபத்தை உண்டாக்கி, அவர் பணியினை மிகக் கடினமான தொன்றாகச் செய்யக்கூடும் என்பது விளங்கும்.

அர்த்த சாத்திரத்தில் தூதர்களைப் பற்றியும் அவர்கள் கடமைகளைப் பற்றியும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. தூதர் என்பவர் வேற்றரசன் நாட்டிலேயே எப்போதும் இருந்து காலம்கழிப்பவர்

என்று எண்ணிவிடக் கூடாது. அரசன் அமைச்சர்களுடன் வெளி உறவு தொடர்பான கொள்கைகளைப் பேசி ஒரு முடிவுக்கு வந்த பின் ஒரு தூதுவன்மூலம் வேற்றரசனுக்கு அச் செய்தியைச் சொல்லத் தூதுவரை நியமிக்க வேண்டியிருக்கிறது. தூதுவர் மூவகையாகப் பிரிக்கப்படலாம்.

(1) நிஸ்ருஷ்டார்த்தா அல்லது வேற்றரசனுடன் தானே அதிகாரப் பூர்வமாகப் பேசி முடிவு செய்யும் முழு அதிகாரம் படைத்த தூதர். இத்தகைய பொறுப்பு சாதாரணமானவர்களுக்கு அளிக்கப்படாமல் அமைச்சருக்கோ, சேனுபதிக்கோ அரச குடும்பத்தைச் சேர்ந்தவருக்கோ அளிக்கப்பட்டிருக்கலாம்.

(2) பரிமிதார்த்தா அல்லது குறைந்த அதிகாரம் பெற்ற தூதர்.

(3) சாசனகரா அல்லது செய்தியைச் சுமந்து செல்லும் தூதர். இவர் தாஞக எந்த நடவடிக்கையும் எடுக்க அதிகாரம் அற்றவர்.

தூதர்களின் கடமைகள் பல. வேற்றரசர்களைப் பற்றிய செய்திகளைத் தன் அரசனுக்குத் தெரிவிப்பது, உடன்பாடுகளின் படி நடவடிக்கைகள் அமைகின்றனவா என்று கவனிப்பது நட்பினை வலுப்படுத்துவது, எதிரி நாடுகளுக்கிடையே நிலவும் ஒற்றுமையைக் கலைக்க வழி செய்வது, தன் நாட்டுப் படைகளை மெல்ல மெல்ல அயல் நாட்டினுள் கொண்டு வைப்பது, சூழ்நிலைக்கேற்ப அயலரசனுக்கு வேண்டியவர்களைத் தூக்கிச் சென்று மறைப்பது, அயலரசனிடம் காப்பாகத் தன்னை அளித்துக்கொண்டவர் தப்பித்துச் செல்ல உதவுவது, எதிரியின் அலுவலரைப் பல விதத்திலும் வஞ்சித்து அவர்கள் மூலமாக எதிரியைக் காட்டிக் கொடுக்கச் சொல்வது முதலியவை இவர்களின் கடமைகளாகும்.

இதை நோக்குங்கால் தூதர்கள் இரகசிய ஒற்றர்களாகவும் செயல்பட வேண்டிய அவசியம் இருந்ததெனத் தெரிகிறது.

சாதாரணமாகத் தூதர்களிடம் குற்றம் காணும் பேரரசன் அவர்களைத் தந் நாட்டிலிருந்து போகச் சொல்லலாம். அன்றியும் மற்ற நடவடிக்கைகளும் எடுக்கலாம். ஆனல், அவர்களைக் கொல்லக் கூடாது என்பது மரபு. இருந்தபோதிலும் தன் உயிருக்கு ஆபத்து ஏற்படும் காலத்தில் தப்பித்துக் கொள்ளும் திறமை வாய்ந்தவர்களாகத் தூதர்கள் விளங்க வேண்டும். தூதர்கள் இல்லையேல் மண்டலக் கொள்கையும், சத்குண்யமும் முழுமை பெறு என்பது விளங்குகிறது,

# 8. மௌரியர் ஆட்சிமுறை

**பேரரசுகளின் எழுச்சி**

கி.மு ஏழாவது நூற்றாண்டுக்குப்பின் புதிய மதச் சிந்தனைகள் மட்டுமன்றிப், பெரிய அரசியல் ஏற்பாடுகளும் தோன்றலாயின. வட இந்தியாவில் இக் காலத்தில் பதினாறு பெரிய இராச்சியங்கள் விளங்கியதாக அறிகிறோம். ஆறும் நூற்றாண்டுக் காலத்தில் கோசலா, வத்சா, அவந்தி, மகதம் ஆகியவை முன்னணியில் நின்றன. இவற்றில் மகதமானது வணிகத்திலும், இயற்கை வளங்களிலும் சிறந்து விளங்கி மென்மேலும் வளரலாயிற்று. குறிப்பிட்ட எல்லை கொண்ட நிலநாடுகள் ஏற்பட்டுத் தனியார் முதலீடும், வணிகமும், தொழிலும் பெருகலாயின. தவிரவும் மக்கள்மீது அரசனுக்கு நேரடியான அதிகாரம் உண்டாகவும் தலைப்பட்டது. நாடு விரிந்து பெருகும்போது குலம், குழு இவைகளின் பழமை மங்கி இவற்றின் கட்டுக்கோப்புச் சிதைந்து, தத்தம் தலைவர்கள், பழக்கச் சட்டங்கள் இவை போதாமையினால் அரசனின் சட்ட திட்டங்களையும், நேரடிப் பாதுகாப்பு, பயன் ஆகியவற்றையும் எதிர்பார்ப்பவராகக் குடிகள் ஆனார்கள். இவற்றிற்குப் பதிலாக வணிகக் குழுக்களும். தொழிற் குழுக்களும் தோன்றத் தலைபட்டு ஓரளவு சுதந்திரமாயும் அரசனின் கையை பலப்படுத்தும் வகையிலும் அமைந்தன.

கி.மு. 520 வாக்கில் பிம்பிசாரர் என்னும் அரசனின்கீழ் மகதமானது விரிவுபடலாயிற்று. கி.மு. 450 அளவில் அங்கம், விதேகம், காசி. கோசலம் ஆகிய இராச்சியங்கள் மகததேசத்துடன் சேர்க்கப்பட்டன. மகா அலெக்ஸாண்டர் என்னும் கிரேக்க அரசன் படையெடுத்தபோது அநேகமாக கங்கைச் சமவெளி முழுவதும் நந்த வமிசத்தைச் சேர்ந்த அரசனின்கீழ் இருந்தது. நந்தர்கள் ஆட்சி முறை பற்றி நமக்கு அதிகம் தெரியவரவில்லை. 'மகாவம்சம்' என்னும் புத்த மத நூலிலிருந்து சில செய்திகள் நாம் அறியக்கூடியனவாயிருக்கின்றன. பிம்பிசாரர் போரிலும், ஆட்சியிலும் சிறந்தவரென்றும், சுமார் நாற்பத்திரண்டு வருட ஆட்சிக்குப் பிறகு தன் மகனாலேயே கொல்லப்பட்டார் என்றும் தெரியவருகிறது, கி. மு. 490 முதல் 458 வரை அவர் மகன் அஜாத சத்ருவின்கீழ் மகதம் மேலும் விரிவடையத்

தொடங்கியது. மகதப் பேரரசு பலம் மிக்கதாக நந்தர்கள் காலத்தில் விளங்கியது.

கி.மு. 324-ல் அலெக்ஸாண்டர் இந்தியாவின் பல சிறு இராச்சியங்களை வென்று திரும்பினார். பிறகு, சந்திரகுப்தர் ஆங்காங்கிருந்த சிறு கிரேக்கப் படைகளை வெற்றி கொண்டு கி. மு. 317 அளவில் வடமேற்கு இந்தியப் பகுதிகளில் ஆதிக்கம் பெற்றார். சாணக்கியர் என்னும் பிராமணரின் துணை கொண்டு கி.மு. 317-ல் அவர் நந்தர்களைத் தோற்கடித்து மகதத்தில் மௌரியரது ஆட்சியை நிறுவினார்.

நந்த வமிசத்து உட்கலகத்தினைப் பயன்படுத்திக்கொண்டு சந்திரகுப்த மௌரியர் அரியணை ஏறினார் என்று முத்ரா ராக்ஷஸம் என்னும் நாடகத்தின்மூலம் அறிகிறோம். கிழக்குப் பகுதியில் மகா அலெக்ஸாண்டரின் பிரதிநிதியாக விளங்கிய செல்யூகஸ் என்பவரைக் கி.மு. 305-ல் வெற்றி கொண்டு ஒப்பந்தம் செய்துகொண்டார் என்பதும் வரலாறு. முதன் முதலாக வரலாற்றினை நிர்ணயமாக, ஆதாரபூர்வமாக மௌரியர் காலத்திலிருந்துதான் கூற முடிகிறது.

புத்த மத நூல்கள், மெகஸ்தனிஸ் என்னும் கிரேக்க தூதர் எழுதிய 'இண்டிகா' என்னும் நூலின் சில பகுதிகள், கௌடில்யரின் அர்த்த சாத்திரம், அசோகரின் கல்வெட்டுகள் போன்றவை நமக்கு ஆதார பூர்வமான குறிப்புகளைத் தருகின்றன. இவைகளிலிருந்து நாம் மௌரியரது ஆட்சிமுறை பற்றி ஓரளவு அறிய முடிகிறது.

நந்தர்கள் சத்திரியர்களல்லர், கீழ்ச் சாதியைச் சேர்ந்தவர்கள் என்பது பரவலான கருத்தாக விளங்குகிறது. சந்திர குப்த மௌரியர்கூடச் சத்திரியர் அல்லர். பெரும்பாலும் வைசியராக இருக்கலாம் என்பது டிரெக்மெய்ரின் கொள்கை.[1] இவன் தாழ் குலத்தவனே.

சந்திரகுப்த மௌரியன் புதல்வர் பிந்துசாரர் அரியணை ஏறுங் காலத்தில் மகததேசம் மிகப்பெரியதாக விளங்கியது. அது பல பெரும் மாகாணங்களையும், சிறு சிறு உட்பிரிவுகளையும் கொண்டு விளங்கியது. அவந்தி ராக்ஷ்டிரம், தட்சிணபதம், கலிங்கம் பிராச்யம், உத்தரபதம் என்னும் சில பெரிய மாகாணங்கள் நமக்குத் தெரியவருகின்றன. இவை தவிர, பெரிய நகரங்களும்,

[1] டிரெக்மெய்ர் பக்கம் 168.

ஓரளவு சுயாட்சி பெற்ற, ஆனால், மௌரியப் பேரரசுக்கு உட்பட்ட சில குடியரசுகளும் மௌரிய தேசத்தில் இருந்தன. தலைநகரமாகப் பாடலிபுத்திரம் விளங்கியது. இதன் நிருவாகமும் பிரதேச நிருவாகமும் ஓரளவு ஒருங்கிணைந்து செயல்பட்டதாகத் தெரிகிறது. மௌரியர் ஆட்சிக்குப் பிறகும் இம் முறை நீடித்ததாக அறிகிறோம்.[2]

### அரசன்

வம்ச பரம்பரையாக அரச பதவி இருந்து வந்தது. சிறு வயது முதலே அரச குமாரர்களுக்குத் தேவையான கல்வியும், மற்றப் பயிற்சிகளும் வழங்கப்பட்டன தண்டநீதியிலும் (அரசியல்) பொருளாதாரத்திலும், வேத நூல்களிலும் அரசனுக்குப் புலமை அவசியமாகக் கருதப்பட்டது.[3] இதைத் தவிர அரசனுக்குப் பெரியோரின் தொடர்பும், ஆலோசனையும் இன்றியமையாதன வாகக் கருதப்பட்டன. ஓத்திப்போடாமல் உடனுக்குடன் வேலைகளைச் செய்து முடிப்பதென்பது அரசனுக்குத் தேவையான குணமாகக் கருதப்பட்டது. இதுவே மௌரியர்களது வெற்றிக்கு காரணம் என்று அல்டேகர் குறிப்பிடுகிறார்.[4]

நிருவாக அதிகாரத்திற்குப் பிறப்பிடமாக அரசன் விளங்கினான். சிறு குழுவான அமைச்சர்களும், 'மந்திரி பரீஷத்' என்னும் பெருங்குழுவும் அரசனுக்கு ஆலோசனை வழங்கவும், கட்டளைகளை நிறைவேற்றவும் உதவின. அரசனின் தற்காப்பு முக்கியமாக மதிக்கப்பட்டது. மௌரியர் காலத்தில் அரசவை மிகுந்த செல்வச் சிறப்புடன் விளங்கியது. மௌரிய அரசர்களின் கட்டளைகள் சட்டங்களாக விளங்கின. இதுவரை இந்திய வரலாற்றில் தருமக் கொள்கையும், பிராமணர் வழங்கும் நீதி நடை முறைகளுமே சட்டங்களாக அமைந்திருந்தன. மௌரிய அரசர்கள் கொள்கையளவில் வரம்பற்ற அதிகாரம் படைத்தவர் களாயிருந்தபோதிலும், மந்திரிகளின் ஆலோசனைகளுக்குச் செவி சாய்ப்பதும் நடை முறையில் அவசியமாகக் கொள்ளப்பட்டது. அரசனுக்கு அதிக ஓய்வின்றி பலதரப்பட்ட வேலைகள் இருந்து கொண்டே இருந்தன.

படையும், கருவூலமும் அரசனின் நேரடிப் பார்வையின்கீழ் இருந்தன. அமைச்சர்களுடன் ஆலோசிப்பதிலும், ஒற்றர் தூதுவர் இவர்களை விசாரித்து ஏவுவதிலும், போரிலும், நீதி

[2] மேற்படி பக்கம் 169 [3] அர்த்த சாத்திரம் I, 2.
[4] A. S. Altekar, State and Government in Ancient India, பக்கம் 312.

வழங்குவதிலும் அரசனின் காலம் பெரும்பாலும் செலவிடப் பட்டது. இவ்வளவு அதிகாரங்களும் கையில் குவிந்திருந்தாலும் மௌரிய அரசர்கள் தன்னலம் மிகுந்து கொடுங்கோலராய் விளங்கவில்லை என்பது கவனிக்கத் தக்கது. ஒருவேளை தமக்கு முன் நந்த வமிசத்திலும், அதற்கு முன்னும் அரசர்கள் கொலை செய்யப்பட்டுவந்ததை உணர்ந்ததால் கட்டுப்பாட்டுடன் அவர்கள் இருந்திருக்கக் கூடும்.

போரில் வெற்றியும் தோல்வியும் நாட்டின் வளத்தைப் பொறுத்தவை என்பதை அவர்கள் உணர்ந்து மக்கள், படை கருவூலம், அரண், அமைச்சு, நட்பு நாடுகள் ஆகிய அனைத்தையும் கருத்துடன் கவனித்துவந்ததாலும், பிரதேச வழக்கங்களிலும் சட்டங்களிலும் அதிகம் தலையிடாமலிருந்ததாலும், நேரடியாகப் பிரதேச விஷயங்களில் தலையிடாது, மாகாண, நகரத் தலைவர்களின் மூலமும், குழுக்களின் உதவியோடும் பொது நிருவாகத்தைத் தலைநகர் நிருவாகத்தோடு ஒருங்கிணைத்துச் செயல்பட்டு வந்ததாலும் பேரரசர்களாக விளங்கினர்கள் எனலாம்.

### அமைச்சர் அவை

மௌரியரின் அரசாட்சியில் அமைச்சரவை முக்கியப் பங்கு வகித்தது. தேரானது ஒரு சக்கரத்தில் மட்டும் ஓட முடியாது; அதுபோல ஆட்சிக்கு அரசனும், அமைச்சர்களும் இரு சக்கரம் போல் விளங்குகிறார்கள் எனக் கௌடில்யர் கூறுவார். மௌரியர் காலத்தில் ஆலோசனை வழங்கும் உரிமை பெற்ற ஒரு சிற்றவையும், நிருவாகத் துறைகளைக் கவனிக்கும் அமைச்சர் களைக் கொண்ட ஒரு பேரவையும் இருந்தனவென அறியலாம். ஆலோசனைகள் மிகவும் இரகசியமாக நடத்தப்பட்டன. இதற்காகப் பல முன்னெச்சரிக்கைகளை அர்த்த சாத்திரம் கூறுகிறது. ஆதியில் அரசனிடமிருந்து வந்த அதிகாரங்கள் காலப்போக்கில் அமைச்சர்கள் கைக்கு வந்தன. அவையின் பெரும்பான்மையினர் எண்ணப்படி பிரச்சனைகளைத் தீர்த்து முடிவெடுக்க இது உதவியது. அரசன் படையெடுத்துச் சென்ற காலத்திலும் மந்திரிசபை கூடியதென்றும் அறிகிறோம்.[6]

### பிரதேச நிருவாகம்

நாடு பல மாகாணங்களாகவும், மாகாணங்கள் மேலும் மேலும் சிறிய பகுதிகளாகவும் கிராமத்தைக் கடைநிலையாகக்

[6] அர்த்த சாத்திரம் I, 3.

கொண்டு பிரிக்கப்பட்டு விளங்கியது. அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மாகாண நிருவாக அதிகாரிகளாக விளங்கினர். சிலவற்றில் அரச குடும்பத்தைச் சேராத ஆனல், நிருவாக அனுபவமும் ஆற்றலும் பெற்றவர்கள் அரசப் பிரதிநிதிகளாக விளங்கினர்கள். இவர்களின் அலுவல்கள் யாவை என்பது தெளிவாக அறியாவிடினும் எளிதில் ஊகித்தறியக் கூடும். அரசனுக்காக வரிவசூல்களைப் பெற்று, அரசனின் கட்டளைகளை அமுல்படச் செய்து, அமைதியைப் பாதுகாத்துப், பொதுவாகத் தனக்குக் கீழுள்ள உட்பிரிவுகளின் நிருவாகத்தை மேற்பார்வையிட்டு இவர்கள் செயல்பட்டிருக்கக்கூடும்.[6]

மாகாணப் பிரதேசங்கள் பெரும் பிரிவுகளாகவும், மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டு முறையே பிரதேசிகர், ராஜ்ஜுகர் ஆகியோரின் நிருவாகத்தில் இருந்தன. யுக்தர்கள் என்னும் அலுவலர்கள் இவர்களுக்கு நிருவாகத்தில் துணை புரிந்தனர்.

பிரதேசிகர் வரிவசூல் செய்யும் அதிகாரமும், நீதி வழங்கும் அதிகாரமும், நிருவாக அதிகாரமும் பெற்று விளங்கினர். ரஜ்ஜுகர்கள் முதலில் வரிவசூல் செய்வதையே முக்கியப் பணியாக ஏற்றுக்கொண்டபோதிலும் நாளடைவில் நீதிவழங்கும் அதிகாரமும் பெற்றிருக்கக்கூடும். இவர்களின் கீழ் உள்ள ஆட்சிப் பிரதேசம், 'ஆஹாரம்' என வழங்கப்பட்டது. இவர்களின் நிருவாகப் பொறுப்பு தற்கால மாவட்டத் தலைவரின் பொறுப்பைப் போன்றதாகுமென அல்டேகர் கூறுவார்.[7]

ஆஹாரங்கள் 800 கிராமங்கள் கொண்ட ஸ்தானியா என்னும் பிரிவுகளாகவும், இவை 400 கிராமங்கள் கொண்ட துரோணமுகம் எனப்படும் பிரிவுகளாகவும், இவை 200 கிராமங்கள் கொண்ட கார்வதிகம் எனப்படும் பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டன. பத்துக் கிராமங்கள் கொண்ட சங்கிரஹணம் என்னும் 20 பிரிவுகள் ஒவ்வொரு கார்வதிகத்திலும் இருந்தன.

சங்கிரஹணத்தின் நிருவாக அதிகாரி சோபா எனப் பட்டார்.[8] கிராமத்தின் தலைவர் கிராமணி ஆவார். நகரங்களின் தலையாய அலுவலர் நகரகா என்பவர். நிருவாகத்திற்கு ஏதுவாக நகரங்கள் பல வட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. பாடலி புத்திரம் ஐந்து நிருவாகக் குழுக்களை உடையதாக இருந்தது, ஒவ்வொரு குழுவிலும் அறுவர் இருந்தனர். நகரில் அயல்

[6] அல்டேகர், பக்கம் 316 [7] மேற்படி பக்கம் 317

[8] அர்த்த சாத்திரம் II, 35.

நாட்டாரின் நடவடிக்கைகளைக் கவனிக்க ஒரு குழுவும், பிறப்பு இறப்பு விவரங்களையும் மக்கள்தொகை முதலான விவரங்களையும் கவனிக்க ஒரு குழுவும், இவ்வாறே விற்பனைக் கூடங்கள் ஊழியர்கள், ஊதியங்கள், வணிக வரிகள் முதலான பலவற்றைக் கவனிக்கும் குழுக்களும் நகரின் நிர்வாகத்தைச் செலுத்தின. மெகஸ்தனிஸ் எழுதியவற்றிலிருந்து மூன்று வகையான அதிகாரிகள் இருந்தனரெனத்தெரியவருகிறது. இவர்களில் அக்ரோ நோமை என்னும் மாவட்ட அதிகாரிகளும், அஸ்தி நோமை என்னும் நகர அதிகாரிகளும், போர் அலுவலகத்தில் பணிபுரிபவரும் அடங்கியுள்ளனர். மாவட்ட நகர அலுவல்கள் எவ்வாறு கவனிக்கப்படுகின்றன என்பதை நாம் மேலே குறிப்பிட்டிருக்கிறோம். போர் அலுவலகமானது கடற்படை, போக்குவரத்து, குதிரைப் படை, தேர்ப் படை, காலாள் படை இவற்றைக் கவனிக்கும் பிரிவுகளாக அமைக்கப்பட்டிருந்தது.

மேலே கண்ட நிருவாகச் சிறப்பியல்புகளை உடையதாக மௌரியரது ஆட்சிமுறை விளங்கியது.

**அசோகர்**

அசோகரது காலத்தில் நிருவாகத்தில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. பொதுமக்கள் நலத்திற்காகப் புதிய பணிகள் அரசாங்கத்தால் நேரிடையாக மேற்கொள்ளப்பட்டன. இவர் புத்த மதத்தை தழுவியதால் அதன் கொள்கைகளை நாடெங்கிலும் பரப்ப விழைந்தார். இதற்காகத் தரும மகாமாத்திரர்கள் எனப்படும் அலுவலர்களை நியமித்தார். மேலும், இவர் காலத்தில் போர் நெருக்கடி குறைந்து போர்ப்படை நிருவாகச் சுமையும் குறைந்தது.

தலைநகரில் இல்லாதபோது அமைச்சரவை எடுக்கும் முடிவுகளைத் தனக்கு உடனுக்குடன் அறிவிக்க வேண்டுமென்றும், தான் இடும் உத்தரவுகளை அவர்கள் உடனுக்குடன் நிறைவேற்ற வேண்டுமென்றும் இவர் கருதினார். சட்டம் இயற்றும் உரிமையை அசோகர் நன்கு பயன்படுத்திவந்தாரென்று கொள்ளலாம். இதே சமயத்தில் அமைச்சர்களுக்கும், அரசாங்க அலுவலர்களுக்கும் அதிக அதிகாரம் இருந்தது. ரஜ்ஜுகர்களுக்கும், பிரதேசிகளுக்கும் நிறைய அதிகாரங்கள் இருந்தன. பொருளாதாரத் தொடர்பானது பரந்த பேரரசின் பல பகுதிகளையும் அரசியல் அதிகாரத்தோடு இணைத்தது, தற்காலத்திய விரைவுச் செய்தித் தொடர்பும், போக்குவரத்து வசதியும் அக் காலத்தில் இல்லையாகையால் நிருவாகச் சிதறல் தானாகவே விளைந்தது. தவிர, அசோகர் புத்த

மதத்தைத் தழுவி அதனைப் பரப்புவதில் முனைந்திருந்தது பலரது வெறுப்பையும் தேடித் தந்திருக்கக் கூடும். கி.மு. 184ஆம் ஆண்டு வாக்கில் புஷ்யமித்திரன்[9] என்பவன் பிருகத்ரதன் என்னும் மௌரிய அரசனைக் கொன்று மௌரிய ஆட்சியை ஒரு முடிவுக்கு கொண்டுவந்தான். மௌரிய அரசனின்கீழ் படைத் தலைவனாக இருந்த இவன் அரியணை ஏறிச் சுங்க வமிசத்தைத் தோற்று வித்தான்.

கி.மு. 72ஆம் ஆண்டுவாக்கில் சீமுகன் என்னும் சாதவாகன அரசன் மகதத்தைக் கைப்பற்றினன். பாடலிபுத்திரத்தின் வளமும் பலமும் குறையக் குறைய மேற்கில் உஜ்ஜயினி நகரம் முதன்மை பெறத் தொடங்கியது. வடமேற்கில் குஷாணர்களும், தெற்கில் சாதவாகனர்களும் ஆட்சி புரிந்தனர். மௌரியப் பேரரசு சிதைந்து கி.பி. 320ஆம் ஆண்டு அளவில் குப்தர்கள் மீண்டும் ஒரு பேரரசைத் தோற்றுவிக்கும்வரையில் சட்ட திட்டங்கள் மீறப்பட்டு வட இந்தியாவின் பெரும்பகுதி சண்டைக்கும், பூசலுக்கும் உள்ளாகியிருந்தது. ஆங்காங்கே சுதந்திரமான சிறு குடியரசுகளும், பலம் நிறைந்த குடியரசு இணைப்புகளும் தோன்றின. பஞ்சாப் பகுதியில் யாதேயர்களின் குடியரசும், ராசபுதனத்தில் மாளவர் குடியரசும் குப்தர் காலம் வரை இருந்தன.

இந்திய வரலாற்றின் இக்கட்டான இந்தக் காலக் கட்டத்தின் விளைவாக அரசியற் சிந்தனையில் ஒரு புதிய திருப்பம் எழுந்தது. வலிமை மிக்க அரசன் இல்லாவிடில் அந்நியர் படையெடுப்பாலும், உள்நாட்டுப் பூசலாலும் மரபே அழிந்துவிடும் ஆபத்து தோன்றியிருப்பது உணரப்பட்டது. பழைய பிராமணிய சமூக முறை புத்த மதத்திலும் மேலாகக் கருதப்பட்டு ஆதரவு பெற்றது. இதன் விளைவாக முன்பு எப்போதுமில்லாத அளவு அரசனுக்குப் பேரதிகாரங்களும் அளிக்கப்பட்டன. குப்தர்கள் பேரரசை நிறுவும்போது உண்மையில் தெய்விகம் பொருந்தியவர்களாகவே கருதப்பட்டார்கள்.

[9] பிராமணன் பெயர்போல் தோன்றுகிறது.

# 9. குப்தர்கள் ஆட்சி முறை

கி.பி. இரண்டாம் நூற்றுண்டிலிருந்து பொருளாதாரச் சீர் குலைவு அதிகம் நேர்ந்தது. வியாபாரம் குறைந்தது. அரசு வருமானமும் குறைந்தது. இதனால், நிர்வாகச் சீர்குலைவும் ஏற்பட்டது. ஆங்காங்குத் தொழிற் குழுக்களும், கிராமங் களும் சுயமாகச் செயல்படத் தொடங்கின. தவிர, குப்தர்கள் காலத்தில் பிராமணர்களுக்கு நிலம் தானமாக வழங்குதல் மூலமாக ஒருவிதமான பண்ணை முறையும் (federal system) ஏற்படலாயிற்று. குப்தர்கள் தாம் வெற்றி கொண்ட சிற்ற ரசர்களையும், குடியரசுகளையும் அழித்துவிடாமல் அவர்களிட மிருந்து திறை பெற்றுக்கொண்டு அவ்வப் பிரதேசங்களின் ஆட்சியை அவரவரிடமே விட்டுவைத்திருந்ததால் இம் முறை மேலும் வலுப்பட்டது. சமுத்திர குப்தர் என்பவர் நாற்ப தாண்டுக் காலம் ஆட்சி செய்து மீண்டும் மகத தேசத்தைத் தற் கால அஸ்ஸாமிலிருந்து பஞ்சாப் வரையில் பரவும்படி செய்தார். இவரது புதல்வர் இரண்டாம் சந்திரகுப்தர் வாகாதஹர்களின் துணைகொண்டு கி.பி. 415ஆம் ஆண்டுவரை ஆட்சி செய்து வட இந்தியாவிலும், தெற்கேயும் தன்னுட்சியைப் பரவச் செய்தார். இவரது காலம் குப்தர்களின் பொற்காலமாக விளங்கியதென வரலாற்று ஆசிரியர் கூறுவர்.

சீன யாத்திரிகர் பாஹியான் (Fa-Hien) என்பவர் குறிப்பிலிருந் தும், நாரத தரும சாத்திரத்திலிருந்தும், காமந்தகீயத்திலிருந்தும் குப்தர்களின் ஆட்சியைப்பற்றி நாம் ஓரளவு அறிய முடியும். பஞ்ச தந்திரம், பாணரின் ஹர்ஷ சரிதம், காளிதாசரின் ரகு வம்சம் இவற்றைத் தவிரக் கவுமுதிமகோத்சவம், தேவி சந்திர குப்தம், முத்ராராக்ஷஸம் முதலிய நூல்களும், அலகாபாத்தில் சமுத்திரகுப்தரால் நிறுவப்பட்ட ஸ்தூபமும் குப்தர்களைப் பற்றி அறிய நமக்கு உதவுகின்றன.

இலங்கை அரசன்கூடக் குப்தர்களுக்குப் பணிந்து அவர்தம் ஆதிக்கத்தை ஒப்புக்கொண்டதாகத் தெரிகிறது. சட்டமும், மரபும் மீண்டும் மேலாதிக்கம் பெற்றன. நிருவாகம் முழுவதும் அரசனின் நேரடிக் கண்காணிப்பில் இருக்க முடியாதாகையினல் ஆங்காங்கு அதிகாரம் செலுத்தும் அரசு அலுவலர் அதிக

மதிப்புப் பெற்றனர். கௌடில்யரைப்போல் காமந்தகரும் அரசனுக்குப் புலனடக்கத்தின் அவசியம் பற்றி வலியுறுத்தினர். குப்த அரசர்கள் மிக்க வலிமையும் புகழும் பெற்று விளங்கிய போதிலும் தமக்குத் தெய்விக உரிமை உண்டென்று கூறிக் கொள்ளவில்லை.[1] அசோகர்போல் இவர்களது கல்வெட்டுகளும் சாசனங்களும் சட்டங்களாக விளங்கவில்லை என்றே கூற வேண்டும். இன்பம் துய்ப்பதில் மிதமும், பெரியோர்களின் துணையும் காமந்தகரால் வலியுறுத்தப்படுகின்றன. வேட்டை யாடுதலும், சூதாடுதலும் அரசருக்கு ஒவ்வாத காரியங்கள் என்றும் குறிப்பிடப்படுகின்றன. வேதம், பொருளாதாரம், அரசியல், படைப்பயிற்சி இவற்றில் அரசன் தேர்ச்சி பெற்றவனு யும் இருக்க வேண்டும். பெரும்பாலும் மூத்த அரசிளங் குமரனே தந்தைக்குப் பின் அரியணை ஏறுவது மரபாகக் கொள்ளப்பட்டது. பட்டத்து இளவரசனும், மற்ற இளவரசர்களும் முக்கிய ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தினர். ஆங்காங்கு ஆளுநர்களாகவும் இவர்கள் நியமிக்கப்பட்டனரென்றும் தெரிகிறது. அரசனுக்கு 'மந்திரி மண்டலம்' என்னும் அமைச்சரவை ஆட்சியில் துணை செய்தது. அரசன் தனது கொள்கைகளை மிக இரகசியமாக மந்திரி சபையுடன் கலந்து விவாதித்து முடிவெடுத்தான். முக்கிய அலுவலர்களும், ஆளுநர்களும் அரசனுல் நியமிக்கப் பட்டனர். இவர்கள் நேரிடையாக அரசனுக்குப் பொறுப் பானவர்களாக இருந்தனர்.

மந்திரி மண்டலத்தில் 'மந்திரி முக்கிய' என்னும் முதன் மந்திரி முதன்மை பெற்று விளங்கினர். அரசனில்லாவிடத்து இவர் தலைமையில் விவாதம் நடக்கும். அறிவு, நடத்தை, விசுவாசம் இவை நிரம்பிய ஏழு அல்லது எட்டுப்பேர் மந்திரி மண்டலத்தில் இருந்தனர். இவர்கள் பெரும்பாலும் பிராமணர்களென்றும், சந்ததியாக இப் பதவியை வகித்து வந்தவரென்றும் தெரிகிறது. இவர்களது முடிவை அரசன் மறுக்க முடியாது. அதிகாரம் நிரம்பிய போர்க்குழு ஒன்று இருந்ததாகக் காமந்தகர் கூறுகிருர்[2]. மக்களவையினைப் பற்றித் தெளிவாக ஒன்றும் தெரியவில்லை. மக்களைப் பலவிதத்திலும் பாதுகாப்பதும், பாரபட்சமின்றிக் குற்றத்திற்குத் தகுந்தவாறு தண்டனை அளிப்பதும் அரசனின் கடமைகளாகும்.[3] வணிகம், விவசாயம், நீர்நிலைகள், தெய்வ வழிபாடு ஆகியவற்றின் முன்னேற்றமும் அரசனின் கடமையாக இருந்தது.

[1] டிரெக்மெய்ர் பக்கம் 184
[2] காமந்தகீயம் XII.
[3] மேற்படி. VI, 15.

விளைச்சலில் ஆறில் ஒரு பங்கு நிலவரியாக வாங்கப்பட்டது. தொழிற் குழுக்களும், வணிகக் குழுக்களும் வரிக்குள்ளாயின. அவசியம் நேர்ந்த காலத்தில் அதிக நாணயங்கள் உருவாக்கப் பட்டன.

உண்மையில் பெருங்குற்றம் அல்லது தீங்கு நேராத இடத்தில் பிரச்சனைகள் சமரசமாகத் தீர்த்துவைக்கப்பட்டன. தரும நியாயமும், பெரியோர்களின் முன்னுதாரணமும், புனித நூல்களும், வட்டார வழக்குகளும் சட்டத்திற்கு ஆதாரங்களாக விளங்கின. நாரதர், பிருகஸ்பதி, காத்தியாயனர் ஆகியோர் இக் காலத்தில் அருத்த தரும சாத்திரங்களை இணைத்துப் புதிய சட்டத் தொகுதிகளை உருவாக்கினர். நன்கு சோதிக்கப்பெற்று நீதிபதிகள் அமர்த்தப்பட்டனர். அப்பீல் முறையும் வழக்கிலிருந்தது.

குப்தரது நிர்வாகம் மைய நீக்கம் (de-centralisation) பெற்று விளங்கியது. பேரரசு பல தேசங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவற்றிற்கு மண்டலங்களென்றும் பெயருண்டு. சுராட்டிரா, மால்வா, அந்தர்வேதி என்பவை இவற்றில் சில. இவற்றின் இராசப் பிரதிநிதிகளை அரசனே நியமித்தான். அமைதியைக் காப்பதும், பகைவர்களை ஒடுக்குவதும், பொதுப் பணிகளைச் செய்வதும் இவர்கள் கடமையாகும்.

மண்டலங்கள் பல புக்திகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இவற்றிற்கு உபரிகள் என்னும் அதிகாரி பொறுப்பாவார். இவரும் அரசனால் நியமிக்கப்படுபவரே. இவர்கள் பெரும்பாலும் அந்தந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த அரச குடும்பத்தினராக இருக்கக்கூடும். ஏனெனில், தம்மை 'மகாராஜா' என்று இவர்கள் அழைத்துக்கொண்டனர்.[4]

'புக்திகள்' விஷயங்கள் எனப்படும் பிரிவுகளாகப் பகுக்கப் பட்டிருந்தன. இவைகளின் தலைவர்கள் 'விஷயபதி' என அழைக்கப்பட்டனர். அரசன் அல்லது உபரிகரால் விஷயபதி நியமிக்கப் பட்டார்.

நகரங்கள் 'புரபாலர்' என்னும் அதிகாரியின் கீழ் இருந்தன. கிராமத்தின் நிர்வாகம் 'கிரோமேயகா' என்னும் அதிகாரியினால் கவனிக்கப்பட்டுவந்தது.

[4] அல்டேகர் பக்கம். 340.

பிற்காலக் குப்தர்களின் சரித்திரம் தெளிவாக இல்லை. கி.பி. 495-ல் புத்த குப்தரின் ஆட்சிக்குப் பிறகு குப்தப் பேரரசு அந்நியர் படையெடுப்பாலும், உட்கலகத்தாலும்[5] வீழ்ச்சியடைந்தது. தக்காணத்தில் சாளுக்கியர்களும், வடக்கில் ஹர்ஷரும் பலம் பெற்று விளங்கினர்.

தென்னிந்தியாவில் இக் காலத்தில் நீண்ட பேரரசு ஏதும் தோன்றவில்லை. பல சிறிய அரசர்களுக்கிடையே தொடர்ந்த சண்டையினால் சோழர் சிற்சில சமையங்களில் ஆதிக்கம் பெற்று விளங்கினர்.

[5] ஹூணர்கள்

# 10. குடியரசுகள்

பழங்கால இந்தியாவில் முடியாட்சியைத் தவிரக் குடியரசு ஆட்சிமுறையும் (Rebublican go\ernment) இருந்ததாகக் கருத லாம். இதைத் தற்காலத்தில் விளங்கக்கூடிய குடியாட்சி முறை போன்றது என்று எண்ணிவிடக் கூடாது. நிலைநாட்டு அரசியல் (territorial polity) தோன்றுவதற்கு முன்னும், தோன்றி நிலை பெற்றுப் பேரரசாக வளரும்போதும் அரசனின் அதிகாரமானது சமூகத்தின் பிரிவுகளாக விளங்கும் குழுக்களையும் தன் கீழ் உள்ள நாட்டின் பல பகுதிகளில் வாழக்கூடிய வெவ்வேறு பழக்க வழக்கங்கள், மற்றும் தமக்கே உரிய கட்டுப்பாடுகள், தத்தம் மரபுச் சட்ட திட்டங்கள் இவற்றைக் கொண்டு விளங்கும் அமைப்புகளையும் பொறுத்தே அமைகிறது என்பதையும், வணிகத் தொழில் குழுக்கள், நகரக் குழுக்கள் (corpora tions and guilds) இவைகளும், புத்த மதத்திற்குப் பின் தோன்றிய சங்கங்கள் என்னும் அமைப்பும், ஓரளவு தன்னிச்சையாகச் செயல்படும் அமைப்புகளும் நாட்டில் விளங்கின என்பதையும், வேத நூல் களிலிருந்தும், அர்த்த சாத்திரத்திலிருந்தும். ஏனைய இலக்கியங் களிலிருந்தும் அறிகிறோம். இவ் வமைப்புகள் பெரும்பாலும் முழுவதும் சுய ஆட்சி (autonomons) பெற்ற அமைப்புகளாக இல்லாமல் அரசனின் அதிகாரத்திற்கும் கண்காணிப்புக்கும் உட்பட்டு விளங்கின எனக் கொள்வதே முறையாகும்'.

சட்டத்தின் ஆட்சியோ (rule of law) அனைவருக்கும் எல்லா விதங்களிலும் பொருந்தக்கூடிய சட்டத் தொகுதியோ (uniform code of law) ஆக்க ரீதியான அரசியலமைப்போ (constitutional state), மனித இனத்தின் சமத்துவம் இதனோடு இணைந்த கௌரவம் (equality and dignity) ஆகியவற்றைப் போற்றும் சமுதாயமோ, சமூக வாழ்வின் எந்தத் துறையிலும் நடப்பாடோ (mobility) காணப்படாத ஒரு காலக்கட்டத்தில், பெருந்தனிக் குடியாட்சி நாடு இருந்திருக்க முடியாது என்னும் காரணங்கள் ஒருபுறமிருக்க, இதே காரணங்களினால் சமூகமானது பிராந்திய, மற்றும் இயங்கு அமைப்புகளாக (regional and functional groups) ஆங்காங்கே விளங்குவது இயற்கையிலேயே சாத்திய மாகும். இதைத் தவிர வருணாசிரம தருமமும் தருமக் கருமக்

கொள்கைகளும் இப் போக்கினை வளர்ப்பனவாக அமைந்தன. குலத்தொழில், சாதிக் கட்டுப்பாடுகள், வணிகக் கூட்டுகள் ஆகிய இவை வருணாசிரம தருமத்தின் நேர் விளைவுகளே.

ஆரிய சமூக அமைப்பு வேரூன்றி அரச மேலாதிக்கம் பரவு முன் வட பகுதிகளில் அரசனற்ற குல ஆட்சிகள் இருந்தனவென அயித்திரேயிய பிராமணம் கூறுகிறது. உத்தர குரு, மாத்ரா, காதா, க்ஷுரத்ரகா, மாளவா, விருஷ்ணீ, அந்தகா, விருஜி, சாக்கியா ஆகிய குலங்கள் குடியரசுகளாக விளங்கின என்றும், அக் காலம் இந்தியக் குடியரசுகளின் பொற்காலமாக விளங்கியதென்றும் ஜெயஸ்வால் கூறுவார்.[1] அரசனற்ற ஆட்சி முறையினை இவர்கள் பெற்றிருந்தாலும் இவை குடியரசுகள்தாம் என்று, நாம், பிராமணங்களில் தக்க ஆதாரமில்லாமையால், ஒத்துக் கொள்ள முடியாது. பெரும்பாலும் இவை சொற்பர் அரசாகவே (oligareties) இருந்திருக்க வேண்டும். கி.மு. ஆறும் நூற்றாண்டிற்குப் பிறகும், மௌரியப் பேரரசு தோன்றுவதற்கு முன்னும் இத்தகைய குல அமைப்புகளின் அதிகம் விளங்கின. ஏறக்குறைய இக் காலத்தில் ஏற்பட்ட வணிகப் பெருக்கினாலும், நாணயச் செலாவணியினாலும் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட குழுக்களும் தோன்றியிருப்பது சாத்தியமானதே. இதனாலும், புத்த மதக் கொள்கைகளினால் பலர் ஈர்க்கப்பட்டதன் விளைவாலும் இத்தகைய குழுக்களின் சாதிபேதம் மறைந்து யாதானுமொரு பொதுமையைக் (common interest) கருதி ஓரளவு சமத்துவம் விளங்குவதாகச் சில அமைந்திருக்கலாம்.

மௌரியரும், குப்தரும் தம் பேரரசுகளைப் பலம் பெற்ற குடியரசு இணையங்களின் (federations) உதவியால் நிறுவினாலும் பேரரசரின் ஆதிக்கம் மேலோங்கவே இவற்றின் தனித்தன்மை மறையலாயிற்று. மௌரியப் பேரரசைக் காட்டிலும் குப்தப் பேரரசு அதிக மையநீக்கம் பெற்று விளங்கியதால் இவ் விரு பேரரசுகளுக்கும் இடைக்காலத்தில் எழுந்த குடியரசுகள் குப்தர் ஆட்சியில் ஓரளவு சுதந்திரமாக விளங்கின. கி.பி. நான்காம் நூற்றாண்டிற்குப் பிறகு இந்திய வரலாற்றில் குடியரசுகள் எந்த வகையிலாவது இருந்தனவா என்பது ஐயப்பாட்டிற்குரியது. இதிலிருந்து,

1. பழங்கால இந்தியாவில் தற்காலத்திலுள்ளது போன்று குடியரசுகள் இல்லை என்பதும்.

[1] K. P. Jayaswal, Hindu Polity, இரண்டாம் பதிப்பு பக்கம். 118,

2. முடியாட்சி ஒழுங்கினுள் (monarchical order) வலிமை வட்டங்களாக (spheres of influence) இவை விளங்கின என்பதும்.
3. அரசனின் நேரடிக் கட்டுப்பாட்டிலிருந்து விலக விலக இவற்றின் சுதந்திரம் அதிகரித்தது என்பதும்.
4. இவை அமைப்பையும், நோக்கத்தையும், இயங்கும் தன்மையையும் பொறுத்துப் பலவகைகளாக இருந்தன என்பதும்

புலனுகின்றன.

**கணங்கள் (Ganas)**

'கணம்' என்பது எண்ணிக்கையைக் குறிக்கும். மாளவர்கள், யாதேயர்கள் ஆகியோர் தங்களைக் கணமுறையில் ஆட்சி செய்து கொண்டனர் என்று தெரிகிறது. மத்திய தேசத்திலிருந்து சில வணிகர்கள் தெற்கே வரும்போது தெற்கு நாட்டரசன் இவர்களது ஆட்சிமுறை பற்றிக் கேட்குந் தறுவாயில் தங்கள் பகுதியில் சில அரசனின்றிக் கணமுறையில் ஆட்சி செய்யப்படுகிற தென அவர்கள் கூறுகிறுர்கள்.[2] இவைகளிலிருந்து ஆட்சிப் பொறுப்பானது தனி ஒருவரிடம் இல்லாது பலரால் அல்லது பலர்கொண்ட ஒரு குழுவினுல் செலுத்தப்பட்டது என்பது விளங்கும். இதனுலேயே கணம் என்ற பெயரும் உண்டாயிற்று. அர்த்த சாத்திரத்திலும் கணங்களைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.[3] மகாபாரதத்திலும் இக் கணங்களைப் பற்றிக் கூறப்படுகிறது.[4]

கணங்கள் மற்ற சிறு குழுக்களினின்றும் வேறுபட்டனவாகத் தெரியவில்லை. குலம், வர்க்கம், சிறு வணிகக் கூட்டம் முதலியவைகூடக் கணங்கள் என்றே குறிப்பிடப்பட்டன. குலங்களில் சச்சரவுகள் பெருகிச் சீர்குலைவு நேரிடும் என்று மகாபாரதம் கூறுகிறது.[5] உட்பூசலால் கணங்கள் எளிதில் எதிரிகளின் கையில் சிக்கும் என்றும் இது கூறுகிறது.[6] அர்த்த சாத்திரத்திலும் இக் கணங்களில் ஒற்றர்களைக் கொண்டு அரசன் எவ்வாறு குழப்பம் விளைவிக்கலாமென்றும், கணங்களுக்கிடையே பகைமையை வளர்க்கலாம் என்றும் கூறப்படுகிறது.[7] இவற்றிலிருந்து கணங்கள் பலம்பெற்ற அமைப்புக்களாக விளங்கியிருக்க முடியாதென்பது தெளியலாம்.

[2] அவதான சதகம் II, பக்கம் 103
[3] அர்த்த சாத்திரம் VIII, 2.
[4] மகாபாரதம் XII. 108,
[5] மேற்படி XII, 108-31
[6] மேற்படி XII- 108, 27.
[7] அர்த்த சரத்திரம் XI, 1,

'வாஜ்ஜி கனம்' என்னும் ஓர் அமைப்பினைப் பற்றிச் சில விவரங்கள் தெரிகின்றன, அடிக்கடி அவை கூடுவதும், பிரச்சனைகளில் ஒத்துப்போவதும், நிர்வாகத்தில் மரபையொட்டி நடப்பதும், மரியாதையும், மாதரைக் கவர்ந்து செல்லாதிருத்தலும், கோயில், சடங்கு இவைகளைப் புறக்கணிக்காதிருத்தலும், சான்றோர்கள்பால் பற்றும் ஆகிய இவ் வேழும்கொண்டு விளங்கும் கணங்கள் நீடித்து நிலைக்கும் என்பதாகப் புத்தர் அஜாதசத்துரு என்னும் அரசனிடம் சொல்லுவதாகக் கூறப்படுகிறது.[8] இது உண்மையாக இருந்திருக்க முடியாதென்பது ஒருபுறமிருக்க, இத்தகைய சிந்தனைகள் கணங்களில் சில பலவீனங்களைச் சுட்டிக் காட்டுவனவாக அமைகின்றன.

ஆனால், லிச்சசாவியினர் மிகவும் பலம் பெற்ற கண அமைப்பினைக் கொண்டு புகழ்பெற்று விளங்கினர் என்பதில் ஐயமில்லை.

வேதகால கணங்களில் கால்நடைகளைப் பராமரிப்பதும், கவர்ந்துகொள்வதும் முக்கிய தொழில்களாக விலங்கியிருக்கக் கூடுமென்று டிரெக்மெய்ர் கூறுகிறார்.[9] இக் கணத்தின் தலைவர் கணபதி எனப்படுவார். யாதவ விருஷ்ணி (குல) கணங்களில் கட்சிகள் அல்லது கோஷ்டிகள் இருந்தனவென அறிகிறோம். ஆனால், இவற்றைத் தற்கால அரசியல் கட்சிகளோடு ஒப்பிட முடியாது. இவை தனித்தனிக் குடும்ப அல்லது வமிச அடிப்படையில் அமைந்திருக்கக்கூடும். இக் கணமானது கடைசியில் உட்பூசலால் அழிந்ததென மகாபாரதத்தில் கூறப்பட்டுள்ளது. பாணினி கணமும், சங்கமும் ஒன்றே எனக் கூறுவார். இதையொட்டிக் கௌடில்யரும் இருமுறையான கண அமைப்பினை அர்த்த சாத்திரத்தில் சொல்லுகிறார், போரையும், சமாதானத்தையும் நம்பிப் பிழைப்பதாக ஒரு குழுவும், அரசன் இல்லாதவிடத்து இராச முத்திரைகளைத் தாங்கிய தலைவர்களின் தலைமையில் செயல்படுவதாக மற்றொரு குழுவும் விவரிக்கப்படுகின்றன.

புத்தமதச் சங்கங்களின் நடப்புகளில் இருபது பேர் கோரமாகச் (quorum) சொல்லப்பட்டுள்ளனர். 'கணபூரக்' என்பவர் அங்கத்தினர் வருகையைக் கணக்கெடுப்பவர். 'சங்கமுக்யர்' என்பவர் தலைவர்.

கிரேக்கத் தூதர் மெகஸ்தனிஸ் என்பாரும் 'ஆர்ரியன்' என்பாரும் அக் காலத்தில் குடியரசு அமைப்புகள் விளங்கின எனக்

[8] Mahaparinibbanasutta 4 [9] டிரெக்மெய்ர் பக்கம், 277

கூறுகிறார்கள். யாதேயக் குடியரசில் ஐயாயிரம் அவையினர் இருந்தனரென்று குறிப்பிடப்படுகிறது. லிச்சாயி குடியரசில் ஏழாயிரத்து எழுநூற்று ஏழு 'இராஜாக்கள்' இருந்தனரெனத் தெரிகிறது.

**வணிகத் தொழிற் குழுக்கள் (Corporation and Guilds)**

கி.மு. ஆறு, ஐந்தாம் நூற்றாண்டுகளிலிருந்து இத்தகைய அமைப்புகள் தோன்ற ஆரம்பித்தன. தொடக்கத்தில் பொருளாதாரக் குறிக்கோள்களைக் கொண்டு இவை விளங்கியபோதிலும் சில நூற்றாண்டுகளில் சமூக நலங்களுக்காகவும் இக் குழுக்கள் செயல்பட்டன. இத்தகைய குழுக்களின் சட்ட திட்டங்கள் தனக்கும் தன் மக்களுக்கும் எதிராக விளங்கியபோதிலும், இவைகளை அரசன் ஆதரிக்கத்தான் வேண்டும்; ஏனெனில் மரபானது புனித தருமத்தைவிட (sacred law) வலுவானது என்று நாரதர் குறிப்பிடுகிறார்.[10]

அரசனுக்குத் தேவையான காலங்களில் பொருளும் படையும் கடன் வழங்கி உதவிபுரிவனவாக இக் குழுக்கள் அர்த்த சாத்திரத்திலும் வேறு இலக்கியங்களிலும் கூறப்பட்டுள்ளன. பல குழுக்களிடையே சச்சரவு நேரும்போதுதான் அவற்றை அரசன் தலையிட்டுத் தீர்க்க வேண்டி வந்ததே ஒழிய மற்றபடி தத்தம் விஷயங்களில் ஒவ்வொன்றும் சுய அதிகாரம் பெற்று விளங்கின. இக் குழுக்களில் வியாபாரிகளினால் நிறுவப்படுவது 'ச்ரேணி' என்று அழைக்கப்படும். அர்த்த சாத்திரத்தில் ஒரு நிலையான தொழிலை மேற்கொண்டொழுகும் குழு ச்ரேணி எனச் சொல்லப்படுகிறது. இவர்கள் ஆயுதம் தாங்குபவர்களாகவும் இருந்திருக்கக் கூடும். மத, அற நிலையங்களை மேம்படுத்துவதோடல்லாமல் மக்களுக்குப் பலவகையான நன்மைகளை இத்தகைய அமைப்புகள் செய்துவந்தன எனக் கூறலாம். தொழிலையும் கலையையும், வளர்த்ததோடன்றிச் சுதந்திர வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் மூலமாகத் திகழ்ந்து சமுதாயத்திற்கே ஆபரணமாக இவை திகழ்ந்தனவென மஜூம்தார் கூறுகிறார்.[11]

கி.பி. நான்காம் நூற்றாண்டிற்குப் பிறகு இவை பல காரணங்களினால் அழியத் தொடங்கின. பதவிகள் பரம்பரையாக வரத் தொடங்கியதும் அந்தஸ்தை முன்னிட்டு அரச பதவிப் பெயர்களைச் சூட்டிக்கொண்டு நாளடைவில் அந்தகைய அதிகாரங்களைச் செலுத்த முயன்றதும், பதவியில் நிலைபெற்றதும்

[10] நாரத ஸ்மிருதி X, 2; I, 40.
[11] R. C. Majumdar, Corporak Life in Ancient India. பக்கம் 68

மற்றவர்களின் நலத்தைப் புறக்கணித்துத் தத்தம் குடும்ப நலத்தையே பெரிதாக நினைத்ததும், பேரரசுகள் தோன்றும் போது அவைகளுக்கு ஈடு கொடுக்க முடியாமலிருந்ததும் இவற்றின் அழிவிற்கான காரணங்களில் சில.

குடும்ப, குல ஆதாரங்களைக் கொண்ட கண அமைப்புகளையும், தொழில், வணிக ஆதாரங்களைக் கொண்ட ச்ரேணி போன்ற அமைப்புகளையும் தவிர, வைராஜ்யா, துவைராஜ்யா என்னும் அமைப்புகளும் கூறப்படுகின்றன.

ஜெயஸ்வால் என்பவரின் கருத்துப்படி வைராஜ்யம் என்பது அரசன் இல்லாமல், மக்களின் ஆதரவு பெற்று ஆளப்படும் முறை ஆட்சியாகும்.[12] ஆனால், டிரெக்மெய்ர் இவ்வாறு நினைக்கவில்லை.[13] காங்கிளேக்கும் இவை ஒருவகைக் குடியரசுகளாக விளங்கின என்பது உடன்பாடில்லை.[14] அர்த்த சாத்திரத்தில் விளக்கப்பட்ட முறையை ஒட்டிப் பார்க்கும்போது வைராஜ்யம் என்னும் அமைப்பானது வேற்றரசன் ஆட்சியினைக் குறிக்கிறது. நாட்டினை அயல் அரசன் கைப்பற்றி ஆளுவதால் ஏற்படும் நிலையினையே இது குறிக்கிறதே தவிர, முடியாட்சி முறையினின்றும் வேறுபட்ட அமைப்பினைக் கொண்டு விளங்குவதாக நாம் கருத இடமில்லை, இத்தகைய முறையைக் கௌடில்யர் ஆதரிக்கவில்லை என்றும் தெரிசிறது.

இரு அரசரின் கீழ் விளங்கும் நாட்டமைப்புகள் துவைராஜ்யம் எனப்படும். காளிதாசரின் மாளவிகாக்னிமித்ரம் என்னும் நாடகத்திலிருந்து தகப்பன், மகன், அல்லது இரு சகோதரர்கள் சேர்ந்து ஒரு நாட்டினை ஆளும் முறை துவைராஜ்யமாகும் எனத் தெரிகிறது. கௌடில்யருக்கு முன் உள்ளவர்கள் துவைராஜ்ய முறையானது ஆபத்தானது என்னும், மக்கள் இரு கட்சிகளாகப் பிரிவதால் உட்பூசல், கலகம், போட்டி இவைகள் தோன்றி நாடு அழிந்துபோகும் என்றும் கருதினார்கள்.

ஆனால், கௌடில்யர் வைராஜ்யம், துவைராஜ்யம் ஆகிய இரண்டையுமே வெறுத்தாரென்றாலும், பகையரசனின் ஆட்சிக்கு உட்படுவதைக் காட்டிலும் துவைராஜ்ய முறைக்கு உட்படுவது மேல் என்று கருதினார்.

[12] K. P. Jayaswal, Hindu Polity, பக்கம் 92-94
[13] டிரெக்மெய்ர் - பக்கம் 215, குறிப்பு.
[14] R. P. காங்ளே, கௌடில்ய அர்த்த சாத்திரம், III பக்கம் 123

நாட்டில் அரசன் இல்லாமல், பகையரசன் ஆட்சிக்கு வந்தால் அவன் கொடுங்கோல் ஆட்சி நடத்துவானுகையால் மக்கள் துன்புறுவர். இதனுல், நாட்டின் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களே ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்துவதால் இதைவிடச் சிறந்தும், பலம் பொருந்தியும் நாடு விளங்க ஏது வாயிருக்கும் என்று அவர் கூறுகிருர்.[15]

மொத்தத்தில் குப்தர் காலத்திலுங்கூடப் புகழுடன் விளங்கிய லிச்சாவி போன்ற குடியரசுகள் (அரசனற்ற அமைப்பின்றி) விளங்கின என்பதையும், (இக் குடியரசும், காம்போஜர்கள் குடியரசும் தொடக்கத்தில் ஆரியரல்லா அமைப்புகளா யிருந்திருக்கக் கூடும் என்று காங்ளே கூறுகிருர்)[16] மற்ற அமைப்புகள் சிறு சிறு குழுக்களாக ஓரளவு சுதந்திரம் பெற்று ஓர் அரசனின் கீழ் இருந்தன என்பதையும், நாட்டில் அரசனற்ற நிலே ஏற்படும் போது மீண்டும் அரசன் தோன்றித் தண்டத்திஞல் அமைதியை நிலேநிறுத்தும் இடைக்காலங்களில் தற்காலிகமாகச் செயல் படும் அமைப்புகளாகச் சில விளங்கின என்பதையும் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, பிராமண - சத்திரிய அரசியல் சமூக ஆதிக்கத்தின்கீழ் மச்சநீதி, தண்டக்கொள்கை ஆகியவை வலியுறுத்தப்பட்ட நாட்டில், அரசனற்ற ஆட்சிமுறை அதிலும் உண்மையான குடியரசுகள் ஆதரிக்கப்பட்டன, என்ருே பரவலாக விளங்கின என்ருே கொள்ளமுடியாது.

[15] அர்த்த சாத்திரம் I 17.53

[16] R. P காங்ளே, கௌடில்ய அர்த்த சாத்திரம், III பக்கம் 126

# 11. வேறு சில அரசியல் நூல்கள்

**காமந்தகரின் நீதிசாரம்**

இது குப்தர் காலத்தில் எழுதப்பட்டதெனப் பொதுவாக நம்பப்படுகிறது. இது கௌடில்யரின் அர்த்த சாத்திரத்தை ஒட்டி வரையப்பட்டதென இதன் ஆசிரியராலேயே சொல்லப்படுகிறது. நாடு, சமூகம் ஆகியவற்றிற்குப் பொருளியல் எவ்வளவு அத்தியா வசியமானதென இது தெளிவாக விளக்குகிறது. கௌடில்ய அர்த்த சாத்திரத்தில் காணப்படும் அரசியல் நிருவாக, நீதி, சட்ட நிருவாகப் பகுதிகள் காமந்தகரின் நீதிசாரத்தில் இடம் பெறவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது. மேலும், இந் நூலின் பெரும்பகுதி வெளிநாட்டு உறவு பற்றி அமைந்துள்ளதும் கவனிக்கத் தக்கது. இதிலிருந்து அதிகம் போரில் ஈடுபட்டு நாட்டின் தற்காப்பில் கவனம் செலுத்த வேண்டிய நிலையிலிருந்த அரசனின் பயனுக்காக எழுதப்பட்டதெனக் கூற இந் நூலில் இடமுண்டு.

இதில் அரசன் அதிக உரிமை பெற்றவனாகவும், எல்லையற்ற அதிகாரம் கொண்டவனாகவும் காட்டப்படுகிறான்.

மழையின்றி விளங்கும் வறட்சிக் காலத்தைக்கூட மக்கள் சமாளிக்க முடியும். ஆனால். அரசனற்ற சூழ்நிலையை மக்களால் தாங்கிக்கொள்ள முடியாது. ஆகவே, அரசன் மழையைவிட முக்கியமானவன். எனவே, நாட்டிற்குச் செய்யப்படும் தீங்கினை விட அரசனுக்குச் செய்யப்படும் தீங்கு அதிகக் கேடு விளைவிக்கும். ஏனெனில், நாட்டினைத் தீங்குகளிலிருந்து காக்கவே அரசன் இருக்கிறான் என்றெல்லாம் இதில் கூறப்படுகின்றன.

இவ்வாறு அரசன் உயர்த்திக் கூறப்பட்டபோதிலும் நாட்டின் ஏழு உறுப்புகளில் அரசன் மற்ற ஆறனையும்விட முக்கியம் பெற்றவனாகக் கூறப்படவில்லை. அரசனுக்குத் தெய் விகம் (Divinity) உண்டென்பதாகவும் கோரப்படவில்லை.

எதிரிகளை அடக்கும் திறன் உடையவனும், தன் மக்களைக் காப்பவனும், நல்வழியில் நடப்பவனுமாகிய அரசன் 'பிரஜாபதி' போல மதிக்கப்பட வேண்டும் என்றே கூறப்பட்டுள்ளது.[2]

[1] காமந்தகீயம் XV, 1. [2] மேற்படி I. 11

இதிலேயே அரசனது கடமைகளும் இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

கௌடில்யரைப்போலக், காமந்தகரும் அரசன் புலனடக்கம் கொண்டவனாக இருக்க வேண்டியதன் அவசியத்தைக் கூறுகிறார். யானையானது குழியில் விழுவதுபோலப் புலனடக்கமற்ற அரசன் வீழ்ச்சியடைகிறான் என்னும் கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது.[3]

தண்டனைகள் அளிக்காமல் அரசன் தன் மக்களைக் காக்க முடியாது.[4] ஆனால், தண்டனைகள் குற்றத்துக்கு ஏற்ற வகையில் அளிக்கப்பட வேண்டும். புனித நூல்களிலும், சமூக வழக்கிலும் விளங்குவதை ஒட்டி நீதி செலுத்தப்பட வேண்டும் என்பது காமந்தகர் அரசனுக்குக் கூறும் அறிவுரையாகும்.

வெற்றி நிச்சயமில்லாதவிடத்துப் போரினை மேற்கொள்வது தவிர்க்கப்பட வேண்டுமென்றும், போரின்றியே வெற்றியினை அடைய முயல வேண்டுமென்றும், போரில் எத்தகைய தந்திரங்களையும், உபாயங்களையும் கையாளினும் தவறாகாதென்றும் கூறப்படுகிறது.[5]

மொத்தத்தில் காமந்தக நீதிசாரம் கௌடில்ய அர்த்த சாத்திரத்தின் சில பகுதிகளுக்கு விளக்கம்போல் அமைந்துள்ளது.

**பிரகஸ்பதியின் அர்த்த சாத்திரம்**

பிரகஸ்பதி அர்த்த சாத்திரம் என்னும் தலைப்பில் நமக்குக் கிடைத்திருக்கும் நூலில் ஆறு அத்தியாயங்களே உள்ளன. இவை மூலநூலின் பகுதிகளா என்பதும் தெரியவில்லை. இது எக்காலத்தில் இயற்றப்பட்டது, யாரால் இயற்றப்பட்டது என்பனவும் தெரியவில்லை. இந் நூல் அரசியலைப்பற்றிப் புதிதாக எதுவும் சொல்லவில்லை. அரசியல்தான் உண்மையான இயலாகும் என்பது இதன் கூற்று. சில இடங்களில் பொருளின் மேன்மையும், சிலவிடங்களில் அறத்தின் மேன்மையும் வலியுறுத்தப்பட்டு விளங்கும் இந் நூல் தரும சாத்திர நூலினை ஒத்ததாகவும் விளங்குகிறது.

**சுக்கிர நீதி சாரம்**

அர்த்த சாத்திரத்தைவிடச் சிறிய நூலாகச் சுக்கிர நீதி சாரம் விளங்கியபோதிலும், அரசியல் நடத்தை மட்டுமன்றி, வாழ்வின்

[3] மேற்படி I, 37 [4] மேற்படி II. 40 [5] மேற்படி XVIII, 69

பல துறைகளும் இதில் இடம் பெற்றிருக்கின்றன. அரசியலைவிடத் தருமத்திற்கு அதிக இடமளிக்கப்பட்டிருக்கிறது. புத்த மதத்தின் செல்வாக்குக் குறைந்து மீண்டும் பிராமண மதத்தின் செல்வாக்கு உயரத் தொடங்கியதால் இவ்வாறு நேர்ந்திருக்கக் கூடும்.[6] போரில் எத்தகைய வழிகளைக் கைப்பற்ற வேண்டியிருந்தாலும், அரசன் மொத்தத்தில் நல்லவனாக இருத்தல் வேண்டும் என்னும் கௌடில்யரின் வாதம் இதிலும் சொல்லப்படுகிறது.

சுக்கிர நீதி சாரம் யாரால் எப்போது எழுதப்பட்டது என்பது விவாதத்திற்குரியதாகவே இருந்துவருகிறது. கி.மு. நூற்றாண்டுகளிலிருந்து கி.பி. 16ஆம் நூற்றாண்டுவரை இதன் காலம் வெவ்வேறு விதமாகக் கூறப்படுகிறது. மனு, கௌடில்யர், காமந்தகர் ஆகியோரது கருத்துகளும் இதில் இடம் பெற்றுள்ளன. நிருவாகம், அதிகாரம், பேரரசுத் தத்துவம் ஆகியவை கௌடில்யரின் நூலில் உள்ளது போலவே இதிலும் கூறப்பட்டுள்ளன. ஏழு உறுப்புக் கொள்கை கூறப்படும்போது அரசன் தலை போன்றவன், அமைச்சன் கண் போன்றவன் என்ற ஒப்புவமை விளங்குமாறு கூறப்பட்டுள்ளது.[7]

அரசன் சமூக வாழ்வின் பாதுகாவலனாகத் திகழ, தான் நற்குணம் நிரம்பியவனாகவும், சோம்பல் இல்லாதவனாகவும், எல்லா நிருவாகத்திலும் ஒரு கண் வைத்திருப்பவனாகவும் இருத்தல் அவசியம். அரசனது கடமைகளில் பாதுகாப்பு அளிப்பது, தண்டிப்பது, பகைவரை வெற்றி கொள்வது, வேள்விகள் செய்வது, தருமச் செயல்களில் ஈடுபடுவது நாட்டின் வளத்தைப் பெருக்குவது ஆகியவைகள் அடங்கும். நாட்டின் வரவு செலவுக் கணக்கினை அரசன் தானே கவனிக்க வேண்டும்.

சுக்கிர நீதி சாரத்தில் சட்டமானது தருமத்தை ஒட்டியே இருக்க வேண்டுமென்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. கௌடில்யர் நூலில் உள்ளதுபோல் இராச சாசனத்திற்கு முக்கிய இடமளிக்கப்படவில்லை. அரசின் ஆட்சி பீடமே தெய்விகமாகக் கருதப்படுகிறது. அரியணையில் ஏறும் நாய்கூட அரசன்போல் விளங்காதா என்று கேட்கும் இதன் ஆசிரியர், அரசன் மக்களின் தலைவனாகவும், பணியாளனாகவும் செயல்பட வேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக் காட்டுகிறார்.[8]

[6] டிரெக்மெய்ர் பக்கம் 222

[7] சுக்கிர நீதி சாரம் I, 62

[8] மேற்படி I, 745

அமைச்சரவை அதிக முக்கியம் பெற்று விளங்குகிறது. நிருவாக அதிகாரம் அமைச்சரவையிடமே இருந்தது. எதுவும் எழுத்து மூலமாக வடிக்கப்பட்டே கட்டளையாக்கப்பட வேண்டும். மத அமைச்சரும், அரச குமாரனும் இதில் மற்ற நிருவாகத் துறை அமைச்சர்களுடன் அங்கம் வகித்தனர். அமைச்சர்கள் அடிக்கடி ஒரு துறையிலிருந்து மற்றொன்றுக்கு மாற்றப்பட வேண்டுமெனவும்,[9] ஒரு திட்டத்தை அனைவரும் விவாதித்து முடிவுக்கு வர வேண்டுமெனவும், இவ்வாறு அமைச்சரவையில் ஏற்கப்பட்ட முடிவை அரசன் ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும் இந் நூல் கூறுகிறது. அமைச்சர்கள் பிறப்பின் மேன்மை பற்றித் தெரிந்தெடுக்கப்படாவிட்டாலும், நல்ல நடத்தையும் திறமையுமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். அவையில் எட்டு அமைச்சர்கள் இருந்தனரெனத் தெரிகிறது.

இதேபோல் அரசாங்க அலுவலர்களை நியமிக்கும்போதும் அவர்களின் திறமைக்கே முதலிடம் அளிக்கப்பட வேண்டும் என்று கூறும் சுக்கிர நீதி[10], வருண தருமத்தினை அடியோடு புறக்கணிக்க வேண்டுமென்று சொல்லவில்லை தத்தம் வருண தருமத்தினை ஒட்டி ஒழுகுவதாலேயே சமூகத்தில் இன்பமும், அமைதியும் மக்களுக்கு ஏற்படுகின்றன என்றும், ஆகவே, அரசன் வருண தருமத்தினைக் காப்பது தன் கடமையென்று கருத வேண்டுமென்றும் கூறுகிறது.

அர்த்த சாத்திரத்துக்குப்பின் வந்த நூல்களில் சுக்கிரநீதியில் தான் ஆட்சி நிருவாகத்துறை விவரமாகக் கூறப்பட்டுள்ளது. அரசனின் ஒப்புதல் இல்லாமல் மக்கள் எந்த நடவடிக்கையிலும் ஈடுபட முடியாது. விரும்பத் தகாதவர்கள் நாடு கடத்தப்படலாம். அரசு அலுவலரின் நடத்தைபற்றி மக்களில் பலர் குற்றம் சொன்னால் அலுவலர்மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

வியாபாரத்தைவிட நிலமே அதிக வருமானம் தருவதாகக் கருதப்படுகிறது. வருமானத்தையும் உற்பத்தியையும் பாதிக்காத வகையில் வரிக்கொள்கை இருக்க வேண்டுமென்பது கூறப்பட்டுள்ளது.

யாருக்கும் வரியிலிருந்து விலக்களிக்கப்படவில்லை. அதிக செல்வமுடையோர் அதிக வரி தர வேண்டும். வாழ்க்கையின் குறைந்த வசதிகளைப் பாதிக்குமாறு வரிகள் அமையக் கூடாது.

[9] மேற்படி I, 382.

[10] மேற்படி II. 111

குற்றங்கள் செயலாலும், கூட்டுறவாலும், பேச்சாலும் செய்யப்படலாம். குற்றவியலின்கீழ் வழக்குகள் நீதிமன்றத்தால் தொடரப்பட்டன, விசாரணை பகிரங்கமாகவே இருத்தல் வேண்டும். நீதி செலுத்துவதில் குழு மரபுகளையும், பழக்க வழக்கங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

அரசன் கொடுங்கோலனாக விளங்கினால் மக்கள் அவனுக் கெதிராகப் புரட்சி செய்யும் உரிமை படைத்தவர்கள் என்பது சுக்கிர நீதியில் கூறப்படுகிறது.[11]

பஞ்ச தந்திரம் (ஐந்து புத்தகங்கள்)

இது ஒரு சமண முனிவரால் சொல்லப்பட்டது என்று கூறப் படும். இது தன் காலத்தால் புராண இதிகாசங்களுக்கும், அர்த்த சாத்திரங்களுக்கும் பிற்பட்டதே.

குறுகிய காலத்தில் மூடர்களான●தன் புதல்வர்கள் எப்படி அரசியலைச் கற்க முடியும் ; உலகம் தெரிந்து அரசாளும் தன்மை யும், அறிவும் ஏற்படும் என்று கலங்கும் அரசனுக்கு ஆறுதலாக ஆசிரியர் ஒருவர் தான் சில கதைகளைக் கூறுவதன்மூலம் அவர் களுக்கு அரசியல் தெளிவும் அறிவும் பிறக்குமாறு செய்கிறார் என்பன பஞ்சதந்திரத்தின் அமைப்பு. மனிதர்களும், மிருகங் களும், பறவைகளும் இடம் பெறும் இக் கதைகளில் ஒன்றுக்குள் ஒன்றாக பல மடிப்புகளாகக் கதைகள் உள்ளன. ஒவ்வொன்றும் ஓர் அரசியல் கொள்கையினைக் கூறுவதாக அமைகிறது.

இடமும் காலமும் கருதி, தன் வலிமையும் பகையினர் வலிமையும் அறிந்து, துணிவுடனும் அறிவுடனும் உபாயங்களைக் கையாண்டு ஒருவன் எத்தகைய ஆபத்தையும் சமாளிக்க முடியும் என்பதே இதன் கருத்தாகும், அறநெறி இதில் வலியுறுத்தப்பட வில்லை. போரில் எக் கொள்கையைப் பின் பற்றியும் எதிரியினை வெற்றி கொள்வது முறையே என்று கூறுவனபோல் இக் கதைகள் அமைந்துள்ளன. மொத்தத்தில் நான்கு உபாயங்களையும், அவற்றைப் பயன்படுத்தும் வழிமுறைகளையும், அவற்றின் சிறப்பு களையும் கதைமூலமாகக் கூறும் நூல் பஞ்சதந்திரமாகும் எனலாம்.

இதைத் தவிர, ஹிதோபதேசம் என்னும் நூலும் மிருகங் கள், பறவைகள் ஆகியவற்றை மையமாக வைத்து உபாயங்கள் எவ்வாறு கையாளப்பட வேண்டும் என்பதனைக் கதைகளின் மூலமாகச் சொல்லுகிறது.

[11] மேற்படி IV 1156

இராமாயணமும் மற்றப் புராணகளும்

இராமாயண மகாபாரதக் காவியங்களில் வரும் கதைகளும், சம்பவங்களும் கி.மு. பத்தாம் நூற்றுண்டிலோ அதற்கு முன்போ நடந்திருக்கக் கூடும்; அல்லது அவை கற்பனையாக இருக்கக்கூடும். இவற்றை முறையே வால்மீகியும், வியாசரும் எழுதியிருக்கக் கூடும்; அல்லது இவர்கள் பல கதைகளைத் தொகுத்து வடிவம் கொடுத்திருக்கூடும். எப்படியானபோதிலும், இவைகள் கி.பி. முதலாம் நூற்றுண்டுகளில் திருத்தியமைக்கப்பட்டு ஏறக்குறைய தற்போது நாம் காணும் வடிவங்களில் அமைந்தன என்று கொள்வது தவருகாது.

இராமாயணம் பாரத்தை விடப் பழமையானது என்று கூறப் படுகிறது. இராமாயணம் திரேதா யுகத்திலும், மகாபராதம் துவாபர யுகத்திலும் நடந்ததாகப் புராண வரலாறு கூறும். இராமர் கடவுளின் ஏழாவது வரலாறு என்று கூறப்படுவது கவனிக்கத் தக்கது. இதற்கு முன் நிகழ்ந்த மச்ச அவதாரம் முதலாகப் பலவும் பாகவதத்தில் சொல்லக் காண்கிறோம். ஆனால், இந்து மதத்தில் அவதாரக் கொள்கை முதன்முதலாகக் கி.மு. கடைசி நூற்றுண்டுகளில்தான் கூறப்படுகிறது என்பதை நாம் முன்பே கூறியிருக்கிறோம்.

இராமாயணக் கால அரசியல் பாரதத்தில் கூறப்பட்டுள்ளதை காட்டிலும் எளியதாக, பழமையானதாக உள்ளது. தவிர, கீதை, சாந்திபர்வம் போன்ற பகுதிகள் இராமாயணத்தில் இல்லாததால் கதைப் போக்கினை ஒட்டி அரசியல் பற்றிய செய்திகளைத் திரட்டிக் கொள்ள நேருகிறது. சமூகம் பற்றிய செய்திகளும் குறைவே.

மகாபாரதம் போன்றே இராமாயணத்திலும் வேள்விகள் அரசியலில் முக்கியப் பங்கு வகித்தன. தசரதனும், இராமனும் வேள்விகள் செய்து, தேவர்களின் உதவியை அடைந்தனர் என்பது கதைப்போக்கு.

நாட்டின் எல்லைகள் குறுகியனவாகவே இருந்திருக்கவேண்டும். பிராமணர்கள் செய்வாக்குப் பெற்றிருந்தனர். அரசன் மக்களின் ஆதரவு பெற்று நாட்டை நடத்துவது எளிதாக இருந்தது. போர் முறைகளில் மத்திர தந்திரங்களும் கையாளப்பட்டன. அரசு முறை பரம்பரையாக இருந்து மூத்த மகனுக்குப் பட்டம் கட்டுவதே முறையானதாகக் கருதப்பட்டது. அரசன் தருமத்தை ஒட்டித், தீயவர்களைத் தண்டித்து நாட்டை ஆளவேண்டியது

கடமை என்பது போன்ற சில பொதுச் செய்திகளைத் தவிர, குறிப்பாக விவரமாக அரசியல்பற்றி நாம் அறிந்துகொள்ளக் கூடியது அதிகம் இல்லை.

இது போலவே மற்றப் புராணங்களும் பல்வேறு காலங்களில் பலரால் கூறப்பட்ட பழங்கதைகளின் தொகுப்புகளாக விளங்குகின்றன அக்கினி புராணத்திலும், விஷ்ணு புராணத்திலும் மற்றும் பல புராணங்களிலும் மச்ச நீதிக்கொள்கையும், அரசன் கொடுங்கோலனாக இருந்தாலும் அரசனற்ற நிலையைவிடக் கொடுங்கோலரசுமுறை விரும்பத் தக்கது என்னும் கொள்கையும் கூறப்படுகின்றன. அரசன் புராணங்களில் தெய்விகம் வாய்ந்தவனாய்க் காட்டப்படுகிறான். அரசன் மக்களுக்கு வழி காட்டியாகவும், நன்னடத்தை உள்ளவனாகவும், அதிகக் கண்டிப்பும் அதிகக் கழிவிரக்கமும் இருக்கக் கூடாதவனாகவும், அமைச்சர் அந்தணர் ஆகியோரது உரை கேட்டு நடப்பவனாகவும் இருக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. மக்களை நன்கு பாதுகாக்கும் அரசன் ஆறில் ஒரு பங்கு வரி பெறும் உரிமை பெறுகிறான்.[12]

வேதங்கள், நல்லோர் வாழ்வு, மரபு, அரசனின் கட்டளைகள் ஆகிய நான்கும் சட்டம். நீதி ஆகியவற்றின் அடிப்படையாக விளங்கினவெனத் தெரிகிறது. கிராமங்களே அரசியலின் அடிக் கூறுகளாக விளங்கின.[13]

[12] மார்கண்டேய புராணம் 129. 28 அக்கினி புராணம் 223.9.
பிருகத் தரும புராணம் III., 3.10

[13] அக்கினி புராணம் 223.24.

# 12. தரும சாத்திரங்கள்

கி.மு. முதலாம் நூற்றுண்டுகளில் தரும சூத்திரங்கள் செய்யுள் வடிவமாக்கப்பட்டுச், சட்ட நோக்குகள் அதிகம் பெற்று விளங்குமாறு செய்யப்பட்டன. இவை பொதுவாகத் தரும சாத்திரங்கள் எனப்படும். கானே என்பவர் ஐயாயிரத்துக்கும் அதிகமானவர்கள் தரும சாத்திரங்களை இயற்றியுள்ளனர் என்று குறிப்பிடுகிருர்.[1] இவற்றில் முக்கியமானவை மனு, யகஞ வால்க்யர், நாரதர், பிரகஸ்பதி ஆகியவர்களின் பெயர்களால் வழங்கப்படுகின்றன. இவர்கள் அனைவரும் பழம்பெரு முனிவர்கள் என்பது அறிந்ததே. சமூகத்தில் தரும சாத்திரங்கள் மதிப்பும், பெருமையும் பெறும் பொருட்டும், இவற்றிற்கு அதிகாரம் ஏற்பட வேண்டிய அவசியத்தை உணர்ந்தும் இத் தரும சாத்திரங்களை ஆக்கியவர்கள் மனு போன்றவர்களின் பெயர்களில் இவற்றை வழங்கியிருத்தல் கூடும். இந் நூல்கள் யாரால், எக் காலத்தில் இயற்றப்பட்டன என்பதற்குத் தெளிவான தடயங்கள் கிடைக்கவில்லை. எப்படியானபோதிலும், இத் தரும சாத்திரங்கள் சமூக நெறியொழுங்குகளை வரையறைப்படுத்தி இந்து மதக் கோட்பாடுகளோடு இணைத்து இந்துச் சட்ட நெறித் தொகுதிகளாக வெகு காலமாக விளங்கிவருகின்றன என்பதில் ஐயமில்லை.[2] விரிவடையும் சமுதாயத்தின் சிக்கல்களைச் சமாளிக்கவும், தேவைகளைப் பூர்த்திச் செய்யவும், வேதங்களும், சூத்திரங்களும் போதாமையினுல் இவற்றை ஒட்டியும், விரித்தும் தருமசாத்திரங்கள் ஏற்படலாயின. காலப் போக்கில் வேதக் கல்வியில் தரும சாத்திரங்களும் இன்றியமையாத பகுதிகளாக விளங்கி வேதங்களை ஒத்த மதிப்பினைப் பெற்றன.

கொள்கை அளவிலும், அனுபவ ரீதியிலும் சமூக வாழ்வின் எல்லாத் துறைகளையும் உள்ளடக்கி இயற்றப்பட்டனவோ என ஐயுறத்தக்க அளவில் குடும்ப, சமூக, அரசியல் வாழ்வுகளின் பல

[1] P. V. Kane - History of Dharmasasthra, I. Appendix.

[2] மனு தரும சாத்திரத்தின் ஆசிசியர், காலம் பற்றிய செய்திகளுக்கு The Laws of Man (Translated by G. Buhler) என்னும் நூலின் முகவுரையினைப் பார்க்கவும்.

சிக்கலான பிரச்சனைகள் மனு தரும சாத்திரத்திலும், பிற தரும சாத்திரங்களிலும் இடம் பெற்றுள்ளன. ஆனால், ஹென்றி மெய்ன் என்பவர் தரும சாத்திரங்கள் அனுபவ ரீதியான கொள்கைகளைக் கூறவில்லை என்று கூறுகிறார்.[3]

அர்த்தசாத்திரங்களைப் போலல்லாது, வேதபூர்வமான புனித் மரபுச் சட்டங்களையே தரும சாத்திரங்கள் ஏற்றிக் கூறும். அர்த்த சாத்திரத்திற்கும் தரும சாத்திரத்திற்கும் ஒரு பிரச்சனையை தீர்க்கும் முறையில் வேறுபாடு காணப்பட்டால், தரும சாத்திரத்தினை ஒட்டியே அதற்குத் தீர்வு காணுதல் வேண்டும் என யக்ஞ வால்க்யர் கூறுகிறார்.[4] என்றாலும், இவ் விரண்டிற்குமிடையே உள்ள வேறுபாடு எங்கும் விளக்கமாகக் கூறப்படவில்லை. மனு ஸ்மிருதி, யக்ஞ வால்க்ய ஸ்மிருதி ஆகிய இரண்டும் தருமம், அர்த்தம் ஆகிய இரண்டனையுமே கூறும் சாத்திரங்களாகும், பிரகஸ்பதி, ஸ்மிருதி சாத்திரங்களில் அர்த்தம் முதலாவதாகக் கருதப்படுவதிலிருந்து, ஸ்மிருதி இலக்கியங்களுக்கும், அர்த்த சாத்திர இலக்கியங்களுக்கும் ஆரம்பத்தில் அதிக வேறுபாடுகள் இல்லை என்பது புலனாகும். கௌடில்யர், காமந்தகியர் ஆகியோரது அர்த்த சாத்திரங்களுக்குப் பிறகே இவ் விருவகை சாத்திரங்களுக்குமிடையே உள்ள வேறுபாடானது ஓரளவு தெளிவாகப் புலப்படுகிறது.

**மனு**

மனு தரும சாத்திரம் தரும சாத்திரங்களில் முதன்மையாகவும், புகழ் பெற்றதாகவும் விளங்கிறது. இந்துச் சட்டத்தில் அதிகாரப் பூர்வமாகக் கொள்ளப்படுவதும் இதுவே.

மனு மனசாட்சியினையும் புனிதச் சட்டத்திற்கு ஆதாரமாகக் கருதுகிறார். பழைய ஒழுக்கத்தைக் காட்டிலும் நல்லொழுக்கமே சட்டத்துக்கு ஆதாரமாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென இவர் கூறுகிறார். சட்டப் பிரச்சனைகளில் தீர்வு காணும்போது முன்பு வழக்கில் இவை போன்றவை எவ்வாறு தீர்க்கப்பட்டன என்பதை ஒட்டியே தீர்வு காண வேண்டும் என்றும் கூறுகிறார். மனுவும் அரசன் ஏற்றம் பெற்று விளங்க வேண்டியதன் அவசியத்தைக் கூறுகிறார். அரசன் இல்லாவிடிலோ, அல்லது தண்டம் செலுத்தத் தவறியபோதிலோ பலம் படைத்தவன், பலவீனர்களைத் துன்புறுத்தி வாழ்வான் என்னும் மச்ச நீதிக் கொள்கையினைக் கூறுகிறார்.[5] அரசன் இறைவனால் படைக்கப்

[3] Sir Henrv Maire, Ancient Law, பக்கம் 14.
[4] யக்ஞவால்க்ய ஸ்மிருதி II, 21 [5] மனுஸ்மிருதி VII, 20

பட்டு அரசாட்சி செய்ய நியமிக்கப்படுகிறான்; மச்ச நீதிச் சூழ்நிலையிலிருந்து மக்களைக் காக்கும் பொறுப்பு அவனுடையது என்று கூறுகிறார். இந்திரன், சூரியன், வாயு, யமன், வருணன், சந்திரன் அக்கினி, பிருதுவி ஆகிய தேவதைகளின் கூறுகள் பெற்று அரசன் விளங்கினாலும்[6] இறைவன் ஆவான் என்பதுசொல்லப்படவில்லை. தவிர மனம் போனபடி அதிகாரம் செலுத்தவும் கூடாது. இரு முனையும் கூரான வாள் போன்றது தண்டம். இது தவறாகச் செலுத்தப்பட்டால் தன்னைத்தானே அரசன் அழித்துக்கொள்ள நேரிடும்.[7]

வருணாசிரம தருமம் இறைவனால் ஏற்படுத்தப்பட்டது. இதனைக் காப்பது அரசன் கடமை என்பது மனுவில் வலியுறுத்த பட்டுள்ளது. பிராமணரின் மேன்மைக்கு முதலிடம் தருவது போல் மனுஸ்மிருதி அமைந்துள்ளது. சமூக வளமானது அரசனைப் பொறுத்திருந்தபோதிலும், அரசனின் சக்தி பிராமணர்களின் ஆன்மீக சக்தியினைப் பொறுத்தே விளங்குகிறதென்றும், இவ்விருவரும் (சத்திரியர், பிராமணர்) ஒருவருக்கொருவர் துணையாக நின்றால்தான் இரு சாதியினரும் வளர முடியும் என்றும் கூறப்படுவதிலிருந்து இது விளங்கும்.[8]

மனு கூறும் நாட்டின் ஏழு உறுப்புக் கொள்கையானது கௌடில்யர் கூறும் ஏழு உறுப்புக் கொள்கையிலிருந்து சற்றே மாறுபட்டுள்ளது. ஏழு உறுப்புகள் இரண்டு நூல்களிலும் ஒரே மாதிரியாகக் காணப்பட்டாலும் இவை ஒன்றிற் கொன்று தொடர்புபடுத்தப்படுவதில் வேற்றுமை உள்ளது, மனுவில் ஏழு உறுப்புகளில் அனைத்துமே சமமாக வைத்து. எண்ணப்படுகின்றன. உடலொப்பனைக் கூற்றாக இக் கொள்கை அமைக்கப்பட்டிருக்கலாம்.

மனுவும் அர்த்த சாத்திரத்தில் உள்ளது போன்ற மண்டலக் கொள்கையினைக் கூறியுள்ளார். ஆனால், இது விரிவாக அமையவில்லை எனலாம்.

**யக்ஞ வால்க்ய ஸ்மிருதி**

யக்ஞ வால்க்ய ஸ்மிருதி கௌடில்ய அர்த்த சாத்திரத்தையும், மனு தர்ம சாத்திரத்தையும் ஒட்டியே அமைக்கப்பட்டுள்ளது. இது குப்தர்கள் காலத்திய நூலாக இருக்கலாம். இது மூன்று பகுதிகளாக விளங்குகிறது. முதல் பகுதியில் நன்னடத்தை எது

[6] மேற்படி VII, 6. [7] மேற்படி IX, 245 [8] மேற்படி IX, 319

என்பதும், இரண்டாவதில் பிராயச்சித்தமும் (expiation) மூன்றாவதில் குற்றவியல் சட்டமும் சொல்லப்படுகின்றன. இதில் தருமக் கொள்கைகளைவிட அரசியல் சட்டக் கொள்கைகள் அதிக இடம் பெறுகின்றன. அரசனின் அதிகாரமும், கடமைகளும் மனுவில் உள்ளதைவிட அதிகமாகக் காணப்படுகின்றன. சட்டத் தொகுதிகளுக்குள் முரண்பாடு இருப்பின் பரவலாக வழக்கிலிருக்கும் முறையை ஒட்டித் தீர்ப்பளிக்கலாமெனவும், புனிதச் சட்டமானது பெரும்பாலோரின் அதிருப்திக்கு உள்ளாகும்போது அதனை அவர்களுக்கு இணக்கமாக மாற்றியமைக்க வேண்டும் எனவும், தன் ஆட்சியின்கீழ் வரும் அந்நிய நாட்டினரின் மரபினை மதித்து நடக்க வேண்டுமெனவும் இதில் கூறப்பட்டுள்ளன.[9] மதச் சட்டமும், மதச் சார்பற்ற பொதுச் சட்டமும் தனியே பிரிக்கப் பட்டு விளங்குகின்றன.

நாரத ஸ்மிருதியில் மத, நன்னடத்தைக் கோட்பாடுகள் சொல்லப்படாமல், சட்டவியலாக மனித ஒழுக்கம் ஆராயப் படுகிறது. அரசன் இயற்றும் சட்டம் (royal decree) மற்ற வகைச் சட்டங்களைப்போல் முக்கியமானதாகச் சொல்லப்பட்டுள்ளது.

ஸ்மிருதிகள் மேற்கண்ட வகையில் ஒன்றிலிருந்து ஒன்று சிற்சில வகைகளில் வேறுபட்டிருந்தாலும், பெரும்பாலும் அவற்றிற்கிடையே பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. அரசனின் கடமைகள், பிராமண-சத்திரியத் தொடர்பு, வருணாசிரம தருமம், சட்டத்தின் கூறுகள், தண்டக் கொள்கை ஆகியவற்றில் பெரும்பாலும் உடன்பாடு காணப்படுகிறது.

### சட்டமும், நீதியும்

சட்டப் பிரச்சனைகள் பதினெட்டு வகைகளாகப் பிரிக்கப் படலாம் என்று மனு கூறுகிறார். கீழ்க்கண்டவற்றிலிருந்து பிரச்சனைகள் எழக்கூடும்.[10]

(1) கடனைத் திருப்பிக் கொடுக்காதிருத்தல்
(2) பொருளினைப் பாதுகாப்புக்காக அளித்திருத்தல்
(3) சொந்தமற்ற பொருளை விற்றல்
(4) கூட்டுறவு

[9] யக்ஞவால்க்ய ஸ்மிருதி II, 21; XIII, 343.
[10] மனுஸ்மிருதி VIII, 4-7

(5) அன்பளிப்புகள்
(6) ஊதியம் அளிக்காதிருத்தல்
(7) ஒப்பந்தங்களை நிறைவேற்ருதிருத்தல்
(8) விற்றல், வாங்கல்
(9) வேலைக்காரர்களுடன் தகருறு
(10) எல்லைத் தகருறு
(11) அடிதடி
(12) தூற்றல்
(13) திருட்டு
(14) கொள்ளை, காயமேற்படுத்தல்
(15) முறையற்ற ஆண் - பெண் தொடர்பு
(16) கணவன், மனைவி கடமைகள்
(17) சொத்துகளைப் பங்கிடுதல்
(18) சூதாடுதல்

பிரகஸ்பதி ஸ்மிருதியில் குத்து வெட்டு, சொத்துத் தகருறு ஆகிய இரண்டு வகைகளின்கீழ்ச் சட்டப் பிரச்சனைகள் பிரிக்கப்பட்டுள்ளன. குற்றவாளி எத் தொழிலைச் செய்பவனே அத் தொழில் செய்பவர்களாலேயே விசாரிக்கப்பட வேண்டும் என்று மனு, யக்ஞவால்க்யர், பிரகஸ்பதி ஆகிய மூவரும் கருதுகிருர்கள். சாட்சிகள் எந்த வருணத்தைச் சேர்ந்தவர்களாயிருப்பினும் அவர்களது சாட்சியம் ஒப்புக்கொள்ளப்பட்டது. என்ருலும், கீழ் வருணத்தைச் சேர்ந்தவர், மேல் வருணத்தாருக்கு எதிராகச் சாட்சி சொல்வது ஒப்புக்கொள்ளப்படவில்லை. பெண்கள், சிறுவயதினர், அரசாங்க அலுவலர், அங்கக் குறைபாடுள்ளவர், குற்றவாளிகள் ஆகியோர் தகுந்த சாட்சிகளாகக் கருதப்படவில்லை. உண்மை கூறுவதனுல் ஒருவன் மரணதண்டனைக்குள்ளாகலாம் என்னும் நிலையில், அவனைக் காக்க பொய்சாட்சி சொல்லலாம் என மனு கூறுகிருர். இதேபோல் தன் பொருளை மாற்ருனிடமிருந்து எவ் வழியிலும் தானே சட்டத்தின் துணையின்றி மீட்கலாம் என்றும் கருதுகிருர்.

சாட்சியங்களும், சான்றுகளும் குற்றவாளியை நிர்ணயிக்க போதுமானவைகளாயில்லாதபோது துன்புறுத்தல் வழிகள் மேற்கொள்ளப்பட்டன. அநேகமாகப் பிராமணர்களுக்குத் தண்டனையில் சலுகைகள் காட்டப்பட்டன.

காத்யாயன ஸ்மிருதியில் மட்டும் சத்திரியர்களுக்கும், பிராமணர்களுக்கும், மற்றவருக்கு விதிக்கப்படுவதுபோல் இரண்டு அல்லது நான்கு மடங்கு தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளன.[11]

[11] காத்யாயன ஸ்மிருதி 485

தண்டனைகளில் உடல் துன்புறுத்தலும், சிறை தண்டனையும், கட்டாய வேலையும், அபராதமும் முக்கிய முறைகளாக விளங்கின. மரண தண்டனையும் சொல்லப்பட்டுள்ளது. மக்களின் கருத்தை அறிந்துகொண்டு காலப்போக்கில் ஏற்படும் சமூக மாறறங்களை அறிந்து அவற்றை ஒட்டிச் சட்ட நீதிமுறை அமைய வேண்டும் என்னும் கருத்து யக்ஞவால்க்ய ஸ்மிருதியில் காணப்படுகிறது. மொத்தத்தில் இவைகள்தாம் சட்டங்கள் என மக்களால் அங்கீகரிக்கப்பட்டன என்றும் சட்டங்களாக இந்து மதத்தில் விளங்கின என்றும் கூறலாம்.

பிராமணர்களே நீதிபதிகளாக விளங்கினர். தவறான தீர்ப்பளிப்பின் குற்றத்தின் பாவம் அவர்களைச் சாரும் என்று சொல்லப்பட்டுள்ளதை நாம் காண்கிறோம்.

குற்றவியல் சட்டப்படி வழக்கின் இரு தரப்பினரும் தாமே வாதாடவும், சீரியல் (civil) சட்டப்படி சட்டமறிந்த அறிஞர் துணையுடன் வாதாடவும் வழிகள் இருந்தன. வழக்குகள் பகிரங்கமாக விசாரிக்கப்பட்டன. நீதிபதிக்குத் துணையாக நடுவர்களும் (Juiy) இருந்தனரென்று ஸ்மிருதிகளிலிருந்து தெரிகிறது. இவர்கள் பிராமணர்களாக இருக்க வேண்டும் என்று அவை கூறுகின்றன. சிலவிடங்களில் வழக்கில் தொடர்புடையவர்களின் மரபுச் சட்டங்கள் பற்றிய செய்திகளே விசாரிக்கப்பட வேண்டிய நிலை இருந்தால் அவர்களின் வருணத்தாரே நடுவர்களாக இருக்கலாம் எனவும் தெரிகிறது.

குற்றத்தை விசாரித்துத் தண்டிப்பதில் நடுநிலை வழுவாது, குற்றம் ஏன் எவரால் செய்யப்பட்டது என்பதைப் பார்த்து நடுவரும், நீதிபதியும் செயல்பட வேண்டும். பைத்தியக்காரர்கள், குடிபோதையிலுள்ளவர்கள், வியாதிக்காரர்கள் செய்யும் ஒப்பந்தங்கள் அவர்களைக் கட்டுப்படுத்தாவென மனு கூறுகிறது. வழக்கை விசாரணைக்கு கொண்டுவருவதில் காலதாமதம் தவிர்க்கப்பட வேண்டுமெனவும், சட்டங்கள் கட்டளைகள் இவை யாவருக்கும் தெரியும்படி செய்யப்பட வேண்டுமெனவும் கூறப்படுகின்றன.

கௌடில்ய அர்த்த சாத்திரத்தில் சொல்லப்படுவதுபோல் வெளிநாட்டுக் கொள்கை விவரித்துக் கூறப்படாதபோதிலும், மற்ற முறைகள் பயனளிக்காதபோதே போர் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. தூதர் அமைதிக்குப் போராடுபவராக விளங்குகிறார்.

பகுதி II

# 13. தமிழர் ஆட்சிமுறையும், அரசியலும்

இந்தியாவில் ஆரியர் வருகைக்கு முன்பே ஒரு சிறந்த நாகரிகம் விளங்கியதென்பதும், அது திராவிட நாகரிகம் என்பதும் ஐயப் பாட்டிற்கு இடமின்றி அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட தாகும். மொகஞ்சதாரோ, அரப்பா என்னும் இடங்களில் தொல்பொருள் ஆராய்ச்சியாளாரால் கண்டுபிடிக்கப்பட்ட வற்றைக் காட்டிலும் தொன்மையான பண்பாட்டினைக்கொண்ட மக்கள் தெற்கே, அதிலும் குறிப்பாகத் தமிழகத்தில் வாழ்ந்தனர் என்பதை இலக்கியங்கள் மூலம் உணர முடியும். பஃறுளியாறும், புகாரும், கூடலும், முதலிரு தமிழ்ச்சங்கங்கள் பற்றிய விரிவான செய்திகளும், தொல்பழந்தமிழ் நூல்களும் கடலுக்கு இரையாகிப் பழந்தமிழர் அரசியல் பற்றிய ஆராய்ச்சியினை வெகுவாகப் பாதிக்கின்றன. எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும், இரட்டைக் காப்பியங்களும் இன்னோரன்ன தமிழ் இலக்கியங் களும் பழந்தமிழ் இலக்கியங்களே. இவற்றில் புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை, பதிற்றுப்பத்து போன்ற நூல் களிலிருந்து நாம் அக் கால அரசியல் பற்றித் திரட்டும் செய்தி கள் உண்டு. எனினும் திருக்குறளே நமக்கு அரசியல் பற்றி விரிவா கக் கூறும் நூலாக உள்ளது.

ஆனால், இச் சங்க காலத்தினை நிர்ணயிப்பதில் அறிஞர்களுக்க் கிடையே கருத்து ஒருமைப்பாடு இல்லை. கி.மு. ஆறும் நூற்றாண்டு முதல் கி.பி. ஏழாம் நூற்றாண்டு வரையுள்ள இடைக்காலத்தைப் பல அறிஞர்கள் சங்க காலத்தினை பலவிதமாக அறுதியிட்க் கூறுவர். இதை விரிவாக ஆராயப் புகுவதென்பது இந் நூலைப் பொறுத்த அளவில் முடியாததொன்று; மேலும், அதற்கு அவசியமுமில்லை. கி.மு. மூன்றும் நூற்றாண்டிற்கும். கி.பி. மூன்றும் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலம் சங்க காலம் எனக் கொள்ளலாம். இதுவே பொதுக் கருத்தாகும்.

தமிழ் இனம், இலக்கியங்களிலும் கலைகளிலும் தன்னெழுச்சி யினையும், மேம்பாட்டினையும் கொண்டு நீண்ட சரித்திரப் பின்னணியினை உடையதாக இருந்திருக்கிறது. இப் பின்னணியின்

முதலும், இடையும் ஆங்காங்கே நமக்குச் சான்றுகளோடு கிட்டாவிடினும், இம் மரபினை ஓரளவு ஊகத்தினாலும், இலக்கியங்கள் மூலமாகவும், கல்வெட்டுகள், செப்பேடுகள் மூலமாகவும் நாம் அறிந்துகொள்ள முடியும்.

புத்த, சமண மதங்கள் தோன்றிய கால முதல் மதம், அரசியல் ஆகிய காரணங்களினால் வடக்கிலிருந்து மக்கள் தெற்கே வர ஆரம்பித்தனர். படிப்படியாகக் காலப்போக்கில் நிகழ்ந்த இம் மக்கள் பெயர்ச்சியினால் வட, தென் நாகரிகங்கள் ஓரளவு கலந்தன. அலெக்சாந்தரின் படையெடுப்பினால் இது மேலும் அதிகரித்திருக்கக்கூடும். இதன் விளைவாக வருணாசிரம தருமங்கள் தமிழ் நாகரிகத்தில் புகுந்தன. சங்ககால இலக்கியங்களில் இதன் சான்றுகள் அதிகம் இல்லாவிடினும், காலம் செல்லச் செல்ல இவ் விரு பண்பாட்டொழுக்கங்களின் கலப்பு அதிகமாயின என்பது தெளிவு. என்றாலும், இக் கலப்பு முழுமையாக ஏற்படவில்லை. தமிழ்ப்பண்பாடு தன் தனித்தன்மையை இழந்துவிடவில்லை என்பது இந்த 20ஆம் நூற்றாண்டிலும் நாம் கண்கூடாகக் காண்பதே.

ஆரிய நாகரிகத்திலும் திராவிடப் பண்பாடுகள் புகுந்தன. பல சிறு திராவிடத் தெய்வங்களைவைத்துப் புராணங்கள் புனையப் பட்டன. பல திராவிடச் சொற்கள் வடமொழியில் இடம் பெற்றன. குப்தர் காலத்திற்குப்பின் சமண, புத்த மதங்களின் ஆதிக்கம் தமிழ்நாட்டில் அதிகமாயிற்று. இதன் விளைவு தமிழ் நாட்டு அரசியலிலும் பிற்காலத்தில் தென்படலாயிற்று.

பிம்பிசாரரின் தென்னிந்தியப் படையெடுப்பிற்குப் பின், ஏறத்தாழ அசோகர் இறக்கும் தறுவாயில், சாதவாகனர்களின் ஆதிக்கம் தமிழகத்தை பீடித்தது. சிலப்பதிகார, வஞ்சிக் காண்டத்தில் சேரன், செங்குட்டுவன் வட அரசர்களை தோற்கடித்ததாகக் கூறப்படுவது சாதவாகனர்களைக் குறிக்கும் என்றும் கூறப்படுகிறது. பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் என்னும் சேர அரசன் போர் தொடங்குமுன் இரு தரப்பினருக்கும் உண்டியளித்தான் என்பது சேரரின் சிற்றரசரான ஐம்பெரும் வேளிருக்கும் சாதவாகனருக்குமிடையே நடந்த போரினைக் குறிக்கும் என்று கூறுவருமுளர். எப்படியாயினும் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து தமிழகத்தின் அரசியலை நாம் சங்க இலக்கியங்கள் மூலம் அறியலாம். குறிப்பாகப் பதிற்றுப்பத்து என்னும் சங்க காலத் தொகுப்பு நூல் சேரரின் வரலாற்றை ஓரளவு விளக்குகிறது.

அசோகரின் கல்வெட்டுகள், புத்த நூலாகிய 'மகாவம்சம்', கலிங்கத்துப் பரணி, அன்பில் செப்பேடுகள் முதலியவை கூறும் செய்திகளிலிருந்தும் இலக்கியங்களிலிருந்தும் சோழர்களைப் பற்றிய செய்திகளை அறிகிறோம்.

இதேபோல் பாண்டியர்களைப் பற்றியும், பல்லவர்களைப் பற்றியும், பல சிற்றரசர்களைப்பற்றியுமான செய்திகள் இலக்கியங்களில் விரவிக் கிடப்பதைக் காண்கிறோம். மொத்தத்தில் தமிழகமானது சேரர், சோழர், பாண்டியர் என்னும் மூவேந்தர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது என்பதும், இம் மூவேந்தர்களும் ஒவ்வொரு காலத்தில் தனித்தனியே வலிமைபெற்று தமிழகம் முழுதும் தத்தம் ஆட்சியின்கீழ் வர முயன்று கொண்டு தங்களுக்குள் பல போர்கள் நிகழ்த்தினர் என்பதும், ஆட்சி முறையிலும், போர் முறையிலும் இம் மூவரும் ஏறக்குறைய ஒரே மாதிரியான அமைப்பையே மேற்கொண்டிருந்தனர் என்பதும் புலனாகின்றன. இவ் வேந்தர்களின் காலவரிசையும், வரம்பும், சரித்திரத் தொடர்ச்சியும், அரசியல் முறையும் இன்றுங்கூட ஆராய்ச்சிக்குட்பட்டனவாகவும் கருத்துவேறுபாட்டிற்கு இடமளிப்பனவாகவும் இருக்கின்றன. இவ் வரலாற்றுக் களஞ்சியத்தினுட் புகுவதென்பது இந் நூலினைப் பொறுத்த அளவில் முடியாததாகும்.

தமிழக அரசியல் முறை என்று ஒன்றனைச் சுட்டிக் காட்ட இயலுமா? தமிழகத்தில் அரசியல் உணர்வும், விழிப்பும் இருந்தனவா? தமிழகத்தில் அரசியல் இலக்கியங்கள் தோன்றினவா? இவையெல்லாம் உண்டாயின் அவற்றின் பொதுத் தன்மையும், தனிச் சிறப்பும் யாவை? இவையே இந் நூலின் இப் பகுதியில் நாம் ஆராயத் தேவையானவை.

சங்ககாலமானது கி.பி. மூன்றும் நூற்றாண்டின் மத்தியில் பாண்டிய அரசன் உக்கிரப் பெருவழுதியின் காலத்தில் முடிவுக்கு வந்ததெனக் கூறலாம். ஏனெனில், இதற்குப் பின் கி. பி. ஆறும் நூற்றாண்டுவரை தமிழகத்தில் இம் மூவேந்தர்களைப் பற்றிய செய்திகள் கிடைக்கவில்லை. களப்பிரர் என்னும் கூட்டத்தினர் தமிழகத்தின் பெரும் பகுதியினைத் தம் ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்தனர் என்பதும், இவர்கள் ஆட்சிக் காலம் 'இருண்ட காலம் என அழைக்கப்படுகிறது என்பதும் நாம் அறிந்ததே.

களப்பிரர்களிடமிருந்து தமிழகம் மீட்கப்பட்டபின், பாண்டியர்களும், பல்லவர்களும் வலிமை பெற்றனர். கி. பி. எட்டாம் நூற்றாண்டுக்குப் பின் சோழர்கள் மீண்டும் வலிமை பெற்றனர்.

இதற்கிடையில் சங்ககாலப் பண்பாடானது பல மாறுதல் கட்கு உட்பட்டிருக்க வேண்டும். சைவ, வைணவ, சமண, புத்த மதங்களின் ஆதிக்கம் தமிழகத்திலும் பரவலாயிற்று. அரசியலும் மதமும் நெருங்கலாயின. வழிபாட்டு முறையும், கோயில்களும், தெய்வங்களும், சங்க இலக்கியங்களில் கண்டவாறின்றி, ஆரியப் பண்பாடு கலந்து விளங்கின. மதப் பிரிவினை மட்டுமின்றி, சாதிப் பாகுபாடும் ஏற்பட்டன.

இதைத் தவிர பக்தி இயக்கமும் ஏற்பட்டது. ஆழ்வார்களும் நாயன்மார்களும் தோன்றி வைணவ, சைவ மதங்களைப் பரப்பினர். அரசர்களும் இவர்கள்பால் மிகுந்த மரியாதை காட்டினர். மாணிக்கவாசகர், அப்பர், சுந்தரர், குலசேகர ஆழ்வார் முதலியவர்கள் அரசர்களுக்கு நெருங்கியவர்களாய் இருந்தது நாம் அறிந்ததே.

சாளுக்கியர் - பல்லவர் - சோழர் தொடர்பினால் வட இந்தியக் கலையும், கலாச்சாரமும் சமண, பௌத்த, காபாலிக மதங்களும் தென்னிந்தியாவில் பரவின. சங்கரர், இராமனுசர், மத்துவர் இவர்களின் போதனைகளும் பரவின. உள்நாட்டு, வெளிநாட்டு வணிகத்தால் இலங்கை, கடாரம் முதலிய தேசங்களிலும் இத்தகைய கலாச்சாரம் ஓரளவு பரவியது மேலும் வணிகம் அதிகமாகப் பெருகவே செல்வம் குவிந்தது. தமிழக அரசர்களின் அரண்மனையும் கோட்டையும், அவர்களின் செல்வச் சிறப்பும் சங்க இலக்கியங்களிலன்றிப், பிறகால நூல் களிலும் சொல்லப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். பக்தி, செல்வம் இரண்டும் பெருகவே பெரிய கோயில்களும், கலைக் கூடங்களும், விழாக்களும் அரசர்களின் செல்வத்திற்கும் பக்திக்கும் வடிகால்களாக விளங்கின என்பது இன்றும் அக் கலைச் சின்னங்கள் தரும் சான்றிலிருந்து தெரிகிறது.

இவ்வளவு வளமையும், வலிமையும் படைத்திருந்த தமிழரசர்களின் ஆட்சி முறையையும், அரசியலையும் இனி நாம் காண்போம்.

# 14. அரசன்

தமிழரின் அரசியற் சிந்தனையில் அரசன் நாடு ஆகியவற்றின் தோற்றுவாய் விளக்கப்படவில்லை, அரசன் வேறு, நாடு வேறு என்ற எண்ணம் இருந்தது என்று கூற இலக்கியத்தில் இடமுண்டு. (இது 'திருக்குறளில் அரசியல்' என்னும் அத்தியாயத்தில் விளக்கப்படும்) 'கோ' அல்லது 'கோன்' என்னும் சொல்லால் அரசன் குறிக்கப்பட்டான். ஆதலால், கால்நடைகளை மேய்க்கும் கூட்டத்தின் தலைவனாக இருந்து பின் நிலையான ஆட்சி படைத்திருக்கக் கூடும்.

சேர, சோழ, பாண்டியரின் சரித்திரங்களைக் காணப் புகுந்தால் இவ்வரசமுறை தந்தை வழி மகனுகப் பெரும்பாலும் விளங்கி வந்தது எனலாம். முடியாட்சி முறையே தமிழகத்தில் வழங்கிவந்தது. வட இந்தியாவைப் போல தனிக் குடியரசுகள் ஏற்படவில்லை. தவிர நாடும் சிறிய பரப்புள்ளளதாகவே இருந்தது. மூவேந்தர்களும் ஒவ்வொரு சமயந்தில் ஆதிக்கம் மேற்கொண்டிருந்தபோதிலும் முதன் முதலாக இராசேந்திர சோழன் காலத்தில்தான் பேரரசு என்று சொல்லக்கூடிய அளவிற்குப் பரந்து விளங்கியது.

இதற்குப் பல காரணங்களைச் சுட்டிக் காட்ட முடியும். முதலாவதாக, இயற்கை அரண்களும் நிலைகளும் சிறிய நாடுகள் ஏற்படவே சாதகமாயிருந்தன என்று கூறலாம். இரண்டாவதாக மூவேந்தர்களுக்கிடையில் அடிக்கடி போர்கள் நிகழ்ந்து எந்த ஒருவரும் பெரும்வலிமை படைத்துவிட முடியாமல் இருந்ததைக் குறிப்பிடலாம். மூன்றுவதாகக் கௌடில்யரின் அர்த்த சாத்திரம் போன்ற 'சாம்ராஜ்ய' தத்துவத்தை வலியுறுத்தும் நூல்கள் ஏற்படவில்லை என்பதைக் கூறலாம். நான்காவதாக மூவேந்தர்களைச் சூழ்ந்திருந்த பல சிற்றரசர்களும், குறுநில மன்னர்களும் தத்தம் குடிப்பெயரைக் காப்பாற்றும்பொருட்டு மாற்றுனின் ஆதிக்கத்தை எதிர்ப்பதிலேயே இருந்ததையும் குறிப்பிடலாம். ஐந்தாவதாக, மந்திரம், தந்திரம், வேள்வி இவைகளுக்குப் போரில் இடங்கொடாமல் வீரத்தையே போற்றி வாழ்ந்ததால் தமிழ்ப் பண்பாட்டில் வீரத்தை மதித்து மன்னிக்கும் குணமும் வளர்ந்ததைக் குறுப்பிடலாம். அயலரசை வென்றுலுங்கூட

அந் நாட்டினைத் தன் நாட்டோடு சேர்த்துக் கொள்ளாது, கப்பம் செலுத்தும் சிற்றரசாகவே மதித்துவந்தது பெரிய சாம்ராஜ்யம் உண்டாவதைத் தடுத்தது.

ஆகவே, தமிழகத்தில் அரசர்கள் சிறு நாடுகளையே ஆண்டு வந்தனர். மேலும் ஆனிரை கவர்தல், ஆனிரை மீட்சி, திணை ஒழுக்கங்கள் ஆகியவற்றைக் கூறும் சங்க காலத் தமிழிலக்கியங் களிலிருந்து இவ் வரசர்கள் ஆதியில் கோட்டையை மையமாக வைத்து எழுப்பப்பட்ட நாட்டை ஆண்டனர் என்பதும், கோட்டையை எதிரி கைப்பற்றாமல் காப்பதையே தற்காப் பாகவும், எதிரியின் கோட்டையை கைப்பற்றுவதையே போரின் வெற்றியாகவும் கொண்டனர் என்பதும், ஆனிரை கவர்தலுக்கும் மீட்சிக்கும், கோட்டையினுட் சென்று பாதுகாப்புத் தேடு தற்கும், முற்றுகை இடுவதற்கும், வெற்றிக்கும் பல மலர்களை சின்னமாக அணிந்தனர் என்பதும், இவை யாவும் வளர்ச்சி யடையாத சிறு அரசு முறைகளையே குறிக்கும் என்பதும் தெளிவு. ஆனால், பிற்காலத்தில் போர் முறைகள் மாறுதல்சள் அடைந்து வில் அம்புகளுக்குத் துணையாக வாள்களும். வேல்களும், காலாள் படைக்குத் துணையாக வேழங்களும், குதிரைகளும் சோழர்கள் மேன்மையுற்ற காலத்தில் வலிமை மிக்க கடற்படையும் ஏற்பட்டன. என்றாலும், அரண் பண்டைட்டு அரசியலில் மிக இன்றியமையாததாகக் கருதப்பட்டது.

மேலும் 'மக்கள்' என்னும் சொல் அரசனின் ஆணைக்குட் பட்ட நாட்டினரையும், குடும்பத் தலைவனின் (தந்தையின்) ஆணைக்குட்பட்ட குடும்பத்தினரையும் பொதுவாகக் குறிக்கும் என்பதும் குறிப்பிடத் தக்கது. இதிலிருந்து அரசனின் போக்கும் அதிகாரமும் தந்தையின் கருத்தோடும், கவனத்தோடும் இருத்தல் வேண்டும் என்று உணரப்படும். பொதுமக்களின் நல் லெண்ணத்தில் வேரூன்றி, பொது மக்களின் நல்வாழ்விற்காகச் செயல்படுபவனாகத் தமிழரின் அரசன் காட்டப்படுகிறான். இவ் விரண்டையும் புறக்கணிக்கும் அரசன் வேரும் கிளையுமற்ற மரத்திற்கு ஒப்ப வலிவிழந்தவனாகிறான். மக்களுக்கென்று உரிமைகளும், சலுகைகளும் எண்ணிச் சொல்லப்படாமலிருந்தும், தமிழிலக்கியங்கள் மக்கள் - அரசன் இவர்களிடையேயுள்ள தொடர்பினை விளக்குவதை ஆராய்ந்தால் ஒருவரை ஒருவர் சார்ந்து விளங்கினர் என்பதும், இதுவே அவர்கள் இருவரின் எதேச்சையான போக்கிற்கு வரம்பிட்டது என்பதும் புலப்படும்.

வீரம், கொடை, காதல் இம் மூன்றுமே பழந்தமிழ் இலக்கியங்களில் பெரும்பாலும் கூறப்படுகின்றன. பழமொழி, நாலடியார், திருக்குறள், திரிகடுகம் போன்ற நூல்களில் அறமும் பேசப்படுகிறது. இதனுல். அறம் அதிகமாக மதிக்கப்படவில்லை என்பது பொருளன்று. சுத்த வீரமும், நன்கொடையும், காதல் நெஞ்சமும் அற வழியைச் சார்ந்தனவாகவே இருக்க முடியும். இதனுல்தான் வீடுபேறும் சொல்லப்படவில்லை. அற வழியில் பொருளீட்டி, அறவழியில் அதனைச் செலவிட்டு, அறத்தின் காவலனுக இருப்போன் வீடுபேறடைகிறுன் என்பது தொக்கி நிற்கும் பொருளாகும். 'தருமார்த்த காம மோட்சம்' என்னும் நான்கில் (அறம் பொருள் இன்பம் வீடு) நடுவிரண்டு மட்டுமே நாம் தெரிந்து அனுபவிப்பவை ; மற்ற இரண்டும் ஊகத்திஞல் பெறப்படுவவை. அகம், புறம் என இரு பிரிவான இலக்கியங்களும் இதையே உணர்த்துகின்றன. இவற்றில் பெரும் பாலும் தலைவனும் தலைவியுமாக அரசனும் அரசியுமே இடம் பெறுகிருர்கள் என்பது குறிம்பிடத் தக்கது. இது மட்டுமல்லாமல் சேர, சோழ, பாண்டிய மற்றும் குறுநில மன்னர்களின் சரித்திரங்களை நாம் ஆராய்ந்தாலும் இது புலப்படும்.

இத்தகைய கல்வியும், கலையார்வமும் பெரியோர்களின் துணையிஞலேயே ஏற்பட்டது என்று எண்ண வாய்ப்பு இருக்கிறது. பெரியாரைத் துணைக் கோடலும், சான்றேர் நட்புமே அறிவுக்கு ஆதாரமானவை என்பது குறளிலும், மற்ற இலக்கியங்களிலும் வலியுறுத்தப்பட்டுள்ளன.

அரசன் மிகுந்த அதிகாரம் படைத்து விளங்கிஞன். என்றுலும், இது வரம்பிற்குட்பட்டதேயாகும். இவ் வரம்பு இதுதான் எனச் சட்டபூர்வமாக நிர்ணயிக்கப்படாது விளங்கிஞலும், பொது அறத்தினை ஒட்டி அறிவுக்கு ஒப்ப நிர்ணயிக்கப்பட்டதொன்றுகும். வடமொழி இலக்கியங்களில் நாம் கண்ட 'தண்டம்' என்னும் சொல்லைவிட அரசனின் அதிகாரத்தைக் 'கோன்மை' என்னும் தமிழ்ச்சொல் அழகாக விளக்கியது. 'கோ' என்பது அரசனைக் குறிக்கும் சொல்லாக வைத்துக்கொண்டாலும் சரி, கோன்மை என்பது 'கோல்' (தண்டம்) என்னும் சொல்லிலிருந்து வந்ததாக வைத்துக்கொண்டாலும் சரி அதிகாரம் என்பது உருவகப்படுத்தப்பட்டுள்ளதை நாம் அறியலாம். இன்று 'இறைமை' என்று நாம் குறிப்பிடும் நாட்டின் முழுமையான அதிகாரத்தை அன்றே கோன்மை என்னும் சொல் குறித்து வந்தது என்றுல் மிகையில்லை. இன்று இறைமை என்பது முடியாட்சிக்கு மட்டுமன்றி, மக்களாட்சிக்கும்

பொருந்துமாறு நாம் கையாள்கிறோம். 'கோன்மை' என்னும் சொல் முடியாட்சிக்கு மாத்திரமே பொருந்தும். செங்கோன்மை, கொடுங்கோன்மை என இரு வகைககளாகப் பிரிவு ஏற்பட்டிருப்ப திலிருந்து அரசன் செலுத்தும் அதிகாரம் ஒரு நியாய வரம்பிற்கு உட்பட்டிருக்க வேண்டும் என்பது மட்டுமன்றி, மக்களின் நல் வாழ்வை மேம்படுத்தும் வகையில் செம்மையாகச் செலுத்தப்பட வேண்டும் என்னும் 'நலம் நோக்கு நாடு' (Welfare State) பற்றிய தத்துவம் இயற்கையாக வளர்ந்தது என்பதும் தெரிகிறது. அரசன் என்பவன் செங்கோல் ஓச்சுபவன் ; கொடுங்கோலன் அரசனாக மாட்டான் ; என்பன 'கொடுங்கோல் மாமன்னர் கீழ் வாழ்தல் இன்னு' என்னும் செய்யுளினால் தெரிகிறது.

கொடுங்கோலைத் தாழ்த்திக் கூறும் பாடல்கள் மணிமேகலை யிலும், குறளிலும் அநேகமாக வேறு எல்லாத் தமிழ் இலக்கியங் களிலும் விரவிப் பயின்றுவந்துள்ளன. இவற்றிலிருந்து அரசனது தலையாய கடன் மக்களைப் பகைவரிடமிருந்து காப்பதாகும் என்பது புலப்படுகிறது. தொன்மை வாய்ந்த தொல்காப்பியத் திலும்அரசனின் கடமையாக இது சொல்லப்படுகிறது. மக்களிட மிருந்து வரி ஈட்டுவதற்கும் அரசனுக்கு உரிமை இதனால் ஏற்படுகிறது.

நிர்வாகத்தில் அரசன் தலையாய இடம் வகிக்கிறான். சமூக அரசியல் வாழ்வு அரசனை மையமாக வைத்தே அமைகிறது. மோசிகீரனார் புறநானூற்றில் 'அரசனே வாழ்விற்கு உயிரளிப் பவன்' என்று கூறுவதிலிருந்து இது தெரிகிறது.

அரச பொறுப்பை ஏற்கும் வகையில் எத்தகைய பயிற்சி அளிக்கப்பட்டது என்பது சரிவரத் தெரியாவிடினும் சிறந்த கல்வியும், போர்ப் பயிற்சியும் அளிக்கப்பட்டன என்பது துணிபு. நுண்கலைகளில் வல்லுநராகப் பல அரசர்கள் தமிழகத்தில் இருந்திருக்கின்றனர். இசை, புலமை, சிற்பம், ஓவியம், கட்டடக் கலை, மற்றும் போர், வேட்டை ஆகியவற்றிலும் கலையார்வத் துடன் அவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

தன் வீரத்தினால் உட்பகை, வெளிப்பகைகளை ஒடுக்குப வனாகவும், கொடையினால் புலவருக்குப் புரவலனாக இருப்ப வனாகவும், அன்பினால் மக்களை ஆள்பவனாகவும் அரசன் இருக்கக் கடமைப்பட்டவன் என நாம் சொல்லலாம். தொல்காப்பியம் கூறும் அரச கடமைகளும் இவையே.

தவிர, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகைத் திணைகள் ஐவகை இயற்கை நில வளத்தினைக்

குறிப்பவை ; இவை ஐந்தும் ஒரு நாட்டின் வளத்திற்கும், பாது காப்பிற்கும் அவசியம் என்று கூறினல் மிகையாகாது. இவை ஐந்தையும் காப்பதும், வளத்தினைப் பெருக்குவதும் அரசன் கடமையாயிருந்திருத்தல் வேண்டும்.

நிலத்திலிருந்தும், வியாபாரத்திலிருந்தும் வரும் வரிப் பணத்தைத் தவிரச் சிற்றரசர்களின் கப்பமும் அரசனுக்கு வருவாய் அளித்தது. இதனை நீர்நிலைகளைச் செப்பனிடுவதிலும், படைகளை மேம்படுத்துவதிலும், கொடையிலும் அரசன் செலவு செய்தான்.

நாட்டின் நிர்வாகத்கில் அரசனுக்கு அமைச்சர்களும் அலுவலர்களும், படை போர் ஆகியவற்றின் நிர்வாகத்தில் படைத் தலைவரும், வெளி உறவில் ஒற்றர்களும் தூதர்களும் உதவினர்.

**அமைச்சர்கள்**

மனு, கௌடில்யர் போல அமைச்சரவை இவ்வளவு பெரிது தான் இருக்க வேண்டும் எனத் திட்டமாகக் கூறும் தமிழ் நூல் இல்லை. மிக முக்கியமான ஆலோசனைகளுக்குத் தன்கீழ் அடங்கிய மண உறவுகொண்ட சிற்றரசர்களையும், இளவரசனையுங்கூட அரசன் அனுமதித்தான். படைத்தலைவரும், கருவூல அதிகாரி யும் சிலவிடங்களில் பங்கு பெற்றனர். தற்கால வழக்கிலுள்ள படி அமைச்சரவை என்ற ஒன்று இருந்தது என்று கருதுவதற்கு இடமில்லை. கல்வி கேள்விகளிலும், ஒழுக்கத்திலும் சிறந்த ஒருவரையோ, பலரையோ அமைச்சர்களாக நியமித்து ஆலோசனை கேட்பதே பெரும்பாலும் வழக்கில் இருந்தது. இவர் கள் அரசனுக்கு உண்மையாய் நடந்துகொள்பவர்களாக இருக்க வேண்டும் என்றே பெரிதும் கருதப்பட்டது. அமைச்சர்களின் கூற்றை அரசன் ஏற்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. ஆனல், ஆலோசனைக்குப் பிறகு ஒருவர் முடிவை மற்றவர் ஏற்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அரசனின் கல்வி கேள்வி இதற்குப் பெரிதும் துணை செய்யும் வகையில் அமைந்திருந்தது இங்குக் குறிப்பிடத் தக்கது. மேலும், அமைச்சர்களில் பலர் புலவராக இருந்ததும் குறிப்பிடத் தக்கது. இதைத் தவிரச் சான்றோர்களுக்கும் அரசனைப் புகழ்ந்தும், இடித்தும் கூறும் உரிமை இருந்ததென ஔவையார், கபிலர் ஆகியோர் பாடல்களால் அறியலாம். ஆட்சியினல் பிரிவு பெற்றிருந்தாலும், கலை இலக் கியத்தால் இத்தகைய புலவர்கள், அரசர்கள் பலருக்கிடையே ஒரு தொடர்பாலமாகச் செயல்பட்டனர். சிலவிடங்களில் தூது வராகவும் பயன்பட்டனர். அமைச்சரவை அரசனது அதிகாரத்

திற்கு வரம்பிட்டது என்று கூறுவதைவிட, அதிகாரம் நேர் வழியில் செலுத்த வழிகாட்டியது என்பதே பொருத்தம். இதனால், அமைச்சரவை அரசனுக்கு இன்றியமையாததாகக் கருதப்பட்டது.

மேலும், நிர்வாக அலுவல்களைக் கவனித்து ஆவன செய்யும் பொறுப்பும் அமைச்சர்களைச் சார்ந்ததாகவே இருந்தது. போர்க்காலங்களில் அரசன் இல்லாதபோது நாட்டினை நலம்பட நடத்தும் பொறுப்பும் அமைச்சரைச் சார்ந்தது. சோழர் சரித்திரத்தில் பட்டம் சூட்டும் உரிமையையும் முக்கிய அமைச்சர் பெற்றிருந்ததைக் காணலாம். அமைச்சர்களுக்கு ஊதியம் பொன்னும் பொருளுமாகவோ, நிலங்களாகவோ தரப்பட்டன. தகுந்த சிலவிடங்களில் தந்தைவழி மகனுக அமைச்சர் பதவி அமைந்து வந்தது.

## வெளி உறவு

நட்பும் பகைமையும் வெளி உறவின் இரு கொள்கைகளாக இருந்தன. நாட்டின் நலன் கருதி மனப் பிணைப்பினால் பகை நீக்கமும், பலம் தேடுவதும் வெளி உறவுக் கொள்கையின் முக்கிய அம்சங்களாக விளங்கின. சில இடங்களில் இவையே புதுப் பகைக்கு ஏதுவாயின.

போர் நிகழ்த்துங்கால் எதிரியின் வலிமை, போர் நிகழும் இடம், காலம் இவற்றை அறிந்தும், ஒற்றர்மூலம் பகைவர்களைப்பற்றிய செய்திகளை அறிந்தும் போர் நிகழ்த்த வேண்டுமென்பது அறியப்பட்டிருந்தது. போர்க்காலங்களில் எப்போதும் இருக்கும் சிறுபடையுடன் புதிதாகப் பெரும்படையும் திரட்டப்பட்டது. போரில் அந்தணர், சிறுவர், வயோதிகர், பசுக்கள், பெண்டிர் இவர்களுக்குத் தீங்கு நேராது காப்பது எல்லா அரசர்களுக்கும் கடன் எனத் தமிழ் இலக்கியங்களில் பலவிடங்களிலும் சொல்லப்பட்டுள்ளது. முதுகில் குத்துவது, புறமுதுகிடுவது இரண்டுமே போர் நெறியாகா என்று கருதப்பட்டன.

மேற்கூறியவை யாவும் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் அரசியல் பொதுக் கருத்துகளேயன்றி, எந்த ஒரு குறிப்பிட்ட சரித்திரத்தையோ, அல்லது அரசியல் நூலையோ ஆதாரமாகக் கொண்டெழுதப்பட்டவையல்ல. திருக்குறள் 'அரசியல்' என்னுந் தலைப்பில் கூறும் செய்திகளை விரிவாக வேறு அத்தியாயத்தில் காண்போம். மேலும் விரிவான ஆராய்ச்சிகள் செய்தால் பண்டைத் தமிழகத்தின் அரசியல் பற்றி மேலும் புதிய செய்திகளும் சிந்தனைகளும் கிடைப்பது திண்ணம்.

# 15. திருக்குறளில் அரசியல்

## முன்னுரை

தமிழ் மறை எனப்படும் திருக்குறள் பதினெண்கீழ்க்கணக்கில் அடங்கும் ஒரு நூலாகும். ஈரடிக் குறள் வெண்பாவினுல் ஆகிய இந் நூல் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது. நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களையும், ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள் களையும் உடைய இந் நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்ருகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றில் பொருளியலின்கீழ் உள்ள அரசியல், அங்கவியல் என்னும் இரு பிரிவுகள் அரசன், அமைச்சு, குடி, படை, கூழ், கல்வி, நட்பு, பகைமை, தூது, நாடு முதலிய பலவற்றையும் விளக்கும் வகையில் ஐம்பத்தேழு அத்தியாயங்களில் அமைந்துள்ளன. தமிழ் இலக்கியத்தில் அரசியல் நூலாக விளங்குவது குறளின் இப் பகுதிகளே யாம். ஆகவே, தமிழக அரசியல் சிந்தனையில் குறள் முதலிடம் வகிக்கிறது.

அறம் எனப்படுவது ஒழுங்கு எனப் பொருள்படுமாயின் குறள் கள் அனைத்துமே அறத்தைக் கூறுபவைகளாகும். ஒவ்வொரு வருக்கும், ஒவ்வொன்றிற்கும், ஒவ்வொரு செயலுக்கும் ஓர் ஒழுங்கு முறை (தருமம்) காட்டப்பட்டுள்ளது. அக நெறியினைக் கூறும் இன்பத்துப்பாலை விடுத்துப் பார்த்தால், மற்ற இரு பகுதி களும் மனிதனின் புற வாழ்வின் பகுதிகளுக்கும், செயல்களுக்கும், எண்ணங்களுக்கும் வழிகாட்டிகளாக அமைந்துள்ளன எனலாம். இவை யாவுமே அனைவருக்கும் பொருந்தக்கூடியவை எனினும், அரசியல், அங்கவியல் என்னும் பகுதிகள் குறிப்பாக அரசனுக்கும் அரசாங்கத்தைச் சேர்ந்தவருக்கும் பொருந்துமென்றும், மற்றப் பகுதிகள் பொதுவில் குடிமக்கள் வாழ வேண்டிய நெறியினைக் கூறவந்தவை என்றும் கொள்வதே சாலச் சிறந்தது.

மனு, கௌடில்யர் போன்ருேர் எழுதிய தரும, அர்த்த சாத்திர நூல்கள் அரசனுக்கு உரைபுகட்டும் தன்மையில் மட்டுமே அமைந்தவை. குடிகளின் வாழ்க்கை முறையினை ஒழுங்குபடுத்தும் தருமக் குறிக்கோள்கள் அந் நூல்களில் அதிகம் இடம் பெறவில்லை என்பதைக் கருதும்போது திருக்குறளின் பெருமை புலப்படும்.

திருக்குறள் தரும சாத்திரமா, அர்த்த சாத்திரமா என்பது தேவையற்ற கேள்வி. தருமம், அர்த்தம் இரண்டுமே சமமாக வலியுறுத்தப்படும் இந் நூலில் நாம் முன்பே கூறியதுபோல, அர்த்தத்திற்கும் ஒரு தருமம் உண்டு என்பது வலியுறுத்தப்படுகிறது. இதுவும் திருக்குறளுக்கே உரிய ஒரு தனிச் சிறப்பாகும். பொருளுக்கும், இன்பத்திற்கும், புகழிற்கும் அடிப்படை தருமமே என்பது,

'சிறப்பு ஈனும், செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு'[1]

என்னும் குறளாலும்,

'அறத்தான் வருவதே இன்பம்மற்று எல்லாம்
புறத்த ; புகழும் இல'[2]

என்னும் குறளாலும் விளங்கும்.

அறமும், பொருளும் சேர்ந்து விளங்கி, நாட்டின் நன்மைக்கு அடித்தளமாகவும், அடிக் கூறுகவும் திகழ்வது குடும்பம் ஆதலால், 'அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை' என்று வள்ளுவர் கூறுகிறார்.[3] ஆனால், வள்ளுவர் கூறும் அறமானது, வடமொழி தரும சாத்திரங்கள், தரும சூத்திரங்கள் போன்றவற்றில் கூறப் படுவதுபோல் இல்லை. முதலாவதாக வள்ளுவரின் அறம் பொது அறம் ; வருண தருமத்திற்குள் சிக்காமல் எவரும் கடைப்பிடித் தொழுக வேண்டிய முதன்மை நெறிகளைக் கூறும் அறம். இரண்டாவதாக வள்ளுவரின் அறம் சடங்குகள் இன்றி, வேள்விகள் இன்றி மனம் மெய் மொழிகளால் தேடிச் செய்யும் அறம்.

'மனத்துக்கண்மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற'[4]

'அழுக்காறு அவாவெகுளி இன்னுச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்'[5]

'ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாம் செயல்'[6]

என்னும் குறள்கள் அவர்கூறும் அறத்தினை விளக்கும். அரசியலுக்கும், சமூகத் தனிவாழ்விற்கும் பொருந்தும் வகையில் அனைவருக்கும் ஒரே தருமம் கூறப்படுவது இன்றைய 'சட்டத்தின்

[1] திருக்குறள், 31. [2] குறள் 39, [3] குறள் 49.
[4] குறள் 34. [5] குறள் 35, [6] குறள் 33,

ஆட்சி' (rule of law) போன்றது. இதை அறத்தின் ஆட்சி என்று குறிப்பிடலாம்.

வருண தர்மத்தைக் கூறுத குறள் ஆசிரம தருமம் போன்ற தொன்றைக் குறிப்பிடுகிறது. இல்லறமும், துறவறமும் இரண்டு இயல்களில் விவரித்துக் கூறப்படுகின்றன. இவையுங்கூடக் கிருகிய சூத்திரம், பிரம்ம சூத்திரம் ஆகியவை போலன்றிப் பெருவழித் தருமக் கோட்பாடுகளையே கூறுகின்றன, தரும சாத்திரங்களில் நாம் காணும் ஆசிரம தருமத்திற்கும், குறளில் நாம் காணும் ஆசிரம தருமத்திற்கும் பெரும் வேறுபாடு உண்டு. தரும சாத்திரங்கள் கூறும் நான்கு ஆசிரமங்கள் ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு ஒருவனை இட்டுச் செல்வனவாக (அதாவது பிரம்மச்சரியத்திலிருந்து கிரகஸ்தம், பின் வானப்பிரஸ்தம், சன்னியாசம்) அமையும் குறள் பிரம்மச்சரிய ஆசிரமத்தைக் கூறவில்லை. புலனடக்கமும், கல்வியும், கேள்வியும் அனைவருக்குமே வேண்டியவை எனக் கூறப்பட்டிருப்பது கவனிக்கத் தக்கது. வானப்பிரஸ்தம், சன்னியாசம் எனத் துறவுநிலை இரண்டு ஆசிரமங்களாகச் சொல்லப்படவில்லை.

இது தவிர வேறு ஒரு முக்கிய வேறுபாடும் உண்டு. இல்லறத்திலிருந்து துறவறத்திற்கும், துறவறத்திலிருந்து இல்லறத்திற்கும் தாவுவது குறளில் இகழப்படுகிறது.

'அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ தெவன்'[7]

என்னும் குறளால் இதனை அறியலாம். மேலும், ஓர் ஆசிரம தருமத்தைக் கடைப்பிடித்து ஒழுகின் அவ் வாசிரம தருமத்திலிருந்தே வீடுபேறு எய்தலாம் என்பதையும்,

'செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு'[8]

என்னும் குறளால் அறியலாம்.

ஆகவே, வள்ளுவர் கூறும் சமுதாயம் அறச் சமுதாயம். கூறுகளாக்கப்படாததும், கடினமற்றதும் அவரவர் தத்தம் தகுதிக்கும், தன்மைக்கும் ஏற்ப ஒழுகுவதுமான சமுதாயம்.

சமுதாய உயர்வு தாழ்வுகளை வள்ளுவர் எவ்வாறு விளக்குகிறார் என்பதும் முக்கியமானது. வடமொழி இலக்கியங்களில் நாம் முன்பே குறிப்பிட்டதுபோல் கருமக்கொள்கையானது சமூக

[7] குறள் 46.  [8] குறள் 86

ஏற்றத்தாழ்வுகளை விளக்கும் வகையில் அமைத்துள்ள வள்ளுவரும் ஊழினையும், அதன் பயனாக வரும் பிறவித் துன்பங்களையும், அறத்தின்பால் ஒழுகி ஊழினைக் கடக்கும் அவசியத்தையும் உணர்த்துகிறார்.

ஆனால், 'ஊழ்' என்பது 'கருமக் கொள்கை' ஆகாது. ஊழானது சாதி வேறுபாடுகளை (வருணங்களை) உண்டாக்கவல்லதாகவோ, விளக்குவதாகவோ அமையவில்லை. பொருளாதார ஏற்றத் தாழ்வுகளையும், செல்வாக்கினையும் விளக்கும் வகையிலேயே அது அமைந்துள்ளது.

'அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்'[9]

என்னும் குறள் சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கும், அறச் செயல்களுக்குமிடையே உள்ள (அல்லது தொடர்பற்ற நிலையை) ஊழினால் விளக்குகிறது.

'நல்லவை எல்லாஅம் தீயவாம் ; தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு'[10]

என்னும் குறள் முற்பிறப்புச் செய்கைப் பலன் இப் பிறப்பில் விளைக்கும் தன்மையை உணர்த்தும். ஆகவே, தனி ஒரு மனிதன் துய்க்கும் இன்ப துன்பங்களுக்கு அவன் செய்கைகளே காரணம் என்பது காட்டப்பட்டுள்ளது. சமூகத்தில் உயர்வும், தாழ்வும் குடிகளுக்கு ஒழுக்கத்தினாலேயே ஏற்படுகிறது.

'ஒழுக்கம் உடைமை குடிமை ; இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்'[11]

ஆகவே, உயர்குலம், இழிகுலம் என்பன பிறப்பினால் மட்டும் வருவதில்லை; ஒழுக்கத்தினாலும் ஆகும் என்பது வெளிப்படை. இது

'மறப்பினும் ஒத்துக் கொளலாகும் ; பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்'[12]

'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்'[13]

என்னும் குறள்களால் விளங்கும்.

[9] குறள் 169 [10] குறள் 375. [11] குறள் 135.
[12] குறள் 134. [13] குறள் 505.

வள்ளுவர் காலத்தில் சமூகம் நால்வகைச் சாதியினரைக் கொண்டிருந்ததா, இல்லையா என்பதை விட, வள்ளுவர் தம் நூலில் அத்தகைய பாகுபாட்டுக்கு இடமளித்துள்ளாரா என்பதே ஆராயத்தக்கது. அரசியல் வாழ்வு, சமூக வாழ்வு இரண்டையுமே அறத்தினால் இணைத்துச் செல்லும் அவர் நன்மை தீமையையும், ஏற்றத் தாழ்வையும் ஒழுக்கம் என்னும் உரைகல்லில் உரைத்துப் பார்த்தே தீர்மானித்தார் என்பது வெள்ளிடைமலை. இதை வைத்துப் பார்க்கும்போது திருக்குறளை ஒரு சமுதாய மறுமலர்ச்சி நூல் என்றே கருத வேண்டும்.

குறள் கூறும் நாடும், அரசனும்

குறள் கூறும் நாடானது அரசனை மையமாகக் கொண்டு இயங்கும் நாடாகும். இறைமாட்சி என்னும் அதிகாரத்தில் முதற்குறள் கீழ்க்கண்டவாறு கூறுகிறது.

'படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு'[14]

சேனையும், மக்களும், நிலமும், அமைச்சரும், நட்பு நாடுகளும், அரணும் உடைய அரசன் அரசர்களுக்குள் ஆண் சிங்கப் போன்றவன் என்பது இதன் பொருள்.

இவை 'ஆறும் உடையான் அரசருள் ஏறு' என்பதால் இவற்றில் ஏதோ ஒன்று அல்லது இரண்டு குறைந்தவன் 'அரசருள் ஏறு' போன்றவனாக இல்லாவிட்டாலும், அரசனாக விளங்குவான் என்ற பொருள் பெறப்படுகிறதா? திருக்குறளில் 'மண்டலக் கொள்கை' வெளிப்படையாகச் சொல்லப்படாவிடினும், இக் குறளிலிருந்து நாட்டின் எல்லா அங்கங்களையும், அவற்றின் முழுச் சிறப்போடு பெற்ற அரசன் மற்ற அரசர்களை வலியிலும், புகழிலும் மிஞ்சி நிற்பான் என்பது சொல்லப் படுவது இங்குக் கவனிக்கத் தக்கது.

வடமொழி அர்த்த சாத்திர நூல்களில் நாம் நாட்டின் ஏழு அங்கக் கொள்கையினைப்பற்றி அறிந்தோம். அதற்கும், குறள் கூறும் இந்த ஆறு அங்கக் கொள்கைக்கும் வேறுபாடு ஏதாவது இருக்கிறதா அல்லது இரண்டும் ஒன்றுதானா என்பதுபற்றி இங்கு ஆராய்வோம். இவ் விரண்டு கொள்கைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் குறளில் கூறப்பட்டுள்ள ஆறு அங்கங்களும் அரச

[14] குறள் 381.

னுக்குத் துணையாகவும், மனு, அர்த்த சாத்திரம் ஆகியவற்றில் கூறப்பட்டுள்ளவை நாட்டின் அங்கங்களாகவும் இருப்பது தெரிய வரும். வள்ளுவர் நாடு என்னும் அதிகாரத்தில் நாட்டின் வளமெல்லாம் சொல்லி, இறுதியாக

'ஆங்கமைவு எய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமைவு இல்லாத நாடு'[15]

என்னும் குறளால் அரசனின்றி வேறு வளங்களிலிருந்தாலும் அது நாடாகாது என்று கூறுவதிலிருந்து நாட்டின் அங்கமாக, முதலுறுப்பாக அரசனை எண்ணுகிறார் என்பது புலப்படும். ஆகவே, 'சப்தாங்கக்' கொள்கையும், வள்ளுவர் கூறுவதும் ஒன்றேயாம்.

இனி வேந்தனுக்கு அமைய வேண்டிய குணங்களாக அஞ்சாமையும், ஈகையும், அறிவும், தளரா உறுதியும் கூறப்படுகின்றன. இக் குணங்கள் வாய்ந்த அரசன் அறத்திலிருந்து தவறாது நடந்து, வீரத்துடன் தன்னையும், குடிகளையும் காத்தல் வேண்டும். மனுவை ஒட்டி வள்ளுவர் குறளும் பொருள் வரும் வழிகளை இயற்றிப், பொருளை மேன்மேலும் சேர்த்து, அதனைப் பாதுகாத்து, அப் பொருளை அறவழியில் பயன்படுத்துதலை அரசனின் கடமையாகக் குறிப்பிடுகிறது. இனிய சொல்லும், இரக்கச் சிந்தையும், செங்கோன்மையும் கொண்டு அறநெறிப்படி மக்களை ஆள்பவன் மக்களுக்கு தெய்வம்போல் விளங்குவான் என்று கூறும் குறளிலிருந்து அரசனுக்கு வள்ளுவர் வகுக்கும் இலக்கணம் புரியும். அரசன் பிறப்பினாலோ, அரியணைமீது இருப்பதனாலோ தெய்வத்தன்மை கொண்டவன் ஆகான்; குணத்தினாலும், செங்கோன்மையினாலும் மக்களைக் காத்தல், தருமத்தை நிலை நிறுத்தல், தீயவரை அழித்தல் ஆகிய பணிகளைச் செய்வதனாலும் மட்டுமே கடவுளின் தன்மைக்கு அவன் உயர்த்திக் கூறப்படுகிறான்.

இத்தகைய அரசன் கல்வி, கேள்வி, அறிவு ஆகிவை மிகுந்து, பெரியோரின் துணை கொண்டு, காமம், வெகுளி, செருக்கு ஆகியவற்றால் ஏற்படும் குற்றங்களைக் களைந்து, தீயவரின் நட்பை நீக்கி நடப்பானேயாகில் உட்பகை, வெளிப்பகை ஆகிய இரண்டுமே இல்லாதவனாவான்.

எச் செயலையும் செய்யுமுன் நன்றாக எண்ணிப், பிறகு துணிய வேண்டும். தான் செய்யும் செயல் தன் நிலையோடு பொருந்து

[15] குறள் 740. [16] குறள் 470.

மாப்போல் இருந்தால்தான் உலகம் அதை ஏற்கும்; தருமத்திற்குப் புறம்பான, இகழத்தக்க செயலைச் செய்யும் அரசனை உலகு இகழும்.[16]

மேற்கூறியவற்றிலிருந்து சான்றோர் வாக்கிற்கும், மரபிற்கும் பணிந்து நடக்க வேண்டிய அவசியம் அரசனுக்கு வற்புறுத்தப்பட்டிருப்பதைக் குறளில் காணலாம்.

தன் வலிமையையும், பகைவன் வலிமையையும், இடம், காலம் ஆகியவற்றையும் எண்ணிச் செயல் புரியும் அரசனை வெல்வது கடினம். ஆனால், தானே எங்கும் இருந்து எவற்றையும் பார்த்துச் செய்வதென்பது முடியாதாகையால் தன் அலுவலரைத் தேர்ந்தெடுத்து, அவர்களது துணையுடன் ஆட்சி செய்ய வேண்டும். இவர்களை எவ்வாறு தேர்ந்தெடுப்பது?

'அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறம்தெரிந்து தேறப் படும்'[17]

அறச் சோதனை, பொருள் சோதனை, இன்பச் சோதனை, உயிரச்சச் சோதனை ஆகிய இந்த நான்கிலும் மீண்டு வருபவரே தந்நலம் விழையாது அரசன் நலம் விழையும் அலுவலர் ஆவார் என்பது இதன் பொருள்.

நல்ல குடியில் பிறந்த, குற்றங்கள் அற்ற, பழிச் செயல்களுக்கு அஞ்சுகிற - அறிவாற்றல் மிக்க - ஒருவரையே அரசன் அலுவலராகத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

மேலும், சுற்றத்தார் இல்லாதவனையும், தன் குடியுடன் தொடர்பு அறுந்தவனையும் அரசன் தெரிந்தெடுத்தல் கூடாது. ஏனெனில், இவர்கள் பழிக்கு அஞ்சாமல் இகழத்தக்க செயல்களைக் கூடச் செய்வார்கள். அலுவலர் பொறுப்பினைக் குடி, குடும்பம் ஆகியவற்றுடன் தொடர்புபடுத்திக் கூறுவது குறளின் தனிச் சிறப்பு. அரசன் ஒருவனை ஆராயாமல் தேர்ந்தெடுப்பதும், ஆய்ந்து தேர்ந்தவனை நம்பாது அவன்பால் ஐயப்படுதலும் கூடாது என்று வள்ளுவர் கூறுகிறார். ஒவ்வொன்றையும் நன்கு செய்து முடிப்பவன் யார் என்று கருதித் தக்க தொழிலைத் தக்கவனுக்கு அளித்தால்தான் அரசுத்தொழில் நன்கு சிறக்கும்.

'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்'[18]

[17] குறள் 501. [18] குறள் 517.

இதைவிட்டு 'இவன் நல்லவன்' என்னும் கருத்தினுல் திறமை யற்றவனிடம் ஒரு செயலை ஒப்புவித்தல் கூடாது.[19]

ஒருவனைத் தேர்ந்தெடுத்தல், எச் செயலை அவன் சிறந்து செய்ய முடியும் என்று ஆராய்ந்து அதனை அவனிடம் ஒப்புவித்தல், எவ் விடத்தில் எக் காலத்தில் எச் செயலை எவ்வாறு மேற்கொள்ளலாம் எனத் தீர்மானித்தல், ஆராய்ந்த ஒருவனிடம் ஐயமின்றி அதனை ஒப்படைத்தல் போன்ற ஆட்சி இயலின் அருங் கொள்கைகள் ஒரு சில குறள்களில் சுருக்கமாக வெளியிடப்பட்டிருப்பதைக் காணும்போது குறள் இன்றைக்கும் பொருந்தும் நூலாக விளங்குகிறது எனலாம்.

அரசனது தன்மைகளைக் குறிக்கும் வள்ளுவர் அவன் தன் சுற்றத்தாரை அணைத்து, அன்புடன் போற்றி ஒழுக வேண்டிய தன் அவசியத்தையும் கூறுகிருர். ஏனெனில், தகுதியறிந்து சிறப்பிக்கும் அரசனை அவன் சுற்றம் விரும்பும். இல்லையேல் உட்பகைக்கு ஏதுவாகும். ஆகவேதான் யாதானும் ஒரு காரணத்திஞல் பிரிந்து சென்ற சுற்றம் மீண்டும் கூட விழையும் போது, அச் சுற்றத்தின் பிரிவுக்கும், விழைவுக்கும் காரணம் கண்டு நன்கு ஆராய்ந்த பின்பே சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும் என்னும் பொருள்பட

'உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்
இழைத்திருந்து எண்ணிக் கொளல்'[20]

என்னும் குறளால் கூறுகிருர்.

இவ்வாறு பல சிறப்புகளும், பெருமைகளும் பெற்ற அரசன் நடுவுநிலைமையுடன் நீதி செலுத்திவருவானேயாகில் அவனைக் குடிகள் தெய்வம் போல எண்ணி நடப்பர் (குறள் 387); மேலும் நாட்டின் அறத்திற்கெல்லாம் அடித்தளமாக விளங்குவது அவன் செங்கோலே யாகும்; உலகை அரசன் காக்க, அவனை அவன் செங்கோல் காக்கும் (அதிகாரம் 55) என்றெல்லாம் கூறும் வள்ளுவர் அரசன் கடவுள் என்றோ, தெய்வத் தன்மைகள் அல்லது கூறுகள் கொண்டவன் என்றோ, அல்லது அரசாட்சி தெய்விகமான தொழில் என்றோ கூறவில்லை. அரசனும் ஒரு மனிதனே; ஆனுல், மனித குலத்துக்கு உரிய சில சிறுமைகளைக் களைந்து, முயற்சியினுல் நற்குணங்களை மட்டும் பேணி ஒழுகி உயர்ந்தவனுகலாம்; அதன் விளைவாக அறத்தினைக் காத்து.

[19] குறள் 515 [20] குறள் 530.

மக்களுக்கு நன்மை செய்யலாம் என்னும் கருத்துகளே காணக் கிடக்கின்றன. கொடுங்கோலனாக வாழும் அரசன் கள்வர், கொலைஞர் போன்று இழி தொழிலை நடாத்துபவன்; அவனுக்கு எந்தப் பெருமையும் கிடையாது என்று கூறியிருப்பதையும் (அதிகாரம் 56) பார்த்தால், அரசனுக்குக் குணத்தினாலும், செய்கையினாலும் மட்டும்தான் புகழே தவிர, பிறப்பினாலும், தொழிலினாலும் இல்லை என்பது புலப்படும்.

கௌடில்யரின் அர்த்த சாத்திரத்தைப் போலத் திருக்குறளிலும் ஒற்றருக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது.

'ஒற்றும் உரைசான்ற நூலும், இவை இரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்.[21]

என்னும் குறள் நீதி நூல்களையும், ஒற்றனையும் அரசனின் இரு கண்களுக்கு ஒப்பாகக் கூறுகிறது. தகுந்த ஒற்றர்களை நியமித்து உறவினர், பகைவர் ஆகிய அனைவரின் நடத்தையையும் அறிந்து, அதற்கேற்றபடி செயல்படாத அரசன் ஒருநாளும் வெற்றி அடையமாட்டான் (அதிகாரம் 59).

பிறர் கண்டு ஐயப்படாத அளவில் பொருத்தமான வடிவம் தாங்குபவனும், அஞ்சாதிருப்பவனும், தன் மனத்திலுள்ளதை வெளிப்படுத்தாதிருப்பவனுமே சிறந்த ஒற்றன். என்றாலும் ஓர் ஒற்றனுக்கு, அவன் நடத்தையை ஒற்றும்வண்ணம், வேறொரு ஒற்றனையும் அரசன் நியமித்தல் வேண்டும். தவிர, இவ்வாறு ஒருவரை ஒருவர் அறியாத மூன்று ஒற்றர்கள் ஒருமித்துக் கூறுமிடத்தேதான் அதனை மெய் என்று உணர வேண்டும்.

அரசன் ஒற்றருக்குச் சிறப்புச் செய்ய நினைத்தால் தனிமையிற் செய்ய வேண்டும். பிறர் அறியச் செய்தால் அரசன் ஒற்றன் ஆகிய இருவரது இரகசியங்களுமே வெளிப்படுத்தப்பட்டது போலாகும்.[22]

**அமைச்சு**

அமைச்சு என்னும் சொல் தொழிலைக் குறிக்கும் ஒன்று. 'Ministry' என்னும் ஆங்கிலச் சொல் 'அமைச்சு' என்னும் பொருள் தராது; 'அமைச்சகம்' அல்லது 'அமைச்சரவை' என்னும் வடிவமைப்பையே இவ் வாங்கிலச்சொல் குறிக்கும். 'நான்கு பேர் கொண்டது', 'எட்டுப்பேர் கொண்டது' என்றொரு

[21] குறள் 581. [22] குறள் 590

வடிவத்திற்கப்பாற்பட்டுச் செய்யும் வினையாலும், தன்மை யினாலும் மட்டுமே குறிக்கப்படுவதாக விளங்குவது 'அமைச்சு' ஆகும். ஆகவே, இவ் விளக்கத்தின்படி பார்த்தால் அமைச்சர் அவையில் இடம்பெற்ற ஒரே காரணத்தினால் ஒருவன் நல் லமைச்சனாக இருத்தலின் அவசியமோ, அதனில் இடம் பெறாத காரணத்தால் ஒருவன் அமைச்சனாக முடியாத தன்மையோ பெறப்படாது. அதாவது 'அமைச்சு' என்னும் சொல் விரிந்து விளங்கும் சொல். தமிழ் இலக்கியங்கள் சரித்திரம் இவற்றைக் கூர்ந்து ஆராய்ந்தால் இதன் பொருள் விளங்கும். அரசன் அமைச்சர் என்று ஒருவரையோ, அதற்கு மேற்பட்டவரையோ வைத்திருந்தாலுங்கூட, அமைச்சுத் தொழில் புலவர்களும், சான்றோர்களும் (நாடோடிகளாயிருந்தும்) செய்து வந்திருக் கின்றனர் என்பது புலப்படும். அரசன், குடிமக்கள் ஆகிய இருவரது நன்மையுங்கருதி இடித்தோ, புகழ்ந்தோ கூறும் அறிவுரைகளுக்கு அரசன் செவிசாய்க்கக் கடமைப்பட்டவன். ஆனால் ஒன்று. அவ்வாறு கூறும் அனைவருமே அமைச்சர்களா வார்களா? இல்லை. அதற்குரிய குண மன இன நலங்கள் கொண்டோரை மட்டுமே அரசன் அமைச்சராக மதித்தல் வேண்டும். அந் நலங்களையே அமைச்சு என்னும் அறுபத்து நான்காம் அதிகாரத்தில் வள்ளுவர் கூறுகிறார்.

ஒரு செயலை வெற்றியுடன் முடிக்கக் கருவி, காலம், செய்கை செயயும் வினை, வாய்ப்ப எண்ணுதல் ஆகிய ஆறனையும் தெளிந்து தேர்தல் வேண்டும். இதில் வல்லவனே அமைச்சனாவான்.

இதோடு, அச்சமின்மையும், குடிகாத்தலும், கல்வியும், முயற்சியும் அமைச்சனுக்கு இன்றியமையாதனவாம்.

தேவைக்கேற்பப் போரினையும், அமைதியையும் ஏற்படுத்தும் பொருட்டு நட்பையும், பகையையும் ஏற்படுத்த வலிமை பெற்றவனே அமைச்சனாவான்.

அவனுக்கு இயற்கையான நுண்ணறிவுடன், நூலறிவும் வேண்டும். அறத்தினை உணர்ந்தவனாயும், சூழ்ச்சிகளை அறி பவனாயும் அவன் இருக்க வேண்டும். அரசன் தானும் அறியாத வனாயிருந்து, பிறர் அறிவுரையும் ஏறாதவனாய் இருந்தபோதிலும் அவனுக்கு ஏறும்வகையில் உறுதியாக உரைப்பவன் அமைச்சன்.

அரசனுக்கு உண்மையுள்ளவனாயும், நன்கு ஆராய்ந்து அரசனுக்குத் துணை செய்பவனாயும் அமைச்சன் இருத்தல் வேண்டும். அரசனுக்குத் தீங்கு செய்ய நினைக்கும் அமைச்சன் பல்லாயிரம் பகைவரைவிடக் கொடியவனாவான்.

சொல்வன்மையும், இழிவற்ற செய்கையும், மன வலிமையும் தொழில் வலிமையும் செவ்வனே செயல் செய்யுந் திறமும் பெற்றவனே சிறந்த அமைச்சனுவான்.

குறளில் அமைச்சனது பிறப்பு, உயர்வு, அமைச்சுத் தொழில் பிறப்புரிமையாக வருவது போன்றவை கூறப்படவில்லை. எத்தனை அமைச்சர்கள் தேவை, எவ்வெத் தொழில் யார் யாரிடம் விடப்பட வேண்டும் என்ற பகிர்வும் சொல்லப்பட வில்லை. திறமையும், உண்மையும், அரசன் குடிமக்கள் ஆகியோர் மாட்டு அன்பும், பற்றும் உடையவன் சொல்லை அரசன் எளிதில் தட்ட முடியாது என்பது குறள் கூறும் செய்தியாக இருக்கலாம்.

## நாடு

நாடு என்பது முதற்கண் மக்கள் என்பதை உணர்த்தும் வகையில்,

'தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு'[23]

என்னும் குறளால் வள்ளுவர் கூறுகிறுர். நன்கு பயிர்த் தொழில் செய்து நாட்டின் வேளாண்மை வளத்தைப் பெருக்குவோரும், அறவோரும், நல்வழியில் பொருளீட்டிய செல்வரும் சேர்ந்து வாழ்வதே நாடாகும் என்னும் இக் குறளால் வள்ளுவர் நாட்டின் அடித்தளமாக அறத்தையும், அறவழிச் சேர்ந்த பொருளையும் மதிக்கிறுர் என்பது புலனுகிறது.

'பொறை ஒருங்கு மேல் வருங்கால் தாங்கி, இறைவற்கு
இறை ஒருங்கு நேர்வது நாடு'[24]

என்னும் குறளால் மககள் அரசனுக்கு வரிப்பொருளை உடன் பட்டுக் கொடுக்க வேண்டிய கடமையினை வலியுறுத்துகிறுர்.

பசி, பிணி, பகை இவற்றிலிருந்து மக்களைக் காத்து, மக்கள் தீயவர்களால் தொல்லைகள் இன்றி, வளமுடன் வாழ அரசன் கடமையாற்ற வேண்டியதனையும் வலியுறுத்துகிறுர். குறள் கூறும் நாடு 'மக்கள் நல்வாழ்வு அரசு' (welfare state) ஆகும்.

அரணின் சிறப்பும், நல்லோரது நட்பின் அவசியமும், தீயவரது நட்பை விடுதலினுல் வரும் பேறும், பகைவரையும் மன்னித்து நட்பாக்கிக் கொள்ளுதலின் உயர்வும் பல அதிகாரங் களில் கூறப்படுகின்றன. உட்பகை, வெளிப்பகை ஆகிய இரண்டையுமே வீரம் அன்பு இவற்றினுல் வென்று, அறத்தை நிலைநாட்டி வளத்தைப் பெருக்கி அமைதியை நாடும் அரசன் நடாத்தும் அரசியலே வள்ளுவர் கூறும் அரசியல்.

[23] குறள் 731. [24] குறள் 733.

# 16. சோழர் ஆட்சிமுறை-சில குறிப்புகள்

சுமார் கி.பி. 250-ல் களப்பிரர்களால் சோழர்கள் தோற்கடிக்கப்பட்டனர். தம் பழைய தலைநகரான புகாரை இழந்த சோழர்கள் வடபகுதிக்குச் சென்றிருத்தல் வேண்டும். தெலுங்குச் சோழர்கள் என்று ஒரு பெயரும் இருந்தது என்றாலும் காஞ்சியைத் தலைநகராக அமைத்துக் கொண்ட இவர்கள் கரிகாற் சோழன் பரம்பரையிலிருந்து வந்தவராகவே தம்மை மதித்தனர். காஞ்சியிலிருந்து உறையூருக்கும், பழையாறைக்கும் பின் தஞ்சைக்கும் தம் தலைநகரை மாற்றிக்கொண்டனர். கி. பி. 850-ல் விஜயாலயன் தஞ்சையில் சோழப் பேரரசை நிறுவியதிலிருந்து முதலாம் ராஜேந்திர சோழன் காலம் வரை (கி.பி. 1012 - 1044) சோழப் பேரரசு தமிழக அரசியலில் பெரும் பங்கு வகித்தது எனலாம். மூவேந்தரில் சோழர்கள் நீடித்து இருந்தமையினாலும் பேரரசாக நெடுங்காலம் விளங்கியதாலும் சோழர்களைப் பற்றிய செய்திகள் கிடைத்திருக்கின்றன. செப்பேடுகள், சுவடிகள், இலக்கியங்கள் இவைகளிலிருந்து நாம் இச் செய்திகளை அறிகிறோம். ஆனால், இச் செய்திகள் அவர்கள் அரசியல் முறையை முழுமையாக அறியப் போதுமானவையாக இல்லை. தந்தை வழி வரும் முடியாட்சி முறையையும், பெருங் கப்பற்படையையும் கொண்டிருந்த சோழப் பேரரசர்கள் வீரம், புகழ், கொடை இவற்றில் சிறந்து விளங்கினர் என்பதைத் தவிர அமைச்சு நிர்வாகம், உள்துறையாட்சி இவற்றைப்பற்றிக் கிடைக்கக் கூடிய சில விவரங்களை நாம் ஊகத்தினாலேயே பெருக்கிக் கொள்ள வேண்டியுள்ளது. ஆகவே, இந்த அத்தியாயத்தில் இது தான் சோழர் ஆட்சிமுறை என்று விளக்கமாக எதுவும் கூறப் படாமல் நமக்குத் தெரியவரும் சில விவரங்கள் மட்டும் விளக்கப் பட்டிருக்கின்றன.

**உடன்கூட்டம்**

கி.பி. 11, 12ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளிலிருந்து உடன் கூட்டம் என்னும் குழு சோழப் பேரரசில் இருந்துவந்தது என அறிகிறோம். இது ஆட்சியில் ஒரு பங்கு வகித்திருக்கலாம் என்பதை நாம் ஊகிக்க முடிந்தபோதிலும் அதன் தன்மையை உணர முடியவில்லை.

முன்னொரு அத்தியாயத்தில் ஐம்பெருங்குழு, எண்பேராயம் என்னும் இரு அமைப்புகளைப் பற்றிக் குறிப்பிடப் பட்டது. உடன் கூட்டம் என்பதும் அத்தகைய ஓர் அமைப்பாகவே இருந்திருக் கலாம். சோழர் காலத்தில் கிராம, நகர அலுவலர், கோவில் களைச் சார்ந்த பெரியோர், கலைஞர்கள், அறிஞர்கள், புலவர்கள் ஆகியோர் அரசவையில் நேரடிப் பங்கு வகித்திருத்தல் கூடும். இவர்களும் அரசனுக்குக் குற்றேவல் புரிவோரும் அரசன் பயணம் செல்கையில் உடன் போவதனால் 'உடன் கூட்டம்' என்னும் பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

**எண்பேராயம், ஐம்பெருங்குழு**

மணிமேகலை, சிலப்பதிகாரம் ஆகிய காப்பியங்கள் அரசனுக்குத் துணையாகச் செயல்புரிந்த இரு குழுக்களைக் குறிப்பிடு கின்றன. ஐம்பெருங்குழு, எண்பேராயம் என்பவை இவை. இவற்றைப் பற்றிய செய்திகள் நமக்கு அதிகம் கிடைக்கவில்லை. ஐம்பெருங்குழு என்பது ஐந்து பேர்கள் கொண்ட குழுவா, அல்லது ஐந்து குழுக்கள் கொண்ட அமைப்பா, இதில் அங்கம் வகித்தவர் யார் யார், இதன் பணி என்ன, என்பனவற்றிற்குச் சரியான விடை கிடைக்கவில்லை. இதேபோல் எண்பேராயம் என்னும் அமைப்பின் விவரமும் தெரியவில்லை என்றாலும் இவை பற்றி அறிஞர்களிடையே பல ஊகங்கள் உள்ளன.

ஐம்பெருங்குழுவில் மக்கள், புரோகிதர், மருத்துவர், நிமித்திகர், அமைச்சர் ஆகிய ஐவர் இடம்பெற்றிருக்கக்கூடும் என்பது உரையாசிரியர்களின் கருத்து.

ஆசான், பெருங்கணி, அறக்களத்து ஆண்டனர், காவிதி, மந்திரக் கணக்கர் ஆகிய ஐவர் பாண்டியன் மறைவுக்குப் பின் மதுரையில் இடைக்கால ஆட்சிப் பொறுப்பை ஏற்றனர் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. இதுவும் ஓர் 'ஐம்பெருங்குழு'வாக இருக்கலாம்.

எண்பேராயம் என்னும் சொல் எட்டுப் பேரைக் கொண்ட அமைப்பு என்று பொருள் தரும். அரசனுக்குத் தொண்டு செய்யும் பரிவாரங்கள் என்றும், ஆட்சியில் துணை செய்யும் அலுவலர் கூட்டம் என்றும் பலவாறு இதன் தொழிலை அறிஞர்கள் ஊகிக்கிறார்கள். இதன்படி கரணிகர், கர்மகாரர், கனக சுற்றம், கடைக்காப்பு, நகரமாந்தர், படைத்தலைவர், ஆனைவீரர், இவுளி மறவர் என்னும் எண்மர் கூட்டம் எண்பேராயம் என்பதாகும்.

### அலுவலர்

சிறுதரம், பெருந்தரம் என இரு பிரிவுகளாக அலுவலர் பிரிக்கப்பட்டிருந்தனர் என்பது தொல்பொருள் ஆராய்ச்சி யாளர்கள் கண்ட சான்றுகளின்மூலம் நமக்குத் தெரிகிறது. பொறுப்புள்ள பெரும் பதவியில் உள்ளோர் பெருந்தரமென்றும், சிறு பணிகள், எடுபிடி. ஏவல் வேலை செய்தோர் சிறுதரம் என்றும் வழங்கப்பட்டனர். பெருந்தரத்தைச் சேர்ந்த அலுவலர் கருமிகள் என்றும், சிறுதரத்தைச் சேர்ந்தவர் பணிமக்கள் என்றும் அழைக்கப்பட்டனர். இவைதவிர, இவ் விரண்டு நிலை களுக்கும் இடைப்பட்ட ஊழியர் சிறுதரத்துப் பெருந்தரம் என வழங்கப்பட்டனர்.

### வரி

அரசனுக்கு அளிக்கப்படும் வரி 'இறை' எனப்பட்டது. நில வரி நிலத்தின் தன்மைக்கேற்ப விதிக்கப்பட்டது. நன்செய், புன்செய் என்னும் இரு பிரிவுகளைத் தவிர, காடு என்னும் ஒரு பிரிவும் இருந்தது.

புறவுவரித்திணைக்களம் என்னும் பெரும் பிரிவு வரிக் கணக்குகளை வைத்திருக்கும் அலுவலகமாக இருந்திருக்கக்கூடும். இதில் பத்துப் பிரிவுகள் இருந்தன.

(1) புறவுவரித்திணைக்களம்
(2) வரிப்பொத்தகம்
(3) புறவுவரித்திணைக்களக் கண்காணி
(4) முகவெட்டி
(5) தெரிப்பு
(6) தரவு சாத்து
(7) பளணியாயம்
(8) வரியிலிடு
(9) வரிப்பொத்தகக் கணக்கு
(10) பட்டோலை

இவை ஒவ்வொன்றின் அலுவல் என்ன என்பது ஊகத்திற்கு இடமானது.

### சபா, மகா சபா

கிராமங்களின் நிர்வாகப் பொறுப்பு சபா என்னும் கிராம மக்களாலான ஒரு அமைப்பின்கீழ் இருந்தது. நந்திவர்ம பல்லவன் காலத்திலிருந்து தொண்டைமண்டலத்தில் பல

கிராமங்களில் இவ் வமைப்பு இருந்ததாகத் தெரிகிறது. சோழ நாட்டின் வட பகுதியில் முக்கியமாக உத்திரமேரூர் என்னும் கிராமத்தில் சபா எவ்வாறு செயல்பட்டது என்பதற்கு நமக்குப் பல சான்றுகள் கிடைத்துள்ளன. முதலாம் பராந்தக சோழன் (919 - 921) காலத்தில் உத்திரமேரூர் சபா செயல்பட்ட விவரத்தை நாம் இங்குக் காண்போம்.

சபாவானது மகா சபா எனவும் அழைக்கப்பட்டது. கிராமத்திலுள்ள நிலச் சொந்தக்காரர்கள் இதில் அங்கம் வகித்தனர். அவர்கள் 'சபையார்' என அழைக்கப்பட்டனர்.

சபா கிராமப்பணி, பராமரிப்பு நிர்வாகம் முதலியவைகளுக்குப் பொறுப்பு வகித்தது. இப் பொறுப்புகளை நிறைவேற்ற 'வாரியம்' என்னும் குழுக்கள் நிறுவப்பட்டன. இவற்றின் அதிகாரிகள் 'வாரியார்' என அழைக்கப்பட்டனர்.

கிராமம் பல வட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொன்றும் குடும்பு அல்லது சேரி என அழைக்கப்பட்டது. உத்திரமேரூர் கிராமத்தில் 30 வட்டங்கள் இருந்தன.

**வாரியங்களின் அமைப்பும், குடவோலை முறையும்**

சம்வத்சர வாரியம், தோட்ட வாரியம், ஏரி வாரியம், பொன் வாரியம், பஞ்சவார வாரியம் ஆகிய குழுக்கள் செயல் பட்டன.

சம்வத்சர வாரியத்தில் பன்னிரண்டு பேரும், தோட்ட வாரியத்தில் பன்னிரண்டு பேரும், ஏரி வாரியத்தில் அறுவரும் அங்கம் வகித்தனர்.

ஒவ்வொரு வட்டத்திலும் உள்ள மக்கள் தம்மிடையே வரி கட்டும் நிலச் சொந்தக்காரர்களாயும், சொந்த வீட்டில் வசிப்பவர்களாயும், அறுபது வயதுக்கு மேற்படாமலும் முப்பது வயதுக்குக் குறையாமல் உள்ளோராயும், வேத சாத்திரப் பொது அறிவு மிக்கவராயும், நாணயமும், தூய்மையும் உள்ளவராயும், கடந்த மூன்று வருடங்களில் வாரியங்களில் அங்கம் வகித்திராதவராயும், வாரியங்களில் அங்கம் வகித்தோருக்கு நெருங்கிய சுற்றமாக இல்லாதவராயும், கொலை களவு அல்லது வேறு குற்றம் புரிந்திராத குடும்பத்திலிருந்து வருபவராயும் உள்ளவர்களின் பெயரை ஓலையில் எழுத வேண்டும். அவை கூடுமிடத்தில் மத்திய மண்டபத்தினுள் ஒவ்வொரு வட்டத்தின்

ஓலைகளும்அங்கத்தினர் அனைவருக்கும் முன்பாகக் குடத்தில் இடப்பட்டுச் சிறுவன் ஒருவனால் ஓர் ஓலை மட்டும் பொறுக்கி எடுக்கப்படும். இவ்வாறு முப்பது ஓலைகள் எடுக்கப்பட்டு அவற்றிலுள்ளவரின் பெயர்கள் அறிவிக்கப்படும்.

இம் முப்பது பேர்களில் வயதிலும், அறிவிலும் முதிர்ச்சி பெற்று முன்பாகத் தோட்ட, ஏரி வாரியங்களில் செயல் திறமை பெற்ற பன்னிருவர் சம்வத்சர வாரியக் குழுவினராகவும்; பன்னிருவர் தோட்டவாரியக் குழுவினராகவும், அறுவர் ஏரி வாரியக் குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இம் மூன்று வாரியங்களும் ஒரு வருடத்திற்குப் பிறகு கலைக்கப்பட்டுப், பின் புது வாரிய அங்கத்தினர்கள் தெரிந்தெடுக்கப்படுவார்கள்.

இதே முறையில் அறுவர் கொண்ட பொன் வாரியம், பஞ்ச வார வாரியம் ஆகிய குழுக்களும் தெரிந்தெடுக்கப்பட்டன.

இவை தவிர, காலம், தேவை, இடம் ஆகியவற்றிற்குத் தகுந்தபடி கணக்கு வாரியம், கழனி வாரியம் போன்ற குழுக்களும் இருந்தன என்பது தெரியவருகிறது.

மேலும், இக் குழுக்களின் அங்கத்தினர் எண்ணிக்கையும் ஆறிலிருந்து ஒன்பதாகவும் உயர்த்தப்படலாம் என்பது உத்திர மேரூர் செப்பேடுகளிலிருந்து தெரிகிறது.

சம்வத்சர வாரியம் என்பது மற்ற வாரியங்களின் வேலைகளை மேற்பார்வையிடுவதாகவும், கணக்குகளைப் பரிசோதிப்பதாகவும் இருந்திருக்கலாம்.

கிராமத்தின் தோட்டங்கள், பொதுப்பணிகள் ஆகியவற்றின் பொறுப்பைத் தோட்டவாரியம் ஏற்றது.

ஏரிவாரியம் கிராமப்பாசன வேலைகளைக் கவனித்தது.

பொன் வாரியம் பொன்னின் தரத்தைச் சோதித்து மதிப்பிட்டது.

பஞ்சவார வாரியம் என்ன பணி செய்ததெனச் சரிவரத் தெரியவில்லை. வரிவசூல் செய்யும் பணியினை இக் குழு மேற்கொண்டிருக்கக்கூடும்.

வாரியத்தில் அங்கம் வகித்தோர் பெருமக்கள் எனப் பட்டனர். இவர்கள் பதவி நீங்கும்போது தத்தம் வரவு செலவுக் கணக்கினை ஒப்படைத்து, அவை சரிபார்க்கப்பட்ட பிறகே விலக வேண்டும். தவறுகளுக்கு இவர்கள் பொறுப்பாக்கப்பட்டனர்.

மேற்கண்ட கிராம சுயாட்சி அமைப்பு சோழர் ஆட்சி முறையில் சிலவிடங்களிலேதான் காணப்பட்டதா, அல்லது எல்லாக் கிராமங்களிலும் இருந்ததா என்பது தெரியவில்லை.

இணைப்பு

# மனுவின் சட்டங்கள்—அத்தியாயம் VII

1. நான் இப்பொழுது அரசன் கடமைகளைப் பற்றியும் அவன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றியும், அவன் எவ்வாறு உண்டாக்கப்பட்டான், அவன் எவ்வாறு உயர்ந்த வெற்றியை அடையக் கூடும் என்பவை பற்றியும் கூறப் போகிறேன்.

2. வேத நெறிப்படி புனிதத்தை அடைந்த சத்திரியன் இவ் உலகம் முழுவதையும் காக்கவேண்டும்.

3. ஏனெனில், அரசனின்றி உயிர்களனைத்தும் அச்சத்திஞல் பல திசையிலும் ஓடியபொழுது கடவுள் அனைவரையும் காப்பாற்ற அரசனைப் படைத்தார்.

4. இந்திரன், வாயு, எமன், சூரியன், தீ, வருணன், சந்திரன், குபேரன் ஆகிய தேவதைகளின் கூறுகளைச் சேர்த்து உண்டாக்கப்பட்டான்.

5. இத்தகைய தேவதைகளின் கூறுகளிஞல் அரசன் உண்டாக்கப்பட்டதால் படைப்புகள் அனைத்தினும் சிறந்தவஞக ஒளிர்கிருன்.

6. ஆதவனைப்போல் கண்களையும், இதயத்தையும் எரிப்ப வஞக இருக்கிருன். இப் பூமியிலுள்ளோர் அவனை நிமிர்ந்து பார்க்கவும் முடியாது.

7. இயற்பரமான (Supernatural) சக்தியிஞல் அவனே தீயாயும், காற்ருயும், சூரியஞயும், சந்திரஞயும், எமஞயும் குபேரஞயும், வருணஞயும், இந்திரஞயும் விளங்குகிருன்.

8. அரசன் பச்சிளம் பாலகஞயிருப்பினும் அவனை மனிதன் தானே என்று கீழாக எண்ணிவிடக் கூடாது. ஏனெனில், அவன் மனித உருக்கொண்ட தேவதையே ஆவான்.

9. கவனமின்றித் தன்னை அணுகுபவனை மாத்திரம் தீ எரிக்கும். ஆனால், அரசனின் கோபமானது ஒரு குடும்பத்தையே அதன் சகல சொத்துகளுடன் அழித்துவிடும்.

10. தன் நோக்கம், வலிமை, இடம், காலம் இவற்றை நன்கு எண்ணி ஒவ்வொரு செயலுக்கும் தக்கவாறு தர்மத்தை நிலைநாட்டும் பொருட்டு அரசன் பல உருக்கொள்கிறான்.

11. எந்த அரசனின் ஈகையில் திருமகளும், எவனுடைய வீரத்தில் வெற்றியும், எவனுடைய வெகுளியில் மரணமும் விளங்குகின்றனவோ அத்தகைய அரசன் எல்லா தேவதைகளின் ஒளியுடனும் விளங்குகிறான்.

12. தன் அறிவீனத்தினால் அரசனை வெறுப்பவன் நிச்சயமாக அழிந்துபோவான். ஏனெனில், இத்தகையவனை அரசன் உடனே அழிக்கத் துணிகிறான்.

13. ஆகவே தான் விரும்புவோருக்கும் தான் விரும்பாதவர்க்கும் முறையே நன்மை தீமை பயக்கும் பொருட்டு அரசன் செலுத்தும் சட்டங்களை ஒருவரும் மீறாது இருப்பாராக.

14. பிரம்மனின் ஒளி பொருந்திய எல்லா படைப்புகளையும் காக்கக்கூடிய 'தண்டம்' (தண்டனை) என்னும் தன் புதல்வனை அரசனுக்குத் துணையாகக் கடவுள் படைத்தார்.

15. அந்தத் தண்டத்திடம் உள்ள அச்சத்தினால் படைப்புகளனைத்தும் தத்தம் தருமத்திலிருந்து விலகாமல் இன்பமாய் இருக்கின்றன.

16. குற்றம் செய்தவர்களுக்குத் தண்டனை விதிக்கும்போது அவர்களின் அறிவு, வலிமை, குற்றம் செய்த இடம், காலம் இவற்றை மனத்தில் கொண்டு அரசன் தக்க தண்டனை அளித்தல் வேண்டும்.

17. உண்மையில் தண்டனையே அரசன்; ஆண்மை; நான்கு ஆசிரமங்களின் தர்மம் நடப்பதற்குப் பிணை.

18. தண்டனைதான் அனைவரையும் காப்பாற்றி நடத்துகிறது; யாவரும் தூங்கும்போது தான் விழித்துக் கொண்டு இருக்கிறது; ஆகவே, சான்றோர்கள் சட்டம் (தருமம்) தண்டனை உருக்கொண்டது என்று கூறுவர்.

19. அரசனால் நன்கு கையாளப்பட்டால் தண்டனை அனைவருக்கும் நன்மை பயக்கும்; இல்லாவிடில் யாவற்றையும் அழித்து விடும்.

20. அரசன் தன் சோம்பலினால் தண்டிக்கத் தக்கவர்களை தண்டிக்காவிடின் பெரிய மீன்கள் சிறிய மீன்களைத் தின்று அழிப்பதுபோல் வலிமை மிக்கவர்கள் வலிமையற்றவர்களை அழித்துவிடுவர்.

21. வேள்விக்காக வைத்திருக்கும் பண்டங்களைக் காக்கை தின்றுவிடும்; நாய்கள் நக்கும்; அவனவன் பொருள் அவனவனுக்குச் சொந்தமாகாது; கீழ் மக்கள் மேன்மக்களின் இடத்தைப் பறித்துக்கொள்வர்.

22. இயற்கையிலேயே குற்றமற்றவரைக் காண்பது கடினம்; உலகில் யாவும் தண்டனைக்கு அஞ்சியே ஒழுங்காக நடந்து சுகம் பெறுகின்றன.

23. தேவர்களும், தானவர்களும், கந்தருவர்களும், இராக்கதரும், பறவை, பாம்பு முதலிய யாவும் தண்டனைக்கு அஞ்சியே நன்மை அளிக்கின்றன.

24. உரிய தண்டனையில்லாமற்போனால் கலப்பினால் வருணங்களுக்கிடையேயுள்ள பாகுபாடு உடையும்; ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்வர்.

25. அரசன் தக்கபடி கையாள்வானேயாகில் கருநிறமும் சிவந்த கண்களும் உடைய தண்டனையென்னும் தேவதை குற்றவாளிகளை அழித்து அனைவருக்கும் நன்மை பயக்கும்.

26. உண்மை, ஆலோசனை, அறிவு ஆகியவை பொருந்தியவனும் அறம், பொருள், இன்பம் ஆகியவற்றின் மதிப்பை அறிந்தவனும் ஆகிய அரசன் செங்கோலன் எனப்படுவான்.

27. இத்தகைய அரசன் அறம், பொருள், இன்பத்தினால் மேன்மையடைவான். ஆனால், காமம், பொய்மை, ஒரேவழிச் சார்வு இவற்றினால் கொடுங்கோலனாய்த் திகழும் அரசனை அவனது கொடுங்கோன்மையே அழித்துவிடும்.

28. உயர்ந்த அறிவு படைத்தவனாலன்றி வேறொருவனால் ஒளி பொருந்திய தண்டனையைக் (தண்டனை என்னும் ஆடவனைக்) கையாள முடியாது. தன் கடமையிலிருந்து விலகும் அரசனையும், அவன் சுற்றத்தையும் தண்டனையே கொன்றுவிடும்.

29. அவன் கோட்டை கொத்தளங்களையும், நாட்டினையும், உயிர்களையும், பொருள்களையும் அழித்துவிடும்; வேள்விப் படைப்பின்றித் தேவதைகளும் அவனை விட்டு விலகும்.

30. துணையற்றவனாலும், மூடனாலும், பேராசை உடையவனாலும், அறிவு முதிர்ச்சி அடையாதவனாலும், காமமுடையவனாலும் முறையான தண்டனை (செங்கோல்) செலுத்த முடியாது.

31. சொன்ன சொல்லைக் கடைப்பிடிப்பவனும், புனித சட்டங்களின்படி நடப்பவனும், சிறந்த துணைவர்களை உடையவனும், அறிவு நிரம்பியவனுமாகிய ஒருவனால் தண்டனை தக்க முறையில் விதிக்கப்படும்.

32. தன் மக்களை நீதியுடன் ஆள்பவனாயும், தன் எதிரிகளை ஒருங்கே ஒடுக்குபவனாயும், தன் நண்பர்களிடத்துக் கபடமின்றி இருப்பவனாயும், பிராமணர்களிடத்து எளிமையானவனாயும் அரசன் இருப்பானாக.

33. இத்தகைய அரசன் பொருளற்று, உதிர்ந்த தானியத்தைப் பொறுக்கி வாழ்ந்தாலுங்கூட அவன் பெருமை, நீரில் விழுந்த எண்ணெய்போல் எங்கும் பரவும்.

34. இவ்விதக் குணமும், புலனடக்கமும் அற்ற அரசனது புகழ் நீரில் விழுந்த நெய்த்துளி போல் மூழ்கிவிடும்.

35. தத்தம் தருமத்தைக் கடைப்பிடிக்கும் நான்கு வருணத்தாரையும், நான்கு ஆசிரமத்தாரையும் காப்பாற்றுவதற்காக அரசன் பிரம்மனால் படைக்கப்பட்டான்.

36. அரசனும் அவன்கீழ்ச் செயல்படுவோரும் மக்களைக் காக்கும் பொருட்டுச் செயல்பட வேண்டிய முறையை இனி விளக்கப்போகிறேன்.

37. அரசன் அதிகாலையில் எழுந்து வேத சாத்திரங்களையும் அரசியலையும் உணர்ந்த பிராமணர்களை வணங்கி அவர்கள் அறிவுரையைப் பின்பற்றுவானாக.

38. தினமும் நன்கு வேதம் தெரிந்த மாசற்ற வயது முதிர்ந்த பிராமணர்களை வணங்குவானாக. ஏனெனில், வயது முதிர்ந்தோரை வணங்கிவருபவனை இராக்கதர்களுங்கூடப் போற்றுகிறார்கள்.

39. தான் அடக்கமுடையவனுக இருந்தபோதிலும் அவர்களிடமிருந்து மேன்மேலும் அடக்கத்தைக் கற்றுக்கொள்வாணுக. ஏனெனில், அடக்கமுடைய அரசன் ஒரு நாளும் அழிவதில்லே.

40. அடக்கமின்மையிஞல் பல அரசர்கள் தத்தம் உடமையுடன் அழிந்துபோயிருக்கிருர்கள். அடக்கத்திஞல் காட்டில் வாழும் துறவிகள்கூட ஆட்சியினைப் பெற்றிருக்கிருர்கள்.

41. அடக்கமின்மையிஞல் வீணன், நகுஷன், சுதஸ், யவனன், சுமுகன், நேமி முதலிய அரசர்கள் அழிந்தனர்.

42. அடக்கமுடைமையிஞல் பிருதுவும், மனுவும் அரசர்களாயினர். குபேரன் செல்வத்துக்கு அதிபதியாஞன்; விசுவாமித்திரன் பிராமணரின் நிலையை அடைந்தான்.

43. மூன்று வேதங்களேயும் உணர்ந்தவரிடமிருந்து அரசியல், பொருளாதாரம், ஆத்தும அறிவு ஆகிய மூன்று புனித இயல்புகளேயும் அரசன் அறிவாணுக. மக்களிடமிருந்து பல வகையான வாணிகங்கள், ஊழியங்கள் ஆயகிவற்றின் முறையை அறிவாணுக.

44. அல்லும் பகலும் அரசன் தன் புலன்களே வெற்றி கொள்ள முயலவேண்டும். ஏனெனில், தன் புலன்களே அடக்கியவஞல்தான் மக்களேயும் அடங்கியிருக்கச் செய்யமுடியும்.

45. இன்ப விழைவிஞல் ஏற்படும் பத்துக் கேடுகளேயும் வெகுளியிஞல் ஏற்படும் எட்டுக் கேடுகளேயும் அரசன் தவிர்க்க வேண்டும். .ஏனெனில், இவை யாவும் துன்பத்திலே முடிகின்றன.

46. இன்ப விழைவிஞல் ஏற்படும் கேடுகளில் ஈடுபாடு கொண்ட அரசன் தன் குணத்தையும், செல்வத்தையும் இழக்கிருன். ஆஞல், சினத்திஞல் ஏற்படும் கேடுகள் அவன் உயிருக்கே ஊறு விளேவிக்கும்.

47. வேட்டையாடுதல், சூதாடுதல், பகல் தூக்கம், குற்றம் காணுதல், மிதமிஞ்சிய சிற்றின்பம், குடிமயக்கம், ஆடல், பாடல், இசை ஆகியவற்றில் மிதமிஞ்சிய ஈடுபாடு, ஊர் சுற்றுதல் ஆகிய பத்தும் இன்ப விழைவிஞல் ஏற்படும் கேடுகளாம்.

48. கோள் சொல்லுதல், கொடுமை, துரோகம், பொருமை, தூற்றுதல், மற்றவர் பொருளேக் கவர்தல், காரணமின்றிக் கடிதல், அடித்தல் ஆகிய எட்டும் சினத்திஞல் ஏற்படும் கேடுகளாம்,

49. இருவகையாகச் சொல்லப்பட்ட இப் பதினெட்டுக் கேடுகளுக்கும் காரணமென்று பெரியோர்கள் சொல்லக்கூடிய பேராசையை அரசன் முயன்று நீக்கவேண்டும்.

50. இன்ப விழைவினுல் உண்டாகும் பத்துக் கேடுகளுக்குள் குடிமயக்கம், சூதாட்டம், சிற்றின்பம், வேட்டை ஆகிய நான்கும் அதிகத் துன்பத்தை தரவல்லவை.

51. சினத்தினுல் ஏற்படும் கேடுகளுக்குள் காரணமின்றி அடித்தல், கடிதல், பொருளைக் கவர்தல் ஆகிய மூன்றும் அதிகத் துன்பத்தை அளிக்கவல்லன.

52. இந்த ஏழினுள் முதலில் சொல்லப்பட்டது ஒவ்வொன்றும் அதற்குப்பின் சொல்லப்பட்டவற்றைக்காட்டிலும் முறையே அதிகத் துன்பத்தை அளிக்கவல்லன.

53. கேடு, மரணம் இவ் விரண்டில் கேடே மிகக் கொடியது. ஏனெனில், கேடுகளுடையவன் நரகத்தை அடைகிருன். ஆனுல், கேடின்றி இறப்பவன் சுவர்க்கம் செல்கிருன்.

54. தலைமுறையாக அரசு ஊழியம் செய்த குடும்பத்தில் உதித்தவர்களாகவும், நீதி சாத்திரம், போர்முறை, வேதாந்தம் ஆகியவைகளை அறிந்தவர்களாகவும், பலமுள்ளவர்களாகவும், நல்ல குலத்தில் பிறந்தவர்களாகவும், சோதனைகளில் தேறியவர்களாகவும் உள்ள எழுவர் அல்லது எண்மரை அரசன் அமைச்சர்களாக நியமித்தல் வேண்டும்.

55. சிலவிடங்களில் எளிதான செயலைக்கூடத் தனி ஒருவன் செய்ய இயலாது. அவ்வாறிருக்க அதிக வருவாயுள்ள நாட்டை, அரசன் துணையின்றி எவ்வாறு ஆளமுடியும் ?

56. இவ் வமைச்சர்களுடன் போர், சமாதானம், நால் வகைப் படைகள், வருவாய், காக்கும் வகை, வெகுமதி அளித்தல் ஆகியவை பற்றித் தினமும் கலந்து ஆலோசிக்கவேண்டும்.

57. இவ் வமைச்சர்களின் கருத்தை முதலில் தனித்தனியாயும் பிறகு சேர்ந்தும் அறிந்துகொண்டு எது நன்மை பயக்குமோ அக் கருத்தின்படி அரசன் நடக்க வேண்டும்.

58. அவர்களுள் மிகச் சிறந்தவனும் நன்கு கற்றறிந்தவனுமாகிய பிராமணனுடன் அரச கொள்கையின் ஆறு திட்டங்களை ஆலோசனை செய்யவேண்டும்.

59. அவரிடம் முழு நம்பிக்கையுடன் எல்லாச் செயல்களையும் ஒப்படைக்க வேண்டும். அவருடன் ஒரு முடிவெடுத்து அதன் பிறகே செயலில் இறங்க வேண்டும்.

60. நாணயம், நல்லறிவு, உறுதி, வருவாய் அதிகரிக்கச் செய்யும் திறமை ஆகியவை கொண்ட மற்றும் பல அலுவலரைச் சோதித்து நியமித்தல் வேண்டும்.

61. தன் அலுவல்களைத் திறம்பட நடத்த எவ்வளவு பேர் தேவையோ அவ்வளவு அலுவலர்களைத் திறமையுள்ளவரும் சோம்பலற்றவருமாக நியமித்தல் வேண்டும்.

62. அவர்களுள் திறமை, துணிவு, நாணயம், உயர்குடிப் பிறப்பு ஆகியவை உடையவரை வருவாய்த் துறையில் அதாவது சுரங்கங்கள், பொருளுற்பத்தித் தலங்கள், கருவூலங்கள் ஆகியவற்றிலும், அச்சமுள்ளவரைத் தன் அரண்மனையின் உள்ளும் அலுவலராக நியமிக்க வேண்டியது.

63. எல்லாச் சாத்திரங்களையும் அறிந்தவனாகவும், சொற்குறி, முகக்குறி, செய்கைக் குறி இவைகளை அறிந்துகொள்வதில் தேர்ச்சி பெற்றவனாகவும், நாணயம், திறமை, நற்குலப் பிறப்பு ஆகியவை உடையவனாகவும் இருப்பவனைத் தூதுவனாக அரசன் நியமிக்க வேண்டும்.

64. அத் தூதுவன் அனைவரிடத்தும் அன்பு உடையவனாயும், திறமை மிக்கவனாயும், நாணயமானவனாயும், ஞாபகசக்தி நிரம்பியவனாயும் ஒரு செயலைச் செய்வதற்கு ஏற்ற இடம், காலம் ஆகியவற்றை அறிந்தவனாயும், அழகு, உறுதி, சொல்வன்மை ஆகியவை உடையவனாயும் இருந்தால் தன் அரசனுக்குப் புகழ் சேர்ப்பவன் ஆவான்.

65. படைப் பராமரிப்பைப் படைத்தலைவர் மூலமாகவும், கருவூலம், ஆட்சி ஆகியவற்றைத் தானாகவும், போர், சமாதானம் ஆகியவற்றைத் தூதுவன் மூலமாகவும் அரசன் நடத்தவேண்டும்.

66. பகையை நட்பாகவும், நட்பைப் பகையாகவும் மாற்றும் திறம்படைத்த தூதுவனாலேயே போரும் அமைதியும் ஏற்படுகின்றன.

67. வேற்றரசன், அவனது அமைச்சர், அலுவலர் ஆகியோரது முகக்குறி, செய்கை, நடத்தை இவை மூலமாக அவ்வரசனின் எண்ணங்களைத் தூதுவன் அறியவேண்டும்.

68. பகையரசனின் நோக்கத்தைத் தன் தூதுவன் மூலம் உணர்ந்த அரசன், தனக்குத் தீமை ஏற்படாவண்ணம் தகுந்த முறையில் நடந்துகொள்ள வேண்டும்.

* * * *

99. அரசன் தான் இதுவரை அடையாதவற்றை அடைய முயல வேண்டும். அப்படி அடைந்த பொருளைக் கவனமாகக் காக்க வேண்டும். அவ்வாறு காப்பாற்றிய பொருளை மேன் மேலும் பெருக்க வேண்டும். அவ்வாறு பெருக்கிய பொருளைத் தகுந்த பெரியோர்களுக்கு வழங்க வேண்டும்.

* * * *

105. அரசன் பகைவனிடமிருந்து தன் தளர்ச்சியை மறைக்க வேண்டும்; பகைவனின் தளர்ச்சியை அறிய வேண்டும். ஆமையானது தன் உறுப்புகளை ஓட்டினுள் மறைத்துக்கொள் வதைப்போல அரசனும் தன் அலுவலர்களையும், தளர்ச்சியையும் மறைத்துக்கொள்ள வேண்டும்.

106. கொக்கைப் போலப் பொறுமையுடனும் உறுதி யுடனும் செயல்களை ஆழ்ந்தாய்ந்து செய்ய வேண்டும்; சிங்கத் தைப்போல் தன் வலிமையைக் காட்ட வேண்டும்; ஓநாயைப் போல் எதிரியைக் கவ்வ வேண்டும்; முயலைப்போல் விரைந்து தப்ப வேண்டும்.

107. இவ்வாறு வெற்றி நோக்கில் ஈடுபட்டிருக்கையில் தனக்கு ஊறு விளைவிப்போரைச் சாமம், தானம், பேதம், தண்டம் ஆகிய உபாயங்களினால் அடக்க வேண்டும்.

108. அப் பகைவர்கள் முதன் மூன்று உபாயங்களினால் அடங்காவிடின் அவர்களைக் கடைசி உபாயத்தால் அடக்க வேண்டும்.

109. இந் நான்கு உபாயங்களில் சாமம், தண்டம் ஆகிய இரண்டும் நாட்டின் வளமைக்கு அடிகோலுகின்றன என்பர் சான்றோர்.

* * * *

128. தனக்கும் குடிகளுக்கும் நன்மை பயக்கும் விதத்தில் அரசன் வரியும் தீர்வையும் விதிக்க வேண்டும்.

129. அட்டை, கன்று, வண்டு இவைகள் தம் உணவை எவ்வாறு சிறுகச் சிறுக உண்கின்றனவோ அதேபோல் அரசனும் குடிமக்களிடமிருந்து அளவாக வரி ஈட்ட வேண்டும்.

*130.* பொருள், பசு இவற்றின் வருவாயில் ஐம்பதில் ஒரு பங்கும், தானியத்தில் (தகுந்தவாறு) ஆறு, எட்டு அல்லது பன்னிரண்டில் ஒரு பங்கும் வரியாகப் பெறவேண்டும்.

*131.* மரம், இறைச்சி, தேன், நெய், வாசனைத் திரவியங்கள், மருந்து மூலிகைகள், பூ, பழம், கிழங்கு,

*132.* இலை, காய், புல், பிரம்பு, மூங்கில் (போன்றவற்றால் ஆகிய பண்டங்கள்), தோல், மண்பாண்டம், கற்கள் ஆகிய வற்றின் இலாபத்தில் ஆறில் ஒரு பங்கை அரசன் வரியாக விதிக்கலாம்.

*133.* வறுமைப்பட்ட நிலையிலும் அரசன் கற்றறிந்த பிராமணனிடமிருந்து வரி வாங்குதல் கூடாது. அத்தகைய பிராமணர்கள் எவரும் பசியினால் தன் நாட்டில் துன்பப்பட விடக்கூடாது.

*134.* அவ்வாறு துன்பப்பட்டால் அவ் வரசனது நாடு விரைவில் பஞ்சத்தினால் அழிந்துபோகும்.

*135.* அப் பிராமணரின் வேத அறிவையும், நெறியையும் அறிந்து வேதத்தில் சொல்லியவாறு அவர்களுக்கு வாழ்க்கை வசதிகளை அளித்துப் பெற்ற பிள்ளையைத் தகப்பன் காப்பதுபோல் காத்தல் வேண்டும்.

*136.* . அரசனால் காக்கப்பட்ட இப் பிராமணர்கள் செய்யும் அறத்தினால் அவ் வரசனுக்கு ஆயுள், பொருள், நாடு ஆகியவை அதிகமாகின்றன.

*137.* தன் நாட்டில் சிறு பொருள்களைக் கொண்டுவந்து விற்றுப் பிழைக்கும் ஏழைகளிடத்தில் ஏதேனும் கொஞ்சம் ஆண்டிற்கொருமுறை வரியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

*138.* யந்திர வேலைக்காரர், கலைஞர், உடலுழைப்பைத்தரும் சூத்திரர் ஆகியோரிடமிருந்து மாதமொருநாள் உழைப்பைத் தனக்காகப் பெற்றுக்கொள்ளலாம்.

*139.* வரி விதிக்காது தனது வேரையும், அதிக வரியினால் குடிகளின் வேரையும் அறுக்கலாகாது; ஏனெனில், இது தனக்கோ, குடிமக்களுக்கோ துன்பமாய் முடியும்.

# மேற்கோள் நூற்பட்டியல்*

## (BIBLIOGRAPHY)


1. Drekmeier, C. : *Kingship and Community in Early India.*
2. Goshal, V. N. : *History of Indian Political Ideas.*
3. Kautilya : *Artha Sastra,* Tr. R.P. Kangle, *Books I & II.*
4. Manu : *The Laws,* Tr. Buhler, Chapter VII
5. Kane, P. V. : *History of Dharma Sastra,* Vol. III, Chap. I to IV.
6. Mobbett, I. W. : *Truth, Myth and Politics in Ancient India.*

இவை தவிர, கீழ்க்கண்ட நூல்களும் மாணவர்களுக்குத் துணை செய்யும் :

Altekar : *State and Government in Ancient India.*

Beni Prasad : *The State in Ancient India.*

Dikshitar : *The Mauryan Polity.*

,, *The Gupta Polity.*

Goshal : *Hindu Public Life.*

Mahalingam : *South Indian Polity.*

Nilakanta Sastry : *Studies in Chola History and Administration.*

Spellman : *Political Theory of Ancient India.*

Subramaniam : *History of Tamil Nadu.*

Thapar : *Asoka and the Decline of the Mauryas.*

வித்தியானந்தன் : தமிழர் சால்பு


* பல்கலைக்கழகப் பாடத்திட்ட அட்டவணைப் பக்கம் 34—Ancient Indian Polity (Ideas and Institutions)

# கலைச்சொற்கள்

## A

Absolutism — வரம்பின்மை
Act — சட்டம்
Adjudication — சட்டம் தழுவல்
Administration — ஆட்சி, நிருவாகம்
Advisory Bodies — ஆலோசனைக் குழுக்கள்
Alliance — நேச உடன்படிக்கை
Anarchy — அரசியல் குழப்பம், ஆட்சி குலைந்த நிலை
Ancient Monuments — பழங்காலச் சின்னங்கள்
Annexation — வல்லிணைப்பு
Appeal — மேல் முறையீடு
Arbitrary — எதேச்சையான
Arbitration — நடுவர் தீர்ப்பு
Aristocracy — உயர் குடியாட்சி
Assembly — அவை
Association — சங்கம்
Autocracy — தன்னரசு
Autonomy — சுய நிருவாகம்

## B

Basic Law — ஆதாரச் சட்டம்
Budget — வரவு செலவுத் திட்டம்
Bureaucracy — அதிகார வர்கம்

## C

Capital — தலை நகர்
Case Law — தீர்ப்பு வழிச் சட்டம்
Category — வகை
Censure — கண்டனம்
Central — மைய
Centralism — அதிகாரக் குவிப்பு

Ceremony — சடங்கு
Chaplain — குரு
Citizenship — குடிமை
Civilization — நாகரிகம், பண்பு
Civil War — உட்கலகம்
Clan — வகுப்பு
Code — சட்டத் தொகுப்பு
Community — சமூகம்
Compromise — இணக்க ஏற்பாடு
Conciliation — சமரசம்
Consent — சம்மதம், ஒப்பு, இசைவு
Conservatism — பழமைக் கொள்கை
Conspiracy — சதி
Constitutionalism — அரசியல் முறைமை
Convention — வழக்காறு, மரபு
Coronation — முடிசூட்டு விழா
Court — நீதி மன்றம்
Crown — அரசு, மன்னர்

**D**

Decentralisation — அதிகாரப் பன்முகப்பாடு
Decree — அறிக்கை
Dictatorship — சர்வாதிகாரம்
Diplomacy — அரசியல் தந்திரம்
Disintegration — சிதைவு
Dissenters — இணங்காதார்
Divine origin — இறைவழித் தோற்றம்
Divine Right — இறைவழி உரிமை
Division of powers — அதிகாரப் பங்கீடு
Doctrine — கோட்பாடு

**E**

Election — தேர்வு, தேர்தல்
Emissary — தூதன்
Emolument — ஊதியம்
Empire — பேரரசு
Envoy — தூதன்
Equity — தரும நியாயம்
Ethics — ஒழுக்கவியல்

Evolution — பரிணமம்
Executive — செயற்குழு
External Affairs — வெளிநாட்டு விவகாரங்கள்

F

Feudalism — நிலமானிய முறை
Foreign Policy — அயல்நாட்டுக் கொள்கை

G

Government — அரசு, அரசாங்கம்
Guild — வணிகக் கழகம்

H

Hierarchy — படிமரபு
History — சரித்திரம், வரலாறு

I

Illegal — சட்ட விரோத
Illegitimate — முறையற்ற
Imperialism — ஏகாதிபத்தியம்
Interregnum — ஆட்சி இடையீடு

J

Judge — நீதிபதி
Judgement — தீர்ப்பு
Judiciary — நீதித்துறை
Jurisdiction — அதிகார எல்லை
Jurisprudence — சட்ட இயல்

K

King — அரசன்
Kingship — கோன்மை, அரச தத்துவம்
Kinship — உறவு

L

Legislation — சட்டமியற்றல்
Legislature — சட்டசபை

## M

Management — நிர்வாகம்
Materialism — பொருள் வாதம், சடவாதம்
Matriarchal — தாய்வழி
Military alliance — இராணுவ உதவி ஒப்பந்தம்
Minister — அமைச்சர்
Ministry — அமைச்சு
Mobocracy — கும்பல் ஆட்சி
Monarchy — முடியாட்சி
Monism — ஒருமைக் கோட்பாடு

## N

Natural rights — இயல்புரிமை
Neutrality — நடுவு நிலைமை
Non-violence — ஊறு செய்யாமை

## O

Ochlocracy — பாமரர் ஆட்சி
Oligarchy — சிறு குழு ஆட்சி, சொற்பர் ஆட்சி
Organic — அங்க ரீதி, உடலொப்புமை
Origin — தோற்றுவாய்

## P

Patriarchal — தந்தை வழி
Patriotism — நாட்டுப்பற்று
Patrorage — ஆதரவு
Policy — கொள்கை
Politics — அரசியல்
Polity — அரசியம்
Polyarchy — பலராட்சி
Prerogative — சிறப்புரிமை
Proclamation — பேரறிக்கை
Property — சொத்து, உடைமை
Province — (நாட்டின்) பகுதி
Public Administration — பொதுத்துறை ஆட்சி
Public Finance — அரசு நிதி

R

Renaissance — மறுமலர்ச்சி
Republic — குடியரசு
Revolution — புரட்சி
Royal absolutism — மன்னர் சர்வாதிகாரம்

S

Self government — சுயாட்சி, தன்னாட்சி
Social contract — சமுதாய ஒப்பந்தம்
Society — சமுதாயம்
State — நாடு
Statesmanship — அரசியல் வல்லமை
State of Nature — இயற்கை நிலை
Supermacy — மேலாதிக்கம்
Syndicate — தொழிற் குழு

T

Territory — இடம், எல்லை
Theocracy — சமயச்சார்பு ஆட்சிமுறை
Toleration — சகிப்புத் தன்மை
Tradition — மரபு
Tyranny — கொடுங்கோன்மை

U

Unity — ஒற்றுமை
Utilitarianism — பயன் கருது தத்துவம்

V

Vassal state — அடிமை நாடு

W

Welfare state — பொதுநல நாடு